Krishnappa chettiar's book

கிருஷ்ணப்பசெட்டியார்

THE

PRAPANJAMITHRAN PUBLICATIONS.

THE GNANAKALA VILASINI.

PRICE Re. 1.

Madras:
PRINTED AT THE STAR OF INDIA PRESS,
152, MINT STREET.

உ

எப்பொருட்கு மிறைவன் றுணை.

ஞானகலாவிலாசினி.

இஃது

ஸ்ரீமான் - சிவஞான சுவாமிகளது

பாதசேகரரான

முத்தமிழ்ரத்நாகரம்

ம-தி. பாநுகவியவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

பிரபஞ்சமித்திரன் பத்திராதிபராகிய

தா-குப்புசாமிநாயகரவர்களால்

தமது

ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

சார்வரிஸு சித்திரைமீ

1900.

முகவுரை.

நண்பர்காள் !

ஆதித்தந்தை யனைவர்க்குமொருவனா, வேதப்படிமெவ் வுயர் முறையதனால், எல்லாவுயிரு மென்சகோதரமென, வுல்லாசத்தோடொக்குமியல்பினேன், மக்களிற்றமிழராய் மருவினோர்தமைக்கூஉய், இக்கதைகேண்மினென் றிசைப்பதுயாதெனிற், புன்னையஞ்சோலை பொருந்தியொளிருஞ், சென்னையம்பதியைத் திகழ்மனையெனக்கொடு, தங்கியவெள்ளிநாட் டமிழுலகெங்கு, மிங்கிதமாக வெய்தியெவர்க்கு, பூலகசரிதமா வுள்ளனவனைத்தும், பலபலவிதமாப் பகருகின்ற பிரபஞ்சமித்திரன் பத்திராதிபரான ம-ா-ா-ஸ்ரீ தா. குப்புசாமிநாயகரவர்களும், மேற்குறித்த பத்திராசிரியரான ம-ா-ா-ஸ்ரீ லோகநாதசெட்டியாரவர்களும் என்னைக்கண்டு நீவிர் இவ்வுலகவாணர்களும் எமது பத்திரிகையை முன்பணமீந்து பெறுவோரும் பிறரும் படித்து மகிழுமாறு நமது சாத்திரவிர்தையங்களடங்கிய நூலொன்றை இருபதிருபத்திரண்டு பாரவளவில் நூதனமாக விரைவி லியற்றித் தரவேண்டுமென்றும், அதுவும் கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் பொருள் விளங்காவண்ணம் கரடுமுரடான சந்தியாதிகளொ டெழுதாமற் றெளிவான வெண்டமிணடையிற் சாதாரணமான வசனரூபத்தி லெழுதித் தரவேண்டுமென்றுங் கூறியவைகளை யங்கீகரித்த யான் மனித ரறிந்துகொள்ள வேண்டிய அநேகவரிய விடயங்களை யுட்புகுத்திக் கற்பார்க் கிம்மை மறுமைப்பயன்களை அளிக்கத்தக்க கதாரூபமாக வொரு நூலெழுதி அதற்கு ஞானகலாவிலாசினி என்று பெயரிட்டு எல்லாம்வல்ல விறைவன் றிருவருளால் முடித்தேன்.

இக்கதை ஒரு மததூடணையையும் உள்ளே கொண்டிராது எல்லாமதத்தினர்களையும் நியாயமுகத்தாற் புகழ்ந்துள்ளதேயாம். இதனை வாசிப்பவர்கட்கு இது ஒரு தோழனைப்போல நின்று நல்ல இயல்புகளை நினைவிற்குக் கொண்டுவரச்செய்யும். நோய்க்கு மருந்தைப்போல விந்நூலும் அஞ்ஞானநோயை யகற்றி ஞானதிடத்தைப் படிப்பவனுக்குண்டாக்கும்.

இப்புத்தகத்திலுள்ள நல்லவிடயங்களை யறிந்துதான் முன்னமே யறிந்துள்ளவையாயி னினைப்பூட்டினதற்காக மகிழ்ந்தும் அறியாததேற் பயின்றும் பிறர்க்குணர்த்தும் பயன்படுவா னொன்னை மறவாமையைப்போல நானும் அத்தகையோரை மறவாதவனாக விருப்பேன்.

இங்ஙனம்,

ம. தி. பானுகவி.

இதனைப் படிப்பவர்களுக்கறிக்கை.

இப்புத்தகத்தின் மூன்றாவது பக்கத் திரண்டாவது பாராவி லெட்டாவது வரியில் அடைந்தனள் எனற்பால தடைந்தன னென் றிருத்தலைத் திருத்திப் படிக்குமாறுபோல பிறவிடங்களிலு முள வே லவ்வண்ணந் திருத்திப் படித்துக்கொள்க.

உ

அவிக்கினமஸ்து.

ஞானகலாவிலாசினி.

பூர்வகாண்டம்

முதலத்தியாயம்.

காதலுடன் போற்றிக் கரங்கூப்பி நிற்பார்த
மேதமெலா நீக்கு மிறைவனே—யாதிபரா
நின்னைத் தொழுதெழுவேன் நீயு மிடர்களைவாய்
என்னிற் குறைவே தெனக்கு.

விஜயவிக்ரமவர்மனுக்குக் கௌடபாதர் புத்திரோத்பத்திக்கேதுவுரைத்தது.

ஒருநாள் அந்திப்பொழுதில் ஆகாயமானது, செந்நிறமடைந்து விளங்கும் மேற்கட்டியின்மீது வெண்ணிறமுள்ள முத்துக்களை அழுத்திவைத்தாற்போல நட்சத்திரக்கூட்டங்களுடன் பளிங்குக் கண்ணாடியோடுங் கூடினதுபோல பூரணசந்திரனோடுங்கூட விளங்கியது. அப்பொழுது கடற்பவளங்களை நீளநீளமா யெடுத்தடுக்கி வைத்ததுபோல காணப்படுஞ் சிவந்த சடாபாரமும், சீனநாட்டுப் பட்டுப்போன்ற தோலாடையும், தெய்வீகமான வெள்ளிப்பொடி போன்ற விபூதியும், பொன்போன்ற ருத்திராக்ஷமும், இளம்பிறையைப் பாம்பு கவ்வியதுபோல விளங்கும் கருங்காலிக்காம்பும், வெட்பாலைத்தலையுமுடைய யோகதண்டமும், சுரைக்காயினாலான கமண்டலமும், நவரத்தினகசிதமான பாதகுறடும், கூந்தற்பனையோலையாற் பின்னப்பட்ட குடையும், ஓய்ந்த நடையுமுடையவராகி ஒருவர் தாம்பிரபருணி நதியின் கரையிலுள்ள வெண்மணன் மேட்டையடைந்து, தனது தண்டகமண்டலங்களையும் குடையையும் ஒருபுறத்தில் வைத்துவிட்டு, மார்பிற்கிடந்த வெள்ளிக்கம்பிபோன்ற பூணநூலினைக் காதிற்சுற்றிக்கொண்டு, அவ்விடத்தினின்றுஞ் சற்றுதூரஞ்சென்று, பின்னுந் திரும்பிவந்து யதார்த்தமான நடையினரின் உள்ளம்போல தெளிந்து தன்னுட் கிடக்கும் பொருள்களனைத்தும் வெளிப்பட விளங்கும் ஆற்றுநீரில் இறங்கி, ஆசமன முதலியவைகளை நடத்தி விரல்களை ஒன்றினொன்றைத் தொடுதன் முதலியவைகளைச்செய்து, கரையிற் சிறிதுநேர மிருந்து பின்னர் எழுந்து இருந்தவிடத்தில் நீரைத்தெளித்துத் தரையைத்தொட்டு

நெற்றியில் வைத்துக்கொண்டு, சற்றே விரைவாகநடந்து தனது குடைமுதலிய வைத்துள்ள இடத்தையடைந்து,அவ்விடத்தில் ஒரு தருப்பையாசனத்திலிருந்து, இரண்டுநாடிகளையும் ஒடுக்கி நடுநாடியான சுழுமுனையில் சுவாசத்தை யுலாவச்செய்து, ரேசக பூரக கும்பகமென்னும் முறைப்படி காற்றையிழுத்தல் விடுத்தல் தடுத்தலென்னுங் கிரியைகளை யியற்றித் துவாதசாந்தமென்னும் பாவனைத்தானத்தில் மனதை நிறுத்தி இறைவனை நினைத்துக் கண்ணீராருமேயோடக் கண்மலர் குவியப் பாவம் அவிய நிட்டைகூடினர்.

சுமார் அரைமுகூர்த்தகாலமானவுடனே இவரது ஒருமைப்பட்ட மனம் சற்றே சலித்தது, மனஞ்சலித்ததும் நிட்டைமுதலிய எல்லாம் ஒருபுற மொதுங்கின; அதனால் அகமுகமான விழிகளும் புறமுகப்பட்டன; விழிகள் புறமுகப்படவே தன்னைச்சூழ உற்று நோக்கினர்; நோக்கினார்க்கு வெள்ளிய பொரிகளை ஏந்திநிற்கும் விளங்கிழை மடந்தையர்களைப்போல வெண்மையாக வலர்ந்த எருக்குமரங்களும், அகல்களில் தீபமேந்தி நிற்பவர்களைப்போல செந்நிற மலர்களுடன் முருக்கு மரங்களும் எதிரே காணப்பட்டன. அன்றியும் ஒழுங்கினமானவர்களின் வீடுகளிற் கிடைக்கும் சாமான்களைப்போல, அநேகங் கொடி செடிகள் புதர்புதராக பலவிடங்களிலு விளங்குதலைக் கண்டனர். கண்டவர் தன் மனதில் இவ்விடத்திற் சிறிய சிட்டுகள், கபோதங்கள், கானங்கோழிகள், வானம்பாடிகளென்னும் இவைகளி னொலிகளன்றி அரவமான கோட்டான், கழுகு, காகம், ஆந்தை, தாராமுதலியவைகளின் தொனிகளில்லை; ஆதலால் இவ்விடம் நல்ல விஷயங்களை ஆராய்தற்கேற்ற உசிதமான இடமாகவே இருக்கின்றது; மாதர்போக முதலிய சிற்றின்பங்கள் முதலில் அதிக சந்தோஷத்தையும், பின்னர் அதிக துன்பத்தையும், வெறுப்பையும் கொடுப்பனபோல, இந்த இரவும் இவ்விரல் உதித்த இந்தநிலவும் இவ்விடத்தில் நமக்கு இப்பொழுது இன்பத்தை யமைக்கினும், பின்னர் வரும் பரிதியும் பகற்பொழுதும் இவ்விடத்திற் கட்டாயமாகத் துன்பத்தை விளைக்கும். ஆதலின் நாமிந்த இடத்தைவிட்டுப் பகற்போது தோன்று முன்னம் போகவேண்டுமென்று தீர்மானித்து,சற்றுநேரம் அங்குமிங்குமாக உலவி,பின்னும் அவ்வெண்மணலில் இரண்டு கரங்களையும் பின்புறமாக ஊன்றிக்கொண்டு சந்திரனை நோக்கி இந்நிலா, முதலில் கட்டத்தையும் பின்னர் கீர்த்தி சுகமுதலியவற்றையும் அளிக்குங் கல்வியைப்போல பிரகாசிக்கின்றதே. நன்றாய்க் கற்ற உயர்குடிமக்கள் ஏழை எளியவர்களைக்கண்டால் எவ்வண்ணம் சீதளமாகப்பேசுவார்களோ அவ்வண்ணம் சீதளமான நிலாவை வீசுகின்றதே! இதற்கிவ்வளவு வெண்மையும் சீதளமு மிருத்தலினாலேதான் இதனை மஹாதேவர் தலையாபரணமாக வணிந்திருக்கின்றனர் என்று அநேகவிதமாகச் சந்திரனையே புகழ்ந்துகொண்டு சிறிதுநேரமிருந்தனர்.

இவரிவ்வண்ணம் இருத்தற்கு சற்று முன்னர் அவ்விடத்தையவர் மனிதரோ இல்லாத இடமென்று மதித்திருந்தனர்; பின்னரோ அதற்குச் சற்றருகில் அல்லோலகல்லோலமான பெருங்கூச்சலும், இரைச்சலு முண்டாகியதனைக்கேட்டனர். கேட்ட விம்முனிபுங்கவர் அருகில் நூலாசிரியர் எழுதிய பொருள் கிடக்க வதைப்படித்து மூலத்தின் உண்மையையுணராது விபரீதமாகத் தானே அருத்த ஆராய்ச்சி செய்யும் அறிவற்ற மடமாணாக்கனைப்போல நானும் அருகிலூரிருப்பதை யுணராதவலமுற்றேனென்று மனதில் நினைத்துக்கொண்டு எதிரினோக்கமைத்தனராக விருந்தனர்.

உடனே சுமார் இருபதிற்கு மேற்படாத வயதும், இளவாழைக் குருத்துப்போல பளபளப்பான ஆடையும், இரண்டுதீபங்கள் எரிவனபோல காணப்படும் மாணிக்கக் கம்மலணிந்த காதும், வாரிச்சொருகிய கூந்தலும், நல்ல வெண்புறாப்போன்ற நடையுமுடைய ஒருத்தி,அடியும் நுனியுந்தறித்த பனந்துண்டம்போலத் தடித்து விளங்குங் கட்டையுங் குட்டையுமான சரீரத்தினையுடைய ஒருவாலிபனால் துரத்திக்கொண்டு வரப்பட்டவளாய் ஆற்றங்கரையையடைந்தனன். அதுகண்ட இவரிதுவென்ன விபரீதம்! ஒருபெண்ணை ஒருவன் துரத்துவதும், அவளோடுவதும், பலர் பின்றொடர்ந்திரைவதும் இராக்காலத்தி லுண்டாகின்றதே! இந்த நாடு அரசனாகிய இறைவனா லாளப்படுவதன்றோ! வெறுங் காட்டிருளர்கள் நிறைந்த பல்லியோ! அல்லது மீன்வேட ரிருக்கும் பாக்கமோ! அன்றேல் ஊன்வேடரிருக்கு மூரோ! நம்மையும் இவர்களென்ன செய்வார்களோ ! பிச்சன் கையிலகப்பட்ட பெருவிலை மணியைச் சிச்சியென் றெறியுமாறுபோல மலராசனந் துறந்துவந்த மங்கைபோன்ற விச்செங்கரும்பு மொழியாளை இவன் துரத்துகின்றானே என்று பின் வருபவனை வெறுத்தனர்.

இவரிவ்வண்ணம் விருப்பும் வெறுப்புமாக விருக்கும்போதே அவர்களும் அருகில் வந்துசேர்ந்தனர். சேர்ந்தவர்கள் நிலாத்துண்டமணிந்த நீலகண்டனைப்போல செஞ்சடையும் திருநீறும் புலித்தோலுமுடையவராய் அங்கு விளங்கிய அம்முனிவர்பெருமானைக் கண்டவுடன் சீற்றமடங்கி முன்னிருந்த துக்கமு நீங்கினவர்களாய் நின்றார்கள்.

நின்றவர்களைக் குளிர்ந்தபார்வையுடன் இவர் பார்த்து, நீவிர் யாவர்? இம்மனோகரமான இரவில் அலங்கோலமாக எங்கே ஓடுகின்றீர்கள் என்றனர். அவர்களிற் பின்வந்தோரனைவரும் ஒன்றாய்க் கையைக் குவித்துக்கொண்டு, இவரைப்பார்த்து எங்கள் பெருமானே! இவர்களிருவரும் எங்கள் எசமானர்கள் என்றார்கள்; உடனே அவரவ்விருவரையுஞ் சிறந்தவர்களாக மதித்து அருகி லழைத்தனர்; அழைத்த உடன் அவ்விருவரும் அருகில் வந்து அப்பெரியவரது சரணங்களைக் கையாற்றொட்டு வணங்கி ஒதுங்கி நின்றனர்.

உடனே பெரியோர் அவர்களைப்பார்த்து என்ன சங்கதி என்றார், அதற்கவ்வாலிபன் துறவியரரசே! அடியேன் விஜயவிக்ரமபுரமென்னும் ஊருக்கரசன், என் பெயர் விஜயவிக்ரமவர்மன், இவளென் மனைவி, இவள் பெயர் பங்கஜாக்ஷி, எங்கட்குப் புத்திரப்பேறின்மையால் நாங்கள் ஒருவருக்கொருவர் அடிக்கடி சலித்துக்கொள்கிறதுண்டு. அவ்வண்ணமான சலிப்பு தென்றல் முற்றிப் பெருங்காற்றானதைப்போல நாளாவட்டத்தின் முற்றிப் பெரும்பகையாகிவிட்டது, அப்பகை பின்னர் எங்களை ஒருவர்க்கொருவர் நீ பாவி நான் பாவி என்னும் சொற்குள்ளாக்கியது. ஆயினும் எங்களிருவருக்கும் பாவிகளென்று ஒப்புக்கொள்ள மனமில்லை, அதனால் நீயே பாவி நீயே பாவி என்பேம். அவ்வாறிருக்க, இன்று இவள் என்னைப்பார்த்து எனது அன்புக்குரிய கணவரே உம்முடைய பாவகருமத்தினாலல்லவோ எனக்குப் பிள்ளைப்பேறில்லாது போயிற்று என்றுரைத்துப் பரிகசித்தனள்.

இவள் செய்த பரிகாசத்தாற் பரிதபித்த யான் கோபமதிகரித்து என்னைப் பாவியென்று நீ எவ்வண்ணம் அறிவாய், அதனை விளக்கு என்று இவளைத் துன்பப்படுத்தினேன், உடனே இவள் என்னைப்பார்த்து அகத்தியர் முதலிய அருந்தவருறையும் பெருங்காட்டிற்கு என்னுடன் வாரும் நானங்குள்ள பெரியோர்களைக்கொண்டு உம்மைப் பாவியென்று தெளிவிக்கின்றேன் என்றனள். கோபமென்னு மதுவாற் குணங்கெட்ட யான் வாகனாதிகளையெல்லாம் விட்டு இவளையு மிவ்வாறான அலங்கோலத்துடனழைத்துக்கொண்டு இவ்விரவிலேயே வனநோக்கிப் பிரயாணமாயினேன். வர வர வெனக்குங் கோபங்குறைந்தது, என் இவ்வண்ணஞ் செய்தேனென்று தோன்றியது. இதற்குள் தங்களைக்கண்டேன், இனி எல்லாச் சந்தேகங்களையும் தேவரீரே நீக்கி எங்கள் மனக்குறையை நிறைவேற்ற வேண்டுமென்றான்.

உடனே அவ்வழகியும் முனிவரை வணங்கி, அம்புவி புடைசூழ்ந்த பைங்கடல் குடித்த கும்பசம்பவரையனைய குருநாதா! இனி என் மனவாட்ட நீங்கியது, நான் மக்கட்பேறுடையவளுமானேன், என் சந்தேகங்களு மொழிந்தன என்று அடிபணிந்து நின்றனள். நின்றவுடன் முனிவர் அவ்விருவரையும் பார்த்து நீங்கள் வனத்திற்போய்ப் பெரியோர்களைக்கண்டு தர்மசந்தேகங்கட்கு நிவிர்த்தி தேடுமாறு கருதிப்போந்தீர்கள்; உங்கள் பிரிவாற்றாமையால் உங்கள் பிரஜைகளும் உங்களுடன் வந்தார்கள்; இடைவழியிலென்னைக்கண்டீர்கள்; கண்ட நீவிர் நான் கொண்டிருக்கும் வேடத்தாலென்னிடத்து விருப்பங்கொண்டிருக்கின்றீர்கள்.

பொய்வேடத்தினைக் கண்டால் அப்பொழுது நம்மிடத்தும் உங்கட்கு அவநம்பிக்கை யுண்டாகக்கூடும். கூடத்தாசிரிகள் கம்

மாளென்னும் இச்சாதியரின் பிராமணவேடங்களி லவதிப்பட்டவர்கள் யதார்த்தமான பிராமணர்களையும் நாட்டக்காரரான பண்டாரங்களின் சித்தவேடங்களி லவதிப்பட்டவர்கட்கு நல்ல சித்தர்களிடத்திலும், விபசாரிகள்-வேசைகள்-தாசிகள்முதலிய இழிதொழின்மாதரால் அவதிப்பட்டவர்கட்குக் குலமாதர்களிடத்திலும், சாத்திரார்த்தங்களைக் கபடமாக வுரைக்கும் ஆசாரியர்களா லவதிப்பட்டவர்கட்கு நல்ல சத்குருமார்களிடத்திலும் நிலையான நம்பிக்கையுண்டாவது கஷ்டம். ஆதலால் முன்னே என்னை இன்னனென்று தெரிந்துகொண்டு பின்னே என்னிடத்தி லிதோபதேசங் கேளுங்கள் என்றனர். உடனே—

விஜயவிக்ரமவர்மன்.—சுவாமீ! தங்கள் பெயரென்ன?

முனிவர்:—மன்னவ! என்பெயர் கௌடபாதயோகி.

விஜ.—தாங்கள் யாருடைய புத்திரர்?

கௌ.—யான் சுகப்பிரம்ம இருஷியின் புத்திரன்.

விஜ.—சுகப்பிரம்ம விருஷிக்குப் பிள்ளையேது?

கௌ.—ஏதென்றால் இதோ நான்தான் கற்றூண்போல நிற்கின்றேனே.

விஜ.—சரி, சுகப்பிரம்மத்தை உலகபோகத்தையுணராத பெரியவரென்றார்களே?

கௌ.—புத்திரனிருந்ததனாலேயே அவர் உலகபோகங்களையுடையவராவாரா?

விஜ.—அந்த சுகப்பிரம்மத்திற்குத் தந்தை யாவர்?

கௌ.—அவர்தந்தை ஜகத்குருவான வியாசமுனிவர்.

விஜ.—அவர் தந்தை?

கௌ.—அவர் தந்தையார் பாரசரமுனிவர், அவர் தந்தையார் சத்திமுனிவர், அவர் தந்தை வசிஷ்டர், அவர் தந்தை ஜகத்பிதாவான பிரம்மதேவர்.

விஜ.—வசிஷ்டருக்குத் தாயார் யார் சுவாமீ?

கௌ.—தேவதாசியான ஊர்வசி.

விஜ.—சுவாமீ! கோபித்துக் கொள்ளப்படாது. நம்முடைய இந்த உலகத்திலே புருஷனொருவனை விவாகஞ்செய்துகொள்ளாமல் காசுகொடுப்பவர்களையெல்லாம் அணைகின்ற தாசிகளைப்போல அந்த தேவலோகத்தில் பலரையு மணைகின்றவர்கள்தானே தேவதாசிகள் என்பவர்கள், இந்தவுலகத்திலே வித்துவான்கள் "அப்பன் வருவான் அதன்பின் மகன் வருவான், தப்புமுறையென் றுந்தள்ளாதே" என்றும், "எப்பொழுதும், வேசிக்கிமுறையில்லை வெற்றிலைக்

ருக் காயில்லை,பாசிக்கு வேரில்லைபார்" என்றும் பாடுகின்றார்களே அந்த மாதிரியெல்லாம் அந்த லோகங்களிலேயும் இருப்பார்களே அப்பொழுது குலத்தாலுயர்ந்தோமென்று உண்மையிற்கூற இடமில்லையே, சரி, நானொன்றைக்கருதி ஒன்றைப் பேசிவிட்டேன் மன்னிக்கவேண்டும் என்றான்.

கௌ:—அப்பா! நீயோ உலகாளுமரசன், நீ எப்படி வேண்டுமானாலும் பேசலாம், செல்வம் சொல்லுக்கஞ்சாது அல்லவா? அது கிடக்கட்டும்; நீசொன்னதி லொன்றும் பழுதில்லை, உண்மையில் வசிஷ்டர் வேசிமகனாதலால், நானதனை இல்லையென்று சொல்ல வரவில்லை. ஆனாலவர் பிரம்மாவின் பிள்ளையாதலால் பிராமணரென்று அறிந்துகொள்.

வசிஷ்டருக்கென்றென்ன இன்னம் அநேகம் இருஷிகட்குப் பிறப்பு மறுக்குமாறாகத்தானிருக்கும்; ஒழுக்கத்தாலேதான் உயர்குலத்தனாகவேண்டும்.

விஜயவிக்ரமவர்மனே! நினக்குச் சோதிடர்கள் உண்மையாகத்தான் விஜயவிக்ரமவர்மன் என்று பெயரிட்டார்கள், நீ எல்லார் மனத்திற்கும் அச்சமுண்டாமாறு பேசுதலால் அவ்வாறு வைத்தார்கள். ஒருவனுக்குப்பெயர் அமைதலும் அவன்செய்த பாக்கியவசத்திற்குத் தக்கபடிதானே என்றார்.

இதற்குள்ளிவன் ஹோஹோ! நாம் இவரிடத்தில் அதிகமாகப் பேசிவிட்டோம்; இனி இவர் நமக்குண்மையை புரைக்கமாட்டார் போலும் என்று கருதினான்; கருதும்போதே கௌடபாதர் விஜயவிக்ரமா! நீ நினைத்ததெனக்குத்தெரியும், நின் எண்ணப்படி மாறி நடப்பவர்கள் நியாயத்தை ஒப்புக்கொள்ளாத கயவர்கள், நான் அவ்வண்ணஞ்செய்யேன்; வெறுங் கட்டுப்பாடுகளிலும் மனம்வையேன், நீ எதனைக் கேட்கின்றனையோ கேள் அதற்குப் பதில் உரைக்க நான் சித்தனாகவிருக்கின்றேன் என்றனர்.

அம்மொழிகேட்ட விஜயவிக்ரமன் முனிவரைப்பார்த்து சுவாமீ! என் நாங்கள் பிள்ளையற்ற பெரும்பாவிகளாக விருக்கின்றோம் இதற்கென்ன காரணம் என்றான்.

கௌட:—நீங்கள் பிள்ளைப்பேறற்றவர்களாக விருக்கின்றீர்கள்; அதற் கநேககாரணங்களுள. அவைகளிற் சிலவற்றை உங்களுக்குச் சொல்லுகின்றேன்.

மஞ்சளுஞ் சுண்ணாம்புமான இரண்டு பொருள்களின் கலப்பினால் இவ்விரண்டு நிறமுமல்லாத வேறொரு நிறமான செம்மை தோன்றுமாறுபோல வெண்ணிறமான புருஷேந்திரியத்தினதும் செந்நிறமான பெண்ணிந்திரியத்தினதுங் கலப்பினால் இவ்விரண்டுமல்லாத சரீர முற்பத்தியாகவேண்டும், எந்த இந்திரிய மதிகமாக

இருக்கின்றதோ அந்த இந்திரியத்தின் சாயலான வுருவமே தோன்றும், இந்திரியமென்பது பார்வைக்கு ஜலரூபமாக விருந்தாலும் அது அநேக ஜீவஅணுக்களின் கலப்பினாலுண்டாவது; இத்தகைய இந்திரியம் பிராணன் உள்ளவையாயும் ஒன்றோடொன்று கலப்பனவாயுமுள்ள எல்லாப்பிராணிகட்கு முள்ளதே ஆமென்றனர்.

உடனே இதனைக்கேட்ட விஜயவிக்ரமன் இதெல்லாஞ் சுத்தப் பித்தமென்று உள்ளே முணுமுணுத்துக்கொண்டு, ஐயா நீங்கள் சொல்வது சரிதான் எங்கட்கேன் மக்கட்பேறில்லை, அதற்கு வழி சொல்லுங்கள். தினந்தோறும் புத்திராபேக்ஷையுடனே தானே சேருகிறோம். சேராமலில்லையே தங்கள் வாய்மொழி இந்த விஷயத்தி லெப்படியாமோ என்றான்.

கௌடபாதர் தம்மனதிற்குள் இவன் விஜயவிக்ரமனே:— விஜயவிக்ரமனென்றால் ஜனங்களை ஜயிக்கிறவனென்று ஒரு அருத்தமல்லவா? அது இவனிடமே அமைந்தது ஆயினும் எடுத்த விஷயத்தைச் சரியாகச்சொல்லி முடிப்போமென்று தீர்மானித்துக் கொண்டு, மன்னவ! நல்லவிதைகளாக விருந்தாலும் களர்முதலிய நிலங்களிலிட்டால் அவை முளையா, முளைக்கினும் பயன்செய்யா.

1. நிலம் நல்லதாக இருந்து விதை கெட்டதானாலும் பிரயோசனப்படா. அதனைப்போல மனிதரிலும் ஆணிந்திரிய நல்லதாக இருந்து பெண்ணிந்திரியங் கெட்டதாக இருந்தாலும், அல்லது ஆணிந்திரியங் கெட்டதாகவிருந்து பெண்ணிந்திரிய நல்லதாவிருந்தாலும் பயன்படாது. ஆதலா லிருவரிந்திரியமுஞ் சரியானதாகவே இருக்கவேண்டும், இல்லாதுபோனாற் கருப்பமுண்டாக மாட்டாது

2. அநேகமான பெரிய மீன்கள் நிறைந்த குளங் குட்டைகளில் சிறிய மீன்கள் எவ்வளவிருக்கும், அல்லது எவ்வளவு கொண்டுபோய்விட்டாலும் அவை பெரிய மீன்களால் தின்னப்பட்டழியுமாறுபோல கர்ப்பத்தானத்திலிருக்கும் பெரிய கிருமிகள் இந்தச் சிறிய கிருமிகளின் கூட்டமான இந்திரியங்களைத் தின்றுவிடுதலினாலேயும் கருப்பமுண்டாகாது.

3. குடத்தைக் கவிழ்த்துவைத்து அதன்மீது நீரூற்றினால் குடமெப்படி நிறையாதோ அதுபோல காலமல்லாத காலங்களில் புணர்ந்தாலும் கருப்பை மூடிக்கிடத்தலால் கருப்பமுண்டாகாது.

4. பெண்கள் ரஜஸ்வலைகளாய் நாலாநீராடிய பின்னர் பன்னிரண்டு தினங்களே கருவாசல் திறந்திருக்குங்காலம். ஆதலா லப்பன்னிரண்டல்லாக்காலங்களி லுண்டாகுஞ் சேர்க்கை புத்திரோற்பத்திக்கேதுவாக வாகாது.

5. அன்றியும் பைசாசுதொட்ட பெண்களுக்குங் கருப்பை திறவாது அதனாலவர்கட்கும் கருவுண்டாகாது.

6. ஆதகாந்தனம் குன்மம்முதலிய உதரரோகங்களும் கற்பத்திற்கு விரோதமானவைகளே. இவைகளிலேதேனுமுடைய மாதர்கட்கும் கருப்பமுண்டாகாது.

7. பூருவ சன்மாந்தரங்களில் சிசுஹத்திமுதலிய கருமிகளுக்கும் புத்திரப்பேறுண்டாகாது.

இவைகளிலொன்றும் பலவுமான குற்றங்கள் உங்களிடத்திலுமிருக்கலாம், அவைகளை இனிச்சோதித்தே அறிதல்வேண்டும் என்று கூறிய கௌடபாதரைப்பார்த்து, விஜயவிக்ரமன் ஒன்றின் சந்தேகங் கேட்கப்போய் ஒன்பதின் சந்தேகங் கேட்கவேண்டியதாயிற்று என்று நினைத்துக்கொண்டு இவ்வண்ணங் கேட்டான்.

சுவாமி! இந்திரியங் கெட்டதாக இருந்தால் கருவுண்டாகாதென்றீர்களே, கெட்ட இந்திரியமுள்ளவர்கள் எந்தவிதத்தில் நல்லவிந்திரியத்தை உண்டாக்கிக்கொள்வது; அதனைத் தயவுசெய்து சற்றே திருவாய்மலர்ந்தருளவேண்டும் என்றனன். இதுகேட்ட கௌடபாதர், அவன் முகத்தை நலவில் நன்றாய் உற்றுநோக்கி இவன் சுத்தவீரன், இவன் நெற்றியிலணிந்துள்ள சாந்துப்பொட்டும், உறுப்பெல்லாம் தெரியுமாறணிந்திருக்கும் ஆடையும், அடிக்கடி மீசையிற்கைபோடுவதும், மோத்தைக்கடாவைப்போல தலையை யசைப்பதுமே இவனுடைய அபரிக்கையான குணத்தை விளக்குகின்றது. ஆயினும் நாம் இவனுக்கு இவன் கேட்டதற்குச் சரியான பதில்தானே சொல்லவேண்டும், அல்லாதுபோனால் நம்முடைய யோக்கியதை இவன் யோக்கியதையைவிட எண்மடங்கு அதிகமாய்விடும் என்று தியானித்துக்கொண்டு மெல்லெனச் சொல்லத்தொடங்கினார்.

விஜயவிக்ரமா! நெல்லிக்காய் கடுக்காயென்னும் இவைகளை வாயிலிட்டுமெல்லும்பொழுது, முன்னர் துவர்ப்பையும் பின்னர் நல்ல இனிப்பையுந் தருவதுபோல பெரியோர்கள் வசனங்கள் சிறியவர்கட்கு முதலில் அருவருப்பையும் பின்னர் சுகத்தையும் அளிப்பது வழக்கம். ஆதலால் ஒருவேளை என் வசனமுனக்கு அருவருப்பானதாகவிருந்தாலும், பின்னர் அது நட்டாதுனக்கின்பத்தையே கொடுக்கும் என்பதற் காட்சேபமேயில்லை.

மனிதனுக்குச் சகலகாரியங்கட்கும் உறுதியானது இந்திரியம். எவனுக்குச் சரியான விருத்தியுடையதாக இந்திரியமிருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் திடமானவனும், கூரிய புத்தியுடையவனும், பிரகாசமான சரீரமுடையவனுமாக இருப்பான். எவனுக்கு இந்திரியஞ் சரியானதாகவிராதோ, அவனுக்குப் புத்திமுதலிய எதுவுஞ் சரியானதாக இராது, அவனுக்கு ஆயுளுங் குறையும், கண்ணொளியு மழுங்கும் என்றனர்.

விஜயவிக்ரமன்:—ஸ்வாமீ! தங்கள்மொழி எங்கட்கு வேதவாக்கியமாம்; ஆனாலும் தாங்களுரைத்தவற்றிற் சில என் மனவநுபவத்திற்கு ஒத்துவாராமையால் இதனை வெளியிடுகின்றேன். அதாவது, எங்களூரினில் ஒரு ஸந்நியாஸி இருந்தார்; அவர் உதயகாலத்திலெழுந்து நீராடித் தோய்த்துலர்ந்த ஆடையணிந்து நெற்றியில் கோபீசந்தனம் தரித்துக்கொண்டவுடனே, ஸோராமிசிரியும், பாதுமைப்பருப்பும், காட்டுமாங்கொட்டையும், (இதுவே சாரபருப்பு) பூமிசர்க்கரைக்கிழங்கும், ஒருதங்கரேக்கும் அரைத்துக்கரைத்து இருபடியிலொன்றாக வற்றவைத்த பசுவின்பாலில் கற்கண்டுத் தூள் கலந்து குடிப்பர். இதற்குப் பலகாரமாக கோதுமையுப்புமா அரைப்படிக்குக் குறையாமலுண்பர். பின்னர் மத்தியானம் ஒரு இலைக்கு ஐந்துரூபாய்க்குக்குறையாத சித்திரான்ன ஸம்யுக்தமான போசனமருந்துவர். மூன்று மணிப்பொழுதிற்கு முன் சொன்னவண்ணங் காய்ச்சின பாலருந்துவர். இரவில் பகலைப்போலவே அன்னம் அருந்துவர். படுக்கையிற் பாலுமருந்துவர். இவ்வண்ண முணவருந்திவந்த இவர் இந்திரியவிர்த்தியினு லிரண்டு கண்ணுந் தெரியாதவராகவிருந்தார்; இதற்கு முரணாக தாங்களென்ன இப்படி திருவாய்மலர்ந்தருளினீர் என்றனன்.

உடனே கௌடபாதர் அவ்வரசனைப்பார்த்து, அப்பா! ஸந்நியாசிக்கு இந்திரியங் கொழுத்தால் கண்போகாதிருக்குமா? அவனுக்கு அதிகமான போசனமுதலியவைகளாலே உடல் கொழுப்பேறியதேயன்றிக் கொழுப்படங்கத்தக்க தியானயோக நிட்டையாதிக ளொன்றுமில்லாதிருக்கலாம். அநேகம்பேர் பணக்காரர் ஸந்நியாசிகளாகமாத்திரம் இருக்கின்றார்கள்; அவர்கள் சரீராதிகளுக்குழைப்பே கிடையாது; உண்டிமாத்திரம் மிகுதி; அதனாலே அவர்க ளெப்படித்தானுவார்கள்; நல்ல மணற்பாங்கான ஊற்றுக் கிணறுகளி லுண்டாகிற ஜலத்திற்கும் இறைத்தல் மொள்ளல் முதலிய செலவுகளாலே சுசியேயன்றி ஊற்றுயிருப்பதினாலேமாத்திரஞ் சுசியான நீராகாது. அதுபோல அநேகருக்கு உணவாதிகளாலே இந்திரியப்பெருக்க மிருக்கலாம். அதற்கு நல்ல வழியிற் செலவில்லாதிருக்கும், அதனாலும் உடலாதிகெடும், அதனாலேயும் கருப்பத்திற் கேதுவற்றதாக இந்திரியமாகலாம்.

மன்னவனே! முக்கியமான ஒன்றுபார், குழந்தைப்பருவத்திலேதன்னும் பாடஞ்செய்வதற்கிருக்குஞ் சத்தி, கிழப்பருவத்திலும் வாலிபத்திலும் இல்லையே. முக்கியமாக அதற்குக் காரணம் இந்திரியநஷ்டமல்லவா. ஞானம், நிஷ்டை முதலிய ஒவ்வொன்றிற்குஞ் சுக்கிலமே காரணம். சுக்கிலத்திற்கு உணவும், உழைப்பும், பருவமுமே காரணங்களாம். ஆதலால், கெட்ட இந்திரியங்களை யுடையவர்கள் தங்களுக்கு எந்தவிதமான காரியத்தால் இந்திரியக்கேடு வந்ததென்பதை ஆராய்ந்தறிந்து, அந்தக்காரியத்தை மிதப்படுத்தி

இந்திரிய புஷ்டிக்கேற்ற மருந்துகளைச் சாப்பிடவேண்டும். அவ்வண்ணம் மருந்துண்ணுங்கால், பகல் நித்திரை முதலிய அவபத்தியங்களைச் செய்யாதிருக்கவேண்டும். அவ்வண்ணம் இருப்பார்களானால், இந்திரியவிர்த்தி சந்தானவிர்த்தியாதிகளை அடைவார்கள் என்றனர். இதற்குள் வெகு அவசரமாய் அவன் சுவாமிகளே! அதென்ன மருந்து, அதென்ன மருந்து, சொன்னாற் பேறிருக்கும்; யாரோ ஒரு சாமியார் வந்தாராம், ஒரு மருந்து சொன்னாராம், அதைச் சாப்பிட்டார்களாம், குழந்தை குட்டிகளோடே இருக்கிறார்களாம் என்று பேரிருக்குமே என்றான். உடனே அவர் இவனைப்பார்த்து, அரசனே! இந்திரியவிர்த்திக்கேற்ற மருந்துகளநேகம். ஆயினும், லோகோபகாரமாக யானதனிலொன்றை இங்கு உனக்குச் சொல்கின்றேன்.

அமிர்தாக்கரை, ஆவின்பால், நன்னாரிவேர், பேரிச்சங்காய், நிலப்பனங்கிழங்கு, வெள்ளைச்சாட்டரணைவேர், பூனைக்காலிவிதை, பூமிசர்க்கரைக்கிழங்கு என்னும் இவைகளையொக்க லேகியத்தினை இரண்டு வேளையும் அருந்துதலும், பத்தியமாக இருத்தலும் உண்டாகுமானால் இந்திரியவிருத்தியுண்டாகும். இவையன்றி, தங்கச் செந்தூரம், வெள்ளிச்செந்தூரமுதலிய உயர்ந்த பஸ்மசெந்தூராதிகளை உண்பதினாலும் இந்திரியவிருத்தி உண்டாகும். உண்டான இந்திரியத்தை அளவுமீறிச் செலவிடாமல் பக்குவமாக இருப்பதே கெட்டொழிந்த இந்திரியத்தை மீளவும் விருத்திசெய்வதற்கு வழி என்றனர். உடனே விஜயவிக்ரமன் மஹா சந்தோஷமானவனைப் போல அபிநயித்துக்கொண்டு சுவாமீ! ஒரு சந்தேகம் நிவர்த்தியாயிற்று. இன்னொரு சந்தேகம், அதாவது கர்ப்பத்தானத்திற் செல்லும் இந்திரியங்களை அங்குள்ள கிருமிகள் தின்றுவிடுவதாக உரைக்கிறார்களே, அவ்வண்ணங் கிருமி பீடைபடக்கூடிய பெண்களுக்கென்னசெய்யலாம் என்றான்.

அதுகேட்ட கௌடபாதர் மன்னவனே! அதற்கொரு மருந்துண்டு. பெண்கள் ருதுவல்லிகளாக இருக்கும்பொழுது அரசமரங்களில் முளைத்திருக்கும் புல்லுருவியை அரைத்து கொட்டைப்பாக்களவு பசுவின்பாலோடு கலந்துண்டால் கருப்பையிலுள்ள கிருமிகள் சாகும். இதுவன்றியும் அநேகமான சிகிச்சைகளுண்டு என்றனர். இதனையுங்கேட்டுக்கொண்டு அவன் அவ்வளவோடுவிடாமல், பெண்கள் ருதுவல்லிகளானபின் பன்னிரண்டுநாள்வரைக்குந்தானே கர்ப்பமுண்டாகிற காலம்; மற்றையகாலம் வீணான காலந்தானே என்று ஆலோசித்துக்கொண்டே சுவாமீ! பேய் பிடித்துக் கருப்பமுண்டாகாதுபோனால் என்னசெய்வது என்றான்.

உடனே கௌடபாதர், நாமிவனை இப்படிப்பட்டவனென்று தெரியாமல் வாய்கொடுத்துவிட்டோம்; இனி இவன் கேட்டதற்

கெல்லாம் ஏறக்குறைய பதிலுரைக்கவேண்டுவதுதான் என்று தன்னுக்குள் நினைத்துக்கொண்டு, பிசாசு பிடித்திருந்தால் மந்திரோபாஸனைகளைக்கொண்டு தகடு முதலிய கட்டியும், சூரிய நமஸ்காராதிகளைச் செய்தும், சிறுவெண்கடுகின் புகையை ஆக்கிராணித்தும், பூதநிவாரண தைலாதிகளைத் தேய்த்து முழுகியும் அதனை ஒழித்தல் வேண்டும் என்றனர்.

உடனே விஜயவிக்ரமன், சுவாமீ! நல்ல பரிகாரமிது. பின்சொல்லிய இரண்டும் நமக்குத் தெரியாது. முன் சொன்ன மந்திரவாதிகள் எங்களூரிலே மிகுதியாக இருக்கின்றார்கள். அவர்களை ஒன்றுந்தெரியாத பாமரர்கள்தான் மெச்சவேண்டும். பேய் பிடித்த பெண்ணொருத்தி இருக்கும் வீட்டவர்களுக்குக் கிடைத்தால் சுமார் ஒன்பது பத்துமாத மதிலேயே அவர்கள் காலந் தள்ளுவார்கள். என் மனைவியான இந்த பங்கஜாக்ஷி நல்ல புத்திசாலி; இவளுக்குப் பேயோட்டிக்கொள்ளவேண்டுமென்கிற அபிப்பிராயங் கிடையாது. எனக்கும் என் தாயாருக்குமாத்திரம் வடக்குமூலையிலுள்ள அரச மரத்திற் குடிகொண்டிருக்கும் ஆண் சடாமுனி தொட்டிருக்குமா என்னுஞ் சந்தேகத்தினால் எங்களூர்ப்பூசாரியான சுப்பனையும், முருகனையும், ஐயாவய்யங்காரையும் அழைப்பித்தேன். வந்த அவர்கள் முதலில் விளக்கு வைத்துப் பார்க்கவேண்டு மென்றார்கள். நான் விளக்கு வைத்து எங்கே பார்க்கவேண்டுமென்றேன். அவர்கள், இல்லை; விளக்குவைத்துப்பார்த்தால் தாங்களழைத்த காரியந் தெரியும்; அப்புற மதற்குத்தக்க வேலை செய்தால் சீக்கிரங்குணமுண்டாகுமென்றார்கள். அதற்கென்னபிடிக்குமென்றேன். நானரசனென்பதை அறிந்த அவர்கள் வெகுசுலபமாகச் சொல்பவர்களைப் போல சாமான்கள் நூறு ரூபாயும், தக்ஷிணை பத்து ரூபாயுமாகக் கணக்கிட்டார்கள். அது எனக்கொரு பெரியதான காரியமாகத் தோற்றாமையினால் நான் சம்மதப்பட்டேன். கடைசியில் ஒரு விளக்கைக் கொளுத்தி வைத்து சுப்பனென்பவ னதனைச் சும்மா உற்றுப்பார்த்து அநுமானமாகச் சில விஷயங்களை யுரைத்தான். அவ்விஷயங்களில் பித்துடைய யான் அவைகளை மெய்யென ஒப்புக்கொண்டேன், பின்னரவர்கள் ஒன்பதுமாதத்திற் கைந்துநாட்கள் குறைவாகப் பேயோட்டினார்கள். இதற்குள் எனக்குச் சில்லரைசில்லரையாகப் பதினையாயிரம் ரூபாய் செலவாகியது. கடைசியில் ரக்ஷாபந்தனமென் றொன்றை எழுதிக் கட்டினார்கள். மந்திரவாதிகளென்னும் பூசாரிகள்செய்யுஞ்சடங்குகளெல்லாம் அவர்கள் சொந்தமேயன்றி உண்மையானதாக இராது. பின்னருமிப்படி அநேக மந்திரவாதிகள் வந்தார்கள். ஒருவராலும் ஒன்றும் ஆகவில்லை. எல்லாம் வீண்செலவுதான் என்று பின்னர்த் தெரிந்துகொண்டேன். தாங்கள் சொல்வ திப்படிப்பட்ட மந்திரவாதிகளைத் தானோ? வேறேயோ என்று கேட்டான்.

கௌடபாதர் அவனைப்பார்த்து, நீ சொன்ன மந்திரவாதிகள் மந்திரத்தை வாதிப்பவர்கள். வாதித்தலென்றால் துன்பஞ்செய்தலென்று பொருள். தேவி, நரசிங்கம், வைரவன், கணபதி, சுப்பிரமணியன் முதலிய தேவதைகளை ஆராதிப்பவர்களும், மந்திர சாத்திரத்தை நன்றா யுணர்ந்தவர்களுமாக உள்ளவர்கள் நீ சொன்ன மாதிரியாக ஒன்றுஞ் செய்யமாட்டார்கள். சாத்திரப் பிரகாரமான யந்திரங்களை யமைத்துப் பூசித்துக் கட்டுவார்கள். கட்டினால், மருந்துண்டவனிடத்தில் வியாதிக்கு இருக்க இடமில்லாதவாறுபோல யந்திரத்தைத் தரித்துள்ளவர்களிடத்திலேயும் பைசாசங்களுக்குத் தங்க இடமில்லையென்று தெரிந்துகொள்: இவை வீண் காலக்ஷேபம் நீ என்னகேட்கிறாய் கேள் என்றனர்.

விஜயவிக்ரமன் சுவாமீ! குன்மஞ் சூதகபந்த முதலியவை யுடையவர்களுக் கென்னசெய்வது அதையுந் தாங்களே தயவுசெய்து சொல்லவேணும் என்றான். அதற்குக் கௌடபாதர் நீ என்ன வைத்தியம் செய்யப் போகின்றனையா? எனக்கு ஏன் வீண் வேலை வைக்கின்றனை என்றனர்.

அதற்கப் புரமன்னன் சுவாமீ! நானரசனல்லவா இந்தப் பட்டமகிஷியை அன்றியும், எனக்குச் சாதிக்கொருத்தி மனைவிகளாகவிருக்கிறார்கள். நான் கொஞ்சம் அந்த வைத்திய விஷயத்தில் விருப்பமானவன் அதனாலெனக்கே உபயோகப்படுமென்பதன்றி வேறில்லை. ஊர்களிலே வைத்தியர் என்று பெயருடனிருப்பவர்களில் நூற்றுக்கைந்துபேர் குருமுகமாக முன்னே வியாதிலட்சணங்களையும், பின்னே பரீக்ஷாலக்ஷணங்களையும், பின்னர் சரக்குசத்திகளையும், விஷயாதிவிஷயங்களையும், புடாதிகளையும், ஔஷதபாகங்களையும், உபயோகாதிக் கிரமங்களையும் அறிந்தவர்களாக இருக்கின்றார்கள் என்று திடமாகச்சொல்லமுடியாது. வைத்தியர் எவ்வகை வியாதிகளுக்கு ஒரு பாஷாணமுமே கிடையாது. அப்படிப்பட்டவர்கள் ஏதையெடுப்பார்கள், அவர்கள் கூறும் ஔஷதங்களை எவ்வண்ணம் நம்புவது, தங்கள் திருவாய்மொழி சற்றும் பிசகாது. அதனைக் கேட்கின்றேன் தயவிருந்து சொன்னதைச் சொல்லுங்கள், நானெங்கே வைத்தியஞ் செய்யப்போகின்றேன் என்றான்.

இம்மொழி கேட்ட கௌடபாதர் மந்தஹாஸவதனராய் நீ இப்படிப்பட்ட வகை இருக்கிறதினாலேதான் உனக்குப் பிள்ளைகள் அநேகரிருக்கின்றார்கள். அது கிடக்கட்டும் சூதகபந்த முதலியவை யுள்ள மாதர்கட்கு வேறொன்றுந் தேவையில்லை. கறியுப்பு, கல்லுப்பு, செய்யுருப்பு என்னுமிவைகளை ஒவ்வொரு பலமெடுத்துப் பொடித்து ஆற்றுத் தும்மட்டிகாய் ரசமும், பசுவின் பாலும், எலுமிச்சம்பழ ரசமும் வகைக்குப்படி அரையாகவிட்டுக் கலக்கி காய்ச்சி நீரெல்லாம் வற்றினபின்பு பானையிலோரங்களில் காய்ந்து

மெழுத்திருக்கும் உப்பினைச்சுரண்டி யெடுத்து வைத்துக்கொண்டு ராவிலேயாங் காலங்களில் ஒரு வெருகடிப் பிரமாணம் உப்பை வாயிலிட்டு சுத்த ஜலங்குடித்தால் பேதியாகிச் சூதகக்கட்டினைத் தையும் அடியோடகற்றும்; குன்மத்தையுமழிக்கும். இதற்கு பத்தி யமேகிடையாது. இதுவுமிகவு மருமையான மருந்து நினக்குச் சொ ன்னேன் நீ உலகினருக்குபயோகப் படுத்துவாயென் றுரைத்தனன் என்றனர்.

இவ்வளவையுங்கேட்ட வவன் இதெல்லா நமக்கென்னத்தி ற்கு நாங்களிரண்டுபேர் வந்திருக்கின்றோமே எங்களிருவரில் பாவி யிவளா நானா அதனைச் சொல்லுங்கள் என்றான்.

முனிவர் அதிருக்கட்டுமென் றதனாலேயே நாம் சொன்ன வற்றிலெதுவும் இவன் மனதிற் படியவே இல்லையென்று தோன்று கின்றது. பட்டினவாசங்களிலும் சிறு கிராமங்களிலும் இவனைப் போல பலருண்டு. அவர்கள் எங்கேனும் ஸத்காலக்ஷேபங்கள் நட ந்தால் அவ்விடங்களுக்குக் கட்டாயமாகச்சென்று புராணேதிகாச ங்களைக் கேட்பவர்களைப்போல அபிநயித்துக்கொண்டு மனத்தை வேறு விஷயங்களிலேயே செலுத்துபவர்கள். அவர்களை எப்படி அவர்கேட்ட தர்மசரிதங்கட்கு விரோதமான நடையினராக நாங் காண்கின்றோமோ அவ்வண்ணமாக இவனையும் அறிந்தோமென்று நினைத்துக்கொண்டே விஜயவிக்ரமா நீயாரைப் பாவியென்றுசொ ல்லச்சொல்கின்றாய், பங்கஜாக்ஷியைப் பாவியென்றால் உனக்குச் சந்தோஷம், உன்னைப் பாவியென்றாலுனக்கு வருத்தம். ஆனாலுஞ் சொல்லவந்த நானுள்ளதைத்தான் சொல்லவேண்டும். இந்த பங்க ஜாக்ஷி பதுமினிசாதிப்பெண், மஹா உத்தமி, மஹாபதிவிரதை என் பதை யவளுடைய அடக்கவொடுக்கமான நடைநொடிபாவனைக ளும், நிஷ்கபடமான பார்வையுமே விளக்கும். இப்பொழுதிவளு க்கு வயதிருபத்திரண்டு இருக்கலாம். உனக்கு வயது நாற்பத் திரண்டு அல்லது நாற்பத்துமூன்று இருக்கலாம். நீ அநேக ஸ்தி ரிகளோடு புணர்ந்து உன்னிந்திரியத்தை அசுத்தப்படுத்திக்கொண் டாய், உனது சரீரசம்பந்தத்தால் இவளதுகருப்பையும் கிருமி க்கூட்டங்களால் நிறையப்பட்டிருக்கின்றது. அன்றியும் நீ பூர்வ ஜன்மத்தில் அநேகமான சிசுக்களை வதைத்தவன்; அதனாலுண்டான பாவத்தாலுனக்குச் சந்தானமில்லாமை இதுவரைக்கும் இருந் தது; இப்பொழுது நீ நம்மைக்கண்டமையா லினியுனக்குச் சந்தா னமுண்டாகும், நீசெய்த பாவந் தொலையுமாறு நினக்கு நான் ஒரு பிரதோஷ ஸமயத்திற் செய்த சிவதரிசனபலத்தை இதோ தத்தஞ்செய்கிறேன் என்றுரைத்துத் தனது தோளினின்றும் ஜடையிலிருந்த ஒரு திராக்ஷவிதையை எடுத்துக்கொடுத்து இதனை நீ பத்திரமாகக்கொண்டு சென்று சுத்தமான இடத்திலிட்டு நீரூ ற்றிக்கொண்டு வரக்கடவை, அங்ஙனம் வந்தா லிதுமுளைத்து ஒரு

கொடியாகிச் சில தினங்களிலே யலர்ந்து காய்த்துப் பழுக்கும், பழுத்த பழங்களை நீங்களிருவருமாக உண்ணவேண்டும், உண்டால் பின்னர் இவளிடத்தி லொருபெண் சந்ததிபிறக்கும், அப்பிறந்த குழந்தையை நீங்கள் ஞானகலாவிலாசினி என்று பெயரிட்டு வளர்த்தால் உங்கள் குலத்திற்கு நன்மையுண்டாவதுமன்றி யுலகத்திற்கு நன்மையுண்டாகும் என்றனர்.

இதைக்கேட்ட அரசன், ஐயா! ஆனால் நான்தானே பாவி, எப்படியாவது பிள்ளைக்கு வழிகாட்டினீர்களே அதுவே போதும், இதுவே தாங்கள் செய்த புண்ணியம், உலகத்திலே ஒருத்திக்கும் பிள்ளையில்லையாது போனால் சாபியாகவும் மற்றுஞ் சோதிடாதிபரு முரைப்பவற்றைப்போல நாங்களுரையாமல் நல்லநீதியாகவே உரைத்ததற்காக நான் நன்றிமறவாதவனாக இருக்கின்றேன், என் மனைவியும் நல்ல உத்தம குணமுடையவளாதலால் அவளே செயித்தாள். நான் உண்மைகளை யறியுமாறு மூடனைப்போல தங்களிடத்தில் மன்றாடி யதிகமாகப் பேசினதைப்பற்றி மன்னிக்கக் கேட்டுக்கொள்கின்றேனென்று அவர் சரணங்களைக் கையாற்றொட்டு வணங்கினான்.

பங்கஜாக்ஷியுந் தனதுடலைச் சற்றே வளைத்து முனிவர்பெருமானை வணங்கி, எங்கள் பெருமானே! என் மனக்குறையை நீக்கின வள்ளலே! தங்களாலநேக விஷயங்களை யுணர்ந்தேன். தாங்கள் செய்த இந்நன்றியை நானென்றும் மறப்பேனல்லேன். சில தினங்கட்குமுன் யான் என் இஷ்ட தெய்வமான ராஜராஜேஸ்வரியை மல்லிகைமலர்களால் அர்ச்சித்துக்கொண்டிருந்தேன். இருந்தபொழுது எனக்கு யானிருந்தது தெரியாத தன்மையான ஒருமயக்கம்போல கண்டது. கண்டதக்ஷணமே சுற்றிலும் பால்போன்ற வெள்ளைத்தால் நிறையப்பட்ட அகழியையும், அதனில் செந்நிறமாக விரிந்த தாமரைமலர்களையும், அம்மலர்களின்மீது அநேகமான பொன்னிறமுள்ள அன்னப்பறவைகளையும், ஓரங்களில் கொட்டிவைத்ததுபோல குவிந்துகிடக்கும் முத்துக்குவியல்களையும், அவைகளினருகிற் சிதறிக்கிடக்கும் குங்குமமலர்களையும், அவைகளினருகிற் சூழ்ந்துகொண்டு வண்டுகள் கல்யாணி ராகம் பாடுவதையும், வாளை-சேல்-வரால்-அயிரை-கெண்டை முதலிய மீன்கள் மூக்கிற் பொன்கம்பி தைத்து முத்துக்கொங்கவிட்டிருப்பதையசைத்துக்கொண்டுலாவுவதையும். அடிப்புறம் பளிங்காலும், நடுப்புறம் வைரத்தாலும், மேற்புறம் பத்மராகங்களாலும் இயற்றப்பட்ட சுத்தமான மதிலினையும், அதனப்புறத்தில் பாரிசாதம்-அசோகம்-மந்தாரம்-சந்தனம்-கதம்பம்-வகுளம் முதலிய விருக்ஷங்கள் வரிசைவரிசையாக அலர்களோடுமாத்திரம் விளங்குவதையும், கதலி-கமுகு-பலா-தென்னை-கபித்த முதலியன பழங்களோடுமாத்திரம் விளங்குவதையும், தேமா-புன்னை-சிஞ்சுமாரம்-மாதவி முதலிய

தழைகளோடு மாத்திரம் விளங்குவதையும், அந்த ஒவ்வொரு சோலைகளிலும் விபஞ்சி யென்றும் வீணைகளை யேந்தி விரல்களாலவைகளைத்தட்டி வாசிப்பதையன்றி வாய் திறவாதிருக்குங் கின்னரிகளையும், தழைந்த சந்தன விருக்ஷங்களி னடிகளில் கருஷ்ணசார மிருகங்க ளுலாவுவதையும், அணியணியாக விளங்கும் மாளிகைகளில் பொன்விளக் கெரிவதையும், வெள்ளாடை யுடுத்திய அநேகஞ் சுமங்கலிகள் நிச்சலமாயிருப்பதையும், அநேக பஞ்சதூலிகா மஞ்சங்களில் பஞ்சவர்ணக்கிளிகளை யேந்திய பொன்னம்பாவை யனையவர் ஆனந்தபாஷ்பத்துடன் என்னைப்போல ராஜராஜேஸ்வரியை அர்ச்சனை செய்வதையும், அநேக சுவர்ணவலயங்களின் நடுவில் நாலுதோள்களையும், தேமாம்பழம்போன்ற நிறத்தினையும், சீனம்பர உடையினையும், திலதமணிந்த நெற்றியினையும், பத்மாசனமான இருக்கையையும், பங்கயமேந்திய செங்கரத்தினையும், தேஜோமயமான கருப்பு வில்லினையும், செங்கழுநீர் முதலிய பாணங்களையும், நாற்பத்துமூன்று முக்கோணங்களையுடைய உபயபாதங்களையும், பூரணசந்திரனையொத்த முகத்தினையும், புட்பமணிந்த கூந்தலினையுமுடைய மாதுசிரோன்மணி யொருத்தி ஒரு அழகிய வலங்காரமான நான்கு சிங்கங்களாற் சுமக்கப்பெற்ற பீடத்தின் நடுவிலெழுந்தருளி யிருப்பதையும், அந்த மஹாசுந்தரியின் அருகில் தாங்கள் நிற்பதையும் நானிந்த விழிகளாலே கண்டேன். கண்ட எனக்கு அதிகமான சந்தோஷமுண்டானமையால், இரண்டு கைகளையுங் குவித்து அந்தத் தெய்வத்தை வணங்கி, மிகவும் அன்புடனே அநேகமாகத் துதித்து, என்னம்மணி! எனக்குச் சந்தானமுண்டாகுமாறு அருள்புரியவேண்டுமென்று வேண்டினேன். அப்பொழுதந்த மஹாதேவி இவனால் உனக்குச் சந்தானமுண்டாகுமென்று தனது கனிவாயைத்திறந்து கூறினள். இதற்குள் மயக்கந்தெளிந்து திடீரென விழித்துப்பார்த்தேன். பார்த்தபோது என திருப்பிடமாக இருந்ததேயன்றி வேறிடமாக இருக்கவேயில்லை. அவ்விடத்தி லக்காட்சிகளொன்றுங் காணப்படவில்லை. பின்னர் பூசையை முடித்து வெளியில் வந்து அதனை ஒரு சொப்பனமாகவே மதித்தேன். சொப்பனங்கண்டவர்களுக்குச் சில தினங்களி லது மறந்தேபோகும். எனக்கப்படி மறக்கவேயில்லை. நான் காணும் ஒவ்வொரு சொப்பனங்களும் உடனே மறக்குமேயன்றி இதனைப்போல நீடித்த நினைவுடையதாக இல்லவேயில்லை. இன்று தங்களைக்கண்டமையால் அது ஒரு தேவதாகடாக்ஷமென்று நினைக்கின்றேன் என்று மாதுரியமாக உரைத்தனள்.

இவ்விம்மிதமான விஷயத்தைக் கேட்ட கௌடபாதர் ஆனந்தபாஷ்பத்துடன் இருகரங்களையும் வயிற்றிற்சேர்த்து வணக்கமாக ராஜராஜேஸ்வரியே! நமஸ்காரம் என்றுரைத்து, மாதர் திலகமே! நின்னைப்போல பாக்கியசாலிகள் யாவர்? மூன்று லோகங்களிலும் இத்தகைய அரிய காக்ஷியைக் கண்டவர்களிரார் என்பதை

நான் உறுதியாக உரைப்பேன். ஓ அம்மணி! நீ கண்டது சொப்பனமல்ல. பராசக்தி ராஜராஜேஸ்வரியின் திவ்விய கொலுமண்டப தெரிசனமேயாம். இந்த தெரிசனத்தாலினி யுனக்குப் பிறவியே இல்லை. இந்த அரிய காக்ஷிக்காகத்தான் முனிவராதியர் அருந்தவஞ் செய்கின்றார்கள். அருந்தவஞ் செய்பவர்கட்குங் கிடைக்காத இந்த அரிய காக்ஷியைக் கண்ட நின்னிலும் சிறந்தவரில்லை யென்பதுண்மை; அதனாலேதான் நாமும் நின்னெதிரே தோன்றினேம். உனது மகளாக வரும் புண்ணியரூபியான ஞானகலாவிலாசினியைத் திரிலோகங்களும் புகழ்வார்கள்; மற்றைய விஷயங்களை யுரைத்தற்கிது தருணமல்ல. நீங்கள் போங்கள். ஓ ஜனங்களே! நீங்கள் உங்கள் அரசனிடத்தில் அன்புள்ளவர்களாக இருத்தலினாலே உங்களுக்கு யாதொரு குறைவும் வராதவண்ணம் எல்லாம் வல்ல நமதிறைவருங்களை ரக்ஷிப்பாராக என்றுரைத்தனர்.

அதனைக்கேட்ட பிரஜைகள் அகமகிழ்வுடன் முனிநாதனைப் பார்த்து, பூவுடன் சேர்ந்த நாருக்குங் கண்ணிய முண்டாமாறு போல உயர்குடிமக்களான இவ்வரச னரசியரின் சகவாசத்தால் கிடைத்தற்கரிய தங்கள் தெரிசனத்தை நாங்கள் அடைந்து புனிதராயினேம். நெல்லைப் புரத்தற்குச் செல்லு நீரா லருகிலுள்ள புல்லுந் தழைதலைப்போல இவ்வரசர்பெருமான் பொருட்டுத் தங்களாலுரைக்கப்பெற்ற அரிய மொழிகள் அருகினின்ற எங்களுக்கு முபகாரமாகவே ஆயின. பரோபகாரஞ்செய்வதையே பெருந்தொழிலாகக்கொண்டு தங்களைக்கட்டித் திரிதல் பெரியோர் வழக்கமென்பதை முன் கேட்டறிந்த நாங்கள் அதனை இங்ஙனங் கண்டறிந்தோம். எங்களுக்கரிய காக்ஷியளித்த தங்களை வணங்குவதன்றி நாங்கள் என்ன கைம்மாறு செய்யப்போகின்றோமென்றார்கள்.

உடனே விஜயவிக்ரமன் தன் மனைவியுடனே முனிவரிடத்து விடைபெற்றுக்கொண்டு பரமசந்தோஷத்துடன் திரும்பினன். குடிகளும் உடன் திரும்பினவர்களாகத் தத்தம் இடங்களை யடைந்தார்கள். யாமமுமிரண்டாயிற்று. கௌடபாதரும் தமக்குள் இவ்வாறு நினைத்தனர்.

கௌடபாத விஜயவிக்ரம பங்கஜாக்ஷி

ஸம்வாதரூபமான

முதலத்தியாயம்

முற்றிற்று.

இரண்டாவதத்தியாயம்.

பங்கஜாக்ஷி தங்கருத்தாதிய வுரைத்தது.

நாமொன்று நினைத்தால் தெய்வமொன்று நினைக்குமென்பது சரியாகவே யிருக்கின்றது. பௌர்ணமியாகிய இன்று சற்றுநேரத்து சந்நிதானிடத்துள்ள பரமேசுவரியைத் தியானிக்கலாமென்று கருதி நாம் இவ்விடத்தையடைந்தோம், அடைந்த இடத்தில் என்ன என்ன நடந்தது, நாம் சடையை வளர்த்திருக்கிறோம், தோலையுடுத்திருக்கிறோம், கந்தமூலபலங்களை யுண்ணுகின்றோம், இந்திரிய நிக்கிரகம் இந்திரிய நிக்கிரகம் என்று எத்தனையோ வேலைகளைச் செய்கின்றோம், நமக்கந்த ஜகதீசுவரி காட்சியளிக்கவில்லையே, இராஜ போகத்துடனிருக்கும் பங்கஜாக்ஷிக்குத் தரிசனமளித்தனளே இதை யுத்தேசிக்குமிடத்து வேஷம் போட்டுக்கொள்வதனு லதிகப் பிரயோசனமொன்றுமில்லை என்றறிகின்றோம். அன்புதான் காரணம் என்று பலவாறாக நினைத்து மூன்றாவது யாமத்தையும் அகற்றி நாலாவது யாமத்துவக்கத்தில் தனது நியதிக்கடன் புரியுமாறு கண்டகமண்டலாதிகளோடும் தனது வாஸஸ்தானத்திற்குப் போயினர்.

இவர் அவ்விடம்விட்டுச் சென்ற சிலநேரத்திற்கெல்லாம் கிழக்குத்திசையானது ஹே! ஹே!! பிரஜைகளே என இன்னந் தூங்குகின்றீர்களென்று கோபித்ததைப்போல செந்நிறமடையவும், வலியன் முதலிய சிறுகுருவிகள் ஜபஞ்செய்பவர்களை எச்சரிக்குமாறுபோல ஒலிக்கவும், ஐயையோ இந்த உலகத்தின் ஸ்திதி இவ்வளவுதானு என்று கூவுமாறுபோல கோழிகள் கூவவும் சங்காரமும் படைப்பும் இப்படிப்போலதானென்று ஒடுங்கிக்கிடந்த ஒவ்வொருதத்துவங்களும் தத்தந்தொழிலைச் செய்யவும், சோம்பலற்ற மாணவர்கள் தந்தம் பாடங்களைச் சிந்திக்கவும், ஒழுக்கமுடைய குலமடமாதர்கட்கு முகங்கழுவல் முதலிய சுசிகளையளிக்கவும், கற்கக்கற்க உள்ளமாகிய மலர் மெல்லென மெல்லென அலர்தலைக்காட்டுமாறுபோல தாமரைமலர்கள் மெல்லென மெல்லென வலரவும் பொழுதுவிடிந்தது; ஸூரியனுமுதயமாயினன். அரசனுடன் சென்ற ஜனங்களும் பொழுதுவிடிந்ததறிந்தெழுந்து இரவில் கேட்டதுவும் கண்டதுவுமான ஆச்சரியங்களைப்பற்றிப் பலவாறாகப் பேசிக்கொண்டார்கள். நம்முன்னோர் நாட்டொட்டு நமதாற்றங்கரையில் இரவில் பெரியவர்கள் வந்து நிஷ்டைகூடுவது வழக்கந்தானாம். சிலர் பார்த்துமிருக்கிறார்களாம். பொன்மலையோரத்தில் நெல்லிக்கனி பறிக்கச்சென்ற வேளாளர் துரைமுத்துக்கூட வெகுநாள் கஞ்சா, வெல்லம் முதலியவை வாங்கிக்கொண்டுபோய்க் கொடுத்திருக்கின்றானாம். அப்புறம் சித்தர்களென்று தெரிந்ததற்குப்பின்பு அவன்கண்ணுக்குக் காணப்படுகிறதில்லையாம் என்றும்; எவனோ புளூவாண்டி அந்த ஆற்றோரத்திலே பொங்கிக்கிண்டித் தின்னவந்திருக்கலாம். இந்தராஜனும் ராஜா

வின்பனேவியும் வெறிபெடுத்தோடுவதை அவன் பார்த்திருக்கலா
ம். இது தான் தருணமென்று பெரியவாளேப்போல படித்து எதை
யெதையோ பேசி இரண்டுவிதைதயைக் கிதையைக் கொடுத்திருக்க
லாம், அது எல்லாருக்கும் பிரமையையுண்டாக்கியிருக்கலாம். காக்
காயிருக்கப் பனம்பழம் விழுந்த கதையைப்போல இவர்களுக்கும்
பிள்ளைகிள்ளை யுண்டாகலாம். அதனாலே பின்னைசகுனட்சுழித்து
மேற்படி பொய்போகக்கும் அதிஷ்டமுண்டாகலாம். இதெல்லா
மொரு ஆச்சரியமல்ல. நானெப்படி எத்தனையோ பேயைப்பார்த்
திருக்கிறேன்; ஒன்றும் பலிக்கிறதில்லை. இப்படி என்னை தேடித்
தக்கொள்ளாதுபோனால் நானும் வந்திருப்பேன். வந்தாலுண்மை
யெனக்குத்தெரியும். இனி நீங்கள் சொல்வதையன்றி நானொரு
சொல்கூட சொல்லப்படாது. உலகமே கட்டுப்பாடானது என்றும்;
சாமியாகிலோ, இவர்களெல்லாம் பித்துப்பிடித்து அலைகிறார்களே;
இவர்கள் பித்தமே இவர்கட்காரோ ஒரு சாமியார்வந்ததாகவும்,
இருந்ததாகவும், பேசினதாகவும் வீணை சொல்லுமாறு தோன்றி
னாலும் தோன்றியிருக்கலாம், என்ன சனியோ இராஜாத்திக்கு
பயமே நீங்கிறதுபோதுமென்றும், எல்லாரும் மகா பெரியவரான
கௌடபாதயோகியைக் கண்டார்கள்; நாம் தாசி சொர்ணத்தின்
தெரிசனமென்றே வேறே சிந்தையன்றிக்கிடந்தமையால் சாமியோ
பூதமோ அவனோடு விசாரிக்கிறோம். நாமும் கண்டிருந்தால் நமக்கு
பாசை குறையலாம். பெற்றபொருளைச்சிறிதாக்கிப் பெறாதபொரு
ளேப் பெரியதாக மதிப்பது உலகவாணருடைய உள்ளக்கிடக்கை
தானே என்றும்,

விடிந்தாற்றெரியும் வெளிச்சம்; அவர்கள் கொண்டுவந்த
திராக்ஷவிதைதனை நட்டு அது பயிராகிப் பூத்துக் காய்த்துப்பழுத்த
போது பார்த்துக்கொள்ளலாம். ஒரு ஊரிலே கடன்காரனொருவ
னிருந்தான். அவனொரு பிராமணன். அவனுக்குக் கடன் கொடுத்
தவர்கள் சூத்திரர். சூத்திரராகையாலே பிராமணக்கடன்காரனே
வழக்கமாகவே கடன் கேட்டுவந்தார்கள். அப்படி கேட்டாலும்
ஆசீர்வாதத்தோடு சாக்குப்போக்குச் சொல்லுகிறதேயன்றி அவன்
கொடுக்கிறபாடில்லை. ஒருநாள் இவர்களெல்லாருமாக ஒருமித்து
பிராமணனைக்கண்டு, எங்கள் கடனுக்கு வழிசொல்லவேணுமேயன்
றி சும்மா ஆசிர்வாதம்பண்ணி யனுப்புவது சரியல்ல என்றார்கள்.
உடனே பிராமணன் சற்றே ஆலோசித்து, இப்பொழுது போடப்
போகிற பயிரின் முதற்பலன் உங்களுக்கே கொடுத்துவிடுகிறனெ
ன்றுரைத்து அவர்கள் கண்ணெதிரிலேயே சில புளியங்கொட்டை
களை எடுத்துக் கொல்லைமுழுவதிலும் பரபரப்போடு நட்டானும்.
இதைக்கண்ட சூத்திரர் இது நல்ல வேலையென்று ஏமாந்து போய்
விட்டார்களாம். அதுபோல பிள்ளை பிறக்கிறவரைக்கும் இந்தச்
சொல் பொய்தானே. பிறந்தபொழுது பார்த்துக்கொள்ளலாம்;

இதற்காகவேன் வீணே நாம் கூட்டங்கூட்டமாக அங்குமிங்குமாக இந்தக் குளிரிலும் பனியிலும் நின்று பேசவேண்டுமென்றும் பலவாறாகப் பேசிக்கொண்டார்கள்.

விஜயவிக்ரமனும் அவன் மனைவியும் மகாசந்தோஷமடைந்து சூரியோதயத்திற்கு முன்னமே எழுந்து அநேக நாளாகக் கிடந்த மனக்குறைகள் நீங்கிவிட்டமையால், அதிகமான சந்தோஷமென்னும் சாகரத்தின் முழுகினவர்களாய் ஒருவருக்கொருவர் உன்னாலே நான் பெரியோரைத் தெரிசித்தேன். உம்மாலே நான் பெரியவரைக் கண்டேன். இது நான் செய்த பாக்கியம், இது நான் செய் பாக்கியம் என்று கட்டி முத்தமிட்டுக்கொண்டார்கள்.

பங்கஜாக்ஷி தன் கணவனை விஜயவிக்ரமனைப்பார்த்து பின்வருமாறு உரைத்தாள். தங்கள் விஷயத்திலெனக்கொரு பெரிய சந்தோஷமெப்பொழுதுமுண்டு. அதாவது உலகினில் அரசர்கள்மாத்திரமல்ல, மற்றவர்களிற் பலருங்கூட வீண்கட்டுப்பாடான நிலைகாரியங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அவை கீழ்க்கூறுமிவைகளாகிகளாம் பெண்களைப்போல ஆண்கள், ஆண்களைப்போல பெண்கள். சில அவயவங்கள் மாத்திரம் பெண் ஆண் என்னும் பகுதிக்காக வித்தியாசமேயன்றி மற்றைய விஷயங்களிற் பெண்களுக்கும் ஆண்களுக்கும் என்ன வித்தியாசம், ஒருவித்தியாசமுமின்றாம். போஜனஞ் செய்வதிலும், ஆடை யுடுத்துவதிலும், நகை பூண்பதிலும், வாகனமேறுவதிலும், நடப்பதிலும், இருப்பதிலும், கற்பதிலும், பொருளீட்டுவதிலும், கலப்பாதிகளால் உண்டாகுஞ் சந்தோஷமென்பதிலும் சற்றும் வித்தியாசமே இல்லையென்பதை நானறிவேன்.

புருஷர்களையும் பிறந்தநாள்முதற் சேலையுடுத்திக் கச்சினையணிந்து காதுவளர்த்துக் கம்மலணிந்து காப்பிட்டு பெண்களுக்கேவல் செய்துலாவவேண்டுமென்று திட்டப்படுத்திப் பழக்கத்திற் கொண்டுவந்தாலப்பொழுது புருடர்கள் சீ நாமிந்த வேலைகளைச் செய்யப்படாது; நாம் கல்விகளைக் கற்கவேண்டும்; பெண்களைத் தாழ்ந்தவர்களாக்கி நாம் உயர்ந்தவர்களாகவேண்டுமென்னும் எண்ணமேனும், அல்லது வேறு எண்ணமேனும் அடைவார்களா இல்லை; வீணே வாணாளை ஒழிப்பார்கள்.

காடுகளிற்கிடக்கும் இருளர், காட்டாளர், புலையர், குறவர்முதலிய வமிசங்களிற்பிறந்த புருடர்களுக்கும், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் சூத்திரர் சண்டாளர் முதலியவர்களாகவுள்ள புருடர்களுக்கும் என்னவித்தியாசம் சரீராதி அவயவங்களில் எள்ளத்தனையும் வித்தியாசமே கிடையாது. பழக்கமான ஆசாரங்களையன்றி இவர்களுந் தேடார்கள்; அவர்களுந் தேடார்கள். சைவனுக்கு மாமிசங்களிலும், அசைவனுக்கு காயிலை முதலியவைகளிலும் எவ்வண்ணந் து

வேஷமோ அவ்வண்ணந்தான் மற்றையோர்களிலும்; உண்மையிற் பழக்கத்தாலன்றி சுபாவத்தில் மனிதஜாதிக்கென்று சொந்தமான ஆசாரமொன்றும் இல்லவேயில்லை.

மிருகங்களுக்கேனு மொருவகையான பழக்கமுண்டென்னலாம்; மனிதஜாதியினருக் கதுகூடவில்லை. காகங்கள், பருந்துகள் முதலிய பறவைகள் முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சுபொரித்து வளர்க்கும்போது தங்கள் குஞ்சுகளுக்குப் பறக்குமாறு கற்றுக்கொடுக்கின்றனவா இல்லை. பேசக் கற்றுக்கொடுக்கின்றனவா இல்லை. மனிதஜாதியினரோ பேசவு நடக்கவுங் கட்டாயமாகக் கற்றுக்கொடுக்கிறார்கள். கற்றுக்கொடாதுபோனால் மனிதப்பிராணிகள் பேசவேனும் நடக்கவேனு மறியாதனவேயாய்க் கிடக்குமென்றுநானு றுதியாக வுரைப்பேன்.

ஒட்டியநாட்டிலுள்ள ஒரு ஒட்டியப்பெண் ஒரு ஒட்டியனுக்குப்பெற்ற ஒருபிள்ளையை பெற்றவுடனே என்றுவைத்துக்கொண்டாப், சில மாதங்கள் கழித்து ஒரு தமிழன் எடுத்துக்கொண்டுவந்து தமிழரோடு சேர்த்துவளர்த்தால் தமிழையன்றி மாதாபிதாக்களின் சுயபாஷையென்னு மொட்டியத்தை யக்குழந்தை பேசுமா? பேசாதே. சொல்லிக்கொடுக்காமல் தன்னன்னை தந்தையரை ஒட்டியரென்றுணருமா? உணராதே. சுயபாஷையாகவிருந்தால் தானே வந்துவிடாதா. மனிதருக்குப் பாஷையுஞ் சுயபாஷை என்றொன்றில்லவேயில்லை.

துருஷ்கர் நிறைந்த நாட்டிலிருக்கும் புருஷன் தலையை மொட்டையடித்துக்கொள்ளவும், தாடி வைத்துக்கொள்ளவும் விரும்புகிறான். ஸ்திரீயும் உடம்பை மூடிகொள்ள விரும்புகிறாள். அந்த இச்சை, குடுமியோடிருக்கும் தமிழ்நாட்டவருக்குண்டாகிறதா? இல்லை. பழக்கமே காரணம்.

மனிதன் தனது பரம்பரையார் அநுசரித்த நாயங்களையே தானு மநுசரிக்க விரும்புகிறான். தகப்பனுந்தாயும் ஸ்ரீவைஷ்ணவர்களாக விருந்தாலொருவன் பாலியமுதல் ஹரியே ஸர்வோத்கிருஷ்டன் என்றுரைக்கவும் அவ்வண்ணமே தீர்மானிக்கவேண்டுமென்றும் நினைக்கிறான். பின்னரெதிலேனு மொருவிஷயத்தில் தன் மதத்தினருந் தங்களுக்கு விரோதமான வருத்தங்களையுடைய அத்துவைத மதத்தரோடு பழக்கம் வருமேல் அவனுடைய தாக்ஷிண்யத்திற்காக அதனைச் சிலநாளருவருப்போடு கேட்டும்படித்துமிருந்து பின்னர் பார்வைக்கு வைஷ்ணவனாகவும், அந்தரங்கத்திற்கு அத்துவைதியாகவும் ஆகிறான். பின்னுஞ்சிலகாலம்போனால் ஸ்ரீவைஷ்ணவத்திற்கு தோஷங்கற்பிக்கிறான். விஷ்ணு மாயாகற்பிதர்தானே, மாயையாகிய காரணத்தையுடைய விஷ்ணு மண்ணைக் கருதினாற் குடமென்றொன் றில்லாதவாறுபோல இல்லாதுபோகின்றான். பிரம

மொன்றே நித்தியம். அதுவும் என்னைத்தவிர இல்லை என்று தீர்மானமாக உரைக்கின்றான். இவனிவ்வண்ணங்கூறுதற்குக் காரணம் அவனுடைய சிநேகிதனுடைய தாக்ஷிண்யமான பழக்கமல்லவா முதலாய் நின்றது.

பிறந்ததுமுதல் சைவனாகவே இருக்குமொருவன் எவ்வளவு நியாயங்களை இதராள் காட்டினும் ஒவ்வாது சிவனே ஸர்வதேவோத்க்ருஷ்டனென்கின்றான். வேறொரு மதஸ்தனோடு சிலநாள் பழகினால் காலாவட்டத்தில் சிநேகிதன் மதத்தை நல்லதென்று ஒப்புக்கொள்ளுகிறான். பிறகு அதையனுஷ்டிக்கவுஞ் செய்கிறான். இதனால் மனிதனுக்கென்று ஒரு மதஞ் சொந்தமானதாக இல்லவேயில்லை.

கேவலம் நீசர்களானவர்களென்னும் பறையரும் உத்கிருஷ்டமானவர்களென்றுரைக்கும் அந்தணரும் கல்விபயில்வார்களானால், கற்ற கல்வியின் திறத்தை நன்றாயறிகின்றார்கள். சில அறிவீனர்கள் மாத்திரம் வீணான சில கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள்; அவையாவையென்னிற் சூத்திரர் சமஸ்கிருதம் படிக்கப்படாது, வேதமோதப்படாது என்பனவாதிகள்; இவை வீண்கட்டுப்பாட்டுப் பிதற்று மொழிகள். வாயாலுண்ணு முணவு அனைவருக்கும் வாயின் வழியேசென்று வயிற்றில் நிரம்பி பசிப்பிணி நீக்குமாறுபோல, வேதமுதலிய நூல்களும் அனைவருக்குங் காதின்வழியே இருதயத்திற் புகுமானால் அதன் பலனை அடையத்தட்டில்லை.

புருஷர்களையன்றிப் பெண்களுக்கு யாதொரு சுதந்தரமுங் கிடையாது என்பதாக பலரநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆதியிலிந்த உலகத்திற்கு மூலபுருஷனாக விருந்த பிரமன் தானே சதரூபையென்னும் பெண்ணாகவும் சுவாயம்புவென்னும் புருஷனாகவும் உருக்கொண்டு இவ்வுலகத்திலாண்பெண்களைப் படைத்தானென்று நூல்களுரைப்பதை நான் பார்த்திருக்கின்றேன். ஒரு பொருளே இரண்டுபாகமாகப்பிரிந்து ஆணும் பெண்ணுமான இந்தமாதிரியாகச் செய்திருக்குமானால் ஆண்பிள்ளைகட்கும் பெண்பிள்ளைகட்கும் என்ன தாரதம்மியம் ஒன்றுமில்லை. இதனையுணராதார் பலர் பெண்கள் தற்சுதந்திர மற்றவரென்பர் இது வீண்கட்டுப்பாடு; இந்த கெட்ட வழக்கமான கட்டுப்பாட்டினாலே பெண்களை எந்த விஷயத்திலும் தலையெடுக்கவொட்டாமல் செய்கிறார்களென்றுணர்ந்தவர்களிலும் அநேகர் இந்த வீண்கட்டுப்பாடான கொடிய விஷயத்தை யறிந்திருந்தும் அவ்வண்ணமே செய்கின்றார்கள்.

செய்யநிற்பனவில்லை யென்று தாமுணர்ந்த காரியங்களையும் பலர் செய்கின்றார்கள். அதாவது அநேகருக்கு விக்கிரகங்களை வணங்குவதற்கு இஷ்டமே யிருக்கிறதில்லை, இஷ்டமில்லாதிருந்

தும் தங்கள் வீடுகளிற் பிள்ளையார் பெருமாள் முதலியவர்களின் உருவங்களைவைத்து ஆராதிப்பவர்களாகப் பணங்களைச் செலவிட்டு நடிக்கின்றார்கள்.

சிவனீச்சுரன் சகத்தென்னுமிவை புளுகு. ஈசுவராராதனத்திற் பிரயோசனமேயில்லை. பார்ப்பனர் வயிறு பிழைக்குமாறு இவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்னுமவர்களிலு மநேகர் சிவாலய விஷ்ணுவாலயங்களைச் சீரணோத்தாரணஞ் செய்தலும நூதனமாக கட்டுவித்தலையும் செய்கிறார்கள்.

சனி, கேது, புதன் முதலிய கிரகங்களை வணங்குவதிலும் ஹரிஹராதியரை வணங்குவதே விசேஷம் என்னுந் திருமான முடையவர்களும், நவக்கிரகப் பிரதிஷ்டை நவக்கிர பிரதக்ஷண முதலிய செய்கின்றார்கள்.

கட்குடித்தல் வெகுகெடுதியானது பாவமானது என்று பிறர்க்குரைக்குமாறு, குறள் முதலிய நீதிநூல்களை நன்றாய்க் கற்றுள்ளவர்களிற் பலர் பிரமாதியமென்று தம்மனத்திலுள் நினைத்துக் கொண்டு தம்மாட்டுக் கற்கவரும் மாணாக்கர் வேலைக்காரனென்னும் இவர்களைக்கொண்டு ரகசியமாக மதுக்குடங்களை யழைப்பித்து அதனை மிகவுங் கெட்டது என்று இகழ்ந்துரைத்த வாயினாலேயே தாமம்மதுவாதிகளை யருந்துகிறார்கள்.

பறையரிடத்தில் மருந்து வாங்கி யருந்துதல், பறையரைத் தொடுதல், பறையரோடு பேசன் முதலிய செய்யாதிருப்பதே உத்தம ஆசாரமென்று பிறர்க்குரைக்கும் பிராமணரிற்பலர் பறையரையே தொடுதலும், பறையரளிக்கு மருந்தாதிகளையே யருந்துதலும், பறையர் செய்யும் பலகார முதலிய சிற்றுண்டிகளை யுண்ணுதலுஞ் செய்கின்றார்கள்.

இதனாலே தங்க ளெண்ணப்படியே நடப்பவ ரொவருமில்லை. எண்ணமொன்றும் நடையொன்றுமாகத்தானிருக்கும் என்பதை நான் காட்டிய உதாரணங்களே விளக்கும். அநேக மனிதர்கட்குப் பெண்கள் புருஷர்களை யொக்கவர்கள்தானென்று தெரிந்திருக்குமேயன்றி தெரியாதிராது. தெரிந்திருந்தும் பெண்கள்விஷயத்திற் கொடுமையாகவே நடத்துகின்றார்கள்.

ஒவ்வொரு பொருளையுங் கண்டறிதற்கேற்ற கண் பெண்களுக்கு மிருக்கச் சில ஜாதியார் தங்கள் வீட்டுப் பெண்களைத் திரைகளான் மூடியும், நிர்ஜனமான இடத்தில் வைத்தும், நிற்பந்தப்படுத்தியும், கோயில் குளமுதலிய எதனிலும் போகவொட்டாமல் வெகுகடுமையாக நடத்துகின்றார்கள். அவ்வளவு காவலான இடங்களிலிருந்த மாதரிற்பலர் அநேகமான வியபிசாராதிகளை நடத்தினதாக நான் கதைகளிற் படித்திருக்கின்றேன்.

வியபிசாரஞ் செய்பவளென்றுஞ் செய்தேதிருவள். செய்யாதவள் எப்பொழுதுஞ் செய்யாள். வியபிசாரத்திற்குக் காரணம் மூடத்தனமல்லவா. விவேகமுள்ளவர்களில் வியபிசாரிகள் வெகு சொற்பத்திலும் சொற்பமாகத்தான் இருப்பார்கள்.

பெண்களையும் பிள்ளைகளைப்போல எந்த மாதா பிதாக்கள் நினைக்கிறார்களோ அவர்கள்தான் மாதாபிதாக்கள். சிலருக்குப் பெண்குழந்தைகள் அதிகமாகப் பிறந்தால் பெண்களுங்கூட முறித்துப்போட்டுவிட்டடி; யாருக்கேனுங் கொடுத்துவிட்டடி; ஏனித்தனை பெண்பிசாசுகள்; பெற்றாலாண்குழந்தையைப்பெறவேணுமென்று திட்டியுரைப்பதை நான் கேட்டு விசனித்திருக்கின்றேன்.

பிள்ளைகளையே அதிகமாகப்பெறுகிறவர்கள் தரித்திரர்களாகவிருந்தாலும், ஏனிந்தச்சனி என்று எவரும் இகழ்தலை நான் கேட்டதேயில்லை. காந்தா! இதென்ன ஆச்சரியம்.

எவ்வளவு படித்தவனாகவிருந்தபோதிலும் தன் மனைவியை ஒரு இழிந்த பொருளாகவே புருஷன் மதிக்கின்றான். தனக்கேஸகல சுதந்தரமுமிருக்கிறதாகவும் மதிக்கிறான். இருவரும் சமமான நிலைமையில் நடந்தாலல்லவா ஒற்றுமையுஞ் சுகமும் மேன்மையும் உண்டாகும். புருஷனுக்கு மனைவி துணை, மனைவிக்குப் புருஷன் துணை என்று நூல்களிலேமாத்திரம் புருஷர்கள் படித்திருக்கிறார்கள். மனைவியை வீட்டில் தனியே இருக்கவைத்து இரவெல்லாம் வெளியே சஞ்சரிப்பவர்கள் எத்தனைபேர்கள்.

கல்வியைச் செவ்வையாக கற்றமையினாலே இவை நன்மை, இவை தீமையென் றுணர்ந்தேன். இவ்வளவு பேரறிவினை எனக்களித்த தங்களுயர் குணத்தைப்பற்றி என்னுயிருள்ளளவும் புகழ்வேன்.

நான் படித்து எல்லாவிஷயங்களையும் அறிந்துகொள்ளுதற்கு தங்களுள்ளம் இடங்கொடுத்ததைப்போல, நமது நாட்டிலுள்ள பெண்களுங் கல்வி கேள்விகளில் வல்லவர்களாகுமாறு தாங்கள் அநேக பள்ளிக்கூடங்களை அமைப்பித்து நாட்டுக் குடிகட்குப் பெண்கள் கல்விகற்பதனாலொரு குறைவுமில்லையென்று வற்புறுத்துமாறு வேண்டிக்கொள்கின்றேன.

தாங்களிவ்வாறு நடத்தினால் தங்களதிந்தநாடு சர்வைசுவரியங்களால் நிறையப்பெற்றதாக விளங்கும். இதனைக் கேள்வியுற்ற பிறநாட்டினரும் அதிக ஆவலோடு பெண்பாடசாலைகளை அமைப்பார்கள். இதனால் தங்களுக்கு உயர்ந்த புகழுண்டாகும். நாடுகளெல்லாம் கல்வி கேள்விகளையுடையவர்களால் அலங்கரிக்கப்பட்டதாக ஆகும்; ஆதலாலிந்த ஒரு பெருங்காரியத்தைத் தங்கள் மனைவியான என்பொருட்டுத் தாங்கள் செய்யவேண்டும் என்றுரைத்து

என்னாற் சற்றதிகமாகப் பேசப்பட்டதைப்பற்றி மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன் என்று தன் கணவனு மரசனுமான விஜயவிக்ரமனைப் பார்த்து பங்கஜாக்ஷி யுரைத்தனள்.

இவ்வளவையுங் கேட்ட விஜயவிக்ரமன் அதிக சந்தோஷமும் ஆச்சரியமு மடைந்தவனாய்த் தன் மனைவியைப் பார்த்து பெண்மக்கணிகலமே! நீ தெரிவித்த உபந்யாஸம் எனக்கு மிகவும் ஆச்சரியத்தை யுண்டாக்கிவிட்டது. கல்விக்களஞ்சியமே! நின்னையொத்த மனைவியையுடையவன் என்ன விஷயத்திற் குறவுடையவன். ஒருவிஷயத்திலுங் குறைவுடையவனாகான். ஓ சகலகலாபூஷணி! கலைகளையணிந்த பிரமன்றனெவ்வளவு மகிழ்வுடையவனே அவ்வளவு மகிழ்ச்சியை உன்னை மனைவியாகவுடைய நானு முடையவனாகவிருக்கின்றேன். உன்னாலுரைக்கப்பெற்ற ஒவ்வொரு விஷயமுஞ் சொல்லக்கேட்டதற்கு மிகவும் சரியாகவேயிருக்கின்றன. ஆதலால் நின் வாய்மொழிப்படி நான் பெண்பாடசாலைகளை ஏற்படுத்துகின்றேன். அதனில் சகல சாதிப்பெண்களுங் கல்விகற்றுக்கொள்ளுமாறு என்னுடைய குடிகட்குத் திட்டஞ்செய்கின்றேன். உனதிந்த வசனங்களைக் கேட்ட எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியுண்டாயிருக்கிறதோ அவ்வளவு மகிழ்ச்சி ஒவ்வொரு புருஷர்களின் மனைவியரும் இவ்வண்ணங் கற்றவர்களாகவிருந்தால் சம்பவிக்குந்தானே. என்னுடைய பிரஜைகள் சந்தோஷமடைவதைப்பற்றி நான் பின்வாங்குவேனானால் என்னைவிடக் கெட்டவரசன் யாவன்? வேறொருவனுமில்லான். குடிகளுடைய க்ஷேமத்தை எப்பொழுதுங் கருதியே நடப்பவன், இந்த அரிய பெரிய காரியத்தின்மாத்திரந் தவறுவேனோ தவறேன் என்றுரைத்துக்கொண்டே பங்கஜாக்ஷியைக் கட்டியிறுகத் தழுவிக்கொண்டு இனி நடக்கவேண்டுங் காரியமென்ன வதனையு நீயே சொல் என்றான்.

உடனே பங்கஜாக்ஷி சற்றே சாய்க்கப்பட்ட தலையுடன் தங்களைக்காட்டிலும் நானென்ன விவேகியா என்னைக் கேட்கிறீர்களே உங்களுக்குத்தெரியாதா, நேற்று இரவு சுவாமிகளாலே அளிக்கப்பெற்ற விதைகளை நடவேண்டும் அதற்கு ஒருநல்ல சுபதினமேற்படுத்திச் சுத்தமான இடத்திலதனை நடவேண்டும் அதுதானிப்பொழுதாகவேண்டிய வேலை; துறந்தார் பெருமை துணைக்கூறில் வையத்திறந்தாரை யெண்ணிக்கொண்டற்று; என்று பெரியார் கூறும் பெரியார் வாய்மொழியை அசட்டைசெய்யலாகாது என்றனள்.

பங்கஜாக்ஷி தங்கருத்துரைத்த

இரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

நிராக்ஷாபல தரிசனமுரைத்தது.

அப்பொழுது அரசனவனை நிறுத்தி வெளிமுற்றஞ் சென்றான் அவ்விடத்தில் அநேக ஏவலாளர் இருந்தார்கள். அவர்களிற் சிலரை அரசன் தூரமாகப்பார்த்தவுடனே அவர்கள் தலைப்பாகையைச் சரியாகத்திருப்பிக்கொண் டோடிவந்தார்கள்; வந்தவர்களி லிருவரை யரசன்பார்த்து அடா நல்லதம்பி! நீயும் அதோ நிற்கிற அந்த பொக்கவாய்ச் சுப்பண்ணனுமாக விரைவாகச்சென்று நமது சோதிடன் சுலட்சண ராமசுவாமியையும், பீப்பா கோவிந்த சிரவுதியையும் சீக்கிரமாக அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றனன்.

உடனே நல்லதம்பியும் பொக்கைவாய்ச்சுப்பனும் ஒருகையை மார்பிலும் மற்றொரு கையை வாயிலுமாகப் பொத்தினபடியே குனிந்து அவ்வண்ணமே செய்கின்றோம் என்று சொல்லிக்கொண்டே அரண்மனைக்கு வெளியேவந்து ராமசுவாமிவீடு தட்டுவாணிப்பறச் சேரியின் வடக்கு மூலையிலுள்ள முடக்குச்சந்திலிருக்கும் முண்டக் கண்ணியம்மன் கோயிலண்டையிருக்கிறது. சிரவுதிவீடு பாப்பார அக்கிரகாரத்திலே தெற்குவீதியிலேயுள்ள சடாமுனி ஆலயத்திற்கு வடக்கே யிருக்கிற புள்ளையார் கோவிலுக்கு அருகிலிருக்கிறது. ஆகலால் முன்னே எங்கடா போகிறது என்று பொக்கைவாய் சுப்பனை நல்லதம்பி கேட்டான்.

அதற்குச் சுப்பன் முன்னே வள்ளுவன் வீட்டிற்குப் போவோம், இல்லாதுபோனால் பாப்பான் வீட்டிற்குப் போவோம் என்றான்.

நல்லதம்பி:—என்னடா உளறுகிறாய்; எங்கையாவது ஒரு இடத்தைச் சொல்லென்றால் அங்கே போகலாம் அல்லது இங்கே போகலாம் என்று சொல்லவேணும். அப்படி சொல்லாமல் அங்கேயாவது இங்கேயாவது என்றால் எங்கேபோகிறது சொல்லடா என்றான்.

சுப்பன்:—என்னப்பா வொன்னத்தான் ராசாஆ பேரிட்டுக் கூப்பிட்டான்; என்னை, பொக்கச்சுப்பன் என்று இப்பதெக்கு நீதானே எசமான் நீ சொல்றபடி நாவாறே என்றான்.

நல்:—ஆனால் முன்னே ஐயர்வீட்டுக்குப் போவோமப்பா.

சுப்:—அந்தப்பாப்பான் மெத்தக் கிறுக்குப்பிடிச்சவனாக்கும், ராசாகிட்ட சொல்லி அவன்சம்பளத்தை நிறுத்திப்போடவேணும்.

சுப்:—என்னை என்னடா செய்தான் பாப்பான், எனக்குக் கூட அவன்மேலே கறந்தான்.

நல்:—நானொருநாள் என்னுடைய காலைக்கண்ணைக் காட்டிச் சாமியண்ணு கும்பிட்டுப்போட்டு இது எப்பக் கண்ணுபோடுமென்று கேட்டேன் அதுக்கு அந்தப்பாப்ப என்னைக்கண்டபடியே திட்டினான் அண்ணைக்கே பழுக்கப்பாத்துடுவேன் நல்லகாலந் தப்பிப்பொழுச்சான் பார்க்கலாம் உன்னை என்னசெய்தாண்டா?

சுப்:—நானொருநாள் சுந்தரநாடான் கள்ளுக்கடையோரமா வரும்போது இந்தப்பாப்பானை பாத்தேன் இரண்டுகண்களும் செம்புபோல சிவப்பாகவிருந்தது கண்ணோவோ என்னமோ என்றிருந்தேன் கிட்டவந்தவன் அடே சூத்திரப்பயலே எங்கடாபோகிறாய் என்றான் நானதற்கு ஏண்டா முட்டிஎடுக்கிற பாப்பாரப்பயலே இங்கதாண்டா போகிறேன் என்று சொல்லுவேன் என்னத்திற்கு என்று சாமி தண்டம் இங்கேதான் நீங்க போனீர்களே அந்த இடத்திற்குத்தான் என்றேன் உடனே பாப்பான் கோபங்கொண்டு என்னை ஒரு அறைஅறைந்து உன்னைட்டா என்னைக் குடியனென்று மதித்தையோ அடே பிராமணனென்று தெரியாதாடா உனக்கு என்று அதிகமாகத் திட்டினான் நான் வந்ததுவரட்டுமென்று கையைச் சுழிபிறக்கத்தேய்த்தேன் இதற்குள் பாப்பானுக்கு வேண்டிய வேறெரெண்டுமூன்றுபேர் வந்துவிட்டார்கள் பார்த்தேன், இதுசமயமல்ல என்று போய்விட்டேன் இப்பத்தானென்ன கெட்டுப்போச்சு சமயம் வந்தாற் பார்க்கலாம் என்றான்.

நல்:—உனக்கும் எனக்கும் விரோதியான பிராமணனை நாம் ராசா அழைக்கிறானென்றால் ஒருவேளை அந்த கேடுகெட்ட குடிகாரப் பாப்பான் பொய்யென்று நினைத்து வராதிருந்தாலும் இருப்பான் இருந்தானானால் உடனே ஒன்றை முன்னுகச்சென்று ராசாவினிடஞ் சொல்லிவிடலாம் வா என்று இருவருமாக அதிக விரைவாய்ச் சோதிடர் இருக்கும் வீட்டெதிரிற்சென்று பார்த்தார்கள் வீட்டுக்கதவு உள்தாப்பாள் போட்டிருந்தது உடனே இருவரும் ஓய் ஐயரே ஓய் ஐயரேயென்று கதவைத்தட்டினார்கள் எவரும் பதில்கூறாமையால் சற்றுநேரஞ் சும்மாவிருந்து பின்னர் சாமீ சாமீ என்று கூப்பிட்டார்கள் அதற்கும் ஆரும் என்னவென்று கேள்க்கவில்லை பின்ன இருவருமாக ஹேபிப்பா கோவிந்த சிரவுதி, ஓ பீப்பா கோவிந்தசிரவுதி, ஓ ஓ என்னுங்காணும் மகாராஜா கூப்பிடுகிறாரையா என்றார்கள், இவ்வளவு மரியாதையான சொல் கேட்டவுடனே பஞ்சாங்கக்காரன்வீட்டி லஞ்சாறு மொட்டச்சி என்ற பழமொழிக்கிணங்க அந்த வீட்டிலநேகமான விதவைகளுண்டு. அவர்களிலொரு பால்ய விதவை வந்து கதவைத் திறந்து மாமா இருக்கா ஒங்களை வெளித்திண்ணைமேலே ஒக்காரச்சொன்னா என்றாள்.

உடனே இருவரும் அந்த வாலிப விதவையைப்பார்த்து அம்மா இந்த ஐயருக் கெத்தனை பிள்ளைகள் என்றார்கள். உடனே

இவள் தன் பர்த்தாவை நினைத்துக்கொண்டு கண்ணீர்விட்டு ஓவென்றழுதாள். இந்த அழுகையொலியைக்கேட்ட மற்றைய விதவைகளும் ஓவென்று கதறியழுதார்கள். இந்த விதவைகளெல்லாம் அழவே உள்ளே இருந்த சுமங்கலிகளு மழுதார்கள். இவ்வழுகையொலியைக் கேட்டு அசல் வீட்டுப் பெண்கள் முதலானவர்களும் வந்து கட்டிக்கொண்டழவே சுப்பனும் நல்லதம்பியுமான இரண்டு பேரும் பார்த்தார்கள். இதென்ன சங்கதி நாம் வந்த வேலையென்ன இந்த கட்டை மொட்டைகள் செய்கிறவேலையென்ன என்று கொஞ்சங் கோபத்தோடே ஹே பாப்பாத்தி அந்த பாப்பான் உள்ளே என்னபண்ணுகிறான் ராஜா வீட்டுச் சேவகர்களாக எங்களைக் கண்டா லுங்களுக்குத் தோற்றவில்லையோ என்றார்கள். இதற்குள்ளே பீப்பாசிரௌதிகள் தனது வீட்டிற்கு யாரோ சாவுசமாசாரங் கொண்டுவந்தார்களென்றும் தன் மூத்தமகன் ஹரிஹர சிரவுதிதா னிறந்துபோயிருக்கவேண்டுமென்றும் நினைத்து ஓவென்று கதறி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு வெளியே வந்து நல்லதம்பியையும் சுப்பனையும் பார்த்து ஓ ஓ இவர்கள் ராஜாவினால் அனுப்பப்பட்டு வந்தோராயிற்றே என்று அழுமவர்களை நிறுத்தி யார் இறந்தார்களென்று அழுகின்றீர்கள், இவர்கள் இராஜா வீட்டு வேலைக்காரராயிற்றே என்றுரைத்து அழுகையையடக்கி என்னப்பா விசேஷம், எங்கே வந்தீர்கள், மகாராஜா இட்டுக்கொண்டுவரச்சொன்னாரோ வருகின்றேன் என்றார்.

நல்லதம்பி ஐயரே உம்மை விசாரித்தவுடனே பெருத்த அழுகுரலுண்டாகவே நாம் தேடிவந்தவருக்காகத்தா னழுகிறார்களோ என்னமோ! ஐயோ பாவம் இவ்வளவு சிறந்த சோதிடர் நமக்கெங்கே கிடைக்கப்போகிறாரென்று மகாராஜாவும் விசனிப்படுவாரோ என்று நினைத்தோம். இதற்குள்ளே தாங்களே வெளியேவந்துவிட்டீர்கள் சீக்கிரமாக வரவேணும் கையோடே இட்டுக்கொண்டுதான் போவோம் என்றான்.

சுப்:—இவரை என்னத்திற்காக அந்த பறச்சேரிக்கு இட்டுக்கொண்டுபோகவேண்டும் நாம் மாத்திரம்போய் அந்த இராமசாமியை இட்டுக்கொண்டு வரலாம் வா என்று நல்லதம்பியை அழைப்பதைப் பிராமணன்கேட்டு இதென்ன கர்மம் வள்ளுவ இராமசாமி வீட்டிற்குக்கூட நம்மை இழுப்பார்களோ? இவர்கள் நமக்குப் பழய விரோதிகளாச்சே என்று உள்ளே நினைத்துக்கொண்டே வெளியேறி இவர்களுடன் சென்று தூரமாக நின்றவுடனே இவர்கள் இராமசாமிப்பண்டாரத்தையும் இட்டுக்கொண்டு வந்தார்கள். உடனே இராமசாமி சிரவுதிக்கொரு தண்டங்கூறிப் பின்னாலேயே போனான்.

சுப்:—சோதிடர்களைப்பார்த்து சோசியம் சொல்ல உங்களில் யார் கெட்டிக்காரனென் றங்கே போனால்தானே தெரியுமென்றான்.

இவனதிம்மொழியினா லிருவருஞ் சற்றே பயமுடையவர்களாக என்ன சமாசாரம் இராஜா இரண்டுபேரையுங் கையோடே அழைத்துக்கொண்டுவரச் சொன்னாரோ ஏன் என்று கேட்டார்கள்.

இவர்கள் நீங்கள்தான் சோதிடராச்சே உங்களுக்குத் தெரியாமற்கூட இருக்குமா? ஐயருக்கு வருங்காரியமெல்லாம் வெகு நன்றாய்த் தெரியுமென்பதை அவர் வீட்டி லவரைத் தேடிக்கொண்டு போனபொழுது நடந்த செய்கையினாலேயே தெரிகிறது; இராமநின் சங்கதி எப்படியோ தெரியாது என்றார்கள்.

இதனைக் கேட்டவுடனே வள்ளுவனுக்கும் பாப்பானுக்கும் பயமுண்டாகிவிட்டது. அதனால் தங்களுக்குள்ளேயே நினைக்கிறார்கள். பிராமணன், குறைசுதா நியாயமாக வருமுறைப்படி ஒருவேளை சரியாயிருந்தால்தான் நமக்கு நல்லகாலம்; ஒருவனுடைய எண்ணத்தைப் பூரணமாக உரைக்குமாறு எந்தச் சோதிட நூல்களும் பிறந்தநாது சமையமாடையா அடிச்சு தள்ளிக்கொண்டே போனால் ஒன்றிரண்டு பலிக்கும். அதனாலே பெரிய சோதிடனென்று பெயரடைந்துவிடுவதுதான் வழக்கம். ஒவ்வொரு இருஷிகள் ஒவ்வொரு விதமாகப் பலன் எழுதியிருக்கிறார்கள். ஒன்றோடொன்று பொருந்தவே பொருந்தாது. இது விண்வயிற்றுப் பிழைப்பு இன்று இது என்னமாய் முடியுமோ என்றும், வள்ளுவன் தொள்ளமுடையான், சிந்திரமாலை, ஆமாசாமியம், சாதகசிந்தாமணி, விராடிபஞ்சபக்ஷி முதலான நூல்களைப் படித்திருக்கிறோம்; கணிதஞ்செய்யவும் கொஞ்சந் தெரியும், பாப்பானைவிட நமக்கு லக்ஷணம் கடாக்ஷமிருக்கிறதினாலே மேல்தான். ஆனால் பாப்பான் கிரந்தத்திலே சொல்லுவான், நான் தமிழிலே சொல்லுவேன், எப்படி சொன்னாலும் கிரந்தத்திற்கு முன்னே தமிழ் சிறக்காதே என்றும் கருதிக்கொண்டே அரண்மனைவாசலை யடைந்தார்கள்.

உடனே சோதிடரிருவரையும் பார்த்து நாங்களுள்ளே சென்று சமயம்பார்த்துச் சங்கதியை யுரைத்துப் பின்னர் உத்திரவின்படி யுங்களை யுள்ளேயிட்டுக்கொண்டு போகின்றோமென்று அவர்களை வெளியே நிறுத்தி நல்ல தம்பியும் சுப்பனுமாக உள்ளே போனார்கள். இவர்கள் சென்ற சமயத்தி லரசனந்தரங்க மாளிகையிலிருந்தமையால் இரண்டு நாழிகைநேரம் கழித்து அரசனைக்கண்டார்கள்; கண்டவுடனே யக்காவலன் எங்கே அவர்கள் என்றான். உடனே வெளியிலிருந்த இருவரையும் உள்ளே அழைத்துக்கொண்டு போனார்கள் அரசனிவர்களை நிமிர்ந்து பார்த்தான். பார்த்தவுடனே பிராமணன் ஆசீர்வாதத்தையும் வள்ளுவன் நமஸ்காரத்தையும் செய்தார்கள்.

அப்பொழுது அரசனொரு பெரிய ஆசனமொன்றில் இருந்துகொண்டு இருவரையும் இருக்குமாறு கட்டளையிட்டான். அந்த

னன் அரசனருகிலுள்ள ஒரு ஆமைப்பலகையிலும் வள்ளுவன் முற்றத்தில் வெறுந்தரையிலும் இருந்தார்கள், இருந்தவுடன் அரசன் நல்லதம்பியையும் சுப்பனையும் வெளியே போகும்படி ஆக்யாபித்தான். அதனால் அவர்கள் வெளியே போய்விட்டார்கள். பின்னர் அருகினின்ற சில பெண்களைக்கொண்டு பங்கஜாக்ஷியை அழைப்பித்து இவர்களை நீ கேட்கவேண்டியவற்றைக் கேள் என்றனன்.

பங்கஜாக்ஷி:—பிப்பா கோவிந்த சிரௌதியைப்பார்த்து உமக்கு ஆருடஞ் சொல்லத்தெரியுமா? என்று கேட்டாள். (மத்துவரும் வைஷ்ணவருஞ் சைவருமல்லாத பிராமணர்களில் அநேகர் ஸ்ரீசக்கரம், மேருசக்கரம், புவனசக்கரம் முதலியவைகளை வைத்துப் பூசித்தல் வழக்கம். ஸ்ரீபஞ்சதசாக்ஷரி, நவாக்ஷரி, பஞ்சாக்ஷரி முதலியவைகளையும் செபிப்பார்கள். இவர்களிற் சிலர் ரகஸ்யமாக கள் சாராயம், மீன், மாமிசம், முட்டை முதலியவைகளையும், வாமசாஸ்திரப்படியே வைத்துப் பூசித்து பிரஸாதத்தை உட்கொள்ளுகிற வழக்கம். ரகஸ்யத்திலுள்ளதேயாம். இது,இதனால் அநேகர் நல்ல இஷ்டசித்திகளை யுடையவர்களாகவும் இருந்ததுண்டு என்றுஞ் சொல்லுகின்றனர். வேறுசிலர் சிலநாள் பூசைசெய்துகொண்டு வரும்பொழுதே மாமிசத்திலும், கள் சாராயங்களிலும், அதிகமான விருப்பமுடையவர்களாய்ப் பூசையைக் கொஞ்சங் கொஞ்சமாகக்குறைத்து மாமிசம் சாராயமென்னும் இவைகளை மந்திரசுத்தி தேவாராதனமென்னும் இவைகளில்லாமலே குடிப்பதும் தின்பதும் வழக்கமாகி அதற்கும் முடியாமல் கடைகளிலேயே நுழைந்து அவ்விடங்களில் இழிந்தசாதியார்களாற் சித்தப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மாமிசாதிகளுடன் கள் சாராயங்களைக் குடித்துக் கண்சிவப்படைந்து வீதிகளில்விழுந்தெழுந்து மூளைபுலவுதலுமுண்டு, அப்படிப்பட்டவர்களை ஜனங்கள் பிப்பா என்னும் பட்டத்துடனழைக்கிற வழக்கம். நமது சோதிடரான இந்த சிரௌதியும் ஒரு தினம் வீதியிலவ்வண்ணமாக விழுந்தெழுந்துஞ் சென்றமையா லவனையும் அரசன் முதலிய அனைவரும் பிப்பாப்பட்டத்தோடழைத்தலே வழக்கமாய் விட்டதென்றுணர்க.)

சிரௌதி:—அம்மணி நான் ஐந்துவயதுமுதல் அந்தச் சோதிடநூலிலேயே பரிசயமுடையவன் ஆதலால் ஒருவாறுரைப்பேன். ஆனால் உண்மையில் ஆருடமாவதுமுதலியவை சோதிடநூல் வல்லபத்தாற் கூறுவதென்றால் அரியதுதான். தாங்கள் கேட்டது ஒரு தாதுப்பொருள், ஒரு மூலப்பொருள், ஒரு சீவப்பொருள்; தாதுவானால் இன்னசம்பந்தமானதாக இருக்கலாம். மூலமானால் இவ்விதமாக இருக்கலாம்; ஜீவனானால் இத்தனை கால்களுள்ளவை, ஆண் அல்லது பெண் பலிக்கும் பலிக்காது; இவ்வளவுதான் சரியாக வுரைக்கலாம்; கட்டப்பட்டால் அதுவுந் திடமென்று முடியாது.

ஒரு நூலுரைப்பதுபோல ஒரு நூலிலுரையாமையினால் மனதிற் சிந்திதமான பொருள் இதுதானென்று உறுதியாக வுரைப்பதென்றால் கஷ்டந்தான். கர்ணபிசாசி முதலிய தேவதாகடாக்ஷத்தால் ஏறக்குறைய சரியாக வுரைக்கலாம் என்றனர்.

பங்கஜாக்ஷி இம்மொழிகளைக்கேட்டு மந்தஹாஸத்தோடு சோதிடரே உம்மாலுரைக்கப்பெற்றவை உண்மைச் சோதிட நூலினுண்மையை யுணராதமட்டிகள் இட்டம்போல உரைப்பார்கள். ஒருவன் சாகத்தக்க நோயுள்ளவனைக் கிடக்கின்றசமயத்தில் ஜோதிஷனை அழைத்து ஜாதகத்தைக்கொடுத்து கொஞ்சம் பாருங்கள் என்றால் அவன் தெரிந்தவரைக்கு இருந்து இந்த கண்டங் கட்டாயமாகக் கொல்லும் என்று கூறுவானானால் அதற்குரியவர்கள் முகவாட்டத்துடன் நீதான் போய்வாரும் என்று சோதிடனுடைய கஷ்டத்திற்கேற்றவண்ணம் ஒன்றுங்கொடாமலனுப்பிவிடுகின்றார்கள்.

அந்நேரசமயத்திலின்னொரு ஜோதிஷன் வந்து இந்த ஜாதகனுக்கு கண்டமே கிடையாது. இன்னம் பதினைந்துவருஷத்திற்கு பின்பு கண்டமுண்டாகலாமென்றால் மஹாசந்தோஷமடைந்து அவனுக்கு அநேகமான திரவியாதிகளைக் கொடுக்கின்றார்கள். அவன் வாங்கிக்கொண்டு வெளியேபோகியும் போகாமலும் இருக்கும்பொழுதே சாதகன் மரித்தாலுங்கூட இதற்சொன்னவனிடத்திலேதான் நட்புக்காட்டுகிறார்கள். இதனாலேதான் சோதிடர்கள் பெரும்பாலும் நன்மையாகவே உரைக்கக் கற்றுக்கொண்டார்கள். முக்கியமாகச் சோதிடர்கள் ஏதாவதொரு மஹாதேவதோபாசகர்களாக இருக்கவேண்டும். தேவதாகடாக்ஷம் சோதிஷமல்லவேனும், அதற்கது அங்கம் என்று சிலவிதிவிஷயத்திற் பரிவுகாட்டி யுரைத்துவிட்டு முற்றத்திலிருப்பவனைப் பார்த்தாள்.

உடனே அவன் சற்றே இருந்த இருப்பிலேயே உடலை வளைத்து வணங்கினான்; வணங்கினவனைப்பார்த்து, நீ எப்படி ஆரூடவிஷயத்தில் என்று வினவினாள். அதற்கவன் குவித்த கையுடன் ஜகதம்பிகா தங்கள் ஸன்னிதானத்தில் நானென்ன சொல்லப்போகின்றேன் எனக்குத் தெரிந்தவரைக்கும் ஒளிக்காமற் சொல்லுவேன் பெரிய அரசர் கர்ணாவதாரர் இருந்தகாலத்திலே வேட்டைக்கு கிட்டைக்குப் போகவேணுமானாற்கூட ராமசாமீ என்னடா கிழவனாப் போய்விட்டனே நான் வேட்டைக்குப் போகவேண்டும், வேட்டை பலிக்குமா? அபாயமில்லாமல் திரும்புவேனாவென்று கேள்ப்பார், அடியேன் ஆலோசித்து ஆண்டவனே இன்றைக்கு வேட்டைக்குப்போனால் இப்படி இப்படி நடக்குமென்பேன், அப்படி அப்படியே நடக்கும். வந்ததே வீரசங்கிலி ஆனைக்குட்டி நெல் முதலான எல்லாங் கொடுப்பார். துப்பாக்கி வயிற்றிலே பீரங்கி பிறந்ததுபோல் எங்கள் சாமி இரட்டைக் கர்ணாவதாரமாக இருக்

கிறபோது எனக்கென்ன குறைச்சல், ஆனால் கிழவன் கொஞ்சந் தடுமாறும் என்றான்.

உடனே பங்கஜாக்ஷி நீங்களிருவரும் இந்த அரண்மனைக்குப் புராதன ஜோதிஷரென்று முன்னமே அறிவேன், இப்பொழுது நீங்கள் இருவருமாக ஒருவிதை நடுதற்கேற்ற ஒரு நன்னாளினைத் தோஷரகிதமானதாக எடுத்துச் சொல்லுங்கள் என்றனள்.

அப்பொழுது வள்ளுவன் பிராமணனி லநேகமடங்கு சாதியிற் றாழ்ந்தவனாகவிருந்தாலும், கல்விகேள்விகளிலும் தேவதாகடாக்ஷத்திலும் அநேகமடங்குயர்ந்தவனாதலால், அரசியின் அபிப்பிராயம் போல ஒருநாளேற்படுத்தினான் சிரௌதியும் வள்ளுவன் கூறிய பாகங்களையே சிறப்பித்து ஒருவாறு அவன் வைத்தநாளை ஒத்தநாளையே மிகுந்த பயத்துடனமைத்தனன். இருவரும் அமைத்தநாள் ஒரே நன்னாளாக இருந்தது. நம்முடைய நல்லகாலத்தாலென்று சோதிடமுணர்ந்த பங்கஜாக்ஷியும் ஒத்துக்கொண்டனள். உடனே அரசன் இருவருக்குந் தகுந்த மரியாதையான சன்மானத்தைச்செய்து அவர்களை அநுப்பிவிட்டுத் தன் மனைவியுடன் அந்தரங்கமாளிகைக்குட்போயினான்.

பின்னர் சோதிடரமைத்த நன்னாளில் பேரி, டமாரம், முரசம், துந்துபி, டக்கா, மிர்தங்கம், சங்கம், சூரியவளையம், சந்திரவளையம், பம்பை, கொம்பு, சங்கு முதலிய மங்கலகரமான மேளங்கள் முழங்கத் தன் மாளிகையினீசானமூலையில் பொன்னாலாகிய புதிய மண்வெட்டியால் தானொருபுறத்திலும் தன்மனைவி ஒருபுறத்திலும் முன்னே தோண்டப் பின்னர் ஏவலாளர் தாங்கள் நன்றாய்த்தோண்டிக் கல்முதலிய வனைத்தையும் நீக்கி நல்ல ஆற்றுமணலையும் செம்மண்ணினையுங் கலந்து குழியை நிரப்பி அழகாக்கித்தர அக்குழிகளினருகில் பொன்னினாலமைக்கப்பட்ட இரண்டுவிநாயகமூர்த்திகளை வைத்து முறைப்படி அபிஷேக அலங்கார தூபதீப நைவேத்தியாதிகளாலுபசரித்து நிர்விக்கினமாக எங்களெண்ணமீடேறவேண்டுமென வேண்டிக்கொண்டு கிழக்குமுகமாக இருந்து இரண்டுகைகளாலும் இருவருமாகக் கௌடபாதராளித்த திராட்சவிதையை நட்டார்கள். நட்டுப் பனிநீரினை உயிர்த்தண்ணீராக விட்டார்கள்.

(செடிகளையும் விதைகளையும் மரங்களையும் நடுபவர்கள் முதலில் விடும் தண்ணீருக்கு உயிர்தண்ணீர் என்று பெயர்.)

பின்னரவ்விடத்தி லிதுதான் தருணமெனவந்து நிறைந்திருந்த பிராமணர்களுக்கு யதேஷ்டமாகச் சொர்ணாதிதானங்களைச் செய்து ஏழைகளுக்கன்னம் வஸ்திரம் முதலியவைகளைக் கொடுத்துச் சந்தோஷப்படுத்தி வித்துவான்களுக்கு யானை குதிரை பல்லக்குக்கிராமமுதலியவைகளை யளித்துப் பரமசந்தோஷத்தோடுங்கூட

திராக்ஷக்கொடியின் தோற்றத்தை எதிர்பார்த்தவர்களாய் எறும்பு கூட அதனருகிற்போகாதவண்ணமான ஏற்பாடுகளைச் செய்து கொடியினை காவலேற்படுத்தி ஒருநாழிகைக்கு முப்பதுதரம் இருபதுதரம் அதனையேசென்று உற்று உற்றுபார்த்துக்கொண்டு இன்றைக்கு முளைக்கும் நாளைக்குமுளைக்கு நாளையன்றைக்கு முளைக்குமெனப் பகலெல்லாம் பெண்ணுமவர்கள் இராத்திரி நித்திரையில் திராட்சவிதை முளைத்ததாகவும் இரண்டிலைவிட்டதாகவும் கொடியோடினதாகவும் புட்பித்ததாகவும் காய்த்ததாகவும் பழுத்ததாகவும் கனாக்கண்டு விழித்துக்கொள்வார்கள். ஓ இது நினைப்பு எனப் பின்னும் உறங்குவார்கள் காலையி லெழுந்ததே திராக்ஷப்பாத்தியையே சென்று பார்ப்பார்கள், இப்படி மூன்றுமாதகால மானதற்குப்பின்பு அக்கொட்டைகளிரண்டும் பொன்றகுபோன்ற இரண்டு இலைகளுடன் வெளியே தோன்றியது. அதனைக் கண்டவுடனே அவர்களுக்குண்டான சந்தோஷத்திற் களவேயில்லை.

ஊர் ஊர்தோறும் முளைக்கும் திராக்ஷையைப்போலவன்றிப் பொன்றகுபோன்ற இலையுடனே தோன்றியமையால், இனி வெடிக்கும் இலைகள் எவ்வண்ணமிருக்கின்றதோ பார்ப்போமென்று பெறற்கருந்தைகளைக் காட்டிலும் அதிக சிரத்தையாய்ப் பாதுகாத்துவந்தார்கள்.

பின்னரது அற்புதமற்புதமான இலைகளையுடையதாய் நாளுக்குநாள் தழைத்து ஒருவருஷத்திற்கெல்லாம் இந்திர நீலக்கற்களைப்போன்ற புஷ்பங்களைப் புட்பித்தது, இந்த புட்பத்தின் நடுத்திலுள்ள எதிரிலிருந்த பளிங்குமணியாலான மெய்க்குள்ளுள்ளது உருகி ஓடின பொன்போன்ற ஒளியாலான நிலவண்ணத்தையுடையதாக வாகியது இந்த ஆச்சரியத்தைப் பார்த்து பரமானந்தபரிதரான விஜயவிக்ரமனும் பங்கஜவல்லியும் ஒருவருக்கொருவர் இவ்வளவு பவையகிப்பிசையை நமக்குத்தந்த பகவான் கெடையாதா நீடூழிவாழ்வாராக-என்று வாழ்த்தினார்கள்.

அலர்ந்த பதினைந்து தினங்களுக்கெல்லாந் திராட்சைகள் ஆணிமுத்துப்போன்ற பிஞ்சுகளையுடையன வாயின. பின்னுஞ் சிலதினங்கட்கெல்லாம் பசுமைகள் சற்றுப்பசுமையடைந்தன. பின்னுஞ் சிலதினங்களிற் பாரிஜாத மலர்போன்ற பரிமளத்தையும் மாணிக்கம்போன்ற நிறமான பழங்களையும் உடையனவாகவாயின.

சோதிடர் நிலையையுந் துரைமகள் தலைமையையும் விளக்கிய

திராட்சாபல தரிசனமென்னும்

மூன்றாவதத்தியாயம்

முற்றிற்று.

விஜயவிக்ரமன் பிராமணர் செய்கையைப் பேணலேன் என்றுரைத்தது.

இவ்விதம் இவை எப்பொழுது பழுக்குமென்று எதிர்பார்த்தவர்கள் நல்ல ஒரு சுபதினத்தில் திராட்சைக்கொடிகளை இதரமான புட்பங்களா லர்ச்சித்துத் தாமிருவருமாகவே அவைகளிலுள்ள பழங்களைப்பறித்தார்கள். பழங்கள் மற்றைய திராட்சக்கொடிகளிற்போல இவைகளிலதிகமாக இல்லை, ஆயினும் இரண்டுபடிப் பழங்கள் தேறின.

இவைகளை நல்ல விரண்டு பொன்கூடைகளில் வெகுகஷ்டப்பட்டு அரசனும் அரசியும் பறித்தார்கள். வேறே எங்கேனும் ஒன்றிரண்டு பழம் தங்கிவிடப்போகின்றதென்று இந்தக் கொடிகளிலிருந்து ஒருபழம்பறித்து நம்மிடங்கொடுத்தால் நாம் ஒரு பொன்னுணையம் பரிசாக அளிப்போமென்று அந்தபுரப்பெண்களுக்குத் திட்டஞ்செய்தார்கள். உடனே அவர்கள் ஏணிகளிலேறிப் பழமுளதோவென்று பரிசோதனை செய்தார்கள். ஒருவர் கையிலும் ஒரு பழங்கூட அகப்படவேயில்லை. காசிற்கு ஆசைப்பட்ட சில பெண்கள் பறித்த பழங்களில் ஒன்றிரண்டை எடுக்கலாமென்று பகர்ந்தார்கள். முடியவே இல்லை. கொடிகளை நன்றாய்ப் பரிசோதனை செய்வித்தானபிறகு உள்ளே புகுந்து இனி என்னசெய்ய வேண்டுவது என்று ஆலோசித்தார்கள்.

விஜயவிக்ரமன் இப்பழங்களை இனி நாந்தானே புசிக்கவேண்டும் புசித்தவுடனே ஏதாயினும் அபாயம் நேரிட்டா லென்னை செய்வது. இது சுபாவமான திராட்சையின் கொடியைப்போல முளைத்து வளர்ந்து காய்த்ததானால் அதைக் குறித்து ஆலோசிக்கவேண்டுவதேயில்லை. இது விபரீதமாக முளைக்கும்பொழுதே பொன்னிறமாக முளைத்தது. மரகதம்போல பூத்தது. முத்துப்போல காய்த்தது. மாணிக்கம்போல பழுத்தது. ஆதலாலிதனைப் பற்றி ஆலோசிக்கவிடமுண்டாகின்றது என்று நினைத்துக்கொண்டு மனைவியான பங்கஜாக்ஷியைப் பார்த்து, மனோகரவமிர்த ரஞ்சிதகிஞ்சுகவமலவாணீ! இதனைச் சற்றேகேள்;

இனி இவ்வினிய பழங்களைநாம் உண்ண வேண்டியவர்களாக விருக்கின்றோம். இந்தப் பழங்களின் விஷயத்திலெனக்கு இதுகாறுமில்லாத சந்தேகம் இப்பொழுது தோன்றுகின்றது. சந்தேகமானது வேறொன்றுமில்லை. இதனைத் தின்றால் நமக்கென்ன கெடுதி சம்பவிக்குமோ வென்பதுதான் என்றனன்.

உடனே பங்கஜாக்ஷி தன் பர்த்தாவைப் பார்த்து சந்தேகம் வருதற்குக் காரணமென்னையோ வென்றனள்.

வி:—காரணம் இது ஊரிலுள்ள திராட்சையைப்போ லில்லாமையால்,

ப:—பெரியோர் அளித்தமையாலது ஆச்சரியமானதாகத் தோன்றியிருக்கக் கூடாதா?

வி:—பெரியோர் விஷயத்திலும் சந்தேகந்தான்.

ப:—இதுகாறும் வராத சந்தேகம் இப்பொழுது பெரியோரிடத்தில் வரக்காரணமென்ன உளது.

வி:—இதுகாறும் பெரியோர் செய்கையை ஆலோசியாதிருந்தேன். இப்பொழுது ஆலோசித்தேன். அதனால் சந்தேகத்திற்குக் காரணமுண்டாகின்றது.

ப:—பெரியோர் விஷயத்திலென்ன ஆலோசித்திருந்தீர்கள்.

வி:—கௌடபாதனைக் கண்டதற்குப் பின்பு தினமுஞ் புராணேதிகாசங்களைப் படிக்கச்சொல்லி கேட்கிறதுண்டு, அதனாலனேக விஷயங்களை யறிந்திருககின்றேன்.

ப:—கௌடபாத சுவாமி விஷயமாக அறிந்திருக்கின்றீர்கள்.

வி:—இல்லை, இல்லை, பிராமணர்கள் என்னும் சாதியைச் சேர்ந்த பெரியவர்களில் அநேகருடைய சரிதங்களை யுணர்ந்திருக்கின்றேன்.

ப:—அவர்கள் எவருக்காவது தீங்குசெய்திருக்கிறார்களா? செய்திருக்க மாட்டார்களே?

வி:—அநேகமாகப் பிராமணர்களேயே புகழ்ந்துரைக்கும் அந்நூல்களிலிருக்கும் அவர்கள் சரிதம் எனக்கவ்வளவு நல்லதாகத் தோற்றவில்லை.

ப:—எல்லாருஞ் சிறந்தவர்களாகத் தொன்று தொட்டங்கீகரித்திருக்கிற பிராமணர்கள்மீது தங்களுக்கு பாத்திரம் தோஷதிர்ஷ்டி யுண்டாகியது ஆச்சரியம்.

எல்லாருக்குஞ் சுபாவமாகத்தெரிகிற விளக்கு, கண்ணோயுள்ளவர்களுக்குத் தாமரை மலராதிகளைப் போன்ற விகாரங்களாகத் தெரியும். அதுபோலவோ என்னமோ?

வி:—நீ என்னை யறிவற்றவனும் விபரீத எண்ணமுள்ளவனுமாகக் கருதி இவ்வாறுரைக்கின்றனையா, என்ன, அல்லது நான் பாரதாதிகளைக் கேட்காமலே இப்படி உரைக்கின்றேன் என்று கருதினையா, பின்னை என்ன?

ப:—தாங்கள் பாரதமுதலியவை கேட்டே இருப்பீர்கள். இருந்தாலும் இவ்வளவு சீக்கிரத்திலதிலுள்ள விஷயங்கள் தங்கள் மனதிற் பதியுமாவென்றாள்.

வி:—நான் பாரதாதிதருமங்களை யுணர்ந்திருக்கின்றேனென்பதற்கு நான் பாரதத்தையே உன்னெதிரில் இப்பொழுது சொல்லுகிறேன் கேள்.

ப:—தாங்கள் அவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொண்டால் எனக்குப் பாரதோபதேசம்செய்த புண்ணியம் பெறுவீர்கள்.

வி:—மயிலினுமினியமேனியாய்! பாரதமென்பது முக்கியமாகப் பரதகண்டத்தின்சரித்திரம் என்று நானினைக்கின்றேன். ஏனென்றால், இதனில் இந்த பரதகண்டவாசிகளின்சம்பந்தமான சரிதங்கள் நிரம்ப இருக்கின்றனவே அன்றி வேறு கண்டத்தினர்களின் சரிதங்கள் அதனில் மிகுதியாகவில்லை. சிலர் பாரதமென்றால் பரத வமிச சரித்திரமென்று கூறுவார்கள், எனக்கது பிடிக்கவில்லை.

இதின் கிரந்தகர்த்தாவின் பெயர் வியாசமுனி. இவர் பராசர முனிக்கும், மச்சகந்தியென்றும்-சத்தியவதியென்றும்-பரிமளகந்தியென்றும் அழைப்படுகின்ற செம்படவப்பெண்ணிற்கும் பிறந்தவர்.

இவர் மாதாவின் கருவினின்றும் வெளியே வந்தவுடனே மீசையுந் தாடியுமுள்ள ஆண்பிள்ளையாக இருந்தாராம். இவனை இவனைப்பெற்ற தாயார் முதலிய எவரும் வளர்க்கவேண்டிய அவசியம் இல்லாமலே இவர் தெய்வகதியாக வளர்ந்தவர்.

இவராலேயுண்டாக்கப்பட்ட கிரந்தங்களே நம்மவர்கட்குப் பெரிய அநுட்டிப்புக்கிரந்தங்கள்.

இவராலே செய்யப்பட்ட நூல்களெல்லாம் சமஸ்கிருதமென்னும் தேவபாஷையிலே செய்யப்பட்டன.

இதனால் இவரது சுயபாஷை தேவபாஷையென் றறியப்படுகிறது.

நானறிந்தமட்டிற்கும் இவர் துவாபரம் என்னும் யுகத்தின் கடைசிகாலத்தில் பகற்போதில் நட்டாற்றிற் பிறந்தாரென்று தான் சொல்லக்கூடும்.

புராணங்களில் பதினெட்டிற்கு அதிகமாகவே இவராற் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆரியபாஷையி லநுட்டிப்பென் னுஞ் சுலோகமாகத்தா னிவர் ஒவ்வொருபுராணங்களையும் இயற்றி இருக்கிறார்.

இவராலெழுதப்பட்ட சுலோகங்கட்குக் கிரந்தமென்றுபெயர். கிரந்தமென்பது முப்பத்திரண்டெழுத்தாலான ஒரு தொடர் மொழியென்று பொருள்.

இவரெழுதிய கிரந்தவசனங்கள் நாற்பத்திரண்டெழுத்தான தொடர்மொழியாலான வென்பதுங்கஷ்டம்.

இவர் வேறு வேறு தேசங்களில் இருந்த சனங்களுக்காக வேறுவேறாகப் புராணஞ்செய்தாரென் றெண்ணவேண்டியிருக்கிறது. அது ஏனென்றால், இவர் ஒருபுராணத்திற்சொன்ன கதையை மற்றொரு புராணத்தில் வேறுவிதமாகச் சொல்லியிருக்கிறார்.

தானிவ்வண்ணம் வேறுவேறாயெழுதியிருத்தலே அக்காலத்தவர்களறியாதிருந்ததற்குக்காரணம், அவைகளை இவை பரமரகசியமானவை; இவைகளைப் பிறருக்குச் சொல்லாதேயுங்கள் என்று ஒவ்வொரு புராணங்களிலு முரைத்திருக்கிறார்.

இவர் ஒருபுராணத்தில் நாராயணனையே சிந்திக்கிற அன்பர்களிற் சிறந்த ஹரன் நெடுநாள் ஹரியை செம்பகமலராலருச்சித்து வந்தான். ஹரி தன்னை அர்ச்சிக்கும் ஹரனுடைய அன்பைப் பரீட்சிக்கக் கருதிச் செம்பகப்பூவிலொன்றை மறைத்துவிட்டானாம். ஒரு புட்பங் குறைந்ததைக் கண்ட ஹரன் இந்த புட்பத்தையொத்தது நமது மூக்கு என்று தீர்மானித்து செம்பக மலருக்குப் பதில் தனது மூக்கை யறுத்துவைத்துப் பூசித்தான் என்றெழுதினார்.

இந்த மாதிரி எழுதினவர், இன்னொரு புராணத்தில் ஹரனுடைய சிரேஷ்ட பக்தன் ஹரி; இவ்வரி ஹரனையன்றி இதரர்களை மதியாதவன்; ஹரனுடைய சரணங்களைத் தாமரைமலர்களாலருச்சித்து வருவான். ஹரியினன்பைப் பரீட்சிக்கும் பொருட்டு ஹரன் ஒரு தாமரைமலரைக் காணாமற் போகச்செய்தான். அது கண்டு ஹரி இதற்கென்னசெய்யலாமென்றாலோசித்துத் தனது கண்ணைப் பிடுங்கி அர்ச்சித்தானென்று எழுதியிருக்கிறார். இதனிலெது உண்மையாவது? ஹரன் மூக்கறுத்து ஹரியின்காலிலிட்டது உண்மையாகிறதா? அல்லது ஹரி ஹரன்காலில் கண்ணைப்பிடுங்கி இட்டு அர்ச்சித்தது உண்மையாகிறதா? இரண்டும் உண்மையானால் வெகு அழகுதான். ஒன்றைப் பொய்யாக்குவோமென்றா லிரண்டையுஞ் சொன்னவர் ஒருவரே.

அவரோ மஹாபெரியவர். அவர் நாம் சொன்ன இந்த விஷயத்தைப் பிறரறியாரென்று இவ்வண்ணமாக வேறுவேறு தேசங்களிலுரைத்தாரென்றே நான் நினைக்கின்றேன்.

இது ஒன்றுதானோ? இப்படியே ஒவ்வொன்றிலும் இவர் தாறுமாறாக உரைத்திருக்கிறார்.

மார்க்கண்டனுக்கு தீர்க்காயசு கொடுத்தவர் சிவனென்று பலபுராணங்களிலும், விஷ்ணுவென்று சில புராணங்களிலும் கூறியிருக்கிறார். இதனில் வரமளித்தவரை யாவரென்று நாமுணர்ந்து கொள்வது?

துருவனுக்குத் துருவபதத்தைக் கொடுத்தவர் சிவனென்று சில இடங்களிலுரைத்தார். விஷ்ணுவென்று பல இடத்திலுரைத்தார்.

ஒரு ரிஷியை அல்லது பக்தனை ஒருவிடத்தில் விஷ்ணுபக்தரென்றவிவர் வேறிடத்திற் சிவபக்தரென்கிறார். இப்படியுரைத்

தாலவர்களை நாமேந்தப்பத்தரென்று அறிந்துரைப்பது? சுனைப் பத்தரென்றுதா னுரைக்கவேண்டும்.

இவ்வண்ணம் பலவிடங்களிற் பலவாறாக உரைத்த இவர் வேதங்களிலும் அவ்வண்ணந்தா னுரைத்திருக்கின்றார். அதனில்மாத்திரம் இவர் வெகு அழகாக எதனையும் உரைக்கவில்லை. சமயத்திற்குத் தக்கபடிதான் உரைத்திருக்கின்றார்.

இதனாலேதான் இவர் சைவர்களின் நூல்களைப் படியாதேயுங்களென்று வைஷ்ணவர்களையும், வைஷ்ணவர்களின் நூல்களைப் படியாதேயுங்களென்று சைவர்களையும், இவ்விருவர் நூலும் பிரயோசனமற்றனவென்று சாக்தேயர்களையும் பார்த்துப் பலவாறுரைக்கின்றனர். இவ்வண்ணமிவருரைத்ததற்குக் காரணம், தான் அங்கங்கே கூறியிருக்கும் விண்புரளிகளைக் கேட்டாலல்லது படித்தால் தம்மை யவர்கள் பரிகசிப்பார்களென்றுதானேயன்றி வேறேயில்லை.

இவைகளையன்றி இவர் தமதுகருத்தைவிளக்கி தம்பெயரால் வியாசஸூத்திரமென்று ஐந்நூறு சிறிய துண்டுவாக்கியங்களை இயற்றி இருக்கின்றனரே, அதுவாவது ஒரு நிலையில் நிற்கின்றதா? இல்லையே.

ஒவ்வொரு உரைக்காரரும் இதுதான் வியாசர் கருத்து, இதுதான் வியாசர் கருத்து என்றுரைக்கின்றார்கள். வியாசர் கருத்தென்பதற்கு ஏராளமான பிரமாணங்க ளெடுத்துரைக்கின்றார்கள். இதுவுமொரு சாமர்த்தியந்தான். இவ்வண்ணம் பலரும் பலவிதமாகவுரைக்கும்வண்ணம் பலவற்றைப் பலவிதமாக உரைத்த இவர் என்ன நல்ல அபிப்பிராயத்தாலோ! ஒருவேளை நாம் இயற்றிய அனைத்தும் அனைவருமறியவேண்டுமென்று கருதிப்போலும். பதினெட்டிற்கு அதிகமான புராணங்களிலும், நாலுவேதங்களிலும், மற்றைய நூல்களிலும், தம்மால் வேறுவேறாக உரைக்கப்பெற்றனவற்றைத்திரட்டி ஒரு நூலாக ஸ்ரீமஹாபாரதமென் றொன்றெழுதி இருக்கின்றனர்.

நான் இந்த ஸ்ரீமஹாபாரதத்தை வியாசபகவான் இயற்றிய சகல சாஸ்திரசாரமாகவே நினைக்கின்றேன். நான் பல நூல்களிலும் பலவிதமாக இயற்றியுள்ளவைகளுக்குட் கிடக்கும் சந்தேகங்களை யகற்றவும், தனதபிப்பிராயம் இன்னதென்று ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளவும் ஸர்வஜன ஸம்மதமாக இதனை இயற்றினனென்றும் நினைக்கின்றேன்.

உபயமகந்தபொங்கு றுமுர் கனைதன தந்திரி! ஸ்ரீமஹாபாரத மொன்றைப்படித்தவன் எல்லாப் புராணங்களிலுமுள்ள எல்லா விஷயங்களையும் அறிவான்.

புராணங்களி லொன்றைப் படித்தவன் அதனிலுள்ள விஷயங்களைத்தா னுணர்வான். ஆதலால், வியாசரியற்றிய எல்லா நூல்

களிலும் ஸ்ரீமஹாபாரதமே சிறந்தது என்று நான் துணிவாக உரைப்பேன்.

அப்பாரதம் சபாதலட்ச கிரந்தங்களை யுடையது என்று கூறுவார்கள். என்றால் நூற்று இருபத்தையாயிரஞ் சுலோகங்களை யுடையது என்று பொருள்.

இதனைப் பதினெட்டுப் பருவங்களாகப் பிரித்திருக்கின்றனர். ஒவ்வொரு பருவங்களிலும் அநேக அத்தியாயங்க ளுண்டு.

இதில் முதற்பருவம் ஆதிபருவம்.

இதனில் உலகசிருட்டியையும், உலகசிருட்டிக்குப் பின்னர் சந்திரவங்கிஷத்தரசர்களின் பாரம்பரியமும், அதனிலும் யயாதி, துஷ்யந்தன், புரூரவன், சந்தனு என்னு மரசர் சரிதங்களை இடையே இடையேவிடாமல் விரித்தும் எழுதியிருக்கின்றார். இதன்முதலில் சர்ப்பங்களின் உற்பவசரிதத்தையும், கருடனுடைய உற்பவசரிதத்தையும் விஸ்தாரமாக எழுதியிருக்கின்றார்.

பங்கஜாக்ஷி! சந்தனு வென்னு மரசன் கங்கை யென்பவளை மனைவியாகக்கொண் டிணைகாதலிருந்தானும்; அவளிடத்தில் பிறந்த பிள்ளை காங்கேயர் என்பவராம்; இப்பிள்ளையைப் பெற்றதற்குப்பின்பு அந்த கங்கையென்பவள் சந்தனுமன்னவனை விட்டுப் போய்விட்டாளாம். பின்னர் இந்த வியாசருக்குத் தாயான செம்படவப்பெண் என்று முன்ன முரைத்தேனே அந்த அம்மாளை கல்யாணஞ்செய்துகொண்டானும். அவளிடத்திலே சித்திரவீரியனென்றும் விசித்திரவீரியனென்றும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்களாம்; இவ்விருவரும் பிறந்த சிலநாட் கழித்து சந்தனுராஜா இறந்துபோனனும். இறந்துபோகவே காங்கேயனென்னும் சந்தனுவின் மூத்த குமாரன் தனது சிற்றன்னையின் மகனை சித்திரவீரியனை அரசனுக்கித் தான் மந்திரியைப்போல இருந்து அரசுசெலுத்தினனும்.

அப்பொழுது காசிராஜன் வீட்டுப் பெண்களை அக்காசிராஜன் சுயம்பரமாக அளிப்பதாக விளம்பரப்படுத்தி இருந்தானும். அதனையுணர்ந்த காங்கேயன் இரண்டு தம்பிமார்களுடனும் சேனைகளுடனும் காசிக்குச்சென்று அங்குச்சபாமண்டபத்தில் வந்துநின்ற மூன்று பெண்களையும் பலாத்காரமாக அபகரித்துக்கொண்டு, தன்னை இதுகாரணமாக எதிர்த்தவர்களைப் போரில் முதுகிடச்செய்து தன்னூரையடைந்து மணநடத்த ஆரம்பித்தசமயத்தில், அம்மூன்று மாதரி லொருத்தியான அம்பாலிகை யென்று பெயருள்ளவள், நான் சாலுவராஜனை விரும்பினவள் என்றமையா லவளைத் திரும்ப அனுப்பிவிட்டு, மற்ற இருவர்களான அம்பை, அம்பிகை என்பவர்களை முறையே தன்னிளையவ ரிருவருக்கும் கல்யாணஞ் செய்வித்தானும். சில தினங்களில் சித்திரவீரியனைப் பகைவனுன கந்தர்வன் நித்திரையில் தலையறுத்துவிட்டானும்; அதனு லவனுக்

இளையவனையே காங்கேயன் அரசனாக்கினானாம். அவன், பெண்கள் மோகத்திலேயே கிடந்து கொடியநோய்க் குடம்பினைக்கொடுத்து அற்பாயுளாக மாண்டானாம். இருவர்களும் இறந்ததற்குப் பின்பும் காங்கேயன் தான் செய்துகொண்ட சபதத்தால் அரசாளவும் மணஞ்செய்துகொள்ளவும் இயலாதவனாக விருத்தலை யுணர்ந்த அவன் சிற்றன்னை, விதவைகளான தன் மருமகண்மார்களைப் புணர்ந்து புத்திரோற்பத்தி யுண்டாக்குமாறு வற்புறுத்தினாளாம். அப்பொழுது சிற்றன்னையைப் பார்த்து காங்கேயன், என்னன்னையே! இந்நாட்டிற்கு நான் இளவரசனாகவிருந்தகாலத்து எனது தந்தை தங்கண்மீது மனஞ்செலுத்தினர். தங்கள் தந்தையான தாசராஜனை தன் மகள்வயிற்றிற்பிறக்கும் பிள்ளைக்கே ராச்சியத்தை யளித்தால் தான் தன் மகளை யளிப்பதாக உரைத்ததற்கு, என்றந்தை பதில் கூற வழியின்றி வியாகூலத்தோடு திரும்பிவந்ததை யறிந்த யான் தங்கள் தந்தையிடஞ்சென்று, நான் இனி விவாகமுஞ் செய்துகொள்ளேன்; மோக திரவியமான எந்த வஸ்துவையும் இன்றுமுதல் என் உடலுள்ளளவும் வெறுத்துவிட்டேன்; இனி என் தந்தையினிடத்தில் தங்கள் மகளிடத்துண்டாகும் என்றம்பியரோ யானடையவேண்டிய ராச்சியாபிஷேகத்தை யடையவேண்டியவர்கள் என்று சபதஞ்செய்திருக்கின்றேன்; அதனாலேதானென்னைச் சனங்கள் பீஷ்மன் என்று கூறுவது; ஆதலால் யான் தங்களால் கட்டளையிடப்பட்ட அந்த காரியத்தைச் செய்ய வியலாதவனாக விருக்கின்றேன்; தாங்கள் சொல்லியபடியே வியாசபகவானைக் கொண்டே இந்தவமிசத்திற்குப் புத்திரனை யுண்டாக்கிக்கொள்ளுங்கள் என்று கூறினானாம்.

இம்மொழி கேட்ட அச்சத்தியவதி தனது முன்கணவன் மகனான வியாசரை நினைத்தாளாம். நினைத்தவுடனே அவரங்கே வந்து தன் தாயின் கட்டளைப்படி தாய் முறையாற் றம்பியரான விசித்திரவீரியன், சித்திரசேனன் என்பவர்களின் மனைவியர்களையும் ஒரு வெள்ளாட்டியையும் புணர்ந்து சென்றாராம். அம்மூவரும் சூலாயிருந்து திருதராட்டிரன், பாண்டு, விதுரனென்னும் மூன்று பிள்ளைகளைப் பெற்றார்களாம்.

அவர்களைக் காங்கேயர் அதிக பிரியத்துடனே வளர்த்து, சகல கலைகளையும் பயிற்றுவித்து, குருடான திரிதராட்டிரனை அரசனாக்கி, அவனிளையவனான பாண்டுமன்னனைச் சேனாபதியாக்கி, விதுரனை முதன்மந்திரியாக்கி ராச்சியபார நடத்திவந்தனராம்.

இவர்களில், திரிதராட்டிரனுக்குக் காந்தாரதேச ராஜாவான சுபலனென்பவன் மகளான சௌபலை யென்னும் காந்தாரியைக் காங்கேயர் கல்யாணஞ்செய்துவைத்தாராம். அவள் தன்கணவன் குருடனாக விருத்தலால் தானுங் கண்ணைப் பொன்பட்டத்தால் மூடிக்கொண்டு குருடியைப்போல இருந்தாளாம்.

பாண்டுவுக்கு குந்திபோஜன் மகளான பிரதை யென்னும் குந்தியையும், மத்திரபோஜன் மகளான மாத்திரையென்பவளையும் கல்யாணஞ்செய்துவைத்தனராம். அவ்விருவருடனே பாண்டுமன்னவன் ராச்சியகாரியங்களை நடத்திவந்தானாம்.

காசராஜ வம்மிசத்தில் பிறந்த ஒரு பெண்ணை விதுரனுக்கும் மணம்செய்வித்தாராம், இவர்களிற் பாண்டுமன்னன் காட்டிற்கு வேட்டைக்குப்போயென்று ஆணும் பெண்ணுமாகவிருந்த மான்களை அம்பினாலடித்தானாம். அடித்தவுடன் அவ்விரண்டுமான் ஆணும் பெண்ணுமான இரண்டு முநிவர்களாக உருமாறி நாங்கள் பரிசுகமநுபவிக்கிற சமயத்தில் நீ சற்றேனும் இரக்கமில்லாமல் அம்பினாலடித்து எங்கள் பிராணனை வேறுபடுத்தியமையால் நீயும் இனி நின்மனைவியைக் கூடுவாயானால் உடனே உயிர்துறப்பாயாகவென்று சபித்தார்களாம். பிராமணர்களான இவர்களிட்ட சாபத்தால் வெகு துன்பமடைந்த பாண்டு வேட்டைக்கு வரும்பொழுது அழைத்துக்கொண்டு வந்திருந்த தனதிரண்டு மனைவியரையும் சில வேலையாட்களையும் அன்றி மற்றுமுள்ளோரை யெல்லாம் அரசனான திருதராட்டிரனிடத்திற்கு அனுப்பிவிட்டுப் பெண்போகமில்லாமல் மற்றையபோகமெல்லாம் என்னத்திற்கு என்று எல்லாப்போகங்களையும் துறந்து கேவலம் காட்டிலுள்ள தவசிகளோடு தானுந்தவசியாய் இமயகிரிச்சாரலில் பர்ணசாலைகட்டிக்கொண்டு சிலவருஷகாலமிருந்தானாம். இருந்தசமயத்தில் முனிவர்கள் பிள்ளையில்லாதவர்கட்குக் கதியில்லையே என்று அடிக்கடி யுரைப்பதைக்கேட்டு மிகவும் வருந்தித் தன் மூத்தமனைவியான குந்தியைப்பார்த்து நீ தானினிப்பிள்ளையை யுண்டாக்கிக்கொள்ளவேணுமென்று கூறித் தன் புருஷனிற் பிள்ளையுண்டாக ஏதுவில்லாது போனாற் பரபுருடனைச்சேர்ந்து பிள்ளைபெறலாம் அந்தப்பிள்ளையும் மணஞ்செய்தவன் பிள்ளையாமென்று தன்னை விபசாரிக்குமாறு கூறாய்த் தன்கணவன் மனக்குறையை நிறைவேற்றுதற்குக் குந்தியானவள் தான் துருவாசமுனியினிடம் பெற்றிருந்த மந்திரத்தைச்செபித்து எமனையழைப்பித்து அவனொடுபுணர்ந்து யுதிட்டிரனென்னு மகனைப் பெற்றுத் தன்கணவனுக்களிக்க அவன் பின்னுமொரு பிள்ளையைப் பெறச் சொல்ல மந்திரசெபஞ்செய்து வாயுதேவனை யழைத்துச் சேர்ந்து பீமசேனனைப் பெற்றுக்கொடுக்கத் தனக்கிரண்டு பிள்ளைகளிருப்பதாகச் சந்தோஷமடைந்த பாண்டுமன்னவன் பின்னுமொருபிள்ளையைப்பெற உத்தரவளிக்க அவள் இந்திரனைக்கூடி அருச்சுனனைப் பெற்றுக்கொடுக்க இதனைக்கண்டு பிள்ளையைப் பெறவேண்டுமென்று விரும்பிய இளையமனைவியான மத்திரையைக் குந்திக்குக்காட்டி இவளுமலடியல்லாதவளாக இருக்கவேண்டுமே என அவள் தன் மந்திரத்தை அவளுக்குரைக்க அவளுமதனைச்செபித்து அசுவனிதேவர்களைப் புணர்ந்து நகுலன் சகாதேவனென்னும் இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றுக்கொடுக்க அவர்களையும்

பாண்டுமன்னன்பார்த்துத் தான்பெறாதுபோனாலும் தன்மனைவியர் வெவ்வேறுவெவ்வேறு புருடர்களைச்சேர்ந்து பெற்ற பிள்ளைகளையே தன் பிள்ளைகளாகஅங்கீகரித்துக்கொண்டானாம்.

பின்னரேறக்குறைய பத்துப்பதிமூன்றுவருஷமிருந்து மூத்தமகனான தர்மபுத்திரனுக்குப் பதினாறுவயதாகிறசமயத்தில் ஒருநாள் காமத்தால் மயங்கி இளையமனைவியைச் சேர்ந்து இறந்துபோனானாம்.

காட்டிலிருந்த ரிஷ்யசிருங்கர்முதலியோர் தருமன்முதலியவர்களைக்கொண்டு உத்திரக்கிரியையாதிகளை நடத்திவைத்தார்களாம். அந்தசமயத்தில் அவனிளையமனைவியான மத்திராதேவி யென்பவள் அவனுடன் உடன்கட்டையேறினாளாம்.

பின்னர் குந்தியென்பவள் ரிஷ்யசிருங்கரையே துணையாகக்கொண்டு பீஷ்மரிருக்குமிடத்தையடைந்து வாழ்ந்தாளாம்.

திருதராட்டிரன் மனைவியான காந்தாரி என்பவள் வியாசபகவானிடத்திற் பிள்ளைவரம் பெற்றுக்கொண்டு கருப்பமாக விருந்தவள் ஆத்திரக்காரியாதலாற் குந்தி பிள்ளைகளைப் பெற்றமையைக்கேட்டு மனம் பொறாது குழவிக் கல்லெடுத்து வயிற்றிலிடித்துக் கர்ப்பத்தைக் கலக்கிவிட்டாளாம். கற்பங்கலைந்து இரத்தம் பிரவாகமாக ஓடிவந்ததாம். இதனையுணர்ந்து வியாசர் அவ்விடத்தில் வந்து அடிபேதையே! என்னகாரியஞ் செய்தாய் என்று அந்த இரத்தத்தையெல்லாம் வாரி நூறு கலசங்களில் நிரப்பி அவைகளுடன் பசுவின் நெய்யையும் கலந்து வைத்து மிகுதியாக வழித்தெடுத்ததனையும் வேறே ஒருபாத்திரத்தில் வைத்துக் கோழிமுதலிய பறவைகளைப்போல அடைகாப்பாயானால் நூறு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும் பிறப்பார்கள் அவசரப்படாதே என்று கூறிமறைதலும், அவள் என்செய்தோமெனச் சற்றே வருந்திப் பின்னும் பறவைகளைப்போல அவைகளை அடைகாத்தாளாம். சிலதினங்களில் பெரியகலசத்திலிருந்து துரியோதனனென்பவன் பிறந்தானாம். பின்னரொவ்வொருநாளைக் கொவ்வொருவராக மற்றையோர்களும் பிறந்தார்களாம். பின்னரொரு பெண்ணும் பிறந்தாளாம். ஆகச்சேர்த்து நூற்றொரு பிள்ளைகளையுடையவளாகக் காந்தாரி இருந்தாளாம்.

இந்த இரண்டுவமிசத்திற்பிறந்த குழந்தைகட்கும் பீஷ்மரே போஷகராகவும் குருவாகவும் இருந்து சகலகலைகளையும் பழக்கிவைத்ததுமன்றித் துரோணர் கிருபர் என்னுமிரண்டு பிராமணகுருமார்களையுங்கொண்டு தநுர்வேத முதலியவவைகளையும் பழக்குவித்தனர்.

இவ்வாறு நடக்குங் காலத்தில் சாரதிமகனென்றும், சூரியகுமாரனென்றுங் கூறுகின்ற கர்ணனென்பவன் துரியோதனனெ

ன்னும் திருதராட்டிர குமாரனுக்குச் சிநேகமானான். அன்றியும் தனது அம்மானான சகுனியென்பவனும் அத்துரியோதனனுக்கு வெகு பிரியமான சிநேகிதனாகவிருந்தானாம்.

இந்த பாண்டு பிள்ளைகளாகவுள்ள பாண்டவர்கட்கு வசுதேவன் மக்களான இராமகிருஷ்ணர்கள் சிநேகமாக இருந்தார்களாம்.

இவர்கள் கல்விகற்குங் காலத்து அருச்சுனனுக்கு அவன் குருவான துரோணன் ஏனையவரைவிட அதிகமாக வித்தைகளைக் கற்றுக் கொடுத்தானாம். பிராமண குருவான இவர் இவ்வண்ணஞ் செய்த தெந்தமுறையாலோ தெரியவில்லை. அவன் சொன்னதை கிரகிப்பவனாதலாலென்று எழுதியிருக்கிறார்.

இவர்கள் தங்கள் வில்வித்தையை அரங்கேற்றுங் காலத்திற் கர்ணனென்பவனும் அருச்சுனனும் விரோதிகளானார்களாம்.

இந்த விரோதத்தையே காரணமாகக்கொண்டு துரியோதனாதியர்கள் அங்கதேசத்தைக் கைப்பற்றிக் கர்ணனுக்குக்கொடுத்துக் கர்ணனை அங்கராசனாகச் செய்தார்களாம். இது மாத்திரமன்றி கர்ணனுக்கு அரசவமிசத்திலேயே கல்யாணமும் செய்து வைத்தார்களாம்.

அருச்சுனனுடைய பகை கர்ணனுக்கு மகுடாபிஷேக பதவியைக் கொடுத்தது.

கர்ணசகுனிகளின் துர்ப்போதனையாலும் ஊழாலும் ஊருக்கெல்லாம் நல்லவர்களாகவிருந்த பாண்டவர்களை விரோதிகளாகத் துரியோதனாதிகள் பாவித்தார்களாம். இந்த விரோதம் நாளுக்குநாள் முற்று முற்றத் துரியோதனாதிகளுக்கு வீமனென்பவனைக் கொன்றுவிட்டாற் பாண்டவர்களை எளிதில் வெல்லலாமென்று தோன்ற வீமனுக்கு விருந்துசொல்லி விஷான்னமிட்டு மயக்கி ஆற்றில் தூக்கியிட்டார்களாம்.

ஆயுசுகெட்டியாக விருந்தமையால் பாதலலோகவாசிகளின் கையில்கப்பட்டு அவர்கள் கொடுத்த மருந்தால் முன்னிலு மதிகமான பெலத்தை அடைந்து எழுநாள் கழித்துவந்து சேர்ந்தானாம்.

பின்னும் அவனைக்கொல்ல அவர்கள் செய்த வஞ்சனைகளுக்களவே இல்லையாம்.

கடைசியாக பீஷ்மரும் விதுரனுமாகத் திருதராட்டிரனுக்குச் சொல்லத் திருதராட்டிரன் தனது சிங்காசனமேறி யரசாளத் தருமனை யோக்கியனென்றும், தருமபுத்திரனே அரசாள்வானானால் நாட்டுக் குடிகள் சந்தோஷப்படுவார்களென்றுந் தீர்மானித்துத் தருமனுக்கே இளவரசாகமுடிசூட்டியரசாள உத்திரவுசெய்தானாம்.

தருமன் ஒழுங்காக அரசாளவும் அவன் பகைவரான துரியோதனாதியரன்றி யுள்ள மற்றையோரெல்லாம் வெகு சந்தோஷத்துடனிருந்தார்களாம்.

இந்த விஷயத்தைக் கண்ட துரியோதனன் கர்ண சகுனியாதியருடன் ஓரிரவில் திருதராட்டிரனிடஞ் சென்று எனக்கு அரசு தராது போனதென்ன விஷயமென்று கேட்டானும்.

அதற்குத் துரியோதனனைப் பார்த்துத் திருதராட்டிரன் என் தம்பியான பாண்டுவிற்கே உரியதிந்த ராஜ்ஜியம் அவன் என்மீதன்புள்ளவனாதலால் என்னை அரசனாகவிருக்கச் சம்மதித்தான். அவன் சேனாபதியாகவிருந்தமையினாலேயே நானும் ஒரு அரசனாகவிருப்பேனாயினேன் அந்த முறையினாலேயே அவன் மகனுக்கு முறைப்படி நான் அரசினை யளித்தேன் என்றானும்.

இதனைக்கேட்ட துரியோதனன் இதென்னடா இந்தக்குருடன் இப்படி சொல்லுகிறானே இதற்கென்ன செய்யலாமென்று சற்று நாழிகை ஆலோசித்துத் தன்பிதாவான திருதராட்டிரனைப்பார்த்து என் தந்தையே! பழைய கதைகளை இப்பொழுது பேசுவதிற் பயனில்லை; இப்பொழுது இந்த உலகத்திற் கரசனாகவிருப்பவர் தாங்களாதலால் தங்கள் மகனான நானே சிங்காதன மேறவேண்டியவன் தாங்கள் அவ்வண்ணஞ்செய்தால் நான் இங்கு தங்கண் முன்னமிருப்பேன்; அன்றேல் தலையை மொட்டையடித்துக் காஷாயம் போட்டுக்கொண்டு பிச்சையெடுத்துத் தங்கள் ஜீவியகாலத்திலேயே தின்னுவேன் என்றானாம். இந்த வசனத்தை திருதராஷ்டிரன் கேட்டு மனமயக்கங்கொண்டு இனி என்செய்வதென்றாலோசித்து நான், விதுரனும் பீஷ்மனும் கூறியவண்ணம் செய்தேன்.

இனி உன்னிஷ்டப்படியே சிலதினங்களிற் செய்துவைக்கிறேனென்றுரைத்து அவனைச் சமாதானத்துட னனுப்பிய பின்னர், தருமனை யழைத்து நீ நமது நாட்டினொருபுறத்திலுள்ளதும் பரமேசுவரன தாலயத்தாலும், கங்காநதியாலும் சோபிப்பதுமான வாரணவதமென்னும் க்ஷேத்திரத்தையடைந்து இறந்துபோன நின் தந்தையின் நன்மையின்பொருட்டு நித்தியசிராத்தஞ் செய்துகொண்டு அங்கிருந்தபடியே ராச்சியகாரியத்தையும் நடத்தக்கடவை என்று விசனத்துட னுரைப்பவனைப்போல அபிநயத்துடனுரைத்தானும்.

இதற்குள்ளேயே துரியோதனன் இவர்கள் பொருட்டு நூதனமாக வாரணவதமென்னும் ஊரிலமைக்கு மாளிகையை அரக்கும் பஞ்சுமிட்டு வஞ்சனையாக இயற்றுவித்தானும்.

கட்டடங்கட்டுஞ் சிற்பியானவன் பாண்டவர்களிடத்தன்புள்ளவனாதலால் அக்கட்டடத்தினுள் ஒரு சுரங்கத்தையுங்கூட அமைத்து அரக்குமாளிகையைக்கட்டி முடித்தானும். இவ்வண்ணஞ்செய்துமுடித்த அந்த சிற்பி இந்த இரகசியத்தை விபீசனனுக்குஞ் சொன்னானும்.

புரோசனனென்னு மொருமந்திரியுடனும் பாண்டுகுமாரர் மாதாவான குந்திதேவியுடனும் வாரணவதத்தை யடைந்து புரோச

னுடைய நடைநொடிபாவனைகளால் அவனைப் பகைவர் பட்சத்தைச் சேர்ந்தவனென்று தெரிந்துகொண்டார்களாம்.

புரோசனனும் சமயம் பார்த்து நெருப்புவைத்து அரக்குமாளிகையைப் பற்றவைத்து இவர்களைக் கொல்லுதற்குக் காலம்பார்த்துக்கொண்டிருந்தானாம்.

இதற்குள் ஒருநாள் வீமசேனன் புரோசனன் அரக்குமாளிகைக்குட்கிடந்து தூங்குஞ் சமயம் பார்த்து அரக்குமாளிகையில் நெருப்புவைத்துவிட்டுத் தன் தாயார் தமையன் தம்பிமாரென்னும் இவர்களையெடுத்துக்கொண்டு சுரங்கத்தின் வழியாக ஒரு பெருங்காட்டை யடைந்தானாம். அக்காடு இடிம்பனென்று பெயருள்ள ஒரு அசுரன் இருக்கிற காடாம். அந்தராத்திரியில் அவன் மனிதர் நாற்றத்தைப் புதிதாக உணர்ந்து தன்னிளையவளைப்பார்த்து அடி பாவாய் இன்றிவ்வனத்தில் வந்திருப்பவர்களைக் கொன்றெடுத்துக் கொண்டுவா தின்னலாமென்றனுப்பினனாம்.

அவள் இவர்கள் இருக்குமிடத்தை வாசனையே அடையாளமாகக்கொண்டுசென்று அவ்விடத்தையடைந்து வீமசேனனைப் பார்த்து ஆசைப்பட்டு மயங்கி நின்றாளாம்.

இதற்குள் அவள் தமையனாகிய இடிம்பனென்பவன் அதிக கோபத்துடன் விரைவாக வந்து, என்னடி மனிதன்மீது கூட நீ ஆசைப்படலாமா என்றதட்டிக்கொண்டு அருகில்வந்து, ஆட்டுக்குட்டிகூட இடையனை அதிகாரம் பண்ணுமாமென்று கையைத் தேய்த்து வீமனை ஒரு அறை அறைந்து விட்டுத் திரும்புமுன் வீமன் அவன் கன்னத்திலோரடியடித்து அவனொடு சண்டையிட்டு அவனைக் கொன்றானாம். இதுதான் வீமன் செய்த முதற் சண்டையாம்.

பின்னரவன் தங்கையான இடும்பி வீமனைப் புருஷனாகக்கொண்டு கடோத்கசனென்னும் பிள்ளையைப்பெற்றுக்கொண்டாளாம்.

பின்னிவர்கள் நெடுந்தூரத்திலுள்ள வேத்திரகியமென்னும் ஊருக்கருகிற் சென்று வியாசமுனியினருளால் பார்ப்பார்களாக உருமாறிப் பிராமணர்களாகவே பிராமணவீடுகளிற்புகுந்து தனது அன்னையான குந்தியுடன் பிச்சையெடுத்தருந்திக்கொண்டிருந்தார்களாம்.

அவ்விடத்திலுள்ள பிராமணர்களுக்கு வைரியாகவுள்ள பகாசுரனை வீமன் தன்னன்னையின்கட்டளையாற் கொன்றானாம். இவனைக்கொல்லுமன்று வீமசேனன் பன்னிரண்டு சகடமன்னங்களையுண்டானாம். இதுதான் வீமசேனன்செய்த இரண்டாவதுசண்டை.

இது நிற்க, இடையிலே கொஞ்சஞ்சொல்ல மறந்துபோனேன். விற்குருவாக விருந்த துரோணரென்பவரோடு சிநேகமாக இருந்தவனும் இவருடன் ஒன்றாய் விற்படை பயின்றவனுமான பாஞ்சால நாட்டரசனான யாகசேனனென்பவன் இந்த துரோண

னை யவமதித்தானாம். அந்த அவமதிப்புக்குப் பதில் தனது சீடர்களான துரியோதனாதிகளை அனுப்பி அவனைப் பிடித்துக் கட்டிக் கொண்டு வரச் சொன்னாராம். அவர்கள் சென்று சண்டையிட்டு முதுகிட்ட பின்பு பாண்டவர் சென்று போர்புரிந்தார்களாம். அந்தப்போரில் அருச்சுனன் பாஞ்சாலனொடு பொருது அவனைப் பிடித்துக் கட்டித் துரோணரெதிரிற் கொண்டுவந்து நிறுத்தினானாம். உடனே துரோணர் தன்பகைவனான யாகசேனனைப்பார்த்து தம்பி! உன்னை என் மாணவன் வென்றுவிட்டான். நான் ஜயித்தமையால் என்னதான பாஞ்சாலநாட்டையும் உனக்கேகொடுத்தேன், உன்னைப்போல நான் லோபியல்லேன் போ என்று ஒரு தேருங்கொடுத்தனுப்பினாராம். அவனும் ஊருக்குச்சென்று துரோணனைக் கொல்லவொருமகனையும், அருச்சுனனைக்கூட வொருமகளையும் பெறவேண்டுமென்றுத்தேசித்து புத்திரகாமயாகமொன்று நடத்தித் திட்டத்துய்மனென்னு மொருபிள்ளையையும், திரௌபதையென்னுமொரு பெண்ணையும் அக்கினியினின்றும் பெற்று வளர்த்தானாம். வளர்த்தவன் பாண்டுகுமாரர்கள் அரக்குமாளிகையி லிறந்துபோனார்களென்றுண்டான வதந்தியால் வாட்டமுற்று விவேகிகளான பாண்டவர்கள் மூடர்களான துரியோதனாதிகள் செய்த வஞ்சனைக்குட் சிக்கி இறந்திருக்கமாட்டார்கள். அவர்களை அரக்குமாளிகையைக் கொளுத்திவிட்டு எங்கேனும் மறைந்து இருந்து பகைவரடையும் மகிழ்ச்சியைப் பார்த்து அவர்களை அழிக்கத்தக்க வகைத் தேடிக்கொண்டிருக்கலாம்; ஆதலால் நாம் பாண்டவர்களைத் தேடிப்பிடிக்கத்தக்க யுத்திபொன்று செய்யவேண்டுமென்று பாஞ்சாலி சுயம்வரமென எங்கும் விளம்பரப்படுத்தினானாம்.

இந்தச் சங்கதியை யுணர்ந்த பாண்டவர்கள் கங்கைக் கரையோரமாகச் சென்றார்களாம்; செல்லும் வழியில் சித்திரசேனனென்னும் கந்தர்வனெதிர்த்துப் போர்புரிந்தானாம். அவனை அருச்சுனன் தன் கையிலிருந்த கொள்ளிக்கட்டையினாலேயே சுட்டுத் தோற்கச்செய்தானாம். அவனாற் காட்டப்பட்ட வழியே தௌமிய முனிவர் ஆச்சிரமத்தை யடைந்து அவரிடத்துண்மைகூறி அவரைத் தமது ஆசாரியராகக்கொண்டு பாஞ்சாலநாட்டை யடைந்து ஒரு குசவன் வீட்டை இருப்பிடமாக அமைத்துத் தங்கள் அன்னையை அவ்விடத்தி லிருக்கச்செய்து தாங்கள்மாத்திரம் சுயம்வர மண்டபத்திற்குச்சென்று பிராமணர்களின் நடுவிலிருந்தார்களாம்.

எல்லாரும் வந்தானதற்குப் பின்பு திட்டத்துய்மன் என்னும் அரசகுமாரனொருவன் என்னிளையவளான பாஞ்சாலி என்பவளை மணஞ்செய்துகொள்ள விருப்பமுள்ளவன் இந்த வில்லினை வளைத்து நிறுத்தி வளைத்துக் கீழே கவிழ்ந்தவண்ணமாக நீரிலம்பு தொடுத்து மேலே கட்டியுள்ள குறியைப் பொருந்த அறுத்துத் தள்ள வேண்டுமென்று கூறினானாம்.

அழகுள்ளவள் திரௌபதியென்று கேள்வியுற்று அவளைக் கல்யாணம் செய்ய விரும்பிவந்திருந்த அரசர்களெல்லாம் அந்தக் காரியங்களைச் செய்ய இயலாதவர்களாகவாயினார்களாம்.

உடனே அருச்சுனனெழுந்து அரசர்களே! பிராமணனான நானந்தக்காரியத்தை செய்யலாமோ? என்று கேட்டானாம். அதற்குத் திட்டத்துய்மன் அரசரல்லாதாரும் நான் முன் கூறிய அந்தகாரியத்தைச்செய்தால் என்னிளையவளை மணம்புரிந்து செல்லலாம் என்றுரைத்தானாம்.

உடனே பிராமணவேடத்துடனிருந்த அருச்சுனன் திட்டத்துய்மன் உரைத்தவண்ணமே செய்தானாம். திரௌபதி அவன்கழுத்தில் மாலையிட்டு அவனோடு சென்றாளாம். அப்பொழுது அரசர்கள் பொறாமையால் இவர்களோடு சண்டையிட்டார்களாம். சண்டை செய்தகாலத்து அங்குத் தக்ஷிணை முதலியவைகளுக்கு வந்திருந்த பார்ப்பார் குடுமியைக்கட்டி முடிந்துகொண்டு சாதியபிமானத்தாற் சண்டைக்காரம்பித்தார்களாம்.

வீமசேனன் பிராமணர் முதலியவர்களை விலக்கித் தாங்கள் அரசர்களைத் துரத்திவிட்டார்களாம். பலசாலியான சல்லியனுக்கும் வீமனுக்கும் மல்யுத்தமும் அர்ச்சுனனுக்கும் கர்ணனுக்கும் வில்யுத்தமும் நடந்தனவாம். இதற்குள் கிருஷ்ணன் சமாதானஞ்செய்து அரசர்களையெல்லாம் இட்டுக்கொண்டு போய்விட்டானாம்.

பின்னர் அர்ச்சுனன் சகோதரர்களுடன் குயவன்வீட்டிற்குச் சென்று வெளியில் திரௌபதியை நிறுத்தித் தாங்கள்மாத்திரம் உள்ளேபுகுந்து தாயாரைப்பார்த்து எல்லோருமாக அம்மா நாங்கள் ஒரு கனி கொண்டுவந்திருக்கின்றோமென்றார்களாம்; அதற்கவள் நீங்கள் ஐந்துபேருமாக அதனையுண்ணுங்கள் என்றுரைத்தாளாம். உரைத்த சிறிதுநேரத்திற்கெல்லாம் வெளியே வந்துபார்த்து ஓ ஓ மோசம்போனேனே மக்காள் இதற்கென்னசெய்யலாம் என்றாளாம்.

அதற்கவர்களனைவரும் எங்கள் ஐந்துபேருக்கும் அவ்வொருத்தி மேலேயே விருப்பமிருந்தமையாலேதான் நீ அவ்வாறுரைத்தனை என்றார்களாம். பின்னர் பாஞ்சாலன் இவர்களிருப்பு முதலியவற்றை ஒற்றர்முகத்தாலுணர்ந்து இவர்களை இன்னாரென்று தெரிந்துகொள்ளுதற்கு நாலுசாதியர்களுமேறும் வேறுவேறான நாலிரதங்களை அனுப்பிவைத்தானாம். இவர்கள் அரசரேறுமிரதத்தில் அரசன் மாளிகையையடைந்தார்களாம். பாஞ்சாலன் இவர்களை வேண்டிக்கொண்டமையால் இவர்கள் தங்கள் சுயரூபத்தையடைந்தார்களாம். பின்னர் வியாசர் அவ்விடத்திற்கு வந்து பாஞ்சாலனுக்கு இவர்களைந்துபேர்களும் இந்திரர்கள் சிவன் இவளுக்குக்கொடுத்துள்ள வரத்தினால் இவளைக் கல்யாணஞ்செய்துகொள்ளவே பிறந்திருக்கிறார்களென்று திரௌபதியின் மூன்றுசென்மசரிதத்தை உரை

ந்தப் பாஞ்சாலனுக்குதவி நேத்ரங்கொடுத்து இவர்களைப் பார்க்கச்செய்து ஒருத்தியை ஐந்துபேர்களுக்கும் ஐந்துநாள் தௌமியனைக்கொண்டு விவாகம்செய்வித்து வைத்தாராம்.

பின்னர் சிலகாலங்கழித்து திருதராட்டிரன் முதலோர் பாண்டவர்களை அழைப்பித்துத் தருமபுத்திரனுக்குப் பின்னுமொருதரம் பட்டாபிஷேகஞ்செய்துவைத்தார்களாம்; பின்னரவர்கள் துரியோதனாதிகளுடனிருக்க விருப்பமின்றித் திருதராட்டிரனிடத்து உத்தரவுபெற்றுக்கொண்டு காண்டவப்பிரஸ்தமென்னும் காட்டையடைந்து கிருஷ்ணனாலழைக்கப்பெற்றுவந்த விசுவகன்மனென்பவனால் உண்டாக்கப்பட்டு இந்திரப்பிரத்தமென்று பெயரிடப்பட்ட ஊரிற் குடியேறினார்களாம்.

அதுமுதல் கிருஷ்ணன் அநேககாலம் பாண்டவர்களோடுகூடவே இருந்தானாம். ஒரு வசந்தகாலத்தில் கிருஷ்ணனோடுகூட அர்ச்சுனன் இமயகிரிச்சாரலிலிருந்தானாம்; அப்பொழுது ஒரு பிராமணன் அவனெதிரேவந்து நான் பிராமணன் எனக்கோ மிகுதியான பசியாக இருக்கின்றது என்றானாம்; அதற்கர்ச்சுனன் நின்பசியை நான்றணிக்கின்றேனென்றவுடனே பிராமணவுருமாறி அக்கினிதேவனாக நின்று, அர்ச்சுனா! இந்திரனுக்குச் சொந்தமான இந்த காண்டவனத்தை யுண்ண விரும்பினேன் என்றானாம். அர்ச்சுனன் அதற்கு யாவர் தடுத்தாலும் அவர்கள் தடைகளையகற்றி யுனக்கு இந்த வனத்தை யுணவாக அளிக்கின்றேன் என்று தைரியமாக உரைத்தானாம்.

அக்கினிபகவான் இவனுடைய தைரியத்திற்கு மெச்சிக் காண்டீபம் என்னும் வில்லையும், அக்ஷயமென்னும் அம்பறாத்தூணியையும், அநுமக்கொடியினையும், வெள்ளைக்குதிரைகளையுடைய இரதத்தையும் அளித்து இதனாலுனக்கு அறுபத்தாறுவருஷம் கெடாதவெற்றியே உண்டாகக்கடவது என்று ஆசீர்வதித்தானாம்.

அன்றுமுதல் அருச்சுனன், சுவேதவாகன், கவித்துவசன், காண்டீபன், காண்டாவனதகனன் என்னும் பெயர்களைப் பெற்றானாம். பின்னரக்கினி அக்காட்டை அருந்தும்போது தேவர்களுக்கும் அருச்சுனனுக்கும் பெரிய சண்டை நடந்ததாம். அந்த சண்டையிற் கிருஷ்ணன் சாரதியாக இருந்தானாம்.

எதிர்த்த தேவர்களையெல்லாம் ஜயித்து அக்கினியினெண்ணத்தை நிறைவேற்றி இந்திரப்பிரஸ்தத்திற்குத் திரும்பிவந்தானாம். இதுதான் வியாசர் கூறிய பாரதத்தின் ஆதிபருவமென்று விஜயவிக்ரமனுரைத்தவுடனே பங்கஜாக்ஷி தாங்கள் இவ்வளவு ஞாபகமாக உரைப்பீர்களென்று நான் முன்னே நினைக்காதுபோனேன், சுருக்கி சொன்னதிலும் சிலவற்றை விட்டுவிட்டாலும் இவ்வளவு சொன்னது ஆச்சரியந்தான் என்றாள்.

வெகு சரியாக எல்லாவற்றையும் உரைத்துவிட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிற விஜயவிக்ரமன் நானெதனை விட்டுவிட்டேனென்றான்.

அதற்கவள் தாங்கள் பிரமாணங்களைக் குற்றங்கூற வந்தவையிற் குறைவாகச் சொல்லவில்லை; கதை சொன்னீர்களே அதில் கொஞ்சங் குறைவாக வுரைத்தீர்கள்; அதனை வேண்டுமானால் தங்கள் முன்னே சற்றே விருப்பமிருந்தா லுரைக்கின்றேன் என்றாள்.

வி:—நீ நானுரையாது விட்டனவற்றை யுரைத்து எனக்கு ஞாபகத்தை யுண்டாக்குவதைப்பற்றி சந்தோஷமே யன்றி விசனமில்லையென்றான்.

ப:—பாண்டவர்கள் காண்டவப் பிரஸ்தத்தை யடைந்தவுடனே நாரதரென்பவர் அங்கேவந்து சுந்தோபசுந்தரர்களின் கதையையுரைத்து ஒருத்தியை ஐந்துபேர் இஷ்டம்போல அநுபவிப்பது சரியல்ல அதனால் சங்கடம் நேரிடும் ஆதலால் ஒரு வருஷத்திற்கு ஒருவராக வைத்துக் கொள்ளுங்கள் ஒருத்தனுட னிருக்கும் பொழுது இன்னொருவன் பார்த்தாலவன் தீர்த்தயாத்திரை போகட்டும் என்று கூறிச்சென்றார். அவர்களும் மஹாஞான நாரதன் மொழிப்படியே நடந்துகொண்டார்கள். திரௌபதியும் ஐந்துபேர்களுக்கு ஐந்து பிள்ளைகளைப் பெற்றாள்.

பின்னர் தருமனுக்கு மனைவியாகத் திரௌபதியிருக்குநாளில் ஒருநாள் ராத்திரி ஒரு பிராமணனோடிவந்து என்பசுக்களை வேடர் திருடிக்கொண்டு போகின்றார்கள் என்று கூவினன். அதனைக்கேட்ட அருச்சுனன் தனது வில்லிருக்கும் அறையிற் றிரௌபதியும் தருமனும் இருப்பதைச் சிந்திக்காமல் உள்ளே நுழைந்து வில்லெடுத்துச் சென்று வேடர்களை அழித்துப் பிராமணனுக்குப் பசுக்களைத்திருப்பிக் கொடுத்துவிட்டுத் தான் முன் கூறியுள்ள சபதப்படி ஆயிரம் பிராமணர்களுடன் உலகிலுள்ள தீர்த்தங்களில் மூழ்கும் வண்ணம் சென்றான்.

சென்றவன் யமுனையின் மூழ்கும்போது தன்னைக்கண்டு காமுற்ற உலூகி என்னும் பாதலநாட்டுப்பெண்ணுடன் அவளூருக்குச் சென்று அவள் தந்தையின் சம்மதப்படி அவளைக் கல்யாணஞ்செய்து அவளுக்குக் கர்ப்பத்தை யுண்டாக்கிவிட்டுத் திரும்பி மதுரைக்குச்சென்று பாண்டியகுமாரியான சித்திராங்கதையைக் கல்யாணஞ்செய்து பப்புருவாகனன் என்னும் பிள்ளையைப்பெற்று அவளையும் அவ்விடத்திலேயே நிறுத்தி உடன்வந்தவர்களை யெல்லாம் இட்டம்போல போமாறு அநுப்பிவிட்டு ஒரு மழைக்காலத்தில் மேற்குசமுத்திரக்கரைவழியாகத் துவாரகையி னருகிற்சென்று ஸன்னியாசி வேஷம்போட்டுக்கொண்டு ரைவதமென்னு மலையிற்றங்கி கிருஷ்ணனுடைய சகாயத்தால் கிருஷ்ணன் றங்கையான சுபத்திரை

இருக்கும் இடத்தை அடைந்து நாலுமாதம் இருந்து கடைசியில் தன்னை அர்ச்சுனனென்று அவளுக்குத் தெரியப்படுத்தி ஒரு இரவில் கிர்ஷ்ணனுடைய ஸஹாயத்தால் அவளைக் கல்யாணஞ்செய்து கொண்டு தன் சுயரூபத்துடன் தேரிலவளையேற்றிக்கொண்டு எதிர்த்த யாதவர்களையெல்லாம் செயித்துத் தன்னூரான இந்திரபிரஸ்தத்தை யடைந்தானென்பதை தாங்கள் கூறவேயில்லை என்றாள்.

வி:—இதிலென்ன அதுவே பாரதஞ் சொல்லத்தொலையாத பெருங்காரியங்களை இன்றும் அதொருபாரதமென்றுரைப்பார்கள். இதுகிடக்கட்டும்;நான் நினைத்ததொன்றுசொல்லிமுடித்ததொன்று.

மானே இவ்வண்ணம் முழுப்புரளிகளுடன் சில வுண்மைகளையுஞ்சேர்த்துப்பிராமணர்களான சாதியார்க்கே மிகுந்த உயர்வுகாட்டி எழுதியிருக்கிறார். இவைகளையெல்லா மாலோசித்தால் முழுப்புரளியென்றே தோன்றுகின்ற தென்மனதிற்கு. ஆதலா லவர்கள் சொற்களை யெப்படி யுண்மையென்று பூரணமாகக்கருதுவது. அதனாலேதான் பெரியோர் விஷயத்திலுஞ் சந்தேகந்தானென்றேன் என்றான்.

விஜயவிக்ரமன் பிராமணர் செய்கையைப்

பேணலேன் என்றுரைத்த.

நான்காவதத்தியாயம்

முற்றிற்று.

பங்கஜாக்ஷி பிராமணர் செய்கையைப் பேணவேண்டியதே என்றுரைத்தது.

எனதுபிராணேசா! தாங்கள் பாரதாதிகளைக் கேட்டவண்ணமேசொல்லும் பேராற்றலுள்ளவர்கள் என்பதை இதுகாறும் தாங்கள் ஆதிபருவத்தினநேக பாகங்களைத் தொடராகச்சொன்னதே விளக்குகின்றது. சரித்திரங்களை விடாதுரைத்தீர்கள். அவைகளை இன்னகாரணத்திற்காகப் பகவான் வியாசன் எழுதினனென்பதை ஆலோசியாமல் இவைகள் வீண்புரளிகள் என்று கூறிவிட்டீர்கள். ஒருக்காலும் அவைகள் வீண்புரளிகளாகா. ஏனாகாதவையென்னில், என் சிற்றறிவிற்கு எட்டியவளவு இங்கு கூறுகின்றேன்.

அரசர்கள் சமுகங்களிலவர்கள் பரம்பரையாரின் பிரதாபங்களை யெடுத்துரைக்கும் புராணிகரென்னும் ஒருபகுதியினருண்டு; அவர்கள் அரசர்களிடத்திருக்கின்றார்களே அந்தஅரசர்பரம்பரையினரை அளவுகடந்து புகழ்ந்துபாடுவார்கள். அவர்களவ்வண்ணம் பாடுவதைக்கேட்கும் அரசர்களும் இத்துணைச் சிறப்புக்களை நம்பூர்விகர் அடைந்திருந்தார்களென்றோ நாம் அடைந்திருக்கின்றோமென்று ஸந்தோஷிப்பதும் வழக்கம். அவ்வண்ணம் பிராமணர்சபைக்கு அவர்கள்குலத்தைப் புகழ்ந்துரைக்க வந்தவரல்லர், வியாசர் அவர் சகலபற்றுக்களையும் விட்டவர் மஹாஞானி.

அரசர்கள் ராஜ்யாதிகளைப் பகைவரிடத்தினின்றும் அடையவும் போகங்களை யநுபவிக்கவும் இச்சையுள்ளவர்களாய் சரீரபலம் சதுரங்கபலம் ஸாஹஸபலம் முதலிய இவைகளைச்சம்பாதித்துக்காலந்தள்ளுகின்றார்கள்.

வைசியர்களோ தனதான்யாதிகளை விரும்பிக் கிருஷி வியாபாரமுதலியவைகளைச்செய்து காலந்தள்ளுகின்றார்கள். சூத்திரர்களோ மேற்குறித்தவர்கள் உரைப்பனவற்றைச்செய்து காலந்தள்ளுகின்றார்கள். இம்மூவகையினருமல்லாத கீழ்ச்சாதியினராகவுள்ளவர்கள் தங்களுக்கமைந்த தொழில்களையேசெய்து ஜீவிக்கின்றார்கள். ஸகலசாதிகளினும் உயர்ந்த ஜாதியாக மதிக்கப்படுவோரான பிராமணஜாதியார் கடவுளை அடைதற்குரியவும் எண்ணியகருமங்களை இடையூறின்றி முடிக்கத்தக்கவும் ஆனவேதங்களை கண்டாபாடமாகப்படிக்கின்றார்கள்; படிப்பதுவுமன்றி காலங்கள்தோறும்படித்ததைச்சிந்திக்கின்றார்கள். வேதமன்றியுள்ளஏனையசாஸ்திரங்களையுகற்கின்றார்கள். ஒருவனுரைப்பதைக்கேட்டு மற்றொருவன் கற்பது மாத்திரமன்றி அவைகளின் பொருள்களையுணர்தற்காக நிகண்டு வியாகரணம் தருக்கம்சந்தசாதிகளையும் நன்றாய்ப்படிக்கின்றார்கள்.

இவ்விதமான உசித வித்தையினுயர்ச்சியை யடைந்து நமது சாதியினரைப்போலன்றி இலைகளையுண்டுகொண்டும் பாலருந்தியும்

நெய்யருந்தியும் வாயுபக்ஷணம் செய்தும் சரீரத்தைத் துரும்பினுஞ் சிறிதாவதக்கி வதக்கிப் பெருங்காடுகளிலிருந்துகொண்டு தவஞ்செய்து பேரழகாளனை எல்லாம்வல்ல இறைவனை இருவிழிகுளிரக் காண்கின்றார்கள்.. இறைவனைக்கண்ட விசேஷத்தாற் வாக்பலிதாதிகளை யடைந்தவர்களாய் நிகரற்றவர்களாய் விளங்குகின்றார்கள். வியாசபகவான் எந்தப்பெரியோர்கள்சரிதத்தைச் சிறப்பித்து எழுதியிருக்கின்றனரோ அந்தப் பெரியவர்கள் மனைவிமக்கள்முதலிய சமுசாராதிகளை யுடையவராகவிருந்தாலும், அல்லது கோவணமுடுத்துத் துறவியாகஇருந்தாலும் பற்றற்ற சமானமான குணமுடையவர்களேயாம்.

எப்பொழுது ஒருவன் அல்லது ஒருத்தி பற்றென்பதில்லாதவனாய் அல்லது இல்லாதவளாய் இருக்கக்கூடுமோ அப்பொழுது அவர்கள் நினைத்த காரியமான அரியவிஷயத்தைச் சாதிப்பார்கள். மனதை யடக்கிக்கொண்டு தவஞ்செய்து உயர்ந்தவர்கள் பிராமண சாதியிலதிகமாக இருந்த துண்மையாதலால் பகவான் வியாசன் அவ்வண்ணமெழுதினான். அரசரிலும்அருந்தவஞ்செய்து கடவுளைக் கண்டவர்கள் காரியசித்திபெற்றவர்கள் முதலாயினோரை எழுதாமல் மறைத்தாரில்லை. இன்ன அரசன் இன்னவிதமான காரியசித்தியின்பொருட்டு இன்னவிதமான தவத்தைச்செய்து அதனை அடைந்தானென்று அவர் (வியாசர்) கூறாமல் மறைத்தாரில்லை. வைசிய சூத்திராதிகளுள்ளும் தேவசகாயம்பெற்றவர்கள் சரிதங்களை அவர் மறையாமற்றானெழுதியிருக்கின்றார்.

வியாசர் சாதிவேற்றுமைகாட்டாதவர், ஸகலபிராணிகளையும் பொதுவாகப்பார்ப்பவர். ஸகல பிராணிகளும் அழியாப்பெருவாழ்வடைதற்குரியன என்று கருதியுள்ளவர் வெறும்புலவர்க ளெழுதும் கட்டுக்கதைகளைப் போன்றதன்றி உண்மையாகவுள்ள சரிதங்களையே கூறுபவர். இந்த மஹாநுபாவர் இந்த உலகத்திற் பிறக்காதுபோனால் நாமெல்லாம் அன்னியர் ஏற்படுத்தியுள்ள கபடசம்பிரதாயங்களிற் சிக்கி அலைவோமே. அம்மம்ம! அவர் புராணங்களின் மஹான்கள் சரிதங்களை யெழுதிவைக்காதுபோனால் மஹான்கள் இருக்கின்றார்களென்று நாமெப்படியறிவோம். தாங்கள் புராணசிரவணஞ் செய்யுங்கால் பிராமண மஹான்களின் சரிதங்களை நன்றாய்க் கருத்தமைதியுடன் கேட்டிருக்கமாட்டீர்கள். நமது விஜயவிக்ரமபுரத்திலிருந்து நமக்கு மந்திரியர்களாகவும் சோதிடர்களாகவும் கட்டியர்களாகவும் விகடர்களாகவும் சமையற்காரர்களாகவும் அமைந்துகிடப்பவர்களான பிராமணர்களைப்போன்றவர்கள்தானே இவர்களைப்போல அவர்களுஞ் சாமானியமானவர்களே என்று கருதியிருப்பீர்கள். அவ்வண்ணங் கருதினால் அவ்வாறு கருதிய தங்களை நான் எவ்வண்ணம் பிராமணர்களி னுண்மைகளை யுணர்ந்தவராக நினைப்பேன். மேற்குறித்தவர்களெல்லாம் சாதி

யான்மாத்திரம் முற்பட்டவர்களேயன்றிச் செய்கையான் முற்பட்டவர்களல்லர். வியாசபகவானுரைக்கும் மஹான்களான பிராமணர்கள் நாடுகளேயும் நகரங்களேயும் ஆடையாபரணங்களேயும் விரும்பாதவர்கள் ஏகநாயகனுன ப்ரமேசுவர னொருவனேயன்றி மற்றையோரைக் காணவிரும்பாதவர்கள்; ஸாமான்யரான இதர ஜனங்களேப்போல வுள்ளவர்களல்லர். அவர்கள் மனதிலெப்பொழுதுந் தவமெனுந் தீ தானே பற்றி எரிந்துகொண்டிருக்கும். அவர்கள் இந்நாட்டுப் பிராமணர்களேப்போல வேறெந்தகாரியத்தையுஞ் செய்யாதவர்கள். பஞ்சாக்கினியின் நடுவிலிருந்து தவஞ்செய்தலேயும் நிச்சலமாகஇருந்து பிரமத்தியானஞ்செய்தல் யோகஞ்செய்தல் முதலியவைகளேயும் செய்பவர்கள். காயக்கிலேசவிரதமில்லாத நாளேஅவர்கள் ஜீவியகாலத்திலிராது. நாடுகளிற்கிடக்கும் வெறும் பிராமணரைப்போல மஹாதரண்யவாசிகளான பிராமணரென்னும் பெரியோர்களேத் தாங்கள் கருதாதேயுங்கள்.

தூங்காதுதூங்கிச் சுகம்பெறும் சுத்தஞானியர்களே உண்டுடுத்துத் தூங்கியேங்கித் திரியுந் துர்க்குணரினத்தினராகத் தாங்கள் நினைக்கப்படாது என்றாள்.

அதற்கு விஜயவிக்ரமன்: ஹம்ஸகாமினி! நீசொல்வதைப்போலவே வனாந்தரங்களில் மஹான்களிருக்கலாம். இந்தநாட்டுப்பிராமணர்கள் எங்கள் பெருமையைத் தாங்கள் அறியவேண்டுமானல் புராணேதிகாசங்களேக் கேளுங்களென்றும் கேட்கும்பொழுது எங்கேனும் பிராமணசரிதம் வந்தாலதனே வற்புறுத்தியுரைத்தலும் கௌனித்தீர்களோ பிராமணன்தான் தெய்வம், வேறே தெய்வம் உண்டு என்று நினையாதேயுங்கள். இந்த மஹாபுராணங் கேட்டீர்களே ஒருபதினாயிரம்பிராமணர்களுக்கு அன்னமளித்தாற்றன் புண்ணியம் என்றுரைத்தலாதிகளேக்கேட்டால் ஸாமானியம் இவர்கள் புகழையன்றி வேறு எவர்புகழையும் வேதபுராணஆகம இதிகாசாதிகள்கூறவில்லையே. ஆதலால் நமக்கிந்தப்பிராமணர்கள்தான் தெய்வமென்றுகருதிக் காணும்பொழுதெல்லாம் நமஸ்காரஞ்செய்து ஆசீர்வாதம்பெறுகின்றார்கள். இவைகளே அநுபவத்திற்கண்டுள்ள எனக்கு இது அநீதமாகத்தோன்றுகின்றது. அதனுலே நானவ்வண்ணமுரைத்தேன் என்றான்.

ப:—என்னருமை வேந்தனே! வேதாகமாதிகளிலுரைக்கப்படும் பிராமணவாக்கியஞ்சுத்தஞானிகளானவர்க்கேயுரியது. (இவர்கள் வெறும்பிராமணர்கள்.) இவர்கள் தங்களேத்தான் வேதாகமங்கள் புகழுகின்றன என்று கருதுவது சரியான பகுத்தறிவில்லாத குற்றத்தினலேயே மேலோர்களின் செய்கைகளேக் கேட்டு லோகவாஸிகளான பிராமணர்கள் சந்தோஷப்படுமிடத்திலெல்லாம் எனக்கு அரம்பையின் கதை அகத்தில் வந்து நிற்கிறதுண்டு. ஏன் அக்கதைவந்து நிற்பதென்னில் அரம்பையின் கணவனுடைய செய்கை

யை இந்தப் பிராமணர்களின் செய்கையு மொத்திருத்தலால் என்றனள்.

வி:—களபநாணியகால்நடையா யாம்பைக்குக் கணவன்யாவன், அவன் என்னசெய்தான், இந்த வெறும்பிராமணர்களை யுதாரணமாக அவன் என்னசெய்கைசெய்தான், அதனை நானறியுமாறு சற்றே யுரைத்திடு என்றான்.

ப:—சரஸ்வதியின் புருஷாவதாரமாக வுரைக்கவல்ல தாங்களறியாத வித்தைகளுமிருக்குமோ இரா. ஆயினும் உரைக்கின்றேன். பலவகைவளங்களான் நிறையப்பெற்ற சோழநாட்டில் காவேரியாற்றினிடைக்குறையான ஸ்ரீரங்கமென்னும் இடத்தில் மஹத்தான நகரமொன்றிருக்கின்றது. அதனில் லோகரட்சகரான ஸ்ரீரங்கநாயகர் எழுந்தருளியிருத்தலால் அப்பரமபதியின் பரமசிலாகனீய கிருபையை விரும்பிய பல்லாயிரம் ஜனங்கள் அங்குவசிக்கின்றார்கள். ஸ்ரீரங்கநாதருடைய தயவைப்பெறுவதற்கு அன்னியநாட்டினரும் அரண்யவாஸிகளான முனிவர்களுந் தினந்தோறும் அங்கேவருவார்கள். அவ்விடத்தில் லட்சுமிகாந்தனை ஸ்ரீரங்கநாதசுவாமியின் ஆலயத்தின் முன்புறத்திலுள்ள ஆயிரக்கால்மண்டபத்திற் தினந்தோறும் பகலிற்புராணப்பிரசங்க நடப்பதுண்டு. அப்புராணப்பிரசங்கத்தைக்கேட்டு மகிழ்தற்காக அநேக ஜனங்கள் வருவார்கள். புராணஞ்சொல்பவ ரொருமுக்கோற்பகவர்.

வி:—முக்கோற்பகவர் என்பவர் யாவர்?

ப:—முக்கோற்பகவர் என்று ஒருவருக்குப் பெயரென்று நினையாமேயுங்கள். திரிதண்ட ஸன்னியாஸியென்றுப் பொருள். தமிழிலுள்ள சைவநூல்களிற்கூட முக்கோற்பகவரைக் காணல் என்று கூறியிருக்குமே.

வி:—சரி சரி! ஆம் ஆம் அப்புறம்.

ப:—அந்த ஊரில் கொஞ்சந் திரவியமுள்ளவனும் சீனிவாசன் என்று பேருள்ளவனுமான ஒருவனுண்டு; அவன் ஸ்மார்த்தமதத்தைச்சேர்ந்தவன்.

சீனிவாசன்றனக்குசேர்ந்தமனையவள்தான்
வானரம்பையென்னவருமோரொழிற்பெயராள்
வானரம்பையென்னவருமோரொழிற்பெயராள்
தானுடையநல்லழகைச்சற்றேயுரைத்திடுவேன்
கொண்டையிடத்தக்கூந்தலிலையன்னவட்கு
மண்டிபுருவங்களிலோமன்னுரோமங்களிலை
உண்டுநெற்றியென்னவுரைக்கவிடமில்லை
குண்டிகளைபன்றிக்குழிகட்குவமையில்லை
கற்றாழையென்னக்கரையுமுடைநாற்றமன்றி
மற்றோர்மலர்நாற்றமன்றுதவளுடலில்

உற்றுயிற்செக்கென்றுணாக்குமஃதேயன்றி
மற்றொன்றவளிடைக்குமாநிலத்திலொப்பில்லை
கோட்டிலுறுகுரங்கைகொண்டாட்டிவாழுமவன்
நாட்டிலிவள்முகத்தைநடுத்தெருவிற்கண்டானேல்
வாட்டமுற்றுக்கிட்டிவலித்திழுக்கத்தக்க
நீட்டமொடுசெப்பையாய்நிலவுமெழின்முகத்தாள்

குறுகியிருவிரற்குள்ளேயகன்று
பெருகிவிளங்குபெருங்கழுத்தி
னருகிலொருதேங்காயளவுபெருத்த
பெரியகழலைபெறுங்கழுத்தாள்
இன்னபடியேயியைந்தவிவளழகைப்
பன்னப்பெறிலொருமாபரதமாம்
கன்னிநிறமோகருங்காக்கைதன்னிறமே
வன்னநடையோவளரண்டங்காக்கைநடை.

என்று மங்கையர்கள் பாடத்தக்க இத்தகைய பேரழகுவாய்ந்த வானரம்பையென்பவளை மனைவியாகவுடையவன் அச்சீனிவாசன். அவன் எங்கேயெங்கே புராணஞ்சொல்கின்றார்களோ அங்கெல்லாம் இருப்பான் புராணங்களிலெவ்விடத்திலேனும் தேவதாசியான ரம்பையின் சரித்திரம்வந்தால் புராணிகர் அவளை வர்ணிக்கும்போதெல்லாம் அந்தரம்பையென்பவளே தன்மனைவியென்று கருதிக்கிட்டி நெருங்கி வெகு விருப்பத்துடன் கேட்டு மகிழ்வான் அந்தரம்பை இந்திரஸபை குபேரஸபை முதலிய இடங்களுக்குச் சென்றாளென்று கூறும்போதெல்லாம் இப்படிப்பட்ட மஹாவல்லபமுள்ளவள் நமக்கு மனைவியாயினளே என்றுமகிழ்வான். இவ்வண்ணம் மனப்பால் குடித்துத் தேவரம்பையே தன்மனைவியென்னும் பூரணமான எண்ணத்துடனிறுமாப் படைந்துலவுவான். இவ்வண்ணம் தேவரம்பையே தன் மனைவியென்று கருதிக்கிடப்பவன் ஒருநாள் ஒரு தெருவிலாடுங் கூத்தொன்றிற் தேவரம்பை வேஷக்காரன் நன்றாய் நடிக்கின்றானென்று பிரஸ்தாபமுண்டாகவேஜனங்கள் மிகுதியாக நாடகம்பார்க்கப்போனார்கள் அப்பொழுது இம்மடையன் திரளாகச்செல்லும் ஜனங்களைப்பார்த்து ஐயன்மீர் எங்குப் போகின்றீர்கள் என்றுகேட்டான்; அதிலொருவன் நாங்கள் ரம்பாவிலாசம் பார்க்கப்போகின்றோமென்றான். உடனே தானு மதிக மகிழ்ச்சியுட னவ்விடத்திற்குச் சென்றான். இவன் போதற்குமுன்னே ஜனங்கள் ஏராளமாக வந்து நெருங்கிவிட்டமையால் இவன் சற்றுதூரத்தி லிருக்கவேண்டியவனாயினன். நாடகமிவன் போகும் பொழுது காற்பங்கு ஆய்விட்டது. அந்த சமயத்தில் நாடகாதிபன் ஸபையோர்களை இப்பொழுது அதிக கோலாகலத்துடன் தேவரம்பையானவள் வந்து நடிக்கப்போகிறாள் அனைவரும் சற்று நேரம் பேசாதிருக்கக் கேட்டுக்கொள்கிறேன் என்றான்.

இம்மொழியைக் கேட்டவச் சீனிவாசன் நம்முடைய மனைவி தானிங்கேவந்து நடனஞ்செய்யப்போகின்றாள்; இவள் இன்று நம க்குப் போசனம் பரிமாறிவிட்டு ஓலைப்பாயிற்கிடந்து உள்ளே தூங் குகின்றாளே, இங்கே எப்படி வருவாள். அவள் வந்துவிடுவாளா னால் வீட்டிலார் காவலிருப்பவர்கள் எல்லாம் இங்கேவந்தாற் பார் த்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்துக்கொண்டு மெல்லெனவெ ழுந்தான் எழுந்து ஜனங்களின் குறுக்கே விழுந்து ஆட்டமே டையினருகிற் பலரால் அடிக்கப்பட்ட அடியையும் திட்டப்பட்ட திட்டையும் பட்டுங்கேட்டுங்கொண்டு சேர்ந்தங்கு முதலில் இருக் கும் மனிதருக்கு முன்னேயே சென்றிருந்தான்.

உடனே நடியும் திரையினின்று வெளியே வந்தாள். கருங் குங்கிலியத்தூளும் பந்தத்திலிட்டாயிற்று. தாளவரிசையுடன் நடி நடித்தலைப்பார்த்து யாவரும் ஆனந்தமடைந்தார்கள். சீனிவாசன் நடியை யுற்றுப்பார்த்துத் தன் மனைவியைப்போலகாணப்படாமை யால் மனந்திடுக்கிட்டு, நம் மனைவியான ரம்பைக்கு இரண்டு கண் களில்லையே, ஒரு கண்தானே உளது. இவளுக்கு இரண்டு கண்களி ருக்கின்றனவே. ஒருவேளை நம்மெதிரிலப்படியும் இங்கு இப்படியு மாக இருக்கின்றாளோ? அல்லது இந்தசமயத்தி லிரண்டுகண்கள்தா னிருப்பதோ? வீட்டிலேபோய் பார்ப்போம் என்று எழுந்து விரை வாக ஓடத்தொடங்கினான். உடனே இவனைப் பைத்தியக்காரனெ ன்று ஜனங்கள் மதித்தார்கள்.

வீட்டிற்குச்சென்ற சீனிவாசன் அடுப்பிற் செத்தைகளை யிட் டுக்கொளுத்தி வெளிச்சமுண்டாக்கிக்கொண்டு தன் மனைவியைத் தட்டி யெழுப்பினான். அவளோ உமிழ்நீரை இருபுறமு மொழுகவி ட்டுக்கொண்டு அருகில் எவரேனுங் குடியிருந்தால் அவர்கள் நித் திரையின்றி வருந்தும்படியாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு கிடந்தவள் இவன் அழைப்பதை யுணராமற் கிடந்துறங்குவதைக் கண்டு, போடி மாயக்காரி எழுந்திரு எழுந்திரு என்று தட்டியெ ழுப்பினான். அதற்குமவளெழுந்திராமையால் இவன் சற்றே கோ பத்துடன் ஓரறை அறைந்து, சீ! கழுதே எழுந்திரு என்றான். கும்பகருணனுக்குப் பதிலாகத் தூங்குமக் கோவேறுகழுதைபோ ல்பவள் மெல்லென நெளிந்து நிமிர்ந்து அசைந்து கோட்டுவாய் விட்டுக்கொண்டு தனது நாலுவரிசைப்பற்களும் வெளியிற்றெரியு ம்படி ஆவென்று இரண்டு கையையும் பின்புறமாகச் சார்த்திக் கொண்டுங் காலை நீட்டிக்கொண்டும் ஒன்ன வாரிக்கிண்டுபோக, என் தூக்கத்திலே எழுப்பினே என்றாள்.

இவன் என்னடி சாலக்காரி, இப்ப அங்கே இருந்தையே இத ற்குள்ளே இங்கே வந்து தூங்குவதுபோல நடிக்கின்றையே எதோ ஒங்கண்ணிரண்டையுங் காட்டு, நானத்தனை பாவியா? அங்கேமாத் திரம் ரட்டைக்கண் இங்கேவந்தாலொற்றைக்கண்ணு? அங்கே யுடு

த்திக்கொண்டதுபோல நல்லசேலையை யுடுத்திக்கொள்ளப்படாதா என்று குளறினான்.

இம்மொழிகளைக் கேட்ட வம்மடமகட்குக் கோபமுண்டாகி என்னடா பாவி! கோறணிபண்ணறே; நாங்கிடந்து சும்மா தூங்கினால் என்னை அடித்தெழுப்பி என்னென்னமோ வாயில்வந்ததெல்லாம் பிதற்றறையே. நானப்படி யொருத்தங்கிட்டையும் போமாட்டேன். எங்கசாதி யப்படிப்பட்டதல்ல. இந்தமாதிரி கிறுக்கெல்லாம் இங்கே பேசாதே என்றாள்.

அடுப்பிலுள்ள வெளிச்சத்தி லவள்கண்ணை நன்றாய்ப்பார்த்து சீ, ஒருகண்தானே இருக்கிறது. இவளங்கே வந்தபோது நன்றாய்ப் பாராது போனேனே: நாமங்கே யிருக்கிறபோ தங்கேயப்படி வந்தாள்; இங்கே வந்தா லிப்படியிருக்கிறாள் சரி அங்கே போய்ப்பார்க்கலாமென்று ஓடி ஆட்ட மேடைக்குச் சென்று வேஷவரம்பையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, இதற்குள்ளே யிங்கே வந்துவிட்டையா என்றான்.

கூத்துப் பார்க்குஞ் சனங்கள் இவன் செய்யுங் காரியங்களைப் பார்த்துப் பலவாறாகப் பேசிக்கொண்டார்கள். சில காரியஸ்தர்கள் இவனருகில் வந்து, சினிவாசா! சீ, என்னடா! பைத்தியமாடா என்றார்கள்.

இவன், இல்லையில்லை, ஒரு சந்தேகம். அதனை நிவர்த்தித்துக் கொள்வதற்காக இவ்வளவு கஷ்டப்பட்டேன். கஷ்டப்படும் நிவர்த்தியானபாடில்லையென்றான். அந்த காரியஸ்தர்கள் என்ன சந்தேகம் அதனை இங்கே சொன்னாயானால் பத்திலேவிழுந்த பாம்பு சாகாது என்பதுபோல நின் சந்தேகமொழியாது போகாது என்றார்கள். பார்த்தா னென்னசெய்வான் உள்ளத்தைச் சொன்னான். கேட்ட ஜனங்களெல்லாம் பலே பலே பேஷ் பேஷ் ஸபாஷ் நல்ல சந்தேகம் என்றுரைத்துச் சிரித்தார்கள். உடனே அவ்விடத்திலிருந்தவர்களிலொருவர் இவனைப்பார்த்து, அப்பா: உன் பெயரென்ன, என்றார்; இவன் சீநிவாஸனென்றான்.

ஸ்ரீநிவாஸனென்று நமது ரங்கராஜப்பிரபுவுக்குப்பெயர். அந்தப்பெயரை வைத்துக்கொண்ட நீ நாங்கள் தொழும் ரங்கநாதனா: அல்லவே. அதுபோல உனது பெண்சாதிக்கு ரம்பையென்று பெயர் நீகருதிய தேவலோகத்துரம்பை நின்மனைவியல்லள். நின்மனைவி பொட்டைக்கண்ரம்பை; இவள் கூத்தாடிரம்பை. புராணமுதலியற்றிற்கூறுவதும் இவள் நமது மனைவியென்று கருதியதும் தேவலோகரம்பையை உனக்கு இது வேஷம் இது உண்மையென்று இதுவரைக்குந் தெரியாமையால் தடுமாறினாய்.

இனி அவ்வண்ணஞ் செய்யாதே என்று புத்திகூறி யநுப்பினா ரொன்றுசொல்கிறதுண்டு. ஒன்றையொன்றாகக் கருதிக்கருதிக் கெ

ட்ட சிநிவாஸனைப்போல சாஸ்திரங்களிலுரைக்கும் பிரமஞானிக ளும் மஹாத்மாக்களுந் தாங்களே யென்று மனப்பால் குடிக்கும் இந்தப் பிராமணர்க ளந்தமஹான்களல்லர். அந்த கௌடபாதாதி மஹான்கள் "செயற்கரிய செய்வர் பெரியர்" என்னுமாறுள்ளவர். இந்த வெறும் பிராமணர் பெயராற் பிராமணர். அவர்கள் தவத் தாற்பிராமணர். ஆதலால் நிராசையினையுடைய அந்த மஹான்களை இவர்களோடு சேர்க்காமல் அவர்கள் செய்கைகளையெல்லாம் தெ ய்வச் செயலென்று கருதினீர்களானால் நீங்கள் எல்லா நன்மைக ளையு மடைவீர்கள் என்றாள். இம்மொழிகளைக்கேட்ட விஜயவிக்ர மன் மாதே சரிதான் உன்சொற்படியே நடக்கின்றேன் என்றான்.

பங்கஜாக்ஷி பிராமணர் செய்கையைப்

பேணவேண்டுமென்றுரைத்த

ஐந்தாவதத்தியாயம்

முற்றிற்று.

அ

ஆறாவதத்தியாயம்.

மானவர் தலைவன் கானப்பெருமையைக் களைந்தது.

என்றவன் பாரதத்தில் என்று பின்னும் பாரதஞ்சொல்ல ஆரம்பிக்கவே பங்கஜாக்ஷி இரண்டுகைகளையும் குவித்துக்கொண்டு போதும் நிறுத்துங்கள் நாமெதைப்பற்றிப் பேசநினைத்தோமோ அதனை சுமார் பத்திருபதுதரம் பேசித்தீர்மானித்திருக்கலாம். முன் ஒருசாமமெல்லாம் ஒரேமூச்சாகப் பேசிவிட்டீர்களே, இன்னம் பாரதத்திலென்று அடி போடுகிறீர்களே, எனக்கோ நாழிகை அதிகமாய்விட்டமையாற் பசியுண்டாய்விட்டது. தாங்கள் போசனஞ்செய்தற்குமுன்னே நான் போசனஞ்செய்கிற வழக்கமில்லை. ஆதலால், ஸ்நானம் முதலியவைகளையும் தானம் பூசை முதலியவைகளையும் உதயத்திலேயே முடித்துவிட்ட தாங்கள் மாத்தியான்னிகமாத்திரம் செய்துவிட்டுப் போசன அறைக்குட் போகும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றாள்.

போசனத்திற்கு நாழிகை ஆய்விட்டதென்று கூறியமொழி காதிற்பட்டவுடனே விஜயவிக்கிரமன் தான் என்றும் போசனஞ்செய்வதைவிட இன்று ஐந்துநாழிகை அதிகமாக ஆய்விட்டதையுணர்ந்து மாத்தியான்னிக முதலியவைகளை நாளைக்கு இரட்டிப்பாகச் செய்துகொள்ளலாமென்று போசனவறைக்குட் போய்விட்டான்.

பங்கஜாக்ஷியும் சாப்பாட்டுராமனாக மாத்தியானிகங்கூடச்செய்யாமற் போசனத்திற்குச்சென்ற தன் பர்த்தாவிற்கு அதிகபசி இருக்கலாமென்று கருதி யவனுக்குப் போசனாதிகளை யளிப்பித்தாள்.

போஜனானந்தரம் பகல் நித்திரை செய்தல் க்ஷயரோகம் முதலிய உண்டாதற்குக் காரணமாகுமென்று பங்கஜாக்ஷி தன் கணவனுக்குப் பலதரமுங் கூறியிருத்தலால், விஜயவிக்கிரமனும்பகலில் நித்திரை செய்கின்றபழக்கத்தைச் சிலநாளாக விட்டிருப்பதுமன்றி, நித்திரையென்னுந் திருடன் நம்முடைய வாழ்நாளைத் திருடுகிறான். ஆதலால் நாம் பகலில் தூங்கவேபடாது என்று கட்டாயமாகத் தீர்மானஞ் செய்துமிருக்கின்றான் அதுபற்றிப் போஜனமானதற்குப்பின்பு தாம்பூல மருந்துதல் வாயிலுள்ள வழவழப்பை எடுத்தற்கும் பற்கிருமிகளையழித்தற்கும் முகத்திற்கொரு பரிமளமுண்டாதற்கும் கபத்தை நாசஞ்செய்தற்கும் இந்திரியத்தை விர்த்தியாக்குதற்கும் ஏற்படுத்தியிருப்பதால் சாமபிராணிப் பதங்கம் தங்கரேக் வெற்றிலை கஸ்தூரி கொப்பரை ஏலக்காய் ஜாதிக்காய் ஜாதிபத்திரி குங்குமப்பூ கர்ப்பூரவல்லி பச்சைக் கர்ப்பூரம் பாக்கு வெற்றிலை முத்து நீற்றிய சுண்ணாம்பு என்னும் இவைகளைக்

கதம்பமாக்கி அடைப்பக்காரிகளளிக்க அவைகளை மென்று உமிழ்ந்துவிட்டு உத்தியான வனத்தினடுவிலுள்ள சதுஷ்பாத மண்டபத்திற் சென்றிருந்தனன்.

பங்கஜாக்ஷியும் போஜனஞ் செய்து தாம்பூல வாகினிகளாலளிக்கப்பெற்ற தாம்பூலாதிகளை அங்கீகரித்துக்கொண்டு, சிறிது நாழிகை ஏகாந்தமான இடத்திலிருந்து இளைப்பாற்றினவளாய், இருபத்தெட்டு மெட்டுகளையும் எழுதந்திகளையும் உடைய விபஞ்சி வீணையை அழைப்பித்து சுருதிக்கூட்டி நாதநாமக்கிரியை யென்னும் இராகத்தில்,

> "சந்தம் புடையுடுத்த தண்சாரன் மாபொதிகை
> யெந்த மிடமென் றிருக்கு மிளந்தென்றல்
> கந்தங் கமழக் கடைகணித்து வீசுதலால்
> நந்தங் கரத்தேந்து நாரணனைக் காண்போமே."

என்று இங்கிதமாகச் சற்று நாழிகை பாடிக்கொண்டிருந்தனள். இதற்குள் அவிழ்ந்து பின்புறமாகக் குலையும் பருவமான கூந்தலும் சற்றே முன் தள்ளிய வயிறும் நாபிக்குக் கீழே நகர்ந்த வஸ்திரமும் சிறிது சிறிதாகத் துளித்த வியர்வையும் மந்தமான சிரிப்பும் உடையவளாக ஒருத்தி ஓடிவந்து ஒரு புறமாக நின்றுகொண்டு வரச்சொன்னார்கள் என்றவுடனே, பங்கஜாக்ஷி வீணையில் மனஞ்செலுத்தி இசைமயமாயிருந்தவளாதலால் அவ்வீணையை வாசித்தவண்ணமே விஜயவிக்ரமனிருக்கும் சதுஷ்பாத மண்டபத்திற்குள் சென்றனள்.

இவ்வுலகவாணரநுபவிக்கும் அநேகவிதமான சுகங்களிலெல்லாம் சிறந்தது கானம், கானத்திலும் கோடிப்பங்குயர்ந்தது வீணாகானம்; இதனாலன்றோ இந்த வீணாகானத்திற் பழகிய நாரதர் ஸகல புவனகர்த்தாவான பரமேஸ்வரனுடைய ஸன்னிதானத்தில் தெரிசனார்த்தம் செல்லும்பொழுதுகூட வீணையைக் கையிலேயே கொண்டு போகின்றார். சார்வபௌமனான அரசனுடைய சுகத்திலும் புருஷகந்தர்வனுடைய சுகம் நூறுபங்கு அதிகமானது என்று முத்திநூற்காரரும் எழுதியிருக்கின்றார்கள். இவ்வளவு அருமையான வித்தையில் மனஞ்செலுத்திவிட்டமையாலேதான் நமது பங்கஜாக்ஷியும் பர்த்தாவின் எதிரில் வீணையை வாசித்தவண்ணமாகச் சென்றாள் என்றறிக.

அவன் (பர்த்தா) இசையறியாத ஒரு மூடனாக இருந்தால் தானழைத்ததற்கு மரியாதையுடன் வாராமலும்தாமசமாயும் அலக்ஷியமாயும் வீணாகானஞ்செய்துகொண்டு வந்தமைக்கு அவனுக்கு மகத்தான கோபம்வந்திருக்கலாம். சங்கீதம் நன்றாய்ப் பாடத்தெரியாதுபோனாலும் கேட்டுக் கேட்டு மகிழ்ந்த பரிசயவுணர்ச்சியுள்ள

வருதலால் அவளவ்வண்ணம் வந்ததையும் வந்தும் வீணையை வாசித்தலை நிறுத்தாமையையும் குற்றமாக எண்ணினானில்லை.

சிறிதுநேரத்திற்கெல்லாந் தானெடுத்துப்பாடிய பாட்டிற்செய்யவேண்டிய வேலைகளெல்லாம் முடிந்தவுடனே திடீரென்று வீணையின் நரம்புகளைத் தளர்த்தி அருகிலிருந்த தோழியின் கரத்திற் கொடுத்துவிட்டு நாதா எனது குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டிக்கொள்ளுகின்றேனென்றாள்; அம்மொழியைக்கேட்ட செம்மல் சற்றே நகைப்புடன், நீ இசையின்மூழ்கி நின்னிலையை மறந்தது போல நானுமதனைக்கேட்டு என்னிலையை மறந்துதான் இருந்தேன்; இசையினால் தன்னிலையை நாம்மாத்திரந்தானா மறந்தோம்.

இந்தவுலகின் வடமேன்மூலைக்கு இறைவனாகி நமது புராணேதிகாசாதிகளுரைக்கும் அரசனான மான்வாகனத்தினையும் கருநிறத்தினையும் உடைய வாயுவென்பவனையும் பாதாளத்திற்கிறைவனும் சகலகலாவல்லபனும் பூமியையெல்லாம் ஒருதலையாற் சுமப்பவனென்று பிரசித்தியானவனும் ஆயிரந்தலைகளையுடையவனும் சர்ப்பரூபமான உருவமுள்ளவனும் கீர்த்திமானுமாகிய ஆதிசேஷனையும் பிராமணவிருடியான நாரதனென்பவர் விரோதிகளாக்கிவிட்டாராம். இந்த விரோதத்தினால் ஆதிசேஷன் வாயுவென்னும் இருவரும் சந்தித்து நான் பலசாலி நீபலசாலியென்று பேசிக்கொண்டு தாங்களிருவருமாக ஆயிரஞ்சிகரங்களையுடையதென்று நம்முடையபுராணங்கள் சொல்லும் மேருவினருகிற்போய் ஆதிசேஷன் தன் ஆயிரந்தலைகளான் மேருவின் ஆயிரஞ்சிகரங்களையும் மூடிக்கொள்வதென்றும் அந்தத்தலைகளை வாயுதேவன் அம்மலைச்சிகரங்களினின்றும் எடுத்துவிடுகிறதென்றும் தீர்மானித்தவர்களாய் ஆதிசேடன் ஆயிரந்தலைகளையும் விரித்து ஆயிரஞ்சிகரங்களையும் மூடிக்கொண்டு உடலால் அம்மலையை ஆயிரஞ்சுற்றாகச் சுற்றிக்கொண்டானாம். வாயுவென்பவன் பெருங்காற்றினுருவமாக நின்று காற்றை வீசினானாம், இதனால் உலகினருக்குத் துன்பமுண்டாகியதாம், அதனால் தேவர்களெல்லாருமாக வாயுபகவானிடத்தில் வந்து ஓ பகவானே! இது சரியானகாரியமா உம்முடைய வன்மையை நீர் காட்டுகிறீர் இதனாலே உலகங்கள் அழிகின்றனவே என்றார்களாம், அம்மொழிகளை அவ்வாயுவென்பவன் காதிலேயே ஏற்றுக்கொள்ளவில்லையாம், பின்னர் ஆதிசேடனிடம்வந்துரைத்தார்களாம், அவனும் காதுகொடுக்காமற் கண்ணைமூடினபடியேயிருந்தானாம், இருவரும் நாஞ்சொன்னதை கேட்கின்றாரில்லையே என்று தேவர்கள் நினைக்கும்பொழுதே நாரதாங்குவந்து நானிவர்கள்செய்யும் யுத்தத்தை நிறுத்தித்தருகின்றேனென்று தன்னுடைய தெய்வீகமான வீணையைமீட்டிப்பாடினாராம்,வீணையினோசைகள் காற்றொடுகலந்து ஆதிசேடன் காதிற்படவே அதனில் சற்றே மனதுசெலுத்தினான்.

கொஞ்சமனது செலுத்தினவுடனே நாரதர் நல்ல தேவகானத்தை வீணையில் வாசித்தனராம், வாசிக்கவே அது ஆதிசேஷனுடைய கடூரமாகவிருந்தமனதை இளக்கியதுமன்றி தலைகளையும் அசைக்கச்செய்ததாம், தலைகளையசைக்கவே மேருவின் சிகரங்களின் மூன்றுசிகரங்களை வாயுவானவன் திருகியெடுத்துக்கொண்டு போய்விட்டானாம். இதனாலாதிசேடனே தோற்றவனென்றுகூறி வாயுவின் கெர்வத்தைத் தேவர்களடக்கினார்களாம். இதனால் எவ்வளவு கடூரமானமனதும் சங்கீதத்திலிளகிப்போய்விடும். ஆதலால் நீசெய்த இந்தகாரியத்தை நான் குற்றமாகநினையேன் என்றுரைத்தான்.

மானவர் தலைவன் கானப்பெருமையைக்கரைந்த

ஆறுவதத்தியாயம்

முற்றிற்று.

ஏழாவதத்தியாயம்.

மன்னவன் மனிதசரீரத்தினருமையைப்பற்றி மனைவிக்குரைத்தது.

இம்மொழிகளைக் கேட்ட பங்கஜாக்ஷி மஹாஸந்தோஷவதியாய் நாம் நடத்திப்பார்த்தவிடத்து இவ்வளவு வித்யாஸாமர்த்திய மிருக்கின்றதென்று இதற்குமுன் அறிந்தோமில்லை, இவரை ஒருமுரட்டுக்குணமுள்ளவராக ஒவ்வொருசமயத்தில் நாம் நினைத்திருப்போம்.

இவர் விஷயத்தில் உருவுகண்டெள்ளாமை என்னும் குறள் என் ஞாபகத்திற்கு வந்திருக்கிறது. இவரெல்லா விஷயங்களிலும் சிறிது சிறிது பரிசயமுடையவராக விருந்தலினலேதான் குடிகளுக்கு அஹிதம் செய்யாதவராக இருக்கின்றார்.

இவ்வளவெல்லாம் இருந்தும் இவருக்குப் பெரியவர்களிடத்தில் மாத்திரம் சரியானநம்பிக்கை உண்டாகவில்லையே, இதென்னகாரணத்தாலுண்டாகியதோ அறிகிலேன்.

முக்கியமாக இவரிடத்தில் பிராமணத்துவேஷ மொன்றுமாத்திரம் இருக்கின்றதென்று நான் நினைக்கின்றேன். ஆனால் இவர் வாக்கியங்கள்மாத்திரம் அவ்வண்ணமிருக்கின்றதே அன்றி நடவடிக்கை அவ்வண்ணமில்லை.

ஒருவேளை பிராமணர்களே சிறந்தவர்கள், பிராமணர்களுக்கே தானாதிகளைச் செய்யவேண்டும், பிறருக்குச் செய்யக்கூடாது என்று நமது சாத்திரங்கள் கூறுவதொருவேளை இவருக்குப் பிடிக்காமையாலா யிருக்கலாம்.

புராணங்களில் கூறியிருக்கும் பிராமணாசாரத்தின்வண்ணம் நடக்கும் பிராமணன் தானம் வாங்கவும் பூசையேற்கவும் யாகஞ்செய்யவும் யோக்கியமாக உள்ளவனேயாம்.

காலக்கிரமத்தில் பிராமணர்கள் தங்கள் பிராமணத்துவங்களை விட்டுக் கேவலம் சாதியபிமானம் பொய் பிடிவாதம்பொறாமை என்னு மிவைகளையுடையவர்களாய் விட்டமையாலும், பிராமணர்களின் சாதியிற் பிறந்தமையாலேயேதான் சர்வோத்க்ருஷ்டன் என்று மதிக்கின்றமையாலும் நூல்களிற் புதிய சுலோகங்களை எழுதிச்சேர்த்துப் பூர்வீக பிராமணர்களின் அபிப்பிராயங்களைக் கெடுத்தமையினாலுமா யிருக்கலாம். கெட்ட செய்கையையுடைய சாதியினரிடத்து அரசர்கட்கு விரோதமும் நல்ல செய்கையையுடைய சாதியாரிடத்துப் பிரியமும் இருக்கவேண்டிய தவசியமாதலால் ஒருவேளை இவ்வண்ணம் இவர் இருக்கின்றாரோ அறிகிலேன்.

புராணேதிகாசங்களிலுரைக்கும் அந்நாளிலிருந்த பிராமண ரிஷிகள் ஒருநாளாவது சூரியனுதித்தற்குப்பின்பு நித்திரைசெய்திரார்கள். விடியற்காலத்திலேயே ஸ்நானஜபதபபிரமயக்ஞாதிகளை நிறைவேற்றாமலிருந்திரார்கள்.

ஒவ்வொருவருந் தபோவிருத்தியால் சொன்னசொல் பலிக்கும்படியான நிலையிலிருந்தார்கள்.

சொன்னசொல் பலிக்காதுபோனாலும் இக்காலத்துப் பிராமணர் பிறரை நாசமாகப்போவாய் நின்றநிலையிலிடிவிழ என்று திட்டுவதைப்போல யாரையுந் திட்டமாட்டார்கள்.

அறுபத்துநாலாக உரைக்கப்படுங் கலைகளை நன்றாகப் பயின்றிருந்தார்கள். கற்காதுபோனாலும் எங்களைவிட உண்டா என்று திரியும் இக்காலத்துப் பிராமணர்களைப்போல அவர்கள் அகம்பாவங்கொண்டு திரிந்தாரில்லை.

தங்களுக்கென்று விதித்திருக்கும் ஆசிரமங்களைச் சரிவர நடத்தும் இயல்பினராக இருந்தார்களே அன்றி, இக்காலத்துப் பிராமணரைப்போல பிச்சைக்குச்செல்பவர்களைப் பிடரியைப் பிடித்துத் தள்ளினாரில்லை.

தானம் கொடுக்கவேணுமானால் இக்காலத்தில் ஆள்தேடாமலேவந்து கூட்டங்கூட்டமாகச் சேரும் பிராமணர்களைப்போல அவர்கள் வருகிறவழக்கமே சுருக்கந்தான்.

பிள்ளைக்கு வயது முப்பதாகியும் ஸந்நியாஸம் செய்துகொள்ளாமலே இன்னொரு புது மனைவியை மணஞ்செய்துகொள்ள விரும்பும் இக்காலத்துக் கிழப்பிராமணர்களைப்போல அக்காலத்தவர்கள் இருந்தார்களா? இல்லை.

முற்காலத்திலிருந்த பெரியோர்கள் சந்ததியென்பதொன்றென்பதன்றி வேறே எந்த போக்கியத்தையும் இவர்களிடத்தில்லையென்றே ஊகிக்கத்தக்க நடையாகவே நடக்கின்றார்கள்.

சூத்திரர், இழிஞர், பாணர் முதலிய சாதியார் செய்யவேண்டிய தொழிலான மத்தளம் வாசித்தல் புல்லாங்குழலூதல், வீணைவாசித்தல், புராணசரிதங்கூறல், கூத்தாடல், வியாபாரஞ்செய்தல் முதலியவைகளை முன்னுள்ள எந்தப்பிராமணனுஞ்செய்யவேயில்லை.

இந்நாளிலுள்ளவர்கள் செய்கின்றார்கள். இவைகளேயன்றியும் மனுவால் நிஷித்த வியாபாரமான பொடி விற்றல், கஞ்சா விற்றல், அபின் விற்றல், சாராயம் விற்றல் முதலியவைகளையும் செய்கின்றார்கள்.

பிராமணர்கள் செய்வார்களானால் கொடிய நரகஞ் சித்திக்கும் என நூல்களுரைக்கின்ற சோற்று வியாபாரமும் இக்காலத்துப் பிராமணர்கள் செய்கின்றார்கள். இவைகளினாலேதான் பிராம

ணர்களின் சொந்த யோக்கியதை குடத்திலிட்ட விளக்குப்போல மழுங்கிப்போய்விட்டது.

இதுமாத்திரந்தானு! இக்காலத்தில் கம்மாளப்பிராமணர், பட்டு நூற்காரப்பிராமணர் என எத்தனை பிராமணவமிசங்கள் புதிதாகக் கிளம்பியிருக்கின்றன. இவைகளையெல்லாம் பொதுவாக ஆலோசிக்குமிடத்து, பூர்வீகமாக நால்களுனைக்கும் பிராமண வமிசம் ஒருவேளை இதல்லவோ என்று சந்தேகிக்கவேண்டி இருக்கின்றது என்று தன் மனதிலிவைகளையெல்லாஞ் சற்றுநேரம் ஆலோசித்து ஒன்றுந்தீர்மானிக்கமுடியாமல் வரவர இவர் குணம் பிராமணவிஷயத்தி லெப்படி இருக்கின்றதென்று பார்க்கலாம் என்று தீர்மானித்துக்கொண்டாள்.

அப்பொழுது விஜயவிக்ரமன், கோகிலவாணி! நமது எண்ணம் நிறைவேறுமாறு திராட்சைப்பழத்தை அருந்தவேண்டுமே என்றான்.

ப:—அதற்கென்ன தடை? இப்பொழுதே அருந்தலாமே.

வி:—அருந்துதற்குப் பயமாக இருக்கின்றதே.

ப:—என்ன பயம்?

வி:—அதெதாவது கெடுதியைச் செய்யுமோ என்றுதான்.

ப:—என்ன கெடுதியைச் செய்யப்போகிறது?

வி:—விபரீதமான ரூபத்தோடு இருத்தலாலேதான்.

ப:—விபரீதமொன்றுமில்லையே.

வி:—நிறமுதலியவைதான் விபரீதம்.

ப:—அதனாலே என்ன தோஷம்?

வி:—சரீரத்திற்கெதுவாவது செய்யுமானு லென்னசெய்வது?

ப:—இதனைத் தின்னுமலே இருந்தாற்றான் நம்முடைய சரீரம் எத்தனை காலத்திற்கு இருக்கப்போகிறது?

வி:—இருக்கிறமட்டும் இருக்கட்டும்.

ப:—விதியை விலக்க யாராலாகுமாகாதே.

வி:—விதியென்பதை நீ என்னவென்று நினைக்கிறாய்?

ப:—நான் விதியென்பதை செய்துவிட்ட வினையின் பலனை அநுபவிக்குங் காலமாக நினைக்கின்றேன்.

வி:—முன்னே எனக்கமைந்த விதி என்கிறார்களே, பின்னே கூட விதி யமைவதுண்டா?

ப:—விதி என்றும் முன்னேதான் அமையும். குற்றஞ்செய்த ஒருவனை நியந்தாவானவன் ஆறு எட்டு என மாதக்கணக்காக சிறையிலிருக்க விதிக்கும் விதிபோல்வது விதி. அது அனைத்து விதி

யும் முன்னுடலிலேயே வருமென்பது பிசகு. பலவிதி முன்னுடல் சம்பந்தமாகவும், சிலவிதி இந்த உடலினதாகவும் வரலாம்.

வி:—இது எனக்குஞ் சம்மதந்தான்.

சிலர் தொத்துவியாதியான வாந்திபேதி, அம்மை, குஷ்டம் முதலிய வியாதிகளுக்குப் பயப்படத்தேவையில்லை; விதி இருந்தால்தான் அவை வரும் என்கிறார்கள்.

வாந்திபேதி முதலியவைகளை அநுபவிப்பவர்களைத்தொடுதல் முதலியவைகளே அவைகளுண்டாதற்கான வினை. அவ்வினை செய்தாருக் கவ்வியாதி தொத்தலே அவ்வினையின் பயனை அநுபவித்தற்கான விதி. இவ்விதியால் ஒருவனுக்கு ஏன் வாந்திபேதியாதிய வரக்கூடாது? இதுபோல்வன பூர்வசரீரசம்பந்தமல்லவே என்றான்.

ப:—சரிதான், அதனை ஆரில்லையென்கின்றார்கள்.

வி:—திராட்சையிலும் அப்படித்தான் ஒருவேளை கெடுதி உண்டாகக்கூடாதா?

ப:—திராட்சையிலெந்த நூலிலும் எவருடைய அநுபோகத்திலும் விஷமான திராட்சையுண்டென்று கேள்வியே இல்லை. அன்றியும், இது மஹா பெரியவரான கௌடபாத யோகியா லளிக்கப்பெற்றது. இது தேவசம்பந்தமானது. இதனால் நம்முடைய சரீரங்கூட நல்ல நிலைமையை இன்னும் அதிகமாக அடையுமென்று நினைக்கின்றேன்.

வி:—நீ பிள்ளை பெறலாமென்னும் ஆசையால் இவ்வண்ணம் நினைக்கின்றாய். சகல கலைகளுக்கும் இருப்பிடமானதாயும், சகல போகங்களையும் அநுபவிக்கத்தக்கதாயும், மற்றுள்ள சகல சீவர்களின் சரீரங்களைவிட சிரேட்டமானதாயும், அருமையில் அருமையானதாயும், ரம்மியமானதாயும், சகல காரியங்களையும் சாதிக்கத்தக்கதாயும், சகல ஜந்துக்களையும் அடக்கி ஆளத்தக்கதாயும், எண்ண எண்ண வியப்பானதாயும் உள்ள இந்த சரீரத்திற்கு நஷ்டம் நேரிடுமானால், பின்னரொருலாபமும் இல்லையென்பதை நான் மாத்திரந்தானா உரைக்கின்றேன், எல்லாருமுரைப்பார்கள்; நீயுமதனை யறிவாய். ஆதலால், உடலுக்கு நஷ்டம் வராத விஷயங்களையன்றி உடலுக்கு நஷ்டத்தை யுண்டாக்கும் விஷயத்தைத் துணிந்து செய்தல் மூடர் செய்கையேயாம். விவேகிகள் ஒருநாளும் உடலை வெறுத்துக்கொள்ளமாட்டார்கள்.

தர்மார்த்தங்களா லுண்டாகுங் காமத்தை யநுபவித்தான பின்பு, அநுபவித்தற்கு வேறொன்றுமின்மையால் முத்தியை விரும்பவேண்டியது. புருஷனுக்கு விதித்த பூரணவாயுள் நூறு வயது என்பார்கள். இந்த நூறு வயதிற்கு அதிகமாகவும் இருக்கின்றார்கள் சிலர். நூற்றில் மூன்று பாகங்களை இகலோக போகாதிகளின்

பொருட்டும், நாலாவது பாகமான எழுபத்தாறுவது வயதுமுதல் பரலோகபோகத்தின்பொருட்டும் உடலைவெறுக்குமாறுங்கூறியிருக்கின்றார்கள். இந்த அபிப்பிராயத்தினாலேதான் சித்தர் முதலியவர்கள் சரீரத்தை ஔஷதாதிகளாலேயும், யோகாதிகளாலேயும் பாதுகாக்கச் சொல்கிறார்கள்.

மார்க்கண்டரிஷி அருமையான தவஞ்செய்து என்றும் பதினாறுவயது பெற்றுக்கொண்டது இந்த உடம்பிலிருக்கின்ற பிரியத்தினாலல்லவா? ததீசி என்னும் இருடி சுக்கிரனிடத்தி லுபதேசம் பெற்று சிவனைக்குறித்துத் தவஞ்செய்து வச்சிரசரீரம் பெற்றது அந்த சரீரத்திலிருக்கிற பிரியத்தினாலல்லவா?

சுவேதாரணியன்னுமாரிஷி அழியாதிருக்க விரும்பி அருந்தவஞ் செய்தது அந்த சரீரத்திலிருக்கு மன்பினாலல்லவா? ஒவ்வொருவனும் இந்த உலகத்தில் சோமவாரம், சிவராத்திரி, ஏகாதசி, துவாதசி, அமாவாசை, பௌர்ணமி, அட்டமி முதலிய விரதங்களை அநுஷ்டிப்பது வருஞ் சரீரமாவது நீடித்திருக்கவேண்டுமென்றல்லவா? வைணவர் வைகுந்தபதவியை விரும்புவதும், சைவர் சிவபதவியை விரும்புவதும், ஸ்மார்த்தர் சுவர்க்கபதவியை விரும்புவதும், சாக்தேயர் சக்திபதவியை விரும்புவதும், அழியாத சரீரத்துடனங்காவது இருக்கலாமென்றுதானே!

தொண்ணூற்றொன்பது வயதுமாகி இவ்வுலக போகங்களையு மநுபவித்துக் கண்ணொளியு மழுங்கிக்காதுஞ்செவிடுபட்டுக்கிடக்கு மிடத்திலேயே மலசலமிறக்குபவர்களாகவிருக்கும் கிழவர் கிழவிகளைப் பார்த்து, பாட்டா! உனக்கின்றைக்குச்சாவு, நாளைக்குச்சாவு என்றால் அழுகிறார்களே, அது உண்மையிலிந்தச் சரீரம் போய்விடுகிறதே என்றுதானே. உடம்பினாலாய பிரயோசனத்தை அநுபவித்தவர்கள் அந்த உடம்பு போகிறதைப்பற்றி விசனிக்கமாட்டார்கள் என்றுதானே நம்முடைய சாத்திரங்க ளுரைக்கின்றன.

நமதுநாட்டு வித்துவான்களிலநேகர் சரீரத்தைச் சுமையென்றும் அசுசியானதென்றும் இது சீக்கிரந்தொலையவேணுமென்றும் சும்மா கவிகளைப்பாடுகிறார்கள். உண்மையிற்பாடுவதல்ல, பிறர்வழக்கத்தைத் தாங்களும் கொண்டவர்களைப்போல வீணே நடிப்பதேயன்றி வேறில்லை. இந்தசரீரங்கெட்டது, இது வேண்டாமென்றுகூறுகிற ஒவ்வொருமதவாதிகளும் இதனைக்காட்டிலும் நல்லதிடமும் அழகுமுள்ள சரீரத்தைத் தம்மததேவதை யளிக்குமென்னுந் துணிவினாலேயே இந்த சரீரத்திற்குத் தோஷஞ் சொல்கிறார்கள்.

மந்தரமென்னு மலையை மத்தாக்கி, வாசுகியென்னும் பாம்பினைத் தாம்பாக்கிச் சந்திரனைத் தூணாக்கிப் பாற்கடலை வெகு வருத்தப்பட்டுத் தேவர்கள் கடைந்து அமிர்தமெடுத்துண்டார்களே எதன்பொருட்டு? இந்த சரீரங் கெடாதிருக்கும்பொருட்டுத்தானே.

உயர்ந்த போகமுடையதாகவிருக்கினும், அதனை வெறுத்துத் தாழ்ந்த போகமுடையதாயினும் அழியாத சரீரத்தைத்தான் பிராணிகள் விரும்புகின்றன. இதனை விளக்க நான்படித்த நூலிலுள்ள ஒருசரிதத்தை இங்குச் சொல்லுகிறேன்.

தேவர்களுக்கு அழியாத சரீரத்திலேயே விருப்பம் என்பதை விளக்க வியாசர் ஒருசரிதமெழுதி இருக்கின்றார். சமுத்திரநடுவிலுள்ள ஒருதீபத்தை இரண்டரசர்கள் ஆண்டுகொண்டிருந்தார்களாம். அவர்கள் இருக்கும் இடத்திற்கு ஒருதினம் அழியாத சரீரத்தையுடைய அகத்தியர்சென்று அவர்களால் அதிதியாக உபசரிக்கப்பெற்று அவர்கள்கிரகத்தில் விருந்தினராகத்தங்கினபின்பு, தேவசேனாபதிக்கு வாகனமாகவுள்ள மயிலினையும் கொடியாகவுள்ள சேவலினையுங்குறித்து விசேடமாகப்பேசி, பெற்றால் அத்தகைய பேற்றைப் பெறவேண்டுமென் றுரைத்தனராம். அம்மொழிகளைக்கேட்ட இருவருமோ அரசர்கள் அகத்தியருரைத்ததோ இரண்டுபறவைகளின் சிறப்பினை. பறவைகளிலும் அவைகள் பறவைக்கரசாக விருப்பன கூடவல்ல; ஒருவனுக்கு வாகனமாகவும் கொடியாகவும் இருப்பன. அந்தப் பறவைகளாகத் தாங்களானால் அந்த சரீரத்துடனே அழியாமலிருக்கலாம் என்னும் துணிவொன்றினாலேயே இராஜசரீரத்தைப் பெரியதாக மதியாமற் பறவைகளின் சரீரங்களைப்பெற அருந்தவஞ்செய்தார்களாம். கடைசியில் சூரபன்மனென்னும் அசுரனாகப் பிறந்து தேவசேனாபதிக்கு வாகனமும் கொடியுமாக ஆயினார்களாம் என்று எழுதியிருக்கிறார். இந்த சரிதத்தாற்போந்த பொருள் தேவர்கள் அழியாத சரீரத்தை விரும்புவது நிச்சயம் என்பதே.

இப்படி எத்தனையோ சரிதங்கள் கிடக்கின்றன. சரிதங்களென்னத்திற்கு? தத்தஞ் சரீரங்களைக் காப்பாற்றிக்கொள்ளாதவன் ஒன்றுக்கும் பிரயோசனமற்ற மூடனென்று நான் கெட்டியாக வட்டியன்றி யுரைப்பேன். நாமென்ன முத்தர்களா? முத்தர்கள் சரீரத்தின்மீது தோஷாரோபணஞ்செய்தல் வழக்கம். "இப்பிறவி தப்பினாலெப்பிறவிவாய்க்குமோ" என்றவரும் முத்தர்தானே. இந்த அரியதேகத்தின்மீது விருப்பமில்லாதவர்களானால் பெரியவர்கள் ஆயுள்வேதம் எனப் பலசாத்திரங்களை எழுதிவைப்பார்களா? அவர்கள் எழுதின அந்த நூலுக்குத்தான் ஆயுள்வேதம் என்று பேரிடுவார்களா? தற்கொலைசெய்துகொள்பவனைத் தெய்வமுந் தண்டிக்குமென்று பெரியோர்கள் பயங்காட்டியிருத்தலெல்லாம் சரீரத்தின்மீதுள்ள பட்சத்தாலேதானே.

விந்தியாஸாகரமே! நீயே ஆலோசித்துப்பார். நாமுன்னே எங்கே இருந்தோமென்று நமக்குத்தெரிகிறதா? இறந்தால் இன்னமாதிரி ஆவோமென்று துணிய நமக்கு அநுபவமுண்டா? இல்லை. ஆதலால் நம்முடைய இந்த ஒற்றுமைக்குக் காரணமான இந்த சரீரத்தை அழியாதிருக்கத்தக்க வேலைகளையே நாம் செய்தல்வேண்டும்.

அநேகமான சனங்கள் அதிகமான திரவியங்களைச் சம்பாதிக்கின்றார்களே அது இன்னொரு சரீரத்தின் போஷணைக்கல்ல, தன் சரீரபோஷணைக்காகவேதான் என்று நான் உறுதியாக வுரைப்பேன். திருஷ்டாந்தமாக ஒரு சிறுகதை சொல்கிறேன் கேள்: பிராமணனொருவன் இரண்டு மக்களையும் ஒரு மனைவியையும் ஒரு சுமைப்பணத்தையும் உடையவனாகி யாத்திரைபோனான். அநேக ஊர்களைத் தரிசித்துக்கொண்டு காஞ்சிபுரத்திற்கு போகும்வண்ணம் பாலாற்றின் கரையையடைந்தான். அப்பொழுது இப்பொழுதைப்போல் மழைக்காலமாதலால் ஆற்றில் ஆளிறங்கக்கூடாதவண்ணம் நீர் நிரம்பியிருந்தது. ஆற்றின் கரையில் ஆட்களை அக்கரையிலிருந்து இக்கரையிலும், இக்கரையிலிருந்து அக்கரையிலும் கொண்டுபோய் விடுதலையே பிழைப்பாகவுள்ள குடித்தனக்காரர்களிருந்தார்கள். அநேகர் அவர்களைத் துணையாகக்கொண்டு போய் வந்துகொண்டிருந்தார்கள். ஆறு அதிக அகலமானதாதலாற் சிலவிடங்களின் மேடும், சிலவிடங்களிற் பள்ளமும், சிலவிடங்களில் தண்ணீரே இல்லாமலும் இருப்பது வழக்கம். வந்த பிராமணன் பேராசைக்காரன். இவனென்ன நினைத்தானென்றால், இந்தப் பயல்கள் மேடாகவிருக்கிற இடத்தைவிட்டு பள்ளத்தாக்காகவே ஆட்களை இட்டுக்கொண்டு போகிறார்கள். இவர்களுக்குக் கொடுத்தாலாளுக்கு இரண்டு பணங் கொடுக்கவேணும். தலையிலிருக்கும் மூட்டையை இன்னதென்று தெரிந்துகொண்டு நம்மை நட்டாற்றிலேயே கைவிட்டாலும் விடுவார்கள். ஆதலால் நாமே இறங்கித் தடவிக்கொண்டே போய்விடலாம். நமக்குங் கொஞ்ச நீந்தல் தெரியாதா பார்க்கலாமென்று மனைவியை இடுப்பைப் பிடித்துக்கொள்ளச் சொன்னான். குழந்தைகளை இரண்டுதோள்களிலும் வைத்துக்கொண்டான். பணத்தை தலையிற் கெட்டியாக வைத்துக்கொண்டான். இறங்கினான், கரையிலிருப்பவர்கள் ஓபாப்பான், இறங்காதே. மணல் மிதக்குது, மேல்வெள்ளம் வரும், ஆறு அகலம் என்றார்கள். அதற்கவன் உங்கபேச்செல்லாந் தெரியுமெனக்கு எல்லாம் நம்பகிட்ட காசு பிடுங்கத்தானே. பார்க்கலாம், கோவிந்தா கோவிந்தா என்று சற்று தூரம்போனான், தண்ணீர் இடுப்புமட்டிற்கு அதிகமாக இல்லை, இதனாலே ஆற்றைக்கடந்துவிட்டதாக ஆனந்தங்கொண்டு போனான்; போகப்போக மேல்வெள்ளம் வர வாரம்பித்தது. இவனோ அந்நதியின் நடுவிற்போய்விட்டான், நடக்க முடியவில்லை. இனி என்னசெய்வது என்று ஆலோசித்தான். மனைவியை முன்னே வரச்சொல்லி ஒரு பிள்ளையைத் தண்ணீரில் விட்டுவிட்டு நாலடிதூரம் போனான், இன்னந் தண்ணீரதிகமாக வந்துவிட்டது பார்த்தான் பெண்சாதி போய்விடுவாள்போற் காணப்பட்டது. பெண்சாதி இருந்தால் இன்னம் பிள்ளைகளைப் பெறுவாள், இப்பொழுது அவளைத்தான் காப்பாற்றவேண்டும் என்று தீர்மானித்து மற்றொரு பிள்ளையையும் தண்ணீருக்குக் கொடுத்துவிட்டுப் பெண்சாதி

யையும் பணத்தையும் பிடித்துக்கொண்டு சற்றுதூரம் போயினான், வெகு கஷ்டமாக இருந்தது. இரண்டுபேரும் ஆற்றோடே போக வேண்டியதாக இருந்தது, அதனால் இவ்வண்ணந் தீர்மானித்தான். நம்மிடத்தினி லிப்பொழுது ஒருசுமைப்பண மிருக்கிறது, பணமிருந்தால் பதினைந்து பெண்டாட்டி அகப்படுவாள் பார்த்துக்கொள்ளலாமென்று அவளையும் நழுவவிட்டுவிட்டு தலையிலிருக்கும் பணத்துடனே நீந்தினான். பணச்சுமையால் நன்றாக நீந்தமுடியவில்லை, அதனால் இவ்வண்ண மாலோசித்தான்: இந்த சரீரந்தானே இந்தப் பணத்தைச் சம்பாதித்தது, இந்தச்சரீரமிருந்தால் இப்படி ஐம்பது சுமைப்பணம் வேண்டுமானாலும் சம்பாதிக்கலாமென்று தீர்மானித்துப் பணத்தையும் நட்டாற்றிலேயே எறிந்துவிட்டு நீந்தல் அடித்துக் கரையிலேறினான். பார், கடைசியில் சரீரத்தைவிட அவனுக்கு மனம் வந்ததா வரவில்லை. ஆதலால் எவனும் சரீரநஷ்டத்தைச் சந்தோஷமானதாக அங்கீகரியான் என்றான்.

இவனிவ்வண்ணம் யுக்திக்கும் அநுபவத்திற்கும் முரணாத வண்ணம் சரீரத்தைப்பற்றி உரைக்குமவற்றைக் கேட்டு இவருக்கு நாம் வேறே எதனையும் உரைத்தல் கூடாது. மேற்போக்காகவன்றி உண்மையாக ஆராயுமிடத்துச் சரீரத்தினிடத்தில் விருப்பமில்லாத பிராணியே இல்லையென்று இவர் கூறிய துண்மையே ஆயினும், இவர் தெய்வீகமான திராட்சக்கனிகள்மீது தோஷத்தை ஏற்றுகின்றாரே இதற்கென்ன செய்யலாம், ஸர்வவியாபியான பரமேசுவரரே இவரது மனதை இவ்வழியில் திருப்ப வேண்டும் என்று நினைத்தவளாய், பின்னுந் தன் கணவனைப்பார்த்து, நாதா! இந்தப்பழங்கள் நம்மால் அருமையாகப் பயிரிடப் பட்டுண்டாயினவேயன்றி திடீரென்று எவராலும் கொடுக்கப் பட்டனவல்ல, இதன் விதைகளைக் கொடுத்தவர் இதனை அப்பொழுதே தின்னச்சொல்லியிருந்தாற் றடையில்லாமல் தின்றேயிருப்போம், நாளாய் விட்டமையால் ஆலோசிக்கின்றோம். இதனையோ வேறே யாருந் தின்னப்படாது என்று அவர் சொல்லியிருக்கின்றார்! தாங்கள் தங்கள் வைத்தியர் முதலியோரிடத்திலும் இதனைக்காட்ட இடமில்லை. தின்றால் நாமேதான் தின்னவேண்டும், நல்ல எழுத்து நடுவேகிடக்கக் கோணையெழுத்துக் குறுக்கே விழுந்ததென்பார்கள். அது தேவர்கள் அமிர்தபானஞ்செய்தார்கள், முனிவர்கள் மருந்துண்டார்கள் என்றும் பிறவைக்குறித்து வெகுவாகப் பேசுகின்ற நீங்கள் சொந்தகாரியத்தின் மந்தஞ்சாதிப்பது எந்தவிதத்திலும் சந்தமாகாது. ஆதலால் ஆலோசனை செய்யாமல் இந்தப்பழங்களைப் புசியுங்கள், தங்களுக்கு முதலில் இந்தப்பழங்களைப் புசிக்க இஷ்டமில்லாது போனால் என்னைப் புசிக்கச்சொல்லுங்கள். நான் அந்தப்பழங்களை யருந்தி ஏதாவது தீங்கிற்கு இடமானவளாக ஆனால் தாங்கள் என்னிலும் சிறந்த அழகும் குணமும் வாய்ந்த

இன்னொருத்தியைக் கல்யாணஞ் செய்துகொள்ளுங்கள் என்றனள். இவளது பிடிவாதமான இந்த மொழிகளைக்கேட்ட விஜயவிக்ரமன் இருகண்களிலும் நீர்ததும்ப ஒரு அரைநாழிகைநேரம் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு மேல்வாய்ப்பற்களாற் கீழுதட்டினை யழுத்தினவனாய்த் தன்மனதிற்குள் இவள்கூறிய இம்மொழி இன்று நம்மை மிகவும் வருத்துகின்றது இவள் இறந்துபட்டால் இவளினும் சிறந்த இன்னொருத்தியை நாம் கல்யாணஞ் செய்துகொள்ளலாம், வெகு நல்ல அழகு. இவ்வளவு நிகர்வியான சுந்தரியும் பூலோகத்தி லிருப்பாளா? சர்க்கரையைத் தின்றவன் அது கிடையாவிட்டால் அதற்குப்பதில் புளியைத்தின்றாலும் தின்பான் என்று கூறலாமாயினும் நாமும் இவட்குப் பின்னர் இன்னொருத்தியை மணஞ்செய்துகொள்ளலாமென்று துணியலாம். இது சுத்த மைத்தியக்காரத்தனம். இந்தவிஷயத்தில் நமக்கிருக்கும் கெட்ட அபிப்பிராயத்தை அற்றங்கரையில் நமக்கிதனை யளித்தவர் கேள்வியுற்றால் சாபமிட்டாலும் இடுவர் அவர்கள் இருதயத்திலே ஸதா ஜொலித்துக்கொண்டிருக்கிற தபாக்கினி கோபாக்கினியாக வெகுவிரைவில் மாறுமல்லவா? "குணமென்னுங்குன்றேறிநின்றார் வெகுளி கணமேயுங்காத்தலரிது" என்று பெரியோர் கூறியிருக்கின்றார்களே அதுவும் பொய்க்காதே.

"எண்ணித் துணிககருமந் துணிந்தபின்
எண்ணுவதென்பதிழுக்கு" என்னு மொழிகளை யுணராதவர்கள் நமது தமிழ்நாட்டில் வெகுசுருக்கம் அவையெல்லாம் நம்மை இக்குறளும் படியாதவனென்று பரிகசிப்பார்கள். இதனைத் தின்னப்படாது என்னும் ஆலோசனை நமக்கு அந்தவிதைகளை நடுதற்கு முன்னே இருக்கவேண்டும் கொண்டு தலம்பேசுவதிற் பயனில்லையென்று பெண்டுகளும் பேசுவார்கள். வெகுகஷ்டப்பட்டு உற்பத்தியாக்கின பழங்களைப்பற்றி இப்பொழுதாலோசிப்பது மூடத்தனந்தான் என்று நிர்மாணித்து எதுவந்தாலும் வரட்டும் தின்றுவிடுவதே சரியெனத் நிர்மாணித்துத் தன் மனைவியான பங்கஜாக்ஷியைப்பார்த்து நாளையத்தினம் எனது ஜன்மவாரம் மறுதினம் நினது ஜன்மவாரம் இவ்விரண்டுமல்லாத மூன்றாவது நாட்காலையிற் சூரியோதயத்திற்கு நாம் இஷ்டதெய்வப் பிரார்த்தனையுடன் இப்பழங்களை அருந்திவிடலாம் என்று நிர்மாணித்திருக்கின்றேன் என்றான்.

மன்னவன் மனித சரீரத்தி னருமையை
மனைவிக்குரைத்த
ஏழாவதத்தியாயம்
முற்றிற்று.

அரசர் மதபேதமடைதல் கூடாதென்றுரைத்ததும், அருங்கனியுண்டதும் உரைத்தது.

இம்மொழியைக்கேட்ட மைம்முகிற்கூந்தற் செம்மைமேனியளாம் பங்கஜாக்ஷிக்கு என்றுமில்லாத பெருமகிட்சியன்றுண்டாகியது பின்னரிருவரும் தத்தமிருப்பிடங்களை யடைந்தனர். அரசன் அமைச்சனை பாநுவர்மனை யழைத்துப் பாநுவர்மா! நாம் இதற்கு மூன்றாவதுநாட்காலையில் ஸித்த ஔஷதமருந்தப்போகின்றமையால் நீ நம்முடை ஆளுகைக்குள்ளிருக்கும் பல மதஸ்தர்களையும் தங்கள்தங்கள் இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தித்து எங்களுக்குச் சுகமுண்டாகும்வண்ணம் ஆராதிக்குமாறு திட்டஞ்செய்யென்றனன். இதைக்கேட்ட மந்திரியான பாநுவர்மன் அரசனைப் பார்த்து விஷ்ணுவாலயங்கட்கும் சைனாலயங்கட்கும் துருஷ்காலயங்கட்கும் கிறிஸ்துவர் ஆலயங்கட்குங் கூடவா என்று உள்ளே கடுகடுப்புடன் கேட்டான்.

வி:—பாநுவர்மா! நீ சைவனாதலாற் பிறமதங்களில் வெறுப்பாக இவ்வண்ணங் கேட்டனையோவென்றான்.

பா:—இல்லை ஸாமான்யமான அந்தவாலயங்கட்குங் கூடவா என்று கேட்டேன்.

வி:—ஸாமான்யமென்ன சைவர்கள் வைஷ்ணவத்தையும் சைனத்தையும் துருஷ்கையும் கிறிஸ்துவத்தையும் இகழ்வதுபோல அவர்களும் சைவத்தை இகழ்கிறார்கள். சைவத்திற்கெப்படி அநேக நூல்களாதாரமானவைகளாக விருக்கின்றனவோ அதுபோலவே தான் அம்மதங்களுக்குந் தனியே தனியே அநேக நூல்களாதாரங்களாக இருக்கின்றன. அவர்கள் கூறும் பிரமாணங்களை சைவர்கள் அங்கீகரியாமையைப்போல சைவர் கூறும் பிரமாணங்களையும் அவர்கள் அங்கீகரிக்கிறதில்லை.

சைவமத அநுஷ்டானத்திலே இருந்து அநேகர் சாலோகாதி பதவிகளையும் முத்தியையும்பெற்றிருக்கிறார்கள் என்பதைப்போல அந்த மதங்களிலேயும் அநேகர் அம்மதங்களிற்சொல்லும் முத்திபாதிகளை யடைந்தார்களென்று சரிதங்கள் வைத்திருக்கின்றார்கள். இவர்கள் (சைவர்) நூல்களைக் கட்டுக்கதைகள் என்று அவர்களுரைப்பதைப்போல அவர்கள் (வைணவாதியர்) நூல்களையும் இவர்கள் வெறும்பொய் யென்கிறார்கள். இந்தமதத்தில் (சைவமதத்தில்) தீக்ஷைமுதலியவைகளைப் பெற்றுச் சைவனானவன் சிவனை எப்படி பரம்பொருளாக மதித்துத் துதிக்கின்றானோ அதேமாதிரி அந்த மதங்களிலும் உள்ள முத்திராங்கிதம் முதலியவைகளைப் பெ

ற்றவர்கள் விஷ்ணுவாதி அந்தமததேவர்களை யன்புடனே துதிக்கின்றார்கள்.

இதனில் (சைவத்தில்) பெருஞ்சாமான்யர் இருத்தலைப்போல அவைகளிலும் இருக்கின்றார்கள்.

இங்குள்ள பாடல்களைப்பாடியழுபவர்களைப்போல அங்குள்ள பாடலைப்பாடி யவர்களுமழுகின்றார்கள். ஆதலால் இதனிலிருப்பவர்களுக்கு இதனிலெவ்வளவு பிரியமோ அதுபோலதான் அவைகளிலிருப்பவர்களுக்கும். இதனால் அரசர்களாக வுள்ளவர்கள் மதவாதங்களிற் றலையிட்டுக்கொள்ளவேபடாது. தான் எந்த மதத்தைச்சேர்ந்தவனோ அந்தமத அநுட்டானத்தைமாத்திரம் (தனது) ஆன்மார்த்தமாக அங்கீகரிக்கவேண்டுமேயன்றி பிறர் மதங்களைத் தாழ்த்துதலும் தம்மதத்தை யுயர்த்துதலும் செய்யவே கூடாது.

ஒவ்வொரு மதங்களையும் உயர்ந்த அந்தஸ்தி லிருந்தவர்கள்தான் ஏற்படுத்தினார்கள் என்பதை அவர்கள் சரிதங்களைப் பொறாமையின்றி வாசித்துப்பார்த்தால் தெரியும்.

அநேக மதங்கள் இருப்பது இராச்சியத்திற்கு ஒரு பேரழகு. பல மதங்க ளிருத்தலினாலேதான் நமது நாட்டில் என்றும் உச்சவாதிகட்கிடம். ஒரேமதமாக இருந்தால் இவ்வளவு உச்சவாதிகளுக்கு இடமேது.

நமது ஆசாரியரான திருநாவுக்கரசரும் "பலதளிகளில்லா வூரும் அவையெல்லாமூரல்ல வடவிகாடே" என்று திருவாய்மலர்ந்தருளி இருக்கிறார். காஞ்சிப்புராணத்தும்

"உலகெலாந்தருநான்முகற்கொருபதினாயிரத்தெழுநூறு
விலகுமுக்குடைவானவற்கொன்பதினாயிரத்தெழுநூற்
றலைமைசால்புகழ்புத்தனுக்கெட்டுறழாயிரஞ்சகம்போற்றக்
குலவுகொற்றவைவயிரவன்சாத்தனுக்கொவ்வொராயிரங்கோவில்."

என்றிருக்கின்றது. இதனாலேயும் பலமதங்களும் அழியாதிருக்க வேண்டுமென்பதுதான் நம்முன்னோர் துணிவு.

இக்காலத்தவர்களிற் பலர் பிறமதநூல்கள் கிடைத்தாலவைகளை அழித்துவிடுகின்றனராம். அவை வேறு நாட்டிலாதலால் நாஞ்சும்மா இருக்கின்றோம். நமதுநாட்டிலாயின் அவர்களைத் தண்டிக்காது விடேம். ஆராயுமிடத்து எல்லா மதங்களிலும் தெய்வ வழிபாடிருத்தலாலும், எல்லா மதங்களும் தெய்வமொன்றே என்றே கூறுதலாலும் தோஷமில்லையென்பது நம் துணிவு.

ஆதலால் பல தேவாலயங்களிலும் செய்யும் சிறப்புக்களாற் பலதேவ ரூபமாக இருக்கும் சிவபெருமான் அத்தனை பூசைகளையும் அங்கீகரிப்பான் என்று சைவர்களான நாம் துணியவேண்டு

மேயன்றிப்பொறுமைகொள்ளவேபடாது. நீவிரைந்துசெல் என்றான். இம்மொழிகளைக்கேட்ட பாநுவர்மனுக்கது பிடிக்காதுபோனாலும் அரசனுக்கதுசம்மதமாதலால் அவ்வண்ணமேசெய்வித்தான். மூன்றுதினங்களிலும் தேவவழிபாடுசெய்யும் ஆலயங்களால் சோபிக்கிற அந்தராச்சியமானது வர்ணிக்கக்கூடாத பேரழகினையுடையதாக விருந்தது. குறிப்பிட்ட தினத்தில் அரசனும் அரசியும் நீராடி வெள்ளையான பட்டுவஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு திராட்சைக் கனிகளை பொன்தாம்பாளத்தில் வைத்து தமது குருவைக்கொண்டு அதனைப்பூசித்துப் பின்னர் அநேகமான தானதருமங்களைச்செய்து பழமருந்துமாறு இரண்டு பீடங்களிலிருந்தார்கள். இருந்தவுடனே பங்கஜாக்ஷிக்கு இடதும் விஜயவிக்கிரமனுக்கு வலதுமான தோளுங் கண்ணுந் துடித்தன. இதனுலே இதனிலொரு கெடுதியுமுண்டாகாதென்று துணிந்து திராக்ஷக்கனிகளில் சிலவற்றை அருந்தினார்கள். அருந்தினவுடனே அவ்விருவருக்கும் என்றுமில்லாத ஓரானந்தமும் புத்தித்தெளிவும் உண்டாயின.

இதனுலேதான் வாக்படர் முதலிய பெரியவர்கள் மனிதனுகப் பிறந்தவன் நல்ல சித்தௌஷதங்களைப் புசிக்கவேண்டும். நல்ல ரத்நாதிகளை யணியவேண்டும். நல்லமந்திரங்களைச் செபிக்கவேண்டுமென்று விதித்திருக்கின்றார்கள். இதுநிற்க, அரசன் தன் மனதில் இவ்வண்ணம் நினைத்தான்: பாக்கியமுள்ளவனுக்கு எதுவும் பலிக்கும். சிறிதுநேரத்திற்குமுன் இந்த திராட்சைப்பழங்களைப்பற்றிப் பூரணமாக நல்ல எண்ணங்கொள்ளவேயில்லை. இப்பொழுதோ தேவர்கள் உண்ட அமிர்தத்திற்கும் இவ்வளவு நன்மை இருக்குமென்று நாம் நினைக்க இடமில்லை. இது நம்முடைய அறிவை நன்றாய்த் துலக்கிவைத்தது. ஆனால் ஊரிலுள்ள திராட்சைக் கனிகளுக்கெல்லாம் இதேகுணமாய் இல்லையில்லை. தெய்வரூபியான கௌடபாதரா லளிக்கப்பெற்றமையால் இதற்கு இவ்வளவு மகத்துவம் என்று தீர்மானித்தான்.

பங்கஜாக்ஷியோ தனதரசனுக்குள் இருந்த சந்தேகம் நீங்கியதைக்குறித்தும், பழத்தை உட்கொண்டவுடனே உண்டாயிருக்கிற புத்தித்தெளிவைக்குறித்தும் அதிகமான சந்தோஷமுடையவளாயினள். இருவருமாகச் சிலதினங்களுக்குள்ளேயே அந்தப் பழங்களையெல்லாந் தின்றுவிட்டார்கள். பழங்களையெல்லாம் அருந்தியானதற்குப் பின்பு மிகவும் புதிய இளமையும் தேஜஸும் உடையவர்களாகி இவர்கள் மஹா ஸந்தோஷசமுத்திரத்தில் மூழ்கி மகிழ்ந்திருந்தார்கள்.

அரசர் மதபேதமடைதல் கூடாதென்றுரைத்ததும்,

அருங்கனியுண்ட துரைத்ததுமான

எட்டாவதத்தியாயம்

முற்றிற்று.

ஒன்பதாவதத்தியாயம்.

விஜயவிக்கிரமன் நாடிழந்து காடடைந்ததை யுரைத்தது.

ஒருதினமிரவில் நடுயாமத்தில் பங்கஜாக்ஷி திடீரென்று கண்விழித்துக்கொண்டு, இப்படியுமிருக்குமா சொப்பன மென்றாள். அருகிற் சயனித்திருந்த மன்னவன் அவள் நித்திரையி லிருந்தமையாற் கண்களைத்திறந்து சற்றே பரபரப்புடன் அம்மகாமினி! என்னமோ சொன்னையே அது என்ன என்றான்.

அம்மொழி கேட்ட பங்கஜாக்ஷி சற்றே தந்தபந்திகள் தெரியுமாறு நகைப்புடன் ஆகாயத்தில் சோடசகலைகளோடு கூடினதாக விளங்கும் சந்திரபிம்பமானது என்னருகில் வந்து திறக்கப்பட்ட என் வாய்க்குட்புகுந்து வயிற்றிற்குட் போய்விட்டது. மிகவும் பயங்கரமான ஒரு புலியினால் தாங்கள் துரத்தப்பட்டீர்கள். ஆனால் அந்தப்புலி தங்களைக் கடிக்கவில்லை. இவ்விரண்டு சொப்பனங்களையும் உண்மையில் நடந்தவைகளைப்போல நான் கண்டேன். முன் கண்டது நல்ல பயனைத் தரத்தக்கது என்பதை நான் முன்னமே அறிவேன். இரண்டாவது கண்ட சொப்பனத்தின் பலன்தான் எவ்வண்ணம் ஆகுமோ அறிகிலேன். இதுவோ நடுநிசியில் கண்ட சொப்பனம். இது பலிக்காமற்போகிறதில்லை. என்னமோ எல்லாத்திற்கும் சுவாமி இருக்கிறார் என்று கூறினாள்.

வி:—வருவது வழியில் நிற்கப்போகிறதில்லை. இதற்காகக் கவலைப்படுவதிற் பயனில்லை. வரவர பார்க்கலாமென்றுகூறி உடம்பை மூடிக்கொண்டு படுத்துக்கொண்டான். இவளுந் தூங்கிவிடுவாள், நல்ல சொப்பனங் கண்டாலுங் கெட்ட சொப்பனங் கண்டாலுந் தூங்கப்படாது என்பதை அறிந்திருப்பவளாதலால் மற்றைப் பொழுதை ஸ்ரீமஹாபாரதபாராயணத்திற்கழித்தாள். (ஏன் மஹாபாரதபாராயணஞ் செய்தாளென்றால், மஹாபாரத சிரவணம் துற்சொப்பன பலத்தை யழிக்கும் என்று சொப்பன நூல்கள் கூறுதலால்.)

பொழுதுவிடிந்ததும ரசன் தன் நியதிக்கடன்களை முடித்துக்கொண்டு பானுவர்மன் முதலியவர்களுடன் அலங்காரமான சபாமண்டபத்திலிருந்து ராஜ்யகாரியங்களைக் குறித்துள்ள விசாரணையைச் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது ஒருவன் ஓடிவந்து அரசனை வணங்கி, தங்கள் கொலுமண்டபத்தின் தலைவாசலில் ஒருவர் ஆபாதகேசம் பஸ்மத்தினாலலங்கரிக்கப்பெற்றவராய் கையிலொருகண்டகோடரியைத் தாங்கிக்கொண்டு காஷாயதாரியாக வந்து நின்று தனது வருகையை உணர்த்தும்படி கூறினார் என்றான்.

உடனே அரசன் கௌடபாதனைக் கண்டதினம்முதல் பெரியவர்களுக்கான அதிக விருப்பமுடையவனாதலால், அவனை யெந்த மகா யோகியோ என்று நினைத்து விரைவா யழைத்துக்கொண்டு வரும்படி திட்டஞ்செய்தான்.

என்புமணியணிந்த கண்டத்தினையும் நரசிரசினாலலங்கரிக்கப்பெற்ற கையினையும், தோளிலேந்திய சூலத்தினையும், கையிற்பிடித்த கண்டகோடரியையும் உடையவனாக வருமவனை அரசன் உற்றுப்பார்த்து, இவன் கிர்த்திரமகபாலி; யதார்த்தகபாலியல்லவென்றும், தனது கூடசாரனை கோபாலகிர்ஷ்ணனே இவன் என்றுந் தீர்மானித்துச் சபையிலிருந்த மந்திரிகளையன்றிப் பிறரனைவரையும் வெளியே போகுமாறு செய்து ஏகாந்தமாக இருந்து அருகில் வந்து அஞ்சலிபுரிந்த கோபாலகிர்ஷ்ணனைப்பார்த்து சிரிப்புடன் ஓ யோகி! இதுகாறும் எங்கே எங்கே சுற்றினாய். சுமார் நீ போய் ஒருவருஷகாலமாகிறதே என்றான்.

உடனே கபடகபாலி சற்றேபுன்னகையுடன் எம்பெருமானே பிறரைவஞ்சித்துப் பிறரிடத்திலுள்ள பொருளைக் கிரகிக்கவும் பிறர் மனோபிப்பிராயங்களை யுணரவும் இதுவே நல்ல வேஷம். இந்தவேஷமுள்ளவர்களைச் சனங்கள் நன்குமதிக்கின்றார்கள் கேட்டதைக் கொடுக்கின்றார்கள் எந்தவிஷயங்களையும் ஒருபொருளாக மதியாமையுடன் எவரிடத்திலும் உதாஸீனமாகவே இருத்தல்முதலிய குணங்கள் இந்த வேஷமுடையவர்களிடத்தில் இருப்பதாக ஜனங்கள் நினைத்திருத்தலாலும் மந்திரசக்தியுடையவர்களே இவர்கள் என்னும் அநுமானத்தாலும் இவர்களிடம் எல்லா வுண்மைகளையும் சொல்லிவிடுகிறார்கள் என்பதை யறிந்த நானும் இந்த வேஷத்துடன் உலகசஞ்சாரஞ் செய்துகொண்டே லோகப்பிரஸித்தமான மதனபுரத்தையடைந்து அவ்வூர் மயானத்தினருகில் ஒரு கல்லாலமரமொன்று நன்றாய்த் தழைந்து, எனது ஒட்டுச்சடைகளைப்போன்ற விழுதுகளுடன் நிழலாகவிருக்கின்றது. அம்மரத்தைச்சுற்றி யழகிய மேடையொன்றுண்டு. அதனில் இரண்டு விநாயகரூபமான சிலைகள் இருக்கின்றன. அதனை வணங்குதற்கு அநேக ஜனங்கள் தினந்தோறும் இரண்டுவேளைகளிலும் வருகிறதைக்கண்டு, இவ்விடந்தான் நல்ல இடம்; இவ்விடத்தி லிருந்தால்நம்மை உதாஸி என்று மதிக்குஞ் சனங்கள் நமக்கு வேண்டியவைகளைத் தருவார்கள்; இரவிலோ இங்காருமிரார்கள்; நாம் இஷ்டம்போல போஜனாதிகளை நிறைவேற்றிக்கொள்ளலாம்; நகரவர்த்தமானங்களையும் நன்றாயறியலாமென்று தீர்மானஞ்செய்து, அவ்விடத்திற் சில கட்டைகளையிட்டுக்கொளுத்திக்கொண்டு, இந்த சூலத்தை அங்கே நட்டு, பத்திரபுஷ்பாதிகளாலே அலங்கரித்துவிட்டு, இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு சிலநாழிகையும் திறந்துகொண்டு சிலநாழிகையுமாக அருந்தவஞ் செய்பவனைப்போல நடித்துக்கொண்டு சிலதினமிருந்

தேன். இதற்குள் அவ்வூரின்விடங்களிலும் காலாட்படைகளும் மற்றைய சைனியாதிகளும் புதிதாக வந்து நிறைவதைக்கண்டு அங்குள்ளாரை இது என்னவிசேஷத்திற்காகக் கூட்டப்பட்ட சைனியமென்றேன். அதற்கவ்வூரார் இது விஜயவிக்ரமபுரத்தின்மீது செல்லுமாறு சேருகிறது என்றார்கள்.

உடனே நான் இரண்டு கண்களையும் மேற்புறமாகச் செருகிக்கொண்டு, திண்ணையிலிருந்து ஞானதிருஷ்டியாலுணர்ந்து கூறுபவனைப்போல அபிநயித்துக்கொண்டு, இவ்வூரரசனாகிய மதனனென்பான் முன்னொருமுறை மேற்கூறிய விஜயவிக்ரமபுரத்து அரசனொடு போர்புரிந்து தோற்றுப்பகுதி கட்டியவனல்லவா என்றேன். அதற்கவர்கள் ஆம் இப்பொழுது முன்னிலும் அதிக சேனைகளையும் நல்ல சேனாபதிகளையும் தகுந்த ஆயுதங்களையும் தக்கவண்ணம் இவ்வரசன் வியாபித்திருப்பதுடன் மிகவும் வன்மையான மந்திரமொன்றைச் செபித்து அதன் அதிதேவதையையும் பிரத்தியக்ஷப்படுத்தி எதிர்பாரா வரங்களைப்பெற்றிருக்கிறான். இதனாலே தான் தானே ஜயமடையக்கூடுமென்னும் உறுதியைக்கொண்டு போருக்குப்போமாறு எத்தனித்திருக்கின்றான் என்றார்கள். இதுவன்றியும் கழிந்த இரண்டுமாதங்கட்குமுன் பாடலிபுரத்தரசனொடு போர்புரிந்துகொண்டிருந்தானாம். இப்பொழுது அவனது இராச்சியத்தையுங் கைப்பற்றிவிட்டானாம். இன்னுஞ்சில தினங்களுக்குள் கட்டாயமாக இங்கு வருவானாம். ஜனங்களுமதற்கேற்பச் சேனைகளும் இந்நகரின் பெயரையே புனைக்கின்றன. இதனாலவனிங்கு கட்டாயமாக வருவானென்று உறுதியாக வுணர்ந்தேன். மற்றைய விஷயங்கள் திருவுளப்படி என்றேன். இம்மொழிகளைக் கேட்ட அரசன் கடுகடுத்த முகமுடையவனாய், மந்திரிமார்களே! நம்மிடம் முன்னம் பன்முறை வந்து சண்டையிட்டு அடியும் உதையும் பட்டுத் தோற்றுச்சென்ற மதனனுக்கு இப்பொழுது அவ்வளவு வன்மையிருக்குமாயின் நமக்கெவ்வளவு வன்மை இராது பார்க்கலாம் என்றான்.

உடனே மந்திரிகளவ்வரசனைப் பார்த்து குவித்த கைகளுடன் மன்னவ! எல்லாமறிந்த தேவரீர்முன் நாங்கள் என்ன சொல்லப்போகின்றோம். பகைவனாகிய மதனன் நமது கோட்டையை முற்றுகை போடாதவிதமெதுவுண்டோ அதனை நாமிப்பொழுது செய்வதே உசிதமான காரியம். நாம் அவசரப்பட்டு மாற்றானொடு போர்புரிதல் தற்காலம் அவ்வளவு சிறந்ததல்ல.

"வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந்தூக்கிச்செயல்" என்று கூறியிருக்கின்றார்கள். ஆதலால் இப்பொழுது மதனன் போர்புரிய வருதற்குக் காரணமென்னவென்று ஆலோசிக்கவேண்டும். ஆலோசித்து அதற்கேற்றவாறு நாம் நடக்கவேண்டும். முன்னொருமுறை வென்றெ

மென்பதனாலேயே பின்னொருமுறையும் வெல்வோமென்று நினைக்க இடமில்லை.

" ஞாலங்கருதினுங்கைகூடுங்காலங்
கருதியிடத்தாற்செயின்" என்று பெரியோர் கூறியிருத்தலால், காலங் கருதித்தான் நாம் போர்புரிதல் வேண்டும் என்று கூறினார்கள். இவ்வண்ணங்கூறியவிவர்கள் முகத்தை வக்கிர த்ருஷ்டியினால் பார்த்து,

" ஒலித்தக்காலென்னாமுவரியெலிப்பகை
நாகமுயிர்ப்பக்கெடும்." என்றபடி, மதனனுடைய சைநியங்களாகிய எலிகள் எமது சைநியங்களாகிய பாம்புகளை என்செய்யும்?

" கூற்றுடன்றெதிர்ந்தெதிர்வரினும்
கூடியெதிர்நிற்குமாற்றலதுவேபடை." என் சைநியங்கள் உயிர்போங்காறும் போர்புரியு மாற்றலின என்பதை நான் முன் பலதடவைகளிலும் அறிந்திருக்கின்றேன். ஆதலால் எனக்கிருக்கும் சேனைகளைக்கொண்டே நான் எதிரியின் எல்லாச்சேனைகளையும் அழித்துவிடுவேன். ஆதலால் உங்கள் சொற்படி சண்டைசெய்யாமலிருக்க எனக்கிஷ்டமில்லை என்றான்.

உடனே மந்திரிகள் சண்டைக்கு நாம் வெளியே போங்காலத்தில் ஒரு கெட்டவழக்கமொன்று வைத்திருக்கின்றோம். அதனையாவது இல்லாதுசெய்தால் நலமாக இருக்கும். அதென்னவெனில்: அந்தப்புரங்களில் இராஜஸ்திரீகளை வைத்துவிட்டுப்போதல், தேவகோபத்தால் ஒருவேளை எதிரிகள் கோட்டையைக் கைப்பற்றினவுடனே முதலிலக்கோட்டைக்குள்ளிருந்தரசுசெலுத்திய அரசனுடைய மனைவியராகிய அரசமாதர்களைப் பிடித்துக் கற்பழித்தல் துன்பப்படுத்தல் முதலிய துர்ச்செய்கைகளைச்செய்கின்றார்கள். இது எவ்வளவு கெட்ட செய்கை பாருங்கள்! ஆதலால் பிரஸ்தாபயுத்தமாரம்பித்தற்குமுன்னமே இரகசியமாக நமதந்தப்புரப்பெண்களை அப்புறப்படுத்தி எங்கேனும் பத்திரப்படுத்திவிடுவதே நலம். ஒருவேளை தோற்றுப்போனாலும் அவர்கள் மானத்துடன் காலந்தள்ளுவார்கள். ஜயித்துவிட்டாலோ, சுகமாக வந்து இருப்பிடத்தை அடைகின்றார்கள். எங்களிறைவனே! இந்த ஒருகாரியத்தை மாத்திரம் திருவுளமுகந்து நிராட்சேபமாக இப்போது அங்கீகரிக்கவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொண்டார்கள். பாநுவர்மன் முதலியோர் கூறிய இம்மொழிகள் உசிதமானவையாக இருந்தமையால் அரசனும் அதற்குச் சம்மதித்தான்.

உடனே அமைச்சர்கள் விஜயவிக்கிரமபுரத்திற்கு ஒன்பது காததூரத்திலுள்ளதும், வனநதிகளால் மனமகிழ்வைத்தருவதும், தேக்கு-அசோகு-இருப்பை-பலா-ஆசினி-சந்தனம்-கருங்காலி-கோங்கு-பாதிரி முதலிய பெரிய மரங்களாலும், குயில்-மயில்-கிளி-

புறு-காடை-செம்போத்து - கானங்கோழி - வானம்பாடி முதலிய பறவைகளாலும், மல்லிகை-முல்லை-மனோரஞ்சிதம் - குன்றி முதலிய கொடிகளாலும் உள்ளே நிரம்பப்பெற்றதும், அநேகயோசனை விஸ்தீர்ணமானதும், அநேகமாக வேடரையன்றி வேறு மனிதஜாதியார்களால் சஞ்சரிக்கப்படாததுமான ஒரு அரணியத்தின் நடுவில் கூடாரங்களில் அந்தப்புரப் பெண்களையெல்லாம் அமைப்பித்துத் தகுந்த ஆயுதங்களையுடைய அநேகஞ் சைநியங்களை யங்குக் காவலாக வைத்தனர். இப்படிக் காவல் செய்யப்பட்ட நாளிற் கற்பிற்கும் பொற்பிற்கும் உவமைப்பொருளாகவுள்ள பங்கஜாக்ஷியும் கணவனைப்பிரிந்து துணையைப்பிரிந்த அன்றிற்பேட்டைப்போல கவலையுடன் அம்மகத்தான ஆரண்யத்தில் வாசஞ்செய்யவேண்டியவளாயினள்.

பின்னர் மந்திரியரும் மன்னனும் தகுந்த ஆயுதவாகனாதிகளுடன் மார்பிற் கவசங்களைப்பூண்டு, கைகளில் விற்படைகளைத் தாங்கினவர்களாய் உள்ள அநேகமாயிரம் சேனைகளுடனே பகைவனா மதனனுடைய சைநியங்களின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். சில தினங்களுக்குள் மாற்றரசன் சேனைகள் விஜயவிக்கிரமபுரத்தை வளைத்துக்கொண்டன. அநேக ஸமாதானங்கள் செய்யப்பட்டுங்கேளாமல் வந்த சேனைகள் போருக்காரம்பித்தமையால் மிகவும் கொடிய யுத்தம் இருதிறத்தினருக்கும் நடந்தது. கடைசியாக விஜயவிக்ரமபுரத்தின் கோட்டையை மதனபுரத்தினர் பிடித்துக்கொண்டார்கள். கோட்டையைப் பிடித்துக்கொண்டமையாற் கதவுகள் தாக்கப்படவேண்டியதாயின. ஆகவே உள்ளிருந்தவர்கள் வெளியில் வந்து சண்டையிடவேண்டியவர்களாயினார்கள். இவர்கள் கதவைத் திறந்துகொண்டு வெளிப்போந்து ஆரவாரத்துடன் சண்டையிட்டு, மதனபுரத்தினரை வெகுதூரந் துரத்தியடித்துத் திரும்புங்காலையில், மதனசேனாபதியான மார்த்தாண்டப்பிள்ளை வகுத்த அணியின் சாமர்த்தியத்தினால் தங்களைத் துரத்திய சைநியங்களை பின்னிடச்செய்தமையால் வெளியில் நின்ற சைநியங்கள் உள்ளிலும், உள்ளிருந்த சைநியங்கள் வெளியிலுமாகி, வெளியூரார் உள்ளூராராகவும், உள்ளூரார் வெளியூராராகவும் ஆகவேண்டி வந்தமையால், கடைசியாகத் தோற்றவர்களாய் பகைவர்களிடம் நகரைப் பறிகொடுத்து ஓடவேண்டியவர்களாயினார்கள்.

மதனபுரத்தினர்க் கிறைவன் கையின் நாட்டைப் பறிகொடுத்த விஜயவிக்ரமன் முதலியோர் சற்று தூரம் ஓடி மாறுவேடங்களுடன் மேற்கூறிய அரண்யத்தையடைந்து அஸ்திர ஸத்ராதிகளாலுண்டான ரணங்களையெல்லாம் ஆற்றிக்கொண்டு, சிலதினம் விசனத்தில் முழுகிக்கிடந்த இவர்கள் ஒருவாறு தேறி, மிகவுங் கவலையுடன் தான் முன்னிருந்த நிலையும், தத்காலம் இருக்கும் நிலையும், பகைவரது வெற்றியும், தனது தோல்வியுமாகிய அனைத்தையும்

நினைத்து இன்னொருமுறை பகைவனோடு போர்புரிந்து பிராணனை யேனும் இழந்துவிடவேண்டும் என்று தீர்மானித்து மிகவும் அவசரப்படும் அரசனைப்பார்த்து மந்திரியரும் சாரதாவதாரமென்று உரைக்கத்தக்க பங்கஜாக்ஷியும், மன்னவனே! தங்களெண்ணம் இப்பொழுதைக்கேற்றதல்ல.

"யானையெருத்தம்பொலியக்குடைநிழற்கீழ்
சேனைத்தலைவராய்ச்சென்றோருமேனை
வினையுலப்பவீழ்வர்" என்று பெரியோர்கள் முன்னுளிலேயே உலகபோகத்தின்நிலையின்மையைக்காட்டி எழுதியிருக்கின்றார்கள். அன்றியும் பூர்வத்திலிருந்த ஹரிச்சந்திர ராமச்சந்திர புருகூதாதிகள் தங்கள் அரசுகளை யிழந்து வனவாசிகளாக இருந்து பின்னர் பழைய அரசுநிலைமையை அடைந்திருக்கின்றார்கள். 'வாழ்வுந்தாழ்வுஞ் சிலகாலந்தான்.'—

"துகடீர்பெருஞ்செல்வந்தோன்றியக்காற்றொட்டு
சகடக்கால்போலவரும்" என்றுரைத்திருக்கு மொழி பொதுவே அன்றிச் சிறப்பல்ல.

"அங்கண்விசும்பினகறிலாப்பாரிக்குந்
திங்களுந்தீங்குறுதல்காண்டுமால் - பொங்கி
அறைபாயருவியணிமலைநாட
வுறற்பாலயார்க்குமுறும்" என்று நம்மையொத்த அரசபுலவனே முன்னே கூறியிருக்கின்றான். நம் விதிகெட்டதாக விருந்து நாந்தோற்றோமேயன்றி வேறில்லை.

"பண்டொருத்துச்செய்தபழவினைவந்தெம்மை
இன்றொறுக்கின்றதெனநினையார் - துன்புறுக்கு
மேவலனைநோவதென்மின்னேர்மருங்குலாய்
ஏவலாளூருஞ்சுடும்." என்ற யாப்பின்படி நமக்கிப்பொழுது ஊழ் போதாது. இன்னஞ்சிலதினங்களில் முன்னிலும் அதிக சுகத்தையே நாம் அடைவோம் என்றனர். இம்மொழிகளைக்கேட்ட மன்னவன் ஐம்பொறியடக்கி அருந்தவஞ்செய்யு முனிவர்களைப்போல தினமும் தீக்கடன் முதலியவைகளைச் செய்துகொண்டு தெய்வத்தியானத்திலிருந்தான்.

விஜயவிக்ரமன் நாடிழந்து காடடைந்ததை யுரைத்த
ஒன்பதாவதத்தியாயம்
முற்றிற்று.

பத்தாவதத்தியாயம்.

பங்கஜாக்ஷி மகவீன்ற துரைத்தது.

இவ்வண்ண மிருக்குங்காலத்தில், ஒருதினம் பங்கஜாக்ஷிக்கு முகத்திற் சற்று வியர்வையும், உடற்குச் சற்ற சதியும், தலைக்குச் சற்றுக் கனமும், உணவிற்சிறிது துவேஷமும், உச்சிப்போதிற் சற்றுறக்கமும் உண்டாயிற்று. புத்தியுள்ள வப்பூங்கொம்புபோல்பவள், நாம் எவ்விதமான அபத்தியங்களையும் செய்ததில்லையே, நமக்கு மற்றைய பெண்டுகளைப்போல சோம்பலாகவிருத்தல், நினைத்தபோதெல்லாம் சிற்றுண்டிகளையுண்டல் பகற்கிடந்துறங்கல் முதலிய வழக்கங்கிடையாதே; அவ்வண்ணமிருக்க, இன்று இவ்வண்ணமெல்லாம் உண்டாயினென் என்று சற்றுநாழிகை யாலோசனைசெய்தும் தனக் கதுவிஷயத்தி லொன்றுந் தோன்றாமையால் தனது உயிர்ப்பாங்கிகளி லொருத்தியான கமலானனி யென்பவளை யழைத்து அடி கமலானனி! யெனக்கு இன்று சரீரம் ஒருவாறாக இருக்கின்றது இதற்கென்னசெய்யலாம் என்று கேட்டாள். உடனே கமலானனியென்பவள் சற்றேறவளைத்த சரீரத்துடன் என்னன்னையே நான் எனதுதந்தையின் கிரகத்திற் சிறுமியாக இருந்தகாலத்து எனதுதந்தை சிலருக்கு வைத்தியசாஸ்திரங்கள் பாடஞ்சொல்லிக்கொண்டிருப்பார்; அப்பொழுது நான் அருகிலிருந்து பாடங்கேட்குமவர்களைப்போலவே வேறு விளையாட்டு முதலியவைகளின் மனஞ்செலுத்தாமற் கேட்பேன் அவ்வண்ணங் கேட்டுக்கொண்டுவருவதைக்கண்ட எனதுதந்தை எனக்கும் வைத்தியநூல்களைக் கற்பித்துத்தந்தனர். ஆதலாலிப்பொழுது தங்களுக்குண்டாயிருக்குநோய்களை இன்னவின்னவென்று பரிட்சித்தறிந்துகொண்டு பின்னர் அதற்கேற்றபரிகாரத்தை யுரைக்கின்றேன் தங்கள் கையைச் சற்றே நீட்டுங்களென்றாள். உடனே பங்கஜாக்ஷி இவளைப்பரிட்சிக்கும்பொருட்டு வலதுகையை நீட்டினாள்; இவள் வலது கையைநீட்டிய குறிப்பையறிந்த கமலானனி இக்கையைப்பார்த்தே ரோகநிதானத்தை யுரைப்போம் இவ்வரசிக்கு நம்மைப்போல வைத்தியம் அநுபவத்திலில்லாத குற்றத்தால், வலது கையை நீட்டினாள் நல்லது பார்ப்போமென்று வலதுகையைப் பிடித்துப் பார்த்தே ரோகநிதானந்தெரிந்துகொண்டு நோயாளியின்கையைத் தொட்டவைத்தியன்கையைப் பூமியில் வைப்பது வழக்கமாதலால் தானும் கையை கீழேவைத்துவிட்டு,ஓ அம்மணி! தங்களுக்கிப்பொழுது ஒருவியாதியுங் கிடையாது, வாதநாடியானது சுழன்றோடுதலால் கொஞ்சம் வியர்வை சோம்பல் முதலியவைகளுண்டாயிருக்கலாம், அவை வியாதியிற் சேர்ந்தவையல்ல. கர்ப்பக்குறியேயாம். வயிற்றிற் கருத்தங்கியிருத்தலால் இத்தகையகுறிகளுண்டாகின்றன? இதற்காக ஒருமருந்தும் உண்ணக்கூடாது சிலதினங்கள்

இவ்வண்ணமிருக்கும், பின்னரதுவுமொருபழக்கத்தாற் ஸகிக்கத்தக்கதாகும்; சரீரத்தைப் பக்குவமாகப் பார்த்துக்கொண்டுவரவேண்டும் என்றாள்.

பங்கஜாக்ஷி யதற்கவளைப்பார்த்து பக்குவமாகப் பாராதுபோனாலென்னகுற்றம் என்றனள்.

கமலானனி:—பக்குவமாகப் பாராதுபோனால் வயிற்றிலிருக்கும் சிசுவிற்கு நஷ்டம் உண்டானாலும் உண்டாகும்.

ப:—என்ன பக்குவமாகப் பார்க்கவேண்டியது?

கம:—எல்லாம் பக்குவமாகத்தான் பார்க்கவேண்டும்.

ப:- கற்பவதியான ஒருபெண் என்னவிதமாக நடந்துகொண்டால் சுகமாகப் பிள்ளையைப் பெறுவாளோ அவைகளையெல்லாமெனக்கு நீ கூறவேண்டும்.

கம:—அவ்வண்ணமே யுரைக்கின்றேன். பெண்கள் தங்கணவர்களைக் கலக்குமன்றே கர்ப்பவதிகளாதலும், அநேககாலங்கழித்து கர்ப்பவதிகளாதலுமுண்டு. இது நிற்க, கர்ப்பவதியானவள் கெட்ட ஆகாரங்களை குழந்தையைப் பிரஸவிக்கிறவரைக்கும் உண்ணவே கூடாது.

ப:—கெட்ட ஆகாரங்களையன்றி நல்ல ஆகாரங்களையே தானு உண்கின்றார்கள். கெட்ட ஆகாரத்தா லென்ன கெடுதி?

கம:—கெட்ட ஆகாரத்தை உட்கொள்ளும் பெண்கள் தாங்களும் நோயினராய், தம் மக்களையும் நோயினராகச் செய்துகொள்கின்றார்கள். ஒரு பிள்ளையைப் பெற்றவுடனே குரங்குபோல முகந்திரைந்து, நரம்பு காணப்பட்டு, நிறமழுங்கி, அதேஜஸினராக அநேகம் பெண்களிருக்கிறார்களே அவர்களெல்லாம் கருத்தாங்கி நின்ற காலத்து நடத்தின நடவடிக்கைகளாலேதான் இவ்வண்ணமான நோயுடையோராகவாயினுமென்று அறிந்தவரல்லர். சில கர்ப்பிணிகள் கர்ப்பவதிகளானவுடனே புளியங்காய், மிளகாய், வேப்பிலை, மண், சாம்பர், பானையோடு, தவிடு, மாங்காய் முதலிய தமோகுண ரஜோகுண வஸ்துக்களை யுண்கின்றார்கள். இது மிகவும் கெட்ட வழக்கம். இதனாலவர்கள்சரீரங்கெடுவதுமன்றிப் பிறக்கும் குழந்தைகளுங் கெட்டகுணம்,கெட்டநிறம்,கெட்டநோய் முதலியவைகளையுடையனவாக இருக்கும். என்னம்மணி! இத்தகைய துர்வழக்கங்களை யங்கீகரியாதவர்கள் நல்லபிள்ளைகளைப் பெறுவார்கள். பிள்ளைகளைப்பெற்றபின்னருங் குழந்தைகள் பான்மறக்கிறகாலம் வரைக்கும் மாதாவானவள் தூய்மையான ஆகாரங்களையே உட்கொள்ளுதல் வேண்டும். அவ்வண்ணஞ் செய்தால், மாதாவினிடத்து நல்ல குணமுடைய பாலூறும். அந்நல்லபாலை யுட்கொள்

ளுங் குழந்தைகள் நல்ல புத்தியையும், அரோக திடகாத்திரத்தையும் உடையனவாகவிருக்கும். சிலர் பிள்ளைகளைப் பெற்றவுடனே குழந்தைகளுக்குப் பால்கொடுத்தா லழகு முதலிய வழியுமென்று கூலிக்குப் பால்கொடுப்பவர்களை நியமிக்கின்றார்கள். கூலிக்குப்பால் கொடுக்க வருபவர்களை அநேகமாகக் கெட்ட நடை, கெட்ட உணவு, கெட்டமனமுதலிய வுடையவர்களாகவே காண்கின்றோம். ஆ! ஓ! இன்னோர் பாலருந்தும் குழந்தைகளும் நல்ல இயல்பினையுடையனவாகவிருக்குமா? ஒருநாளுமிரா. குழந்தை தாய்மறந்த பின்னரும் இழிதொழிற்சிறார் முதலியோருடன் பழகவிடாதிருக்க வேண்டும். இவ்வண்ணமெல்லாமிருந்தால், குழந்தை பின்னர் நல்ல நிலைமையை அடையும் என்றாள். இம்மொழிகளைக் கேட்டுப் பங்கஜாக்ஷியும் சரிதானென்றாள்.

பின்னர் சிலதினத்திற்குள் பங்கஜாக்ஷி கர்ப்பவதியாகவிருக்கின்றாளென்று கேட்டு விஜயவிக்ரமன் மகிழ்ந்து, தாம் பூர்வமிருந்த நிலைமையிலிருந்தால் ஸீமந்தமஹோத்ஸவ முதலியவை மிகுசிறப்பாக நடத்தலாம். இனியென்செய்வது? மிகவும் வறுமையாளனாய் விட்டோமே என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு, தமது புரோகிதனைக்கொண்டு ஸீமந்தாதி சடங்குகளைச் சடங்குகளில் தாழ்வில்லாத வண்ணம் நிறைவேற்றினன். பத்தாவது மாதத்தில் பங்கஜாக்ஷியானவள் உத்தமமான சுபதினத்தில், கேதுராகு முதலிய வாக்கியதோஷங்கள் ஆகாயத்திலுண்டாக, அனைவர் மனமும் குதூகலமடைய, ஆகாயமானது மேகசாலங்கள் முதலியவைகளால் மறைபடாமல், நல்லவர் உளம்போல விளங்குகின்ற பகற்காலத்தில் ஒரு பெண்மணியைப் பெற்றனள்.

பிறந்த சந்ததி பெண்ணாயிருக்கின்றாய். தன்னைப் பிறர் இனி மலடி யென்று கூறார் என்னும் ஸந்தோஷமும், ஆண்மகவாயிருந்தால் பலவித நன்மைகளுக்கும் ஏற்றதாயிருக்குமே; அவ்வாறில்லாதுபோயிற்றே என்னுங் கவலையு முடையவளாகி, பங்கஜாக்ஷியானவள் என்னருமைச் சிறுமி அந்த நாம் வாழ்விலிருக்குங் காலத்துப் பிறந்திருப்பாளாயின், நம்மன்னன் பணவறைகளைத் திறந்து ஏழைகள் முதலிய இச்சையுள்ளவர்களை இஷ்டப்போல எடுத்துக் கொள்ள உத்திரவு செய்வாரே. அநேக ஜனங்கள் சிறைச்சாலைகளிற்கிடந்து துன்புறவேண்டியவர்களை சிறைச்சாலைகளைத் திறப்பித்து, அங்குள்ளாரின் கால்விலங்குகளைவெட்டுவித்து, இஷ்டப்போலப் போமாறு கட்டளையிடுவாரே. மந்திரியர், புரோகிதர், காயகர் முதலியவர்களுக்கு நிலைமைக்குத்தக்கவாறு ஸன்மானம் புரிவாரே. நகரவாஸிகளான ஜனங்களெல்லாம் தங்கள் தங்கள் வீடுகளில் எண்ணெயாட்டு என்னும் உச்சவம் நடத்துவார்களே. இக் காட்டில் பிறந்த நினக்கு நினது நல்ல திசையின்றி வேறு எந்தக் காலத்தில் நினக்காகச் சிறப்புண்டாகப்போகின்றது எனச்

குழந்தையைப் பார்த்துக் கவலைப்பட்டனள். பின்னர் உடனே கமலாமணி முதலிய மருத்துவதிகள் குழந்தையின் சரீரத்திலிருந்த வழும்பு முதலியவை நீக்கிக் குழந்தையை நன்றாய்க் குளிப்பித்தனர். அன்றியும், பங்கஜாக்ஷியையும் உடனே நல்ல குளிர்ந்த நீரிலிறங்கிச் சுகமாக ஸ்நானஞ் செய்யுமாறு செய்து, சுத்தாஹாரமளித்து, பச்சிலையிட்டுக் காய்ச்சிய கொதிதண்ணீரினால் சீதளத்தை யகற்றினார்கள்.

பெண்கள் பிள்ளையைப் பெற்றவுடனே, ஒரு படி சாராயத்தைக் குடிக்கச்செய்து அறைக்குளிட்டுப்பூட்டி, ஐந்தாநாளன்னங் காட்டுங் கொடியவர்களைப்போல இவர்கள் செய்தாரில்லை. பிள்ளைகளைப் பெற்ற பெண்களை நிராகாரிகளாக வைப்பவர்களைப் போலவும், புளிங்காடி முதலியவற்றைக் குடிக்கச்செய்யு மிழிஞர்களையும் போல ஏதுவும் செய்யாமல் சுசியாகவே நடத்தினார்கள். சுசியாக நடத்து மருத்துவதிகளைப் புகழாதவர்கள் யாவர்? இது நிற்க; அரசனோ, புத்திரி ஜனித்தாளென்று கேட்டவுடனே, ஆழமான நீரின் மூழ்கி அரசதருமத்தின்வண்ணம் குழந்தையின் முகதரிசன முதலிய செய்து, பின்னர் ஜாதகர்ம முதலிய நடத்துவித்தான்.

பங்கஜாக்ஷி மகவீன்றதுரைத்த

பத்தாவதத்தியாயம்

முற்றிற்று.

பதினோராவதத்தியாயம்.

அரசன் தன் மகட்கு நாமகரணமிட்டதும், அவள் முனிவனைச் சந்தித்தது முளைத்தது.

அரசன் றன்மகட்கு நாமகரணஞ் செய்யவேண்டிய நாளில் தனது புரோகிதனுடன் தானும் அமைச்சனும் பிறரும் அங்குள்ள ஒரு மடமண்டபத்தில் நீராட்டி மைதீட்டிப் பூச்சூட்டித் தாயினால் நீட்டப்பட்ட குழந்தையை வாங்கி மடியில் வைத்துக்கொண்டு, இவட்கென்ன பெயரிடலாமென்று சற்றே நினைந்தான். நினைத்தவுடனே, ஆகாயவாணியானது அரசனே! நீ ஆலோசிக்காதே. இவள் சிலவருஷங்கழித்து இந்த சரீரத்துடனே ஆணுருவடைந்து பகையரசனையெல்லாம் வென்று நின் மனத்தை யுவப்பிப்பாள். இவளுக்கு சகல கலைகளையும் உபதேசிக்குமாறு ஒரு பரமாசிரியன் இவளிருக்குமிடத்தைத் தேடிவருவான்; அவனாலிவள் சகல மந்திரசித்திகளையும் அடைவாள்; இவளாலே நீ இம்மை மறுமைப் பேறுகளனைத்தையும் அடைவாய்; இவட்கு நீ ஞானகலாவிலாசினி யென்று பெயரிடக்கடவை என்றது.

இம்மொழிகளைக்கேட்ட அமைச்சர்களான பானுவர்மன் முதலியவர்களும் புரோகிதாதியரும் இதென்ன வாச்சரியமாக இருக்கின்றதே. அசரீரியாற் கூறப்பட்ட அவ்வண்ணம் நடக்குமா? நடந்தாலும் நடக்கும் என்று மேல்நடப்பனவற்றை எதிர்பார்ப்பவர்களாக இருந்தார்கள். அரசனோ ஸகலகலா ப்ரவீணனாதலால், மஹாஸந்தோஷமடைந்து, தத்ஸமயத்திலேயே தன் பகைவனை வென்றவனைப்போல வாயினான். பங்கஜாக்ஷியோ இந்த ஆச்சரியமான மொழிகளைக்கேட்டு, இவள் சிலகாலம் பெண்ணாகவும் சிலகாலம் ஆணாகவும் இருந்தால், நான் ஆண்மகனையும் பெண்மகளையும் உடையவளாயினேன் என்றுமஹத்தான ஆனந்தாம்புதியிலழுந்தினாள். எல்லாரும் ஸந்தோஷமுடையவராகிப்பின்னர் மன்னவன் தன் மகட்கு அசரீரி கூறியவண்ணமே ஞானகலாவிலாசினியென்றே பெயரிட்டனன். ஞானகலாவிலாசினியென்று பேர்பொருந்திய அக்குழமகள் தனது அன்னையாலும் அன்னையின்றோழியராலும் சீராட்டுடன் வளர்க்கப்பட்டனள். சீராட்டுடன் வளர்க்கப்பெற்ற வச்சிறுமி, சிறிய சிற்றாடையை இடையிற்கட்டி மேகலையிட்டு இறுக்கிக் கச்சணிந்து, கண்ணிற்கு மையிட்டுத் தெள்ளியெடுத்த வெள்ளிப்பொடிபோன்ற திருநீறணிந்து, அதன்கீழ் கரிய சிறிய பொட்டொன்றிட்டுக் கையிலணிந்தவளையலசையத் தன்னையொத்தசிறுமியருடன் மின்னையொத்த விடை நுடங்கப் பொன்னையொத்த நிறங்கன்ற அங்குள்ள கானாற்றங்கரை வெண்மணன்மேடுகளில் உலாவி மகிழ்ந்தும், பலாச

முதலிய சிறுமரங்களிலேறி மலர்பறித்தும், முத்தனைய வெண்மணலை முறத்திலிட்டுக் கொழித்தும், சுந்தரமான பந்துவிளையாடியும், இந்திரநீலம்போலக் கறுத்த வன்னக்காயாவின் நன்மலர்பறித்தும் சிறிதுகாலம் விளையாடினாள். இங்ஙனம் விளையாடின இவள், சிறு காயரும்பாய் நீரினுள் ஒரு முகூர்த்தின்கீழ் நின்றாலும், நீமேலாற் பலங்கள் சூரியனொளியைக்கண்டால் விரிதலும், நீரின்மேலதாய் விரிந்ததாய் இருந்தாலும் சூரியப்பிரகாசமின்றேல் உடனே குவியு மியல்பினதாயும் விளங்குமாபோல, அருந்தவஞ் செய்யும் பெருந் துறவினரைக்கண்டால் அகமகிழ்வுடன் அவரருகிற் செல்லுதலும், அவருரைப்பனவற்றை அன்பொடு கேட்டலும் உடையளாகினாள். இவ்வண்ணம் விளையாடிக்கொண்டுலாவிய விவளும், இவள் தோழியருமாக ஒரு தினம் அங்குள்ள கானாற்றின் ஒரு கரையோரமாய் விளையாட்டாக நீரின் மீன்மேய்தல் முதலியவைகளைப் பார்த்துக் கொண்டே என்றும்போவதிலும்சற்றதிகதூரம்போய்விட்டார்கள்.

போனவர்கள் நெடுந்தூரம் வந்துவிட்டோமேயென்று திடுக் கிட்ட உள்ளத்துடன் சுற்றிலும் பார்த்தார்கள். (அப்பொழுது சுமார் இரண்டுநாழிகைப்பொழுதிற்கு உள்ளும்புறம்புமாக இருக் கும்) இவர்கள்கண்ணெதிரில், நந்தியாவர்த்தம்-அலரி-செம்பருத்தி-புலிநகக்கொன்றை-விஷ்ணுகரந்தை-துளசி-சிறுமந்தாரை-நிலத்தாமரை-அசோகு-தேமாஞ்செடி முதலிய பால்யமான செடிகொடி மர முதலியவைகளாற் சூழப்பெற்றதும், பொன்மை-கருமை-வெண்மை முதலிய நிறங்களுடன் விளங்கும் வாழைமரங்களை இருபுறங் களிலும் உடையதும், வெள்ளியை உருக்கிச் சாய்த்ததுபோல சில் என்னும் ஒலியுடன் ஒழுகிவரும் அருவியாற்றினை முன்புறத் திலுடையதும், தருப்பைகளைப் பரப்பி மாவிலைகளைத் தொங்கவிட்டு நெற்பொரிகளைச்சிதறி மலர்களை யிறைத்து அலங்கரிக்கப்பெற்ற யாகசாலைகளைச் சுற்றிலும் உடையதும், காஷாயதாரிகளாலும் சர்மதாரிகளாலும் சுவேதாம்பரதாரிகளாலும் சூழப்பெற்றதும், பத்தொன்பது வயதுள்ள நல்ல குலமடமாது தான்பெற்ற அழகிய சிறுகுழந்தையை முத்தமிட்டுக் கொஞ்சி விளையாடுவதைப்போல வெடித்தமாதுளங்கனிகண்மீது பச்சிளங்கிளிகள்பறந்துவந்திருந்து சிறந்த தஞ்சிறகளை விரித்துக்கொண்டு கொஞ்சி மிழற்றுந் தொனியுடன் ரஞ்சிதமாக விளையாடும் மாதுளஞ்செடிகளால் மனோகரமானதும் ஆன ஒரு ஆச்ரமத்தை ஒரு சிறுகுன்றின்மீது கண்டார்கள்.

முத்துக்களைக்கூராக்கி முறையாக வழுத்திவைத்ததுபோல காணப்படும் தந்தபந்தியினரான அச்சிறுமியர், அத்தன் அன்னை என்னும் இவர்கள் இவ்வந்திப்பொழுதில் நம்மைக்காணாதுபோனால் மிகவும் வருந்துவார்களே என்று சிறிதும் எண்ணாமலும், நாமோ பெண்கள்; அதிலும் இளஞ்சிறுமியர். அவ்விடத்திருப்போர் யாவரோ நாமங்குப்போதல் தகுதியன்றென்று கருதாமலும், வெ

குவிளையாய் அச்சிறுகுன்றின் அருகில் ஒழுகிவராநின்ற சிறுநதியிலிறங்கினால் என்ன தீங்கு நேரிடுமோ என்று ஆலோசியாமலும், அங்ஙனஞ்சென்று அவ்விடத்திலிருப்பவர்களை இன்னவரென்று அறிந்துதான் திரும்பவேணும் எனத் துணிந்து, நீரிலிறங்கி அக்கரையையடைந்து, அங்கு நெடுமையாகக்கட்டியுள்ள படிகளின்மீதேறி மேற்சென்று, சுற்றிலும் உள்ள புட்பச்செடிகளையும், வாழைமுதலிய மரங்களையும், மான்முதலிய சாதுமிருகங்களையும் பார்த்துக்கொண்டே மூங்கிலோலையாற் கட்டப்பட்ட மேற்கூரையினையுடையதும், மண்ணாலமைக்கப்பெற்ற சுவரினையுடையதும், மூங்கிலைத் தட்டி வைத்துக் கட்டிய கதவினையுடையதுமான பர்னசாலையின் முகப்பிற் கொட்டப்பெற்றுக் கிடக்கின்ற மலைநெற்குவியல்களை இஷ்டம்போல தின்றுகொண்டு மிருகங்கள் நிர்ப்பயமாகக் கிடத்தலையும், தங்களையொத்த இளம்பெண்கள் குடங்களிற் சலமெடுத்துக்கொண்டுபோய்த் தேமா முதலிய விருக்ஷங்களுக்குக் குளிர்ச்சியுண்டாக ஊற்றுதலையும் பார்த்துக்கொண்டே அவ்வாச்ரமத்தின் அருகில் சென்று நின்றார்கள். இவர்கள் நிச்சலமான மனமுடையவர்களைப்போல யாதொரு சேஷ்டைகளையுஞ்செய்யாமல் கண்களால் ஒவ்வொன்றையும் பார்த்துக்கொண்டே வருவதைக் கண்ட அங்குள்ளவர்கள், பொன்னம்பூங்கொடிபோன்ற அன்னவர் தம் வயதிற்கேற்ற சின்னத்தனங்களைச் செய்யாமல், அன்ன நடப்பதுபோல் நடந்துவந்து நிற்றற்காக ஆச்சரியமடைந்து, இந்த ஆச்சரியமான ஸௌரூபாலங்கிருத சகுணிகளின் அற்புத வருகையைத் தங்கள் குருஸ்வாமிக்குச் சொல்லவேணுமென்று கருதி உள்ளே சென்றார்கள். ஸந்தியாகாலத்துப் பூசையை முடித்து ஸந்தோஷமாக நிஷ்டைகூடி யெழுந்த குருஸ்வாமிகள் வெளியே வருதலைக்கண்டு, அவர்கள் எதிரே சென்று அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்து, மஹா ஸந்தோஷத்துடன் ஸ்வாமின்! சில பெண் சிறுமியர்களுடன் அனைத்து லோகங்களிலுமுள்ள அழகனைத்தையும் திரட்டி யொன்றுபடைத்ததுபோன்று விளங்கும் சரீரத்தினையுடைய ஒரு சிறு பெண் திரிபுரசுந்தரியோ என்று கண்டவர்கள் கருதுமாறு நமது ஆச்ரம வாசலினருகே உலவுகின்றாள் என்றனர். இம்மொழிகளைக் கேட்ட அம்மோனி அவளை நான் முன்னமே யுணர்வேன்; அவள் பொருட்டுத்தான் இன்று இப்பொழுது எழுந்து வெளியில் வந்தேன் என்றுரைத்துக்கொண்டே சிரித்த முகத்துடன் ஆச்ரமத்திற்கு வெளியே வந்தனர்.

வெளியில் வந்த முனிநாதனுடைய முகதேஜஸன்றி வேறேயுலகிற்குள்ள தேஜஸான பரிதி மறையுமக்காலத்து, ஞானகலாவிலாசினியானவள் அந்த பரமகாருண்யமூர்த்தியானவக்குருநாதனை வணங்கினாள். வணங்கி நின்ற வம்மாதரசியை இருகரங்களாலும் தழுவி யுச்சியின் முத்தமிட்டு, கயிறறுந்து ஒன்றொன்றாகக் கீழே

விழும் முத்துக்களைப்போல கண்ணீர்த்துளிகளைச் சிதறவிட்டுக்கொண்டு, என்னருந்தவத்திரளே! நீ ஸர்வாபீஷ்டங்களையும் அதிகவிரைவாக அடைவாயாக. நின்னன்னை தந்தையரின் கவலை யொழிக என்றாசிகூறினர். இனி இம்மாதரசிக்கும் உருவமிவ்வண்ணந்தான் மாறுமென்று சாக்ஷி காட்டுவதைப்போல பகற்பொழுது மாறியது. உடன்வந்த சிறுமியர் தந்தலைவியுந் தாங்களும் என்றும் வராத இடத்திற்கு வந்ததைக்குறித்தும், பகற்பொழுது அகன்றதைக்குறித்தும், இராப்பொழுது வந்ததைக்குறித்தும், தம்மிருப்பிடத்திற்குத் திரும்பச் செல்வதற்கு இடையூறுண்டாயிற்றே யென்பதைக்குறித்தும், புதிய மனிதர்களாயுள்ள இவர்கள் என்ன செய்வார்களோ என்பதைக்குறித்தும், பூர்வ ஜன்மத்திற் பழகிய நூலை இந்த ஜன்மத்திற் புதிதாகக் கண்ட மாணவன் எவ்வண்ணம் அதனைக்குறித்துக் கவலைப்படானோ அவ்வண்ணமே இவர்களும் கவலைப்படாமல் இருந்தார்கள். முனிநாதன் அச்சிறுமியரைப் பார்த்து, நீவிர் யாவர்? எவ்விடத்திலிருப்பவர்கள்? நும் பெயரென்னை என்றனர். அச்சிறுமியர், நாங்கள் தங்களடிமைகள்; இப்பொழுதிருப்பது மகதரணியத்தில்; எம்பெயர் முறையே ஞானகலாவிலாசினி, அமிர்தசுந்தரி, அங்கசுந்தரி, வேதசுந்தரி, மோகசுந்தரி, விரதசுந்தரி, தவசுந்தரி, தானசுந்தரி என்றுரைப்பார்கள் என்றார்கள்.

இச்சிறுமியர் கூறிய இம்மொழிகளைக் கேட்டவப் பெரியோர் புன்னகையுடன் உங்களை இதுகாறும் போஷித்த அன்னை தந்தையரிடம் இன்று போதற்கியலாது; நேரம் இருட்டாய்விட்டது; காலையிற் சூரியோதயத்திற்குப்பின்னர் உங்களிருப்பிடத்தை அடைவீர்கள். அஞ்சாதேயுங்கள்: நாங்களும் உங்களுக்கு வேண்டியவர்கள்தான என்றனர்.

உடனே சிறுமியருட்டலைவியான ஞானகலாவிலாசினியானவள் நிமிர்த்தின தலையுடன் அம்முனிவரைப்பார்த்து, எங்களுக்கு உங்களையும் உங்களிடத்தையும் பார்த்தபோழ்து புதியஇடமாகவும், புதியமனிதராகவும் தோன்றுமானாலஞ்சுதலடைவேம். நாங்கள் உங்களையும் உங்களுடைய இந்த இடத்தையும் இப்பொழுதுதான் கண்டோம் என்பது உண்மையேயாயினும், பண்டுகண்டு பரிசயங்கொண்டுள்ளதுபோலவே தோன்றுகின்றது. ஆதலால், எங்களைக்குறித்து அஞ்சாதேயுங்கள் என்று கூறுவதிற் பயனில்லை என்றனள். இம்மொழிகளைக் கேட்டவம்முனி, இவர்களை யுபசரிக்குமாறு தனதாச்ரமத்திலுள்ள பெண்களுக்குக் கட்டளையிட்டனர்.

அரசன் தன் மகட்கு நாமகரணமிட்டதும்.
அவள் முனிவனைக் கண்டது முரைத்த
பதினோராவதத்தியாயம்
முற்றிற்று.

பன்னிரண்டாவதத்தியாயம்.

அந்திமாலைப்பொழுதிலரசிபைந்தொடி மகளைத்தேடி பரிபவமுற்ற துரைத்தது.

தெய்வசிந்தையில்லாத தீவினையாளர் சிந்தையைப்போல இருள் நெருங்கி வருதலையும், சிறிய சிறிய புண்ணியங்களைச் செய்தவர்களின் கீர்த்தி சிறிது சிறிது இடங்களிற் காணப்படுமாறுபோல மின்மினிகள் பிரகாசித்தலையும், அஞ்ஞானமென்னும் இருளாற்சூழப்பெற்ற இதயமாகிய வீட்டிலுள்ள மெய்ப்பொருளான கடவுளைக் காண்டற்கு ஞானதீபம் வேண்டுமென்பதை விளக்கிக்காட்டுவதைப்போல வீடுகளிலுள்ள இருளகலவும், வீட்டிலுள்ள பொருள்களை இன்னதிது என்று அறிந்தெடுத்தல் முதலியவற்றைச் செய்யவும் விளக்கேற்றப்படுதலையும், எத்தனை சரீரங்களையெடுத்துழன்றாலும், கடைசியில் நித்தியமான ஞானசரீரத்தையடைந்தாலன்றி நிலையில்லையென்று குறிப்பித்தலைப்போல பலவிடங்களிலும் சுற்றித்திரியும் பறவைகள் கூடுகளை யடைதலையும், தத்துவங்களாகிய பந்துக்களையெல்லாமகற்றி, ஆன்மாவாகிய புருடன் தன்னிறைவனுடைய சன்னிதியை யடையுங்காலத்தில், யாதொரு சேட்டையும் சத்தமும் கிடையாது; தனது லக்ஷியார்த்தப் பொருளையன்றி வேறொன்றையும் காணமாட்டான் என்பதை அறிஞர்க்கு ஞாபகமூட்டுவதைப்போல சத்தமெல்லா மொடுங்கி வருதலையும், இருளினையன்றி இதர பதார்த்தங்கள் காணப்படாது இருத்தலையும் உடைய அந்த முதுமாலைப்பொழுதில், பங்கஜாக்ஷியானவள் அதிக பரபரப்பாய் தனதிருப்பிடம் முதலிய விடங்களிலும், வெளிப்பிரதேசங்களிலுந் தன் மகளைத் தேடிக் காணாமல் பெருமூச்சு விட்டுக்கொண்டு, எங்கேதான் போயிருப்பாள்? காடும் காட்டிலுள்ள பறவைகளும் என் மகட்கு நாடும் நாட்டிலுள்ள மனிதரும்போல சிநேகமாய்விட்டதே! அதனால் எந்த மயிலுடன் விளையாடுகின்றாளோ! அல்லது சபலமான தனதிரண்டு நேத்திரங்களைக் கண்டு மயங்கி எதிரில் நிற்கும் மான்கன்றுகளுடனே விளையாடுகின்றனளோ! அல்லது வெள்ளிய மணல்களைக் குவித்துச் சிறுவீடாகக்கட்டி, அவ்வீடுகளில் தேக்கலர்களை பானையாதிகளாகக் கொண்டு, உடன்சென்ற சிறுமியருடன் கானாற்றங்கரையி லுண்டாட்டயர்ந்து பொழுதை மறந்தனளோ! சிறிதுநேரமேனும் என்னைவிட்டுப்பிரியாத என் சிறுமி, அந்திபட்டும் வந்திலளே! கின்னரரும் கிம்புருடரும் அந்திவேளையில் இக்கானாற்றங்கரையில் இன்னிசைவீணை வாசிப்பார்களென்று கேள்வி. அப்பாட்டிற் காதமைத்துப் பொழுதுபோனதை உணராது நிற்கின்றாளோ! மலர்ந்த பூஞ்செடிகளைக் கண்டாலிவள் வித்தியார்த்தியானவன் ஆரியனை

நாடிச் சேறலைப்போல சேருவள். ஒருவேளை ஆற்றோரங்களில் ஏகாந்தியாகாலங்களி லெல்லும் வனமுல்லைமலர்கள்மீது ஆசைகொண்டு, பொழுதுபோனதை யுணராது நின்றுவிட்டாளோ! எவ்விதமான விளையாட்டுக்களில் மனஞ்செலுத்தியிருந்தாலும் என் மகள் இத்தனை நாழிகை இராளே.

ஐயோ! ஒருவேளை நரபலி கொடுக்குங் கொடிய பாவிகளான வேடர் பிடித்துக்கொண்டார்களோ! சீ, இதென்ன பைத்தியம். எந்த தேவதைக்கும் பெண்மகளைப் பலிகொடுக்கிற வழக்கமில்லையே. ஆதலால் அந்த ஸந்தேகம் சூரியனை இருள் சூழ்ந்ததே தா என்பது போன்றது. என் மகளழகைக்கண்டா லெவரும் கவர விரும்புவர். மருவென்னும் பூஞ்செடி முளைக்கும்பொழுதே மணத்துடன் முளைப்பதைப்போல, என்னருமைச்சிறுமியும் பிறக்கும்பொழுதே நிறைந்த அழகுடையவளன்றோ? வடதேசங்களிலுள்ள சில ஜாதியார், பெண்கள் சிறுமிகளாக விருக்கும்பொழுதே காற்கு இரும்புநறையிட்டுச் சிறுக்கச்செய்கின்றார்களாம். இது இவ்வண்ணம் என்னைப்போல பெற்றவர் வருந்தாதிருத்தற்கு ஒரு மருந்துதான். செங்கரும்பினுமினிய என தருங்கிளி இங்கில்லாதிருப்பதை அவள் தந்தையறிந்தால் அவருள்ளம் என்னபாடு படாது? ஆகாயத்திலும் ஒரு முச்சமாய்விட்டதே. என் மகள் யாதொரு இடையூறுமின்றி இன்று வந்து சேர்ந்தால் யான் என்னருமைத் தெய்வமே! நின்னை விசேஷமாகப் பூசிக்கின்றேன். ஓ வனதேவதையே! நீ என் மகளை இடையூறின்றிப் பாதுகாத்து என்னிடமளிப்பாயென்று உன்னைச் சிந்திக்கின்றேன் என அநேகவிதமாக நினைத்துக்கொண்டு, விவேகமுள்ளவளாதலால் சிறிது நாழிகை மனத்துணிவுடன் இருந்தனள். இதற்குள் ஸந்தியாவந்தன முதலியவைகளை முடித்து ஈசுவரத்தியானத்திலிருந்த மன்னவன் பங்கஜாக்ஷியைச் சந்தித்தான். சந்தித்தவுடனே அதுகாறும் அடக்கியிருந்த துக்கம் திடீரென்று வெளிக்கிளம்பிவிட்டமையால், கண்ணீரை முத்துமுத்தாகச் சிதறவிட்டுக்கொண்டும், மூக்கைச்சிந்தி எறிந்துகொண்டும் விம்மிவிம்மியழுதாள்.

அழுகுரல் கேட்ட அரசன் ஆச்சரியமுற்றவனாய் ஆ, என்னருங்கிளியே! நீ அழுமாறான காரியம் என்ன உண்டாகியது? எவர்கள் நினக்கிவ்வளவு விசனத்தையுண்டாக்கினவர்கள்? நீ ஒருநாளும் இவ்வண்ணம் அழுததில்லையே! என்ன சங்கதி? ஒன்றுஞ்சொல்லாமல் விம்முகின்றனையே என்றான்.

அதற்குப் பங்கஜாக்ஷி, என்னிறைவனே! ஐயோ! நானென்ன சொல்லப்போகின்றேன். ஆஅஅஹஹா ஐயோ! என் இடம்ப ஞான கலாவிலாசினியை மாயங்காலந்தொடங்கி எங்குங்காணேனும் என்று விம்முதலுடனும், தேம்புதலுடனும், அழுகையுடனும், ஆறுமையுடனும் கூறினள்.

கர்ணகடூரமான இம்மொழி யர்மன்னவன் மனைக்கடவா வது அன்புறுக்கவாவது செய்யவில்லை. அயலானொருவன் அம்மொழிகளைக் கேட்டால் என்னவென்னலாம் ஆலோசிப்பனோ அவ்வண்ணமே, அவளெங்கே போயிருப்பாள்? யாரை விசாரிக்க அவளுடைய மறைவு வெளிப்படும்? எவ்விடத்திற்குச் சென்று எவளை இப்பொழுது காணலாம் என்று திக்காலோசனையின்மீது சென்ற உள்ளமுடையவனாகி ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

பங்கஜாக்ஷியின் இம்மொழிகளைக் கேட்ட வர்மதுகாண்பவாவிகளான ஆண்பாலாரும் பெண்பாலாரும் மறுத்தான ஆலோசனையிலிருந்தார்கள். சிலர், உள்ளமுடையான் என்னும் நாவிற் கயிறுபோட்டுப்பார்த்துப் போன மனிதன் வருவான்; வாயக்கொடு வருவான் என்றிருந்ததால், ஞானகலாவிலாசினி வருவாள்; வாயக்கொடுவருவாளென்றார்கள். வேறுசிலரோ நமது நல்லரசன்மகளானநம்பெருந்தெய்வம்போன்ற கன்னியன்னப்பெடையைக்காணோமென்று இங்கு இவர் கூறியவுடனே, பல்லி இடதுபுறத்தில் பளிர் பளிர் என்று சொன்னமையால் "காக்கைபல்லி கூடிக்குழுமல்-எற்கவக்கேகாயிடருசொன்னால்-எல்லாக்கருமமுநன்றாகும்" என்று பெரியோர் கூறுதலால், அவள் சுகமே இருக்கிறாள்; பிராணனுக்கு நஷ்டமில்லை என்றார்கள். இன்னஞ்சிலர், நாங்கள் இப்பொழுது கேள்விப்பட்டோம். கேட்டவுடனே சற்றே விசாரத்துடனே என்ன இப்படியுண்டாய்விட்டதே என்றெண்ணி, இவள் இனித் திரும்ப எப்பொழுது வருவாளோ என்று சிந்தைசெய்தோம். செய்த எம்மெதிரில் நின்ற ஆலமரத்தின் பச்சைக்கிளையிலிருந்த ஆந்தை மூன்றுதரம் சப்தித்தது. சப்திக்கவே, "ஒருமையுமைக்குமாகில் உற்றதோர் சாவுசொல்லும், இருமையுமைக்குமாகில் இருந்திடமேவல்செல்லும், மூன்றுமையுமைக்குமாகில் முன்னிய மங்கை சேர்வள்" என்ற பழமொழி ஞாபகத்திற்கு வந்தது. அதனால் இனி அரசகுமாரி வருவாள் என்று தீர்மானித்துத் திரும்பினோம் என்றார்கள்.

உடனே மற்றுஞ்சிலர் "ஐந்துமையுமைக்குமானால் அருந்தவர் வரவுசொல்லும்" ஆந்தைக்காதல் நாங்கள் ஐந்துமுறை கேட்டமையால் இப்பொழுதே அரசகுமாரியின் ஸமாசாரத்தைக்கொண்டு யாராவது ஒரு நல்லவர் வரவேண்டும், சாஸ்திரம் பொய்க்காது என்றார்கள்.

மற்றுஞ்சிலர், இங்கேயிருக்கிற தங்கம்மாளை யழைத்துக் கட்டுப்பிடித்துப்பார்த்தோம். எங்கேயோ ஒரு மலைமேலே சுகமாகயிருக்கிறாளாம்; பயமில்லையாம். கறுப்பண்ணச்சாமிக்கு ஒரு கடாவும், காட்டேரிக்கு ஒருநாளத்தப்பூசையும், ஐம்பது ஆண்டிகளுக்குச் சாப்பாடும் நடத்தினால் வந்திடுவா என்று கூறினாள் என்றார்கள். வேறே சிலர், நாங்கள் நமதலங்காரப் பிடாரியம்மன்கோவிலு

க்குட் சென்று, அம்மன் தலையில் அலரிப்பூவை வைத்துக் கேட்டோம்; சரியான உத்தரவுதானுயிருக்கிறது என்றார்கள்.

இவ்வண்ணம் அவ்வாரண்யத்திலுள்ள ஸாமான்ய ஜனங்கள் தங்கள் தங்கள் பாமரத்துவத்தைவெளிப்படுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த நூதனமானவூரில் வசிப்பவர்களில் ஞானகலாவிலாசினியின்மீது வெறுப்புள்ளவர்கள் ஆணிலும் பெண்ணிலுமில்லை யென்பதை, ஆங்காங்கு அவர்கள் அவளைக் காணுமையைப்பற்றிப் பேசிக்கொள்ளுதலே விளக்கும். நல்ல வஸ்துவைக் கண்டா லெவருக்குத்தான் ஸந்தோஷமுண்டாகாது.

உலகவாசிகளான ஜனங்களிடத்தில், சுபாவமாக ஒரு நல்ல அபிப்பிராயமுண்டென்பதை யறிவுடையாரனைவருமறிவர். அதாவது, எவனாவது தன்னிலையிலிருந்து உயர்ந்த நிலையையன்றி இழிந்தநிலையை யடைவானானல், அவனைப்பற்றி புகழாமையேயாம்.

ஞானகலாவிலாசினி சுபாவமாகவே பேரழகி; அத்துடன் யாவரிடத்திலும் அன்பு பாராட்டுபவள்; அன்றியும் அரசனுக்கு மகள். இதுவல்லாமலும் புத்திசாலி. இத்தனைவிதமான உயர்வுகளையும் உடைய அவளைப்பற்றி எவர்தான் பச்சாத்தாபப்படமாட்டார்கள். இவர்களனைவரும் இவ்வண்ண மிருக்கும்பொழுது பாலசுப்ரமண்யனைப்போல அழகும், பால்யமும், தேஜஸும்பொருந்திய இரண்டு தவசிகள், நெற்றியிற் பூசியுள்ள வாஸனையோடுகூடின விபூதிரேகைகள் வியர்வையால் நனையவும், உச்சியிற்குவித்துக்கட்டியுள்ள சடாபருடம் சற்றே நகரவும், விரைந்துவந்து அவ்வரண்யத்திலுள்ள அரசனைக் காட்டும்வண்ணம் அவ்விடத்தில் முன்புறத்தில் உருவினகத்தியுடன் நிற்கும் ஒருவனைப்பார்த்து நின் அரசன் எங்கிருக்கின்றனன் என்றனர்.

வீரன்:—(உலாவிக்கொண்டே) நீங்கள் யாவர்?

தவசிகள்:—நாங்கள் தவசிகள்.

வீ:—அரசனை ஏன் கேட்கின்றீர்கள்?

த:—கொஞ்சங் கண்டு பேசவேண்டும்.

வீ:—இப்பொழு தென்னபேச்சு, போங்கோ போங்கோ.

த:—கட்டாயமாகக் கண்டு பேசவேண்டும்.

வீ:—பகலெல்லா மென்னங்காணுந் செய்திங்கோ, இப்பாதிராத்திரியிலே உங்களை யார் நம்பி யுள்ளே விடுவார்கள்.

த:—எப்பொழுது காணவேண்டிய ஸந்தர்ப்பமோ அப்பொழுதுதானே காணக்கூடும், விடுகிறையா என்ன?

வீ:—என்ன அதட்டுகிறீங்களே, அப்பா! நீங்கள் எங்கே இருப்பவர்கள்?

த:—நாங்கள் வனவாசகிரி சிறுபாலகர்.

வி:—உங்கள் பெயரென்ன ?

த:—அகோரவீரபத்திரன், பரமகுருநாதி என்று கூறுவார்கள்.

வி:—இப்பொழுதேன் அரசனைப் பார்க்கப் போகின்றீர்கள்? இன்று இரவென்பதையும் உங்கள் விசேஷ வழக்கமில்லை. என்ன சங்கதிக்காக அரசனைப் பார்க்கப் போகின்றீர்கள் ?

த:—அரசனுக்கு அநுகூலமான வேலையாகத்தான் அரசனைப் பார்க்கப் போகின்றோம்; நீ இந்தக் காரியத்தைக் குறித்து எங்களிடம் மறுபேசுவதும் பாதகமில்லை. நாங்கள் வந்திருக்கிற சங்கதியை அரசனுக்குத் தெரியப்படுத்து.

வி:—பார்ப்போம் என்னுடைய சொல்லின்படி செய்வேன். ஒரு வேளை இவர்கள் பகைவராகிய [illegible] மாறுவேடங்கொண்டு வந்திருப்பார்களோ? அல்லது உண்மையானவர்கள்தானோ? உண்மையானவர்களல்லாதபோனால் சேர வந்து சமயத்தில் எங்கள் வருகையை அரசனுக்குரைத்து என்பார்களோ? சரி, நாம் இந்த இடத்தைவிட்டு விலகப்படாது; வேறொருவனையனுப்பி அரசனுக்குத் தெரிவிப்பேன் என்று தீர்மானித்து, அருகிலிருந்த வேறொரு காவலாளைப் பார்த்து, நீ போய் இவர்கள் வந்திருப்பதை அரசனுக்குத் தெரிவி என்று கூறி அவனை அனுப்பினான்.

அவன் விரைவாகச்சென்று அரசனுடைய ஏவலாளர்களிடம் இச்சங்கதியைச் சொன்னான். அவர்கள் அரசனிடம் அறிவித்தார்கள். அப்பொழுது அரசன் அநுமானமுண்டாயிருந்தாலும், அவர்களை யுள்ளேவிடப்படாதென்றும், தானே தக்க காவலுடன் சென்று கண்டு, சங்கதியை விசாரிக்க வேண்டுமென்றும் தீர்மானித்தான்.

சேதிசென்று பெயருள்ள நாட்டிற்கு அரசனும், செயத்த சிரோன்மணியும், மலைநாட்டரசன் வங்கதியில் வந்தவனுமான அரசனொருவனைப் பகையாக நெருங்க நெருங்கான். கட்டிய சடையுடனும், இட்ட நீறுடனும் மறைக்கும் புத்தகத்துடன் தாம்பரசெம்பு கையிலுள்ள பட்டயக்கத்தியுடனும் உட்சென்று, அரசன் தனித்து இருப்பதைக்கண்டு ஏது என்று மறைத்த கத்தியை எடுத்துக் கழுத்தினை வெட்டி யுயிரை மாய்த்துவிட்ட சரித்திரத்தை யறிந்திருக்கும் நாம், தனியே இரவில் வந்த தவக்கோலத்தினை முன்பு போதலும், அவர்களோடு ஏகாந்தத்திற் பேசுதலும் கூடாது என்று தீர்மானித்துச் சில பரிவாரங்களுடன் அவர்கள் நிற்கும் இடத்தினருகில் வந்து நின்றனன். உடனே அவ்விருவரும் ஆசிர்வதித்து, எங்களைக்

கௌடபாதர் என்னும் மஹரிஷி அனுப்பினார்; அதனாலே இந்த அசந்தர்ப்பமான சமயத்தில் நாங்கள் உம்மைக் காணுமாறு வந்தோம்.

அ:— என்ன விசேஷம்?

த:— உம்முடைய மகளை ஞானகலாவிலாசினி, அவர் இருக்கும் பர்ணசாலையில் சுகமாக இருக்கின்றாள். அவளைக் காணேமென்று கவலைப்பட்டுக்கொள்ளவேண்டாம். எந்தக்காலத்தில் நீங்கள் வந்தாலவளைக் காணலாம் என்று கூறுமாறு உத்தரவளித்தனர்.

அ:— மஹாபாக்கியம்! தேவருடைமை தேவரீரிடமே என்பார்கள். அதுபோல அவருடைய மகள் அவரிடமே சேர்ந்ததைக் குறித்து நாங்கள் இனி விசனிக்கமாட்டோம். இதற்கு முன்னெல்லாங் கவலையுற்றுக்கொண்டிருந்தோம்; இனிக் கவலைப்படோம். மஹா யோகியான ஸ்வாமி கௌடபாதர் எவ்விடத்திலிருக்கின்றார்? எங்களுக்கு அவரிருக்கும் இடந்தெரியாதே.

த.— இடமா வெகு ஸமீபந்தான். சிலகாலமாக இவ்விடத்திலேயே வாசஞ்செய்யும் உங்களுக்கு அந்த இடந்தெரியவில்லையல்லவா! இந்த இடத்திற்கு நேர் வடதிசையில் காதத்திற்கு அப்புறத்தில் சுவர்ணகிரி என்று மலையொன்றிருக்கின்றது; அதுதான் ஸ்வாமிகளுடைய ஆச்ரமம்.

அ:— ஆனால் நீங்கள் போகலாம்; நான் நாளையத்தினம் வந்து ஸ்வாமிகளைப் பார்க்கின்றேன் என்றனன்.

த:— நாங்கள் செல்கின்றோமென் றுரைத்துக்கொண்டே போய்விட்டார்கள்.

உடனே அரசன், தன் மனைவி விசாலாக்ஷி இருக்கும் இடத்தையடைந்து, அடி மாதாமணியே! நின் மகட்கு யாதொரு தீங்கும் சம்பவிக்கவில்லை. அவள், அவளை ரக்ஷிக்கத்தக்க மஹா யோகீந்திரரான கௌடபாதருடைய ஆச்ரமத்திலிருக்கிறாள். கௌடபாதருடைய இரண்டு சிஷ்யர்கள் வந்து இப்பொழுது சொல்லிப்போயினார்கள். பொழுதுவிடிந்ததும் நாம் அவளிருக்குமிடத்திற்குப் போகலாம் என்று கூறினான்.

அந்திமாலைப்பொழுதிலரசிபைந்தொடி
மகளைத்தேடிப் பரிபவமுற்றதுரைத்த
பன்னிரண்டாவதத்தியாயம்
முற்றிற்று.

பதின்மூன்றாவதத்தியாயம்.

மன்னன் முதலியோர் மாதவனையு மங்கையையு மலைமேற் கண்டதுலாத்தது.

அம்மொழிகேட்ட மைமதிகாந்தனிவை, ஆனால் இனிக் கவலைப்பட வேண்டுவதில்லை. பொழுதுவிடிந்ததும் இன்னம் ஒன்றரையாமமுங்கூட ஆகவில்லையே யென்று கவலைப்பட்டுக்கொண்டு, இராத்திரி பாதிக்கடைந்தமையால், அநேகவிதமான ஆலோசனையுடனே அப்பொழுதை யெதிர்பார்த்துக்கொண்டே தூங்கிவிட்டான். இரவில் மனத்திற்கு அதிக ஆயாசத்தைக் கொடுத்தமையாலும், போசனமின்மையாலும், அகாலமும் வெகுநாழிகை பலகவலையான ஆலோசனையுடன் மஞ்சத்தின்மீது கண்ணுறங்கிவிட்டான். எவ்வளவிருந்து அதிக வியாகுலத்தை உண்டாக்கிக்கொள்ளுகின்றானோ அவனுக்கும், எவன் இராத்திரிபோசனமில்லாமலிருக்கின்றானோ அவனுக்கும் நான் சேர்மானவன் என உடன்பட்டிருக்கின்றாற்போல, எவ்விடத்திலும் எங்கிருந்த நித்திராதேவியானவள் இவ்விருவரையும் சேர்வதனால் பொழுதுவிடிந்து மூன்று நாழிகையாகியும் விட்டொழியாமல் தனது வல்லமையைக்காட்டி நின்றாள். பின்னர், திடீரென்று கண்விழித்துப்பார்த்து, மேற்றுணியை இழுத்துப் பின்னுமொன்றாய் மூடிக்கொண்டு தூக்கமயக்கத்தாருக்குக் காலைச்சேவலும், வானம்பாடியும், கோகிலமும், மயிலும் ஒலித்து பொலிக்கும் பகைவராகக் காதிற்படுதலை. புருஷனே, ஐயோ! பொழுது விடிந்துவிட்டதென்று விரைந்தெழுந்து விரைவில் கண்விழித்துக் கொள்ளவேண்டியவன்று நன்றாய்த் தூங்கிவிட்டோமே என்று சகியே தங்களை சேர்த்துக்கொண்டு, பின்னர் காலைக்கடன்களையெல்லாம் நிறைவேற்றினவர்களாய், சில நண்பர்களுடன் சுதர்சனகிரியை நோக்கிப் பிரயாணமாகி வழியிலுள்ள சிற்சிலவற்புதங்களை யுற்றுப் பார்த்துக்கொண்டே முதல் யாமத்திலேயே சுதர்சனகிரியிலருகிலுள்ள தெப்பகுளம் பென்னும் ஆற்றங்கரையை யடைந்தார்கள். அவ்வாற்றினை அடைந்த அக்காலம் வசந்தகாலமாதலால், அவ்வாறானது அறிஞரான சர்க்க விபரீதங்களற்ற உண்மைஞானிவான்களுள்ளத்தைப்போல களங்கரகிதமான தாயும், குருமுகமாக முறையே சாத்திரங்களை ஸம்பிரதாய முறைப்படி கேளாமல் சுயமாகப்படித்தும், மடக்குருக்கண்மார் மாட்டுக் கேட்டும் தடுமாறு மனமுள்ள அநப்பியாசிகளின் உள்ளங்களைப்போல சலனமுடையதாகியும், உலக நிலைமையும், உயிரினிலைமையும், இறைவனிலைமையும் உணர்த்த வல்லவைகள் எதனையும் மறைத்து வையாவாறுபோல உட்கிடக்கும் மகலபொருள்களையும் வெளியே ஸ்பஷ்டமாக விளக்கிக்காட்டுவதையும், அநேகம் பெரியோர்களாற்பூசிக்கப்பெற்ற ஆலயமான சிகதலிங்கங்கள் பத்திரபுட்பாதிகளோடு அழகாகவிளங்கும் இருகரைகளையும் உடையதாயும் விளங்கியது. இரு

கனிவிசேஷங்களிலும் உள்ள பிரீதங்கள், கொத்தி வருவிட்டுப் பார்த்திட்டு மீண்டும் தன்னிடம் வருகையாக வாசத்துக்கொத்து னவிதா என்று கருதுமாறு, கதியாவர்த்தம்-மகு-துவரி-ஜாதி முதலிய பூந்தொடிகள் அழகாகத் தழைத்தளர்ந்து விளங்குவதையுங் கண்டு, ஆ! ஆ! இத்தனை வாசஸ்தலமான இடம் என்று கூறிக்கொண்டு, அதனின் நடுவில் அக்கரையையடைந்து ஸ்நானமுதலியவைகளை நிறைவேற்றிக் கொண்டு அதனை இன்னிவிடமென்றுதிரணங்களையளித்தவர்களாய்ச் சிறிது பூப்பங்களையும், சில பழவருக்கங்களையும், சில கற்கண்டுத் துண்டுகளையும் எடுத்து ஒரு அழகான தாம்பாளத்தில் வைத்துக்கொண்டு, அரசனும் அரசியும் பரிவாரங்களும் கலாமகிமையின்பிரீதம், வழியிலுள்ள விசித்திரங்களைப் பல பக்திச் சேவைசெய்துகொண்டே ஆச்ரமத்தினெதிரிற் சென்றார்கள். அப்பொழுது அவ்வாச்ரமத்தின் ஒருபாகத்திற் சிலர் ஐந்திரம் முதலிய வியாகரணங்களையும், சிலர் அக்ஷபாதனின் தத்துவத்தையும், சிலர் கணாதஸூத்ரங்களையும், சிலர் பாஞ்சராத்திரசம்ஹிதைகளையும், சிலர் பதஞ்சலிஸூத்ரங்களையும், சிலர் பாதராயணஸூத்ரங்களையும், சிலர் காபிலஸூத்ரங்களையும், சிலர் வாமதந்த்ரங்களையும், சிலர் மிருக்கக்கிரத்தையும், சிலர் சப்தபேதத்தையும், சிலர் ஜைமினியத்தையும், சிலர் சாரீரகத்தையும், சிலர் புராணங்களையும், சிலர் ஸ்மிருதிகளையும், சிலர் இதிகாஸங்களையும், சிலர் இருக்குமுதலிய வேதங்களையும் மதுரமான தொனியுடன் அப்யஸித்துக்கொண்டிருந்தார்கள். வேறொருபுறத்திற் சிலர் சைவமந்திரமான அஷ்டாக்ஷரத்தையும், பஞ்சாக்ஷரத்தையும், த்ர்யக்ஷரத்தையும் ஜபித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் வைஷ்ணவமந்திரமான அஷ்டாக்ஷரத்தையும், த்வயாக்ஷரத்தையும், பஞ்சாக்ஷரத்தையும், ஏகாக்ஷரத்தையும் ஜபித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் சாக்தேயமந்திரமான பஞ்சதசாக்ஷரத்தையும், த்ர்யக்ஷரத்தையும், நவாக்ஷரத்தையும், ஸப்தாக்ஷரத்தையும், பஞ்சாக்ஷரத்தையும், த்ரியக்ஷரத்தையும் ஜபித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் அசபாகாயத்திரியையும், பிரமகாயத்திரியையும் ஜபித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் அகம்பிரமாஸ்மி, அயமாத்மாபிரமம், தத்துவமஸி, பிரக்ஞானம்பிரமம் முதலியவைகளைத் தியானித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் அம்மஹாவாக்கியங்களின் அர்த்தங்களைச் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் சிவத்தியானத்திலும், சிலர் பிரமத்தியானத்திலும், சிலர் தேவீத்தியானத்திலுமாக இருந்தார்கள். இவர்களிற் சிலர் பிரமசாரிகள், பலர் ஸன்னியாஸிகள், சிலர் வானப்பிரஸ்தர்.

இவ்விதமான அவ்வாச்ரமத்தின் எந்த பாகத்தில் இருப்பவர்களும் தங்களை யெதிர்த்துப்பாராமல் தங்கள் தங்கள் அநுஷ்டானங்களிலேயே இருத்தலைக்கண்டு, இவ்விதமாக இருத்தலினாலேதான் இவர்கள் எண்ணிய கருமங்களை எளிதாக முடித்துவிடுகின்றார்களென்று நினைத்துக்கொண்டே, நம்மவர்களும் காவேரும், எ

வாமிபாரையும் காணோம். ஒருவேளை அந்த இடம் இந்த இடமல்லவோ, வேறு இடமோ! இன்னதென், சற்றுநாழிகை பார்க்கலாமென எதிரிலுள்ள ஒருசிறிய பந்தலிற்சென் றிருந்து சிரமத்தையொழித்துக்கொண்டார்கள். இதற்குள் சங்கு-மணி-சின்ன முதலியவைகளினோசையும், ஹராஹரத்தொனியும் கேட்கப்பட்டன. உடனே அரசன் இது தேவாராதன ஸமயத்தில் அடிக்கிற மணியோசையேயாம். ஆதலால், இப்பொழுது நாம் அங்குப்போகலாம் என்று தன் மனைவியுடனே பர்ணசாலைக்குட் சென்றனன். அப்பொழுது ஸ்ரீராஜராஜேஸ்வரிக்கு ஆராதனம் நடக்கும் ஸமயமாகவிருந்தது. எல்லாரும் குவித்த கரங்களுடன் நின்றார்கள். இவர்களும் அவ்வண்ணமே நின்றார்கள். பின்னர், பூர்ணாகுதியும் சிவார்ச்சனையும் நடந்தன. எல்லாருக்கும் குங்குமமும் விபூதியும் அளிக்கப்பட்டன. பின்னர் அனைவரும் ஆசாரியரான கௌடபாதருடைய பாதங்களில் விழுந்து வணங்கினார்கள். அப்பொழுது இதுதான் ஸமயமென்று அரசனும் முன்னமே ஸித்தப்படுத்திக்கொண்டு போயிருக்கிற பழவர்க்கங்கள் முதலியவைகளை எதிரில் வைத்து வணங்கி எழுந்து தன் பெயரையுரைத்தான். கௌடபாதரும் நன்றாய் அம்மன்னவனை யேறவிறங்கப்பார்த்துப் புன்சிரிப்புடன் தலையசைத்துக்கொண்டு ஆசீர்வசனமுரைத்து, ராஜரிஷியாகவுள்ள அரசனைக் குசலம் (க்ஷேமம்) விசாரித்தனர். அரசன், முனிவன் கேட்ட மொழிகளுக்கெல்லாம் பதிலுரைத்துத் தன் மனைவியையும் வணங்கும்வண்ணம் எச்சரித்தான். அவளும் குனிந்து வணங்கி ஆசிமொழி பெற்றுக்கொண்டனள். பின்னரனைவரும் இலைக்கறிகள், பழங்கள், கிழங்குகள், அன்னம், பால் முதலியவைகளை ஸமபந்தியாகவிருந்து அருந்தினார்கள். இஷ்டம்போல போஜனஞ்செய்தானதற்குப்பின்பு சிஷ்யவர்க்கங்களெல்லாம் வேறு வேறு இடங்களிற் சென்று, தியானம் முதலிய அநுஷ்டிப்புகளில் இருந்தார்கள். அந்த ஸமயத்தில் கௌடபாதர் ஞானகலாவிலாசினியையும், அவள் தோழியையும் அழைப்பித்து அருகில் இருத்திக்கொண்டு, ஒரு பிரிய சிஷ்யனை அனுப்பி விஜயவிக்ரமனையும், பங்கஜாக்ஷியையும் அருகிலழைப்பித்துக் குழந்தைகளைக் காண்பித்து, இவர்கள் நிமித்தந்தானே நேற்றந்திப்பொழுதில் நீங்கள் கவலையுற்றிருந்தீர்கள். இனி உங்களுக்குக் கவலையே இல்லை. உங்கள் துன்பங்களனைத்தும் நேற்றே தொலைந்தன. உங்களபிப்பிராயத்தை யறிந்துகொள்ளவேணுமென்கிற அபிப்பிராயமெனக்குண்டு. ஆகலால் உங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுதற்கு இது தருணம் என்றனர்.

மன்னன் முதலியோர் மாதவனையும் மக்களையும்

மலைமேற்கண்டதுரைத்த

பதின்மூன்றாவதத்தியாயம் முற்றிற்று.

பலபல கதைகளாற் பெரியோரச் சமாதானஞ் செய்திருந்தின் முக்கியன் றாசனு மரசியு முணர்ந்தலு மருந்தவன் பெண்ணை யாணாக்கியது முணர்ந்தது.

அம்மொழியைக்கேட்டவரசன் அந்தசியஸ்தனுய், எம்பெருமானே! நான் முன்னெந்தவிஷயமும் பேசவறிந்தானல்லேன். இப்பொழுது தங்கள் ஸந்நிதான விசேஷத்தாலுண்டான பரிசயத்தால் சொல்லப்புகும் விஷயத்தில் அபசாரமிருக்கிறது மன்னிக்குமாறு பலகால் வேண்டுகின்றேன்.

யான் முன்னம் விஜயவிக்ரமபுரத்திற்கு அரசனுகவிருந்தேன் என்றும், அவ்வாறிருந்த காலத்து ஒருநாள் இரவில் தங்களைக் கண்டு இரண்டு விதைகளைப் பெற்றேனென்றும், அவைகளைத் தங்கள் கட்டளைப்படி நட்டுப் பயிராக்கிப் பழுத்தெடுத்து என் மனைவிக்குக் கொடுத்து நானுமுண்டேனென்றும் எடுத்து விரித்துரைக்கவேண்டாத காரியம். கிராமத்துக்கனிகளையருந்திய சிலதினங்களுக்குள்ளேயே பனைவனுல் நாடுமுழுதும் பனைகளை இழுந்து காட்டிற்புகுந்து தங்கள் திருமொழிப்படி இந்த அழகியைப் பெற்றெடுத்தோம். இவட்குப் பெயரிடுவான் ஆலோசனை செய்துகொண்டிருக்கும்பொழுது, அசரீரி ஞானகலாவிலாசினி யென்று பெயரிடு என்றும், இவள் சிலகாலம் பெண்மகளாகவும், பின்னர் ஆண்மகனுகவும் ஆகி உனது கவலைகளை யெல்லாம் ஒழிப்பாள் என்றுங் கூறியது. ஆதலால் யான் அவ்வண்ணமே செய்து, மஹத்தான ஸந்தோஷஸமுத்திரத்தில் மூழ்கினவனுகி இதுகாறும் இருந்தேன். நேற்றந்திப்பொழுதில் குழந்தையைக் காணுதுபோகவே, அசரீரி கூறியது பொய்யோ என்று ஸந்தேகித்தேன். பின்னுஞ் சிறிதுநேரத்திற்கெல்லாம் தங்களாலனுப்பப்பட்டவர்களால் என் மகள் தங்கள் ஸந்நிதானத்திலிருப்பதையறிந்து மகானந்த பூரணனாயினேன். இவட்குத் தந்தை-தாய்-போஷகர் முதலியவர்களுமெல்லாந் தங்களையன்றி வேறொருவரின்மையால், விரைவிலிவளைக்கொண்டென் மனக்கவலையை நீக்கிவைப்பது தங்கள் கடமையென்று தாழ்மையோடு தெரிவிக்கின்றேன் என்றான். அரசனிவ்வண்ணங் கூறி முடித்தவுடனே பங்கஜாக்ஷி இரண்டு கரங்களையுங் குவித்துக்கொண்டு, ஸ்வாமி! அணிமாதிசித்திகளும் அருகில் நின்று ஊழியஞ்செய்யும் அற்புத விசித்திர வல்லவரான தங்கள் தயவால் மகிழ்ந்த யான், இன்னந் தங்கள் கருணையினுலேயே ராஜ்யராம் பிராச்சியங்களையும் அடைவேனென்று கருதுகிறேன் என்றாள். உடனே முனிவன், எல்லாம் சிவன் செயல்; என்னாலே என்ன ஆகும்? ஆகாத காரியத்தைக் கருதுவதிற் பயனென்னையுளது? ஆகுங் காரியத்திற்குத் தடையென்ன விருக்கின்றது? நான் அறியேன் என்றார்.

பிரமா நினைத்தால் ஆயுளுக்குப் பஞ்சமில்லை என்பார்கள். அதுபோல தேவரீர் நினைத்தாலெதுவுமாகும். ஆனால் பெரியவர்களெதையும் தஞ்செயலாக ஒப்புக்கொள்ளுகிறதில்லை அல்லவா என்றாள். அப்பொழுது கௌடபாதர் நீ சொல்வது உசிதந்தான்; ஆயினும் என்னாலெவ்வளவாகுமோ அவ்வளவையன்றி அதிகமாக யான் செய்வேனானால் அது பயன்பெறமாட்டாது. உங்களபிப்பிராயமோ விபரீதமானதாகவிருக்கின்றது. பூர்வத்திலிருந்த எந்த மகரிஷியாவது, எந்தத்தேவனாவது ஆணைப்பெண்ணாகவேனும்,பெண்ணையாணாகவேனும் மாற்றினதுண்டா? அந்த விஷயம் ஏதாவது உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டனர். உடனே பங்கஜாக்ஷி தனது பர்த்தாவின் முகத்தைப் பார்த்தாள். அவன் உனக்கேதாவது தெரிந்தால் சொல் என்றான். அப்பொழுது பங்கஜாக்ஷி சொல்கின்றாள்.

ஓ பெருமானே! இவ்வுலகத்தில் அப்ரத்தியக்ஷமான ஒரு விஷயத்தை ஸ்தாபனமாக வுரைக்கவேண்டுமானால் சாஸ்திராதாரம் வேண்டும். தங்களாலிப்பொழுது பரீக்ஷார்த்தம் வினவப்பட்ட விஷயங்களை நான் நேரில் பார்க்காவிட்டாலும், உண்டென்றுரைக்கப் பலநியாயங்களை அறிவேன். அதாவது, உங்கள் பாட்டனாரும் எங்கள் ஸ்வாமியுமான பகவான் வியாசர் பூர்வநிகழ்ந்த இந்ததேச சரிதங்களையெல்லாம் புராணமாக எழுதிவைத்திருக்கின்றார். பரதகண்டவாசிகளாயும், பரமேசுவராராதனம் பண்ணுவோர்களாயும், உள்ள நமக்கு அவர் (வியாசர்) வாய்மொழியைவிடச் சிறந்ததொரு பிரமாணம் இல்லையென்பது நம்மனைவருக்கும் உடன்பாடான விஷயம். ஆதலால் அவர் எழுதியுள்ளவற்றில் சிலவற்றை இங்குரைக்கின்றேன்.

அவருடைய முக்கியவபிப்பிராயம், தவம்புரிபவன் எல்லாவித அபீஷ்டங்களையும் அடைவானென்பதை உலகினரறிய வேண்டுமென்பதேதான். ஆதலால், தவம்புரிந்து சாபாநுக்கிரக சாமர்த்தியம் பெற்றவர்களாகவுள்ள மேலோர் எல்லா காரியங்களையும் செய்யத்தக்க ப்ரத்தியக்ஷ ஈசுவரர் என்பதை விளக்க விசுவாமித்திரர் கதையையுரைத்திருக்கின்றார்.

விசுவாமித்திரனே கோசிகனென்னும் ஒரு அரசன்; காதிமன்னனுடைய பிள்ளை; குஷிகனென்னும் பிராமணர்க்குப் பேரன். இம்மன்னவன் உங்கள் குலசிரேஷ்டரான வசிஷ்டரோடு போர்புரிந்து தோற்றுப் பின்னரும் பின்னரும் ஆனைசேனையாயுத முதலியவைகளுடன் அநேகவீரர்களை உதவியாகக்கொண்டு போர்புரிந்தும் வசிட்டர்தவத்தின்முன் அவன்போர் பயன்படாதுகெட்டமையால், தவமொன்றிருந்தால் எல்லாக்காரியங்களையும் எளிதிற்சாதிக்கலாமென அரசைத்துறந்து, காட்டிற்புகுந்து தவசியாகி விசுவாமித்திரனென்று பெயரடைந்து, பறையனான திரிசங்குவை சுவர்க்கத்திற்

கனுப்பினான். இந்தவிசுவாமித்திரனுக்கு முன்னம் எந்தத்தவசியும் பறையனைச்சுவர்க்கத்திற்கு அனுப்பினானில்லை. பிரமசிருட்டிக்குப் பதிலாகச் சிருட்டித்தொழிலையும் செய்தான். இன்னம் இம்முனிவன் செய்த ஆச்சரியகாரியங்க ளெண்ணிறந்தன என்பதை தாங்களேஅறிவீர்கள். வசிட்டமுனிவரோ அரசனொருவனைவேதாளமாக மாற்றினர். ஆண்மகனை இரும்புலக்கையைப்பெறச் செய்தனர். மஹாயோகியான விர்ஷபர் இறந்துபோன பத்திராயுவென்னும் அரசகுமாரனை எழுப்பினதுமன்றி அவனுக்குப் பதினாயிரம்வருஷம் ஆயுளுமளித்தனர். தத்தாத்திரேயரென்பவர் கார்த்தவீரியன் என்பவனுக்கு ஆயிரங்கைகளையளித்தனர். குந்தியென்பவளுக்கு ஆகாயவாசிகளான தேவர்களோடு புணர்ந்து பிள்ளை பெறும்படியான வரத்தைத் துருவாசர்கொடுத்தார். கபிலரென்பவர் அறுபதினாயிரம் அரசகுமாரர்களை எரித்து சாம்பராக ஆக்கிவிட்டனர். நந்திகேசுவரர் சனற்குமாரரை ஒட்டகமாகமாற்றினர். யாசவுபயாசர்கள் தீயினில் பாஞ்சாலியை யுற்பத்தியாக்கினார்கள். அகஸ்தியர் ஒருபாண்டியராஜனைக் காட்டானையாகவும், மனுஷனை மலைப்பாம்பாகவும், ஸாமான்ய தவசியான வரனை மகிஷாஸுரனாகவும், யக்ஷஸ்திரியை ராக்ஷஸியாகவும் மாற்றினார். இதுவன்றி, அநேகம் மகரிஷிகள் பெண்களாகமாறி விஷ்ணுவைக்கலந்து பிள்ளைகளைப்பெற்றிருக்கின்றனர். கௌதமர் அகல்யையைக் கல்லாக மாற்றினார். அன்றியும் தீயின்வழியாக அநேகம் பிராமணர்களையுண்டாக்கினார். கண்ணுவர் லட்சுமியை மானாகவும், இந்திரனை வேடனாகவும், விஷ்ணுவை ஊமையாகவும் மாற்றினார். சுந்தரர் முதலையுண்டபிள்ளையை யெழுப்பினார். சம்பந்தர் எலும்பைப்பெண்ணாகவும், ஆண்பனையைப் பெண்பனையாகவும் மாற்றினார். சித்தரொருவர் மதுரையிற் கல்லானையை நல்லானையாகச்செய்தார். இவ்வண்ணம் அநேகமாக முன்னாளிலிருந்த பெரியோர்கள் செய்தார்கள் என்று கூறியிருக்கின்றார். ராஜகுமாரியொருத்தி தபோசக்தியினால் அரசகுமாரனாக உருமாறி அரசகுமாரனொருவனைப் பெண்ணாக மாற்றினாள். ஆதலால், தவத்தினையுடைய பெரியோர் பூர்வத்திலிப்படிப்பட்ட அருமையான அநேக காரியங்களைச்செய்தேயிருக்கின்றார்கள். குச்சகரென்பவர் யானையைத்தேவனாக மாற்றினார்.

உருவத்தை மாற்றுதலான காரியங்களை அநேகம் பெரியோர்கள் செய்திருத்தலால் அது நூதனமல்லவென்றும், நூதனமாக வியற்றினும் தோஷமில்லையென்றும் இச்சரிதங்கள் விளக்குகின்றன. கருணைக்கடலான தங்கள் திருவுள்ளம் அவ்வண்ணமாக வேண்டுமென்று கருதுமானால் ஆகியே தீரும். தவமுடைய பெரியோர்களா லாகாததொன்றுமில்லை என்பதை யான் நன்றாய் அறிவேன். திராட்சவிதையானது இப்பொழுது ஞானகலாவிலாசினி உருவமாகியது என்னுடைய தவவிசேஷத்தினாலேயோ அவரது தவவிசேஷத்தினால் பெண்ணானவர் ஆணுருவமாகு மென்றாள்.

இவ்வளவையுங் கேட்ட கௌடபாதர் இவளும் இவனும் சாமான்யரல்லர். அநேக அந்தரங்கங்களை யறிந்துள்ளவர்கள். இவர்கள்பொருட்டு நாம் நமது தவத்திற்கொஞ்சம் இழக்கவேண்டியதுதான். ஆனாலும் குற்றமில்லை. இவர்களபிப்பிராயப்படியேதான் செய்யவேண்டும். எவ்வண்ணமாகச்செய்யலாம்? மருந்தினால் நாம் மரத்தைக்கொடியாகவும், கொடியைமரமாகவும், வெளுப்பைச்சிவப்பாகவும், சிவப்பை வெளுப்பாகவும் மாற்றிவிடுகிறோமே அம்மாதிரியாகப்புருஷனை ஸ்திரீயாக ஆக்கவும், ஸ்திரீயைப்புருஷனாக மாற்றவும் நாம் மருந்து அறியோம். முன்னெனினும் எவரும்மருந்தினால் ஆணைப்பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் செய்ததில்லை. தவவிசேஷத்தினாலேதான் செய்திருக்கின்றார்கள். நாமும் இப்பொழுது அவ்வண்ணமாகத்தான் செய்தல்வேண்டும். செய்தற்கு முன்னே இவர்களிடம் சில உடன்படிக்கைகளைப்பேசி முடித்துக்கொள்ளல்வேண்டும். அதாவது, இவ்வுலகிலுள்ள பிராணிகளின் மரம், கொடி, செடி தவிர இதர பிராணிகளெல்லாம் பூர்வ சரீரத்தையே விரும்புகிறது வழக்கம். அவ்வழக்கத்தை யநுசரித்து நாம் இவளை யாணாக்கிய பின்னர் முன்பிருந்த ரூபத்தைவிட இவ்வுருவம் குணாதியாதி காரியங்களில் வேறாக இருத்தலைக்கண்டு, ஸ்வாம்பாமே எங்களுக்கு ராச்சியாதி ஸம்பத்து முதலிய எவையும் வேண்டுவதில்லை. எங்களுடைய பழய பெண்குழந்தையை எங்கட்களித்தாற் போதும் என்று கேட்காதிருப்பதைத்தான் என்று நிர்மானித்துக்கொண்டு நான் இவளை ஆணாக மாற்றினால் பின்னர் பெண்ணாக்கும்வண்ணம் என்னிடம் உரைக்கப்படாது. அவ்வண்ணம் உரைக்கப்படுமாயின் அதனால் உபத்திரவம் நேரிடும். என்ன சொல்கின்றீர்கள்? அன்றியும், ஆண்மகனாக்கின் உடனே உங்களுடன் அநுப்பிவிடமாட்டேன். சிலவருஷகாலம் என்னிடத்திலே தானே அக்குழந்தை இருக்கவேண்டும். நீங்கள் அதுகாறும் மனம் சகிக்கவேண்டும், என்ன பதிலுரைக்கின்றீர்கள் என்றனர்.

அதற்கு விசயவிக்ரமன், அண்ணலே! ஒன்றை முன்னே விரும்பி அதனைக் கஷ்டத்தூடன் ஸம்பாதித்த புருஷன் அதனினும் சிறந்த இன்னொன்றை விரும்புவானே அன்றி ஸம்பாதித்ததை நஷ்டப்படுத்திக்கொள்ளமாட்டான். அவ்வண்ணம் ஸம்பாதித்ததை நஷ்டப்படுத்திக்கொள்பவன் கேவலம் மனுஷியரூபத்தையும் மர்க்கடசுபாவத்தையும் உடையவனென் றுரைக்கவேண்டும்.

பாம்பென் றகற்றுது பாதுகாத் திட்டமையால்
வேம்பனென் வீட்டை விரும்பினான் — பூங்குழலாய்
வண்டார் கமல வளையநூ றன்னாலு
முண்டாம் பயனென் றுணர். என்றொருத்தி யுரைத்ததாகக்

கதையொன் றுளது.

பாண்டியனொருவனுக் கிரண்டுமனைவிய ரிருந்தார்கள். அவர்களி லிளையாளிடத் தவன திகமோகமுற்றவனாக விருந்தனன். அந

னால் மூத்தவள் மனவியாகுலமுள்ளவளாக விருந்தனள். ஒருநாள் ஒரு அறையிலுள்ள ஒரு அடுக்குப்பாத்திரத்தின் மேற்பானையானது மூடாமற்கிடந்தது. அதனை அம்மூத்தவளெடுத்துப் பார்த்தனள். அதனிலொரு கிர்ஷ்ணஸர்ப்பம் மண்டலாகாரமாகக் கிடந்தது. அதனை இவள் அடித்தல் முதலிய எதுவும் செய்யாமல் மேலே ஒரு கலசத்தைக் கருங்கல்களால் நிரப்பி மூடிவிட்டனள். நாலுதினங்கழித்துத் தெய்வகதியாக இவளுக்குச் சுரங்காய்ந்தது. சுரத்துடனிருக்கின்றாளென்று கேட்ட இளையவள் பார்க்க வருபவளைப்போல அவள் வீட்டை அடைந்து, அவள் சுரத்தாலயர்ந்து கிடத்தலைக்கண்டு இவள் என்ன என்ன அரும்பண்டங்கள் வைத்திருக்கின்றாள். எதேனும் அருமையான வஸ்துக்கள் வைத்திருப்பாளானால் எடுத்துக்கொண்டுபோய்விடலாமென அவ்வறைக்குள் இருந்த பாத்திரங்களிலெல்லாம் கை போட்டுத் தடவிப்பார்த்துக்கொண்டே பாம்பிருக்கும் பானையின் மூடியிற் கருங்கல்லிருப்பதைக்கண்டு, அதற்கடிப்பானையில் ஏதோ அபூர்வமான வஸ்துவை வைத்திருப்பாளென்று அந்தக்கலசத்திற்குள் விரைவாகக் கையை நுழைத்துத்துழாவினாள். துழாவவே, அநேகநாளாக இரையின்றிக் கிடக்கும் அந்நாகம் அவள் கையைத் திடீரென்று கடித்துவிட்டது. என்ன கடித்தது என்று தலையைநிமிர்த்திப் பின்னுமதனைப்பார்த்தாள். பார்க்கவே அது மேற்கிளம்பி மூக்கிலும் ஒருகடி கடித்துவிட்டது. என்ன செய்வாள்? வெளியிற்சொன்னால் வெட்கக்கேடு. விரைவாகத் தன் மாளிகையையடைந்து தனக்கும் சுரம் என்று நடித்து மூடினபடியே படுத்துக்கொண்டாள். பிராணன் போய்விட்டது. அரசன் சென்று தூங்குபவளைத்தட்டி எழுப்பிப்பார்த்தான்; எழுந்திருக்காமையால், இறந்தாளென்று தெரிந்துகொண்டு அவளுடலத்தை அடக்கஞ்செய்துவிட்டு மூத்தவள் வீட்டையடைந்து அவளொடு முன்போல பிரியமாகவிருந்தான். சுரமாகக்கிடந்தவள், இளையவள் தான் மபங்கிக் கிடப்பதாகப் பாம்புப்பானையைத் திறந்தது முதலியவைகளை யுணர்ந்து மகிழ்ந்து, நமக்கு நல்லகாலம் என்று பேசாதிருந்து பின்னர் தன்தோழியைக்கொண்டு பாம்பை யகற்றி நடந்த விர்த்தாந்தத்தையுரைத்து, நான் கேவலமான பொருளென்றிகழாது பாம்பை மூடிவைத்தமையால், அது என் புருஷனை எனக்களித்தது. அதனால் எந்த வஸ்துவையும் இகழ்ந்தகற்றாமலிருந்தால் அதனாலும் ஒரு நலம் உண்டாகும் என்று கூறினாள். ஆதலால், அருமையாகப் பெறும் பொருளை நாங்கள் ஒரு காலத்திலும் மாற்றவேண்டுமென்று கருதோம். அன்றியும், எவரால் எந்தவமிசத்தி லபூர்வமான காரியம் நடந்ததோ அவராலந்த வமிசத்திற்கு அழியாத புகழுண்டாகின்றது.

ராமனாலன்றோ தசரதன் குலத்திற்கு சிரேஷ்டம். குருவினாலும் யுதிஷ்டிரனாலும் அன்றோ சந்திரனுடைய வமிசத்திற்கு சிரேஷ்டம். என் மகளான ஞானகலாவிலாசினியானவள் ஞானகலாவிலாசினி

யாகவே இருந்தால் ஏறக்குறைய இன்னம் ஒருபத்துவருடத்திற்கு நாங்களிருக்கும் இடத்தை அலங்கரித்துக்கொண்டிருப்பாள். பின்னர் தன்னை மணந்த புருஷன்வீட்டையே அலங்கரிப்பாள். முத்தானது கடலிற்பிறந்தாலும் அதனை அணிந்து மகிழ்வோர் வேறாதல் போலவும், சந்தனம் பொதிகையிற்பிறந்தாலும் அதனைப்பூசி மகிழ்பவர் வேறாதல்போலவும் பெண்களாலாய பயனும் மகிழ்வும் பிறரதே. ஆண்மகனாகவிருந்தாலோ, அவனால் வரு மகிழ்ச்சியன்றியும் அவன் மனைவியினாலும், புத்திராதிகளாலும் அலங்கரிக்கப்படும் கிரகத்தாலும் மகிழ்ச்சியுண்டாகும். ஆதலால், பெண்மகளிலும் ஆண்மகனால் மகிழ்ச்சியதிகமென்பதற் கேதுவுந்தடையேயில்லை. ஆண்பாலாரினன்றிப் பெண்பாலாரில் அதிகமான சரீரவன்மையுடையவர்கள் சுருக்கமாதலாலேதான் பெண்களை அபலைகளென்று அழைக்கின்றார்கள். சரீரவன்மையில்லாதுபோனால் எந்தக்காரியத்தையும் எளிதாகச்செய்துமுடிக்கவியலாது. பெண்ணுடம்பிற்கோ வன்மை சுருக்கமென்பதை யவர்களே ஒத்துக்கொள்வார்கள். ஆனால் அப்பியாஸக்கிரமத்தாற் பெண்களும் புருஷர்களைப்போல சரீரவன்மையுடையவர்களாகவும், அதிகமான மனோவன்மையுடையவர்களாகவும் ஆகலாம். எவளேனும் ஒருத்தி புருஷர்களைவிடப் பலமுள்ளவளாக வெளிப்படுவாளானால், அவளைப் பெண்கள் பரிஹஸிப்பார்கள். இவள் அடக்கமும் ஒடுக்கமுமின்றி யுலாவுபவள் என்று அவள்மீது குற்றங்கூறுவார்கள். முக்கியமாகப் புதியவழக்கம் பரிசயத்துக்குவர அநேககாலஞ் செல்லுமென்பது அநுபவசித்தம். ஆதலால், நாங்களெவ்விதத்துந் தங்களபிப்பிராயத்திற்கு மாறிநடவோம் என்று தேவசொரூபியான தங்கள் முன்னர் உறுதியாக உரைக்கின்றேன். எங்களெண்ணத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டான்.

இவன் கூறிய அருமையான விஷயங்களைச் சரியானதென்று அங்கீகரித்த கௌடபாதர், தன் மனத்திற்குள் கல்விச்செல்வமில்லாத சரீரம் கேவலம் காட்டிற்கிடக்கும் எருமையின் சரீரத்தை பொத்ததேயன்றி வேறில்லை. எவ்வளவு சம்பத்திருக்கினும், விவேகமில்லாதபோது அதின் சுகங்களை எவனானுஞ் சரியாக அறிவான்? பாயஸம், வடை, சுகியன், அபூபம் முதலியவைகளைக் காட்டிற்கிடக்கும் முசல் முதலிய ஜெந்துக்களைப் பிடித்துச் சுட்டுத் தின்னுகிற வேடர் முதலியவர்களுக்குக் கொடுத்துத் தின்னச் சொன்னால் அவர்கள் அவைகளை அருமையானவையாக அநுபவிக்கவில்லை. மறு தீவாந்திரங்களிலிருந்து நமதிந்தநாடுகளிற் குடியேறியுள்ள தீவாந்தரவாசிகளுக்கு ஏலக்காயும், ஜாதிக்காயும், செறிந்த தாம்பூலமும் சுகமானதாகத் தோன்றுகின்றதா? இல்லை. அதற்குக் காரணம் அதனைப்பற்றிய ஞானம் அவர்களிடத்தில்லாமையே. எவ்வளவு வறுமையிலிருக்கினும் கல்வியானது எம்பன்னர்களைவிட அதிக மகிழ்ச்சியுடையவர்களாகத் தன்னையடைந்தவ

ர்களை செய்துவைக்குமென்பதற்கு இவர்களே ஸாக்ஷியானவர்கள். சில வருஷங்களுக்குமுன் அரசாண்டோமே, இப்பொழுது வனத்தில் சஞ்சரிக்கின்றோமே, கந்தமூலாதிகளை யருந்துகின்றோமே என்று எள்ளத்தனையேனுங் கவலைப்படுகின்றார்களா? இல்லை. மகத்தான ராஜவைபவத்திலிருக்கும்பொழுதுள்ள மகிழ்ச்சியிலேயே இப்பொழுதும் இருக்கின்றார்கள். இவ்வளவிற்கும் காரணம் கல்வியேயாம். இவர்கள் மனோபீஷ்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டியதுதான் என அவ்விருவரையும் ஒருபுறமாக ஒதுக்கி, ஞானகலாவிலாசினியை யழைத்து தான் ஜபஞ்செய்து சித்திப்படுத்தியுள்ள ஒருமகா மந்திரத்தை அவள் காதிலுபதேசித்து, இதனை நீ கழுத்தளவு ஜலத்தினின்று ஜபிப்பாயானால் ஒரு புருஷன் உன்னெதிரில் வருவான்; வந்து உனக்கு என்னவேண்டுமென்று கேட்பான்; புருஷரூபம் வேண்டுமென்று கேள் கொடுப்பானென்றுரைத்து, அரசனையும் அரசியையும் மற்றனைவரையும் ஞானகலாவிலாசினியுடன் ஆற்றிற்கனுப்பினார். எல்லாருமாக ஆற்றங்கரையையடைந்து நின்றவுடனே, எல்லாரையும் ஞானகலாவிலாசினியைப் பார்க்கத்தக்க ஒருவிடத்தில் தூரத்தில் நிறுத்தி, அவளை நீரிலிறங்கிக் கழுத்தளவுஜலத்தில் நிறுத்தி ஜபஞ்செய்யச்சொல்லினார். அவளும் அவ்வண்ணமே செபித்தாள். அப்பொழுது முனிவரும் சற்று தூரமாக வந்திருந்தனர்.

ஒரு முகூர்த்த நேரத்திற்கெல்லாம் ஆகாயத்தில் அநேகம் குதிரைமுகமும், புருஷரூபமுமுள்ள கின்னரர்கள் வீணை வாசிக்கவும், புருஷமுகமும் குதிரையுடலுமுள்ள கிம்புருஷர்கள் இசைபாடவும், சுந்தரமான கற்பகவல்லிக்கொடிகளசைந்தாடுவதைப்போல அநேகம் அரம்பையர்கள் ஆடவும், அநேகம் அலப்புஜைகள் பாடவும், பூச்சக்கரக்குடைநிழலில் வெண்ணிறமான திருமேனியும், ஒற்றைக்காதிலிட்ட குண்டலமும், மற்றைக்காதிலுள்ள தோடும் அழகுடன் விளங்காநிற்ப, இளம்பிறையணிந்த பரம்பொருளான பரமேசுவரன் பார்வதிதேவியுடன் பிரத்தியக்ஷமாகி நின்று நீ செய்யுந் தவத்திற்குகந்தேன்; நான் கைலாசபதியான சங்கரன்; உன்னெதிரில் உனக்கு வரமளிக்கும்வண்ணம்வந்துநிற்கின்றேன்; நினது சிறிய கண்களைத்திறந்து என்னைப்பார் என்று கூறியசத்தம் ஞானகலாவிலாசினியின் காதிற்பட்டவுடனே, மந்திரத்தைச் செபித்த வண்ணமே கண்களை ஆகாயத்தினிடமாக வுயர்த்திச் சற்றே திறந்துபார்த்தனள். பார்த்தவுடனே தன்றவம் பலித்ததென்னும் ஒரு எண்ணம் உண்டாகியது. அதனால் கைகளைத் தலைமேலாகத்தூக்கிக்கொண்டு தியானத்தில் நின்றனள். அவள் நிலைகண்ட நீகைண்டர் அவளருகிலாகி நினக்கென்னவேண்டுமோகேள் தருகின்றேன். அஞ்சாதே! அருந்தவம்புரிந்த சிறுவனான துருவனும் நின்னை பொவ்வான். நீபூர்வஞ்செய்த புண்ணிய விசேஷத்தினையுடையை என்றனர். அம்மொழிகளைக்கேட்டு ஞானகலாவிலாசினி, ஸ்வாமீ!நான்

புருஷாகாரமுடையவளாகவும், பதினாறுவயதுடையவளாகவும் அருள் செய்யவேண்டுமென்று கேட்டாள். அதற்குச் சக்திதேவியானவள் ஜநகன் புருஷாகாரத்தையும், பத்துச்சிரசுவைத்தையும், பதினாயிரம் ஆண்டு ஜீவித்திருக்கவும், நின் தந்தையின் பகைக்குமாக்களை வென்றுவெற்றியும் தன்மையினையும் உடையவளாகக்கடவை என்று கூறி, அவள் தலையில் தன் கையைவைத்து நினைக்குமளவுமாண்டாருக என்றுரைத்தனள். சாம்பூர்த்தியின் அந்தக் கலையில் வைக்கப்பெற்றவுடனே இவள் சரீரத்தை புருஷகாரமாயினள். அப்பொழுது ஸ்வாமியும் பரிவார ஸஹிதமாக ஜோதிரூபமாக மறைந்தனர்.

கண்ணிமைகொட்டாமல் என்னநடக்குமோ என்று பார்த்துக்கொண்டிருந்த விஜயவிக்ரமாதியனைவரும சோதியொன்றுண்டானதைக்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். பின்னர் கௌடபாதர் நீரிலிறங்கி மூர்ச்சித்து நீருள மூழ்குமாறுகி நின்ற ஞானகலாவிலாசினியைத் தூக்கியெடுத்துக் கரைக்குக் கொண்டுவந்தனர். உடனே ஞானகலாவிலாசினியென்றுருவத்தைமுற்றுமிழந்து ஆணுருவமுடையவளாகியதுமன்றி நல்ல பதினாறுவயதுள்ள வாலிபனாகையுமாயினள். இவ்விதமான இயல்பைக்கண்ட முனிவனும் ஆச்சரியம் அடைந்து, மலர்ந்த முகத்துடன் இரண்டு கைகளையும் நீட்டிக் கரையிலிருந்தவர்களை அழைக்கவே, எப்பொழுது எப்பொழுது என்றிருந்த அனைவரும் விரைந்துவந்து பார்த்தார்கள். பார்க்கும் பொழுது ஞானகலாவிலாசினியென்று கூறிய மாதினிலக்கணமேயின்றி விபரீதத்தினையுடைய ஒரு மன்மதாகாரமான வாலிபனாயிருத்தலைக்கண்டு வியப்புற்றார்கள். இந்தப்புதிய உருவத்தைப் பார்த்து விஜயவிக்ரமனும் பங்கஜாக்ஷியும் அளவற்ற மகிழ்ச்சியை அடைந்தாலும், முன் முகத்தக்கிலிருந்த பெண்வடிவமான ஞானகலாவிலாசினியைக்காணுமற்கொருவாய் கவலைப்பட்டார்கள். பாம்பும் பழுதும் பல்லும் என்னும் பழமொழிக்கிணங்கிய உலகத்தவர்களான இவர்கள் மனக்கவலையைமாற்றுவான், முனிவன் அரசகுமாரனை நோக்கிக் கண்சாடைசெய்தனன். உடனே அப்புதிய புருஷனெழுந்து அன்னை தந்தையர்களின் கால்களில் விழுந்து, என்னைபாவமென்று கருதாதிருக்கின்றீர்கள்; உங்கள் கர்ப்பத்திலுதித்து வளர்ந்திருந்த ஞானகலாவிலாசினியென்னும் பெயருடனிருந்த நும்மகளே நான்; ஆனாலிந்த நிலைமையால் வேறு விதமாக விருக்கின்றேன். விரோதிகளைப் பகைவர்களை வென்று உங்களைப் பழைய படியே வைக்கவேண்டிக் கடவுள் என்னை ஒன்பது வயது அதிகமான புருஷனாக மாற்றினார். பதினாறு வயதுள்ள புருஷனைப் போல காணப்பட்டாலும் நான் எழுவயதுள்ளசிறுவனே. உங்களுக்கு அதற்காகத் தடையொன்றுமில்லை என்று இதமாகப் பேசவே, மகிழ்ச்சி பிறந்து மகவான ஞானகலாவிலாசினியே இவன் என்று அணைத்து கட்டிப்பிணைத்து முத்தமிட்டார்கள்.

உடனே தலைவன் ஞானகலாவிலாசினியுடன் வந்த ஏழு சிறுமியரும் இந்த உருவத்தைக்கண்டு ஆச்சரியமடைந்து ஏக்கங்கொண்டு நின்றார்கள். தலைவியைப் பிரிந்திருக்கவியலாது கண்ணீரொழுகவிட்டுக்கொண்டு கோவென்றழுத வச்சிறுமியரைக் கௌடபாதர் தமது விபூதிப்பையிலுள்ள விபூதியை மந்திரித்திட்டுக் காருண்யத்தினுடனே ஏழு ஆண்மக்களாகவே செய்துவிட்டார். ஏழு சிறுவரும் தமது தலைவனை வணங்கி நின்றார்கள். இவ்வாச்சரியத்தை நேரிற்கண்ட அரசனும் அரசியும் மற்றையோரும் கௌடபாதரிடத் தழியாத பேரன்பினரானார்கள். பின்னர் அனைவருமாக மலைமீதேறி ஆச்ரமத்தை யடைந்தார்கள். கௌடபாதர் அரசனையும் அரசியையும் பார்த்து, இனியுங்கள் துன்பமெல்லாந் தொலையுமல்லவா என்று கூறி, நூதனவுருவடைந்த சிறுவனுக்கு ஜாதகர்மம் நாமகரணம் முதலியவனைத்து நடத்த வரசனுக்குத் தானே புரோகிதனாகிருந்து ஞானகலாவிலாசினியான மாதர்மணிக்கு ஞானகலாவிலாசவர்மாவென்று பெயரிட்டு, மற்றைய சடங்குகளையும் நிறைவேற்றி உபநயனமுஞ்செய்துவைத்தனர். இவ்வளவு காரியமுடிவாயின பின்னர், அரசனும் அரசியும் புதிய மகனைப் பெற்றவர்களைப்போல பூரிப்படைந்து, ஒரு கணநேரங்கூட மகனைப் பிரிந்திருக்க விருப்பமற்றவர்களாயினார்கள். பின்னர் கௌடபாதர் வேத முதலிய கலைகளையெல்லாம் ஞானகலாவிலாசனுக்கு முறைப்படியே சில தினங்களிலேயே கற்பித்தனர். எந்தப்பாடமும் ஒருமுறையன்றி இருமுறை கூறவேண்டிய வேலை அவன்பொருட்டு இல்லாமலிருந்தது. ஏறக்குறைய இரண்டுமண்டலங்களுக்குள்ளேயே தமது இளையமணியான ஞானகலாவிலாசனுக்கு எல்லாக்கலைகளையும் அவர் கற்பித்தனர். விஜயவிக்ரமன் சைவனாதலாலும், ஞானகலாவிலாசன் சிவகடாக்ஷத்தாலேயே ஸர்வாபீஷ்டங்களையும் பெற்றவனாதலாலும் அவனுக்குச் சைவதீக்ஷை செய்து சிவபூசை செய்யப்பழக்கிவைத்தனர். மற்றைச் சிறுவர்களையும் ஞானகலாவிலாசனைப்போல கௌடபாதர் கல்விமுதலியவைகளிற் சிறந்தவர்களாக வாக்கினர்.

பலபல கதைகளாற் பெரியோரச்சுமாறாட்டஞ்
செய்திருக்கின்றார்களென் றரசனுமரசியுமுரைத்ததும்,
அருந்தவன் பெண்ணை யாணாக்கியதுமுரைத்த
பதினெண்காவதத்தியாயம்
முற்றிற்று.

பூர்வகாண்டம் முற்றிற்று.

உ

சுபமஸ்து.

ஞானகலாவிலாசினி.

உத்தரகாண்டம்

முதலத்தியாயம்.

முனிவன் ராசகுமாரனுக்குத் தாவித்தையுரைத்தது.

இவ்வண்ணம் ஆறுமாதகாலஞ் சென்றபின்னர், ஒரு தினம் பௌர்ணமியில் ரஸமான தென்றல்காற்றுடன் மிருதுவான பவள மல்லிகை மலர்வாசனையை எவ்விடத்திலும் பரப்புவதும், மனதை ஒற்றுமைப்படுத்துதற்கேற்ற பரிசுத்தமான கொடிசெடிகளாலலங்கரிக்கப்பெற்றதும், வட்டமான பளிங்குப்பாறையால் சோபிப்பதும், முல்லைமுதலிய மலர்கள் பெண்கள் நகைப்பதைப்போல அலர்ந்து விளங்குவதுமான ஒரு பூங்காவனத்திலுள்ள மேடையின்மீது இடப்பட்ட கலைமான்றோன்மீது பதுமாசனமாகத் தெற்குநோக்கி தக்ஷிணாமூர்த்தியைப்போல வெழுந்தருளியிருந்த கௌடபாதர், பல கலைகளையும் தம்மிடத்துக்கற்ற ஞானகலாவிலாசனுக்கு சாஸ்திர இரகசியத்தையுரைக்காதுபோனால் இன்னொருகாலத்திலிடர்ப்படுவான். இடர்ப்பட்டால் நாம் கற்பித்த கல்வி பயன்படாதுபோகும். பயன்படாத கல்வியைப் பழக்கிவைப்பதிற் பயனில்லை. இவ்விடந்தான் இதோபதேசஞ்செய்தற்கேற்றவிடம். இதுவே அதற்கேற்ற காலமும் என்று தீர்மானித்து. தூரத்தில் நின்ற ஒரு சீடனைக்கொண்டு அவனை அழைப்பித்தனர். வந்தவனும் விரைவாகத் தனது குருநாதனுடைய பாதகமலங்களில் விழுந்து வணங்கி அவர் உத்தரவினால் வடக்குமுகமாக இருந்தனன். இருந்தவனைப்பார்த்து மகனே ஞானகலாவிலாசா! நானோ கிழவன், சரீரமோ அந்தியமானது. ஆதலால், உனக்கு ஏதாவது சந்தேகமிருந்தால் கேட்டுக்கொள் என்று கூறியருளினர்.

இம்மொழியைக்கேட்ட புதியசெம்மலான அன்னோன் ஆனந்தக்கண்ணீருடனே ஹே! குரோ! யான் ஸகல வித்தைகளையும் தங்களாலுணர்ந்தவனாகவும், நிஸ்ஸந்தேகமுடையவனாகவும் இருக்கின்றேனென்று நினைத்துக்கொண்டிருக்கின்றேன். நிஸ்ஸந்தேகியாக என்னை மதித்துக்கொண்டிருக்கிற என்னைவிட மூடசிரேஷ்டனில்லையென்று நானே நினைத்துக்கொள்ளவேண்டியவனாகவும், எவன் தானே எல்லாக்கலைகளையும் உணர்ந்தவன் என்று தன்னை

மதிக்கின்றதே அவன் எக்கலையையும் உணராதவனென்பதை யுணரவும் இப்பொழுதுதான் சற்றே யுணர்ந்தேன்.

மநுஷ்யசரீரிகளான ஜீவர்களெதனையும் தனக்குத்தானே உணரும் ஆற்றலுள்ளவரல்லர். ஒருவனுணர்த்தினலதனை யுணர்ந்தபின்னர் தானே யுணர்ந்ததாக என்னும் சுபாவமுடையவர்கள். அத்தகைய மனிதசரீரத்தையுடையவனான நானும் எதைச் சுயமாக உணரப்போகின்றேன்; எதைக்கேட்டறியவேண்டுவது மிகவும் கட்டாயமென்று கேட்கப்போகின்றேன்.

வினவித் தெரிந்துகொள்ளவேண்டியவை இன்னவை என்றுணருமாறுள்ள ஆற்றலற்ற யான் எதனை வினவப்போகின்றேன். எது விஷயத்தை யான் ஸ்பஷ்டமாக வுணர்ந்திருப்பதாக நினைக்கின்றேனோ அதுவிஷயந் தேவர் திருவாய்மொழியாற்கேட்டால் நான்முன்னே உணர்ந்தேனென்று கருதிய கருத்துப் பொய்யாகவாகின்றது. ஆதலால் தேவரீர் அடியேற்குச் சந்தேகமென்றுமுண்டாகாதவண்ணம் திருவருள் புரியவேண்டும் என்று கூறினன்.

இங்ஙனம் ஞானகலாவிலாசன் அஞ்ஞானகலாவிலாசனுகாமல் அகம்பாவமின்றித் தாழ்மையோடுரைத்தனவற்றைக்கேட்டு மகத்தான சந்தோஷத்துடன் குருவானவர் ஓ குமாரா! நீ எப்படி இருக்கின்றாயென்று பார்த்தேன். இப்பொழுது நீ இவ்விஷயத்தில் நன்னிலைமையை அடையும் ஒருவனிருக்கவேண்டிய நிலையிலிருக்கின்றாயென்று தெரிந்துகொண்டேன். அதனால் இனி யுனக்கு என் மனதிலிருக்கும் ரகஸ்யமெல்லாமுரைக்கின்றேன் அவதானமாகக்கேள்.

சாஸ்திர இர்தையம்.

குரு:—மகனே ஞானகலாவிலாசா! நீ என்னிடத்தில் வேதமுதலிய கலைகளையெல்லாம் பூர்வமே கற்றிருக்கின்றனை. அக்கற்றநாள்களானுனக்கநேகமாக சந்தேகமே நாளுக்குநாள் அதிகமாகக்கூடும். அதற்குக் காரணம் அதன் இர்தையத்தை யுணராமையேயாம். சாஸ்திர இர்தையமென்றால் சாஸ்திரத்தின் உட்கருத்து. சாஸ்திரங்கள் பெயரா லநேகமாயினும் உண்மையிலொன்றென்றே உணரவேண்டும். நம்முடைய சாஸ்திரங்களதிகாரமுறையை அநுஸரித்துக் கூறுகின்றன. அதிகாரமாவது, இங்கே கிரகிக்கக்கூடிய சக்தி. அதிகாரத்தாலான வநுஷ்டானமும், கர்மம், பக்தி, ஞானம் என்னும் மூவகையினதாகவே நிற்கும் நம்முடைய சாஸ்திரமானது ஈஸ்வரனொருவனையே நித்தியமானவனாக உரைக்கின்றது. மற்றையவைகளை அநித்தியமானவைகளாக உரைக்கின்றது.

சிஷ்யன்:—ப்ரத்தியக்ஷமாக இருக்கிற லோகங்களையும் ஜீவர்களையும் இல்லையென்று சாஸ்திரங் கூறுமானல், விடைபகருந் தாங்களும் வினவுகின்ற யானும் வினவிடைநிகழு மிவ்விடமுமாகிய வேறுவேறான பதார்த்தங்களே, ஈசுவரனை அன்றி இதரவஸ்துக்க

ளுமிருக்கின்றனவென்று குறிப்பிக்கின்றன. ஆதலால் இவைகளைப் பொய்யென்றுரைத்தல் நியாயமாகுமா?

குரு:—கல்லாலாய வீடு ஆயிரவருஷங் கழித்தும், மரத்தாலாய வீடு நூறுவருஷங் கழித்தும், மண்ணாலாய வீடு முப்பதுவருஷங் கழித்தும், புல்லாலாய வீடு மூன்று வருஷங் கழித்தும், மணலாலாய வீடு மறுகணத்திலும் இருக்காமையைப் போல கிரமமாக அழிவுடையவையே நின்னால் கூறப்பட்டவிவை. இருபது வருஷத்திற்குமுன் இந்த உலகத்தில் நீ இருந்தனையா இல்லை. இருபதினாயிரம் வருஷங்களுக்கு முன்னே யானிருந்தேனா இல்லை. உலக சிருஷ்டிக்கு முன்னம் இந்த இடம் இருந்ததா இல்லை. இப்பொழுது நீயும் நானும் இருக்கின்றோம்; இந்த இடமும் இருக்கின்றது. அவைகளுக்குள்ள காலமானால் அழிந்தொழியும். குயவன் நினைத்தால் எத்தனை பானை வேண்டுமானாலும் உண்டாக்குதலைப்போல ஈசுவரன் நினைத்தால் எத்தனை தரமானாலும் இந்த உலகமாதிகள் உண்டாகிக்கொண்டே இருக்கும்; அதற்குடைய காலம்வந்தால் அழிந்துகொண்டே இருக்கும். ஆயிரம்வருஷங் கழிந்தழியுங் கல்வீட்டை நித்தியமானது என்று ஆலோசனைக்குறைவாலெண்ணி மகிழும் ஏழைமதியாளனைப்போல் பவன் எவனோ அவன்றான் காணப்படுதலால், உண்மையானவை இந்த லோகமாதியவென்று கருதுவான். விவேகி பொய்யென்றே கருதுவான்.

சி:—உலகத்திற்குத்தான் இது திருஷ்டாந்தமானாலும் உலகிலுள்ள உயிர்களுக்கும் இது திருஷ்டாந்தமாகுமா? உயிர்கள் அநாதி நித்தமானவை என்று பலரபிப்பிராயப்படுகிறார்களே அதற்கென்ன செய்வது? உயிரொன்றென்று வேறே இல்லையானால், பிறப்பிறப்புகளுக்கு அஞ்சுதல் முதலிய எவையும் வேண்டியதில்லையே. உயிரில்லாதபோது பிறப்பே இல்லையல்லவா?

கு:—உயிர்களை அநாதிநித்தமானவை என்பவர்கள் கருத்திற்கும், இறைவனைத்தவிர உயிர்முதலிய எதுவுமில்லையென்பவர்கள் கருத்திற்கும் எந்தவிஷயத்திலும் வித்தியாஸமேயில்லை. சொற்கள்தான் வித்தியாஸமாக இருக்கின்றன; இதனைக்கேள். ஈசுவரன் முதல்முதல் இந்தலோகத்தை யுண்டாக்கக் கருதுதற்கு முன்னம் ஜீவர்களென்னும் இரண்டாவதான பொருள்களில்லவேயில்லை. எந்நாள் இறைவன் ஜீவர்களை யுண்டாக்கினனோ அந்நாள்முதல் அவை அழிவுபடாதிருத்தலாலும், மஹாப்ரளயகாலத்திலன்றி அவை தங்களுக்குப் பிறப்பிடமான ஈசுவரனிடத்தில் ஒடுங்காமையாலும் உயிர்களை அநாதிநித்தமானவை யென்றார்கள் ஒருசாரார். மற்றொரு சாரார் சிருஷ்டிக்கு முன்னும் சங்காரத்திற்குப் பின்னும் ஜீவர்களுடைய வியவகாரம் கேட்கப்படாமையாலே ஜீவர்களையும் அநித்

தியமானவர்கள் என்கின்றார்கள். இவ்விரண்டு விஷயத்திலும் ஆராயுமிடத்து தோஷமில்லை.

உயிர்கள் நித்தியத்துவமுடையவையாய் இறைவனால் படைக்கப்படாதவையாய் உள்ளவை என்றுரைப்பவர்களும் சிலவிடங்களில் அவ்வண்ணமுரைத்துப் பலவிடங்களில் உயிர்களை அநித்தியமானவைகளாகவே உரைப்பார்கள். அவைகளை நீ நன்றாக உணர்வாய். மஹாப்ரளயம்வரைக்கும் உயிர்கள் நித்தியமானவையேயன்றி அநித்தியமானவையல்லவென்று நாம் துணிவாகப் பன்முறையுரைக்கின்றோம். மஹாப்ரளயத்திலும் உயிர்கள் ஈசனிடத்திலொடுங்காது என்று எவரும் கூறார். மஹாப்ரளயமென்பது ஸர்வஸங்காரப்ரளயம். இதற்கிடையில் உயிர்கள் சக்கரஞ் சுழலுவதைப்போல ஜனனமரணங்களிற் சுழலவேண்டியவையேயன்றி இன்பத்துடனிரா. இடையிலின்பத்துடனிருக்கும்வண்ணந்தான் பலர் பலவிதமான அபிப்பிராயங்களை யுரைத்தார்கள். நாம் அவ்வெல்லாரபிப்பிராயங்களையும் சரியானவையாகவே நினைக்கும்படி நினக்கு வற்புறுத்துகின்றோம். ஏனென்றால், முத்தியென்னும் ஒன்றைக் குறித்துப் பேசவந்தவர்களெல்லாம் பந்த ஒழிவைக் கருதியே பேசவந்தார்கள்.

பந்தத்துடனிருக்கும் வண்ணம் எவனும் விரும்பான். காலிலும் கையிலும் விலங்குமாட்டிக்கொண்டு எவனாவது உலாவுவான் விரும்புவானா? விரும்பான். அதுபோல, பந்தத்துடனிருக்க எவனும் விரும்பான். ஏனிருக்க விரும்பானென்னில், பந்தந் துன்பரூபமானதால். மோக்ஷம் என்றாலும், முத்தி என்றாலும், வீடு என்றாலும் விடுதல் என்னும் ஒருபொருள்தான். மோக்ஷம் அடைந்தான் என்றால், விடுதலையானான் என்று பொருள். எதை விட்டு விடுதலையானான்? பந்தத்தைவிட்டு விடுதலையானான். பந்தமாவது-தேகாதிப்பிரபஞ்சவாசம். ஒவ்வொருவரும் பந்தநாசத்தைத்தான் அடையவேண்டுமென்கின்றார்கள்.

சி:—உலகிலுள்ளாரிற் பெரும்பாலாரும் தேகாதிப்பிரபஞ்சவாசங்களைத்தானே விரும்புகின்றார்கள்?

கு:—பல்லக்கெடுப்பவன் சுமையெடுப்பது கஷ்டமானகாரியமென்று தெரிந்திருந்தும் தனது பிழைப்புக்கு வேறுவழியின்மையால் பல்லக்குச்சுமப்பதையே உயர்ந்த தொழிலாகக்கொண்டு உலாவுகின்றான். அதுபோலவே, பந்தமென்பது துக்கரூபமானது என்று தெரிந்தும் அதனைவிட அவர்கட்கு வேறுகதியின்மையால் அதனையே கட்டிக்கொண்டு அழுகின்றார்கள். தான் தக்காலம் இருக்கும் நிலைமைக்கு மேற்பட்ட நிலை கிடைத்தாலொழிய தன்னிலையை எவனும் விடான்.

சி:—ஆனால் அப்படிப்பட்ட பந்தத்தை எப்படி நிவிர்த்தி செய்துகொள்ளுவது?

கு:—அந்தப் பந்தமென்னுங் கட்டினை எவன் கட்டினனோ அவனைக்கண்டுகேட்டால் அவன் அதனை நிவர்த்திப்பான்.

சி:—அவனை எங்கே காணலாம்?

கு:—அவனிருக்குமிடத்திற்குச் சென்றாற் காணலாம்.

சி:—அவனிருக்குமிடம் எங்கே? எவ்விதமாக நடந்துகொண்டால் அவனிருக்குமிடத்தை யடையலாம்?

குரு:—நான் சொல்லும் வண்ணங்கேட்டால் அவனிருக்குமிடத்திற்குப்போகலாம்.

சி:—தேவரீர் மொழிப்படியன்றி வேறுவிதமாக நடந்து கொள்பவனும் ஒரு சிஷ்யனோ?

கு:—அவனிருக்குமிடம் வெகு தூரம். அவ்விடத்திற்குச் செல்பவன் தனக்குத்தோழனாக ஒருவனை அழைத்துக்கொண்டு போகவேண்டும். அவனை மனம் என்றுரைப்பார்கள். மனமாகிய புருஷனை துணையாகக்கொண்டு போனால் அவனிருக்கும் இடத்திற்கு வெகு விரைவாக அழைத்துக்கொண்டு போவான். காசி முதலிய இடங்களுக்குப் போவோர் விரத நியமங்களை அமைந்து செல்வதுபோலவே இவனைக் காணப் போவோரும் விரத நியமங்களைக் கைப்பற்றவேண்டும்.

சி:—அவையென்ன விரத நியமங்கள்? அவைகளைத் தெளிவாக உரைக்க வேண்டுகின்றேன்.

கு:—அவை அநேக விரத நியமங்கள். ஒவ்வொன்றாக உரைக்கின்றேன். இந்த நியமங்களையெல்லாம் மனமென்னும் தோழனைத்தான் கட்டாயப்படுத்தி அநுஷ்டிக்கச் சொல்லவேண்டும்.

உணவு.

ஊர்ப்பிரயாணம் போவோர் கட்டமுது கொண்டுபோவதை நீ பார்த்துங் கேட்டுமிருப்பாய். அதனைப்போல கடவுளிடத்திற்குப் போவோரும் நல்ல உணவையே உட்கொண்டு போகவேண்டும். உணவில்லாதுபோனால் எந்தக் காரியமும் ஆகாது.

நல்ல உணவு.

பால் நெய்முதலிய வெண்ணிறமான வஸ்துக்களாலும், சிக்கிரம் ஜீர்ணமாகும் சீரகச்சம்பாமுதலிய அரிசிகளாலும் ஆக்கப்பெற்றதும் பக்குவமானதுமான ஆகாரத்தையே புசிக்கவேண்டும். அப்படி புசித்தால், ஆகாரதோஷத்தாற் கெடுதியின்றி மனமாகிற தோழன் தான் இடைவழியில் விலகாமற் தொடர்ந்து வருவான். இந்த அபிப்பிராயத்தினாலேதான் பெரியவர்கள் பத்தியமாக இருக்கவேண்டும் என்று விதியேற்படுத்தி யிருக்கின்றார்கள். புத்தியென்னும் காலினால் சாஸ்திரம் என்னும் மார்க்கமாய்ப் போ

கும் பிரயாணியான முமுட்சுவிற்கும், அவன்றோழனாகிய மானசனுக்கும் மந்தமாகிய சோம்பல் முதலியவைகளை இந்த நல்லவுணவு உண்டாக்காது. நல்லவுணவினாலேதான் புத்தி தெளியவேண்டும். புத்திக் தெளிவில்லாமற்போனாற் பிரயோசனப்படாது.

கெட்ட உணவு.

வெள்ளுள்ளி, முள்ளங்கி, பறங்கிக்காய், காயம், மிளகாய்முதலிய தமோகுணவஸ்துக்களும், கறுப்பரிசி எண்முதலியவைகளும் மேற்குறித்தவர்களுக்கு ஆகாதவை. இவைகளை அங்கீகரிக்கவேண்டிய காலம் நேரிட்டால் மிதமாகவே அங்கீகரிக்கவேண்டும்.

மாமிசவுணவு.

மாமிசம் என்னும் உணவு மகாகெட்டது. மேற்கூறியவைகளை விடவும் இது மஹத்தான அபத்திய பதார்த்தம். இது பாவமென்னும் நோயை விர்த்தியாக்கி, நரகமென்னும் கொடிய துன்பத்தை விளைக்கும் என்று மேலோர் சித்தாந்தித்திருத்தலால் மேற்குறித்தவன் மாமிசமருந்தவே கூடாது. என்று அவன் மாமிசமருந்தினனோ அன்றே அவன்செல்லும் அந்த நல்ல வழியானது அவன் புத்தியென்னுங் கண்ணிற்குத்தோற்றாது மறைந்துபோகும்.

கடவுளிடத்திற்குச் செல்வோரன்றியுள்ள பிறருங்கூட மாமிசமாகிய உணவினை உண்ணவேகூடாது. சாஸ்திரங்கள் மாமிசமுண்பவனை மஹாபாவி யென்றுரைக்கின்றன. ஸர்வஸாக்ஷியாக இருக்கும் பரமேசுவரன் தன்னுயிரைப்போல வேற்றுயிரையும், தன்னுடலைப்போல வேற்றுடலையும் கெடாதவண்ணங் காப்பவனிடத்தில் அதிகமான பிரியமுள்ளவன். கடவுளுடைய திருவுள்ளத்திற்கு விரோத காரியமான மாமிசமுண்பவன், ஜீவனை இம்சித்தவனும் உடலை வருத்தினவனுமான இரக்கமற்றவனாகின்றான். அப்படிப்பட்டவனிடத்தில் கடவுள் தயவுள்ளவராக இருக்கவேமாட்டார்.

சி:—சிராத்தமுதலிய பூசாகாலங்களிற் கட்டாயமாக மாமிசங்களைவைத்தே நிவேதிக்கவேண்டுமென்று விதியேற்படுத்தியிருக்கின்றார்களே. தாங்கள் மாமிசவுணவே கூடாது என்கின்றீர்களே.

கு:—பாஷாணங் கலந்த மருந்தினை யுண்டவன் நல்லெண்ணெய் தொடக்கூடாது என்றும், உண்ணக்கூடாது என்றுங் கூறினால், வைத்தியன் கொடுக்கும் மற்றைய ஸாமான்ய மருந்திற்கெல்லாம் நல்லெண்ணெய் விரோதமாகுமா?

தன்னுடற்கு நோயை வருத்திக்கொள்ளவேண்டியவன் அபத்தியமாக நடந்துகொள்ளுதலே போதுமானதா யிருத்தலைப்போல, பாவத்தை யுண்டாக்கிக்கொள்வதற்கு மாமிசவுணவே போதுமானது. பிதிர்க்களைக்குறித்துச் சிராத்தமுதலிய செய்தல் அபக்குவர்களாற் செய்யப்படுங் கிரியை. கடவுளை நாடிப் பூசைமுதலியசெய்

தல் பக்குவர் கிரியை. அபக்குவனுக்கும் பக்குவனுக்கும் வித்தியாஸம் அநேகமாக இருத்தலால் அது இதற்குதாரணமாகாது. மாமிசமாகிய உணவினையுண்ண விரும்பினவனை நமது சாஸ்திரங்கள் நல்லவனை எங்கும் உரைக்கவில்லை. அவனையும் தள்ளப்படாமையால் யாகாதிகளில் அருந்துமாறு இவ்வண்ணமுரைத்து விதித்தன. ஓ மாமிசத்தை விரும்பினவனே! நீ அதன் நாற்றமுதலியவைகளை உற்றுப்பார், அவைகள் உன் மூக்கிற்கு நல்ல நாற்றமாகப் புலப்படுமானல் நீ அவைகளை அருந்து என்று பரிகசிக்கின்றன. பருந்தும்-கழுதும்-நாயும்-பூனையும்-புலியும்-செந்நாயுமாதிய பிராணிகள் எவ்வளவு நாற்றமுடையனவாயும், புழு நெளிவனவாயும், அருவருப்பான தோற்றமுடையனவாயும் கெட்டுக்கிடக்கும் மாமிசதுண்டங்களைக் கண்டவுடன் சதாசாரமுடையவன் பாற்குழம்பை விரும்புவதைப்போல விரும்பி விரைந்து மகிழ்ந்தருந்துகின்றன. ஓ! மாமிசமுண்பவனே! நீயோ நான் மாமிசந்தின்னுகிற சாதியென்று நீ சொல்லிக்கொண்டாலும், மேற்குறித்த பருந்தாதிகளைப்போல மகிழ்ச்சியுடன் கெட்ட மாமிசத்தையும், நாற்றமான மாமிசத்தையும், பழுதெறந்த மாமிசத்தையும் தொடவாவது, முகரவாவது, அவைகளின் நாற்றத்தைச் சகிக்கவாவது, அவைகளில் நெளியும் புழு முதலியவைகளைப் பார்த்துச் சந்தோஷிக்கவாவது செய்கின்றனையா? இல்லையே. அவ்வண்ணமிருக்க, உன்னை நீ எப்படி நான் மாமிசந் தின்னுகிற சாதி என்று சொல்லலாம்? நீ நின்னிடத்திருக்கும் துராசையினலுண்டான அறியாமையால் அவ்வண்ணமுரைக்கின்றனை. ஆட்டின் மூக்கிலொழுகுஞ் சீழ், ஆட்டின் வாயிலிருக்கும் புண், அதனிலொழுகுங் கோழை முதலியவைகளை ஆடு உயிரோடிருக்குங்காலத்துத் தொட்டாலும், கண்டாலும், நாற்றமடித்தாலும் கையைவைத்துத் தேய்த்துக் கழுவுகின்றனை. அப்பப்பாஎன்று மூக்கினை இறுகப்பிடிக்கின்றனை. ஆதலால், நீ மாமிசமுண்ணும் சாதியல்லை என்று நீயே தெரிந்துகொள்ளலாம். நாய் புலிமுதலிய வவ்வண்ணஞ்செய்கின்றனவா? இல்லை. ஆகலால், அவைகளை ஒருவாறு மாமிசமுண்ணுஞ் சாதியென்னலாம். ஓ! மாமிசமுண்பவனே! நாயும்-புலியும் - பருந்தும் - கழுகுமாதிய ஸாமான்ய ஜந்துக்களை நின்னினமாக நீயே வலியப்புகுந்து அங்கீகரிக்கின்றனையே. இதனல் நீ ஏன் வெட்கப்படவில்லை?

நின்னிடைத்தோன்றி வெளிப்பட்ட நின் மலமூத்திரங்களை நீ திரும்பத் தொட்டாலும் பார்த்தாலும் அருவருக்கின்றனை. அப்படிப்பட்ட நீ நின்மலம்-கபம்-மூத்திரம் முதலியவைகளைத் தின்னுகின்ற பறவை-பசு-பன்றியாதிகளை நீ கண்டிருந்தும் அவைகளை நீ எப்படி மகிழ்ச்சியுடனருந்த விரும்புவாய்? நினது உமிழ்நீர் நினது கபமுதலியவைவையையும், மலமுதலியவைவையையும், புழுக்களையுமே ஆகாரமாகக்கொண்டு சீவிக்கும் மீனினை நீ எவ்வண்ணமுண்டு

சகிக்கின்றனையோ? நின்னுடலி லுண்டாகும் கட்டி முதலியவைகளில் நின்றும் ஒழுகும் இரத்தம் சீழ்முதலியவைகளைக்கண்டு அருவருப்படையும் நீ ஆடு கோழியாதிகளின் சீழ் இரத்தம் முதலியவைகளை எப்படி யுண்ணச் சகிக்கின்றனை? ஓ! மாமிசமுண்பவனே! நீ மாமிசத்தின் தன்மையை உனக்குள் சிந்திக்காமையினாலேயே அதனையுண்ண விரும்புகின்றனை. ஓ! மாமிசமுண்பவனே! நினது கையையோ காலையோ ஒருவன் வெட்டிவிட்டால் நீ மிகவும் ஸந்தோஷத்துடனிருப்பையா? புரண்டு புரண்டு அழுவையே. மூர்ச்சிப்பையே. ஹே! புலாலருந்துபவனே! நின் கையையும் காலையும் வெட்டாது போனாலும் ஒரு சிறிய முள் நின் காலிற்பட்டால் நீ எவ்வளவு துன்பப்படுகின்றனை? ஓ! மச்சமுண்பவனே! நீ உண்ணுஞ்சோற்றில், அல்லது நீ யுண்ணும் மீனில், அல்லது நீ யுண்ணும் மாமிசத்தில் உள்ள ஒரு கல்லேனும், நெல்லேனும், உரோமமேனும், முள்ளேனும், எலும்பேனும் நினது தொண்டையி லடைத்துக்கொண்டால் நீ வெகு துன்பப்படுவையே. இந்தவிதமான துன்பம் ஸகல பிராணிகளுக்கும் சரியானதாக இருக்க, மீன்களைப் பிடித்துண்ண நின்பொருட்டுத் தூண்டில்போட்டால் அந்தமீன்கள் துன்பப்படுவதை நீ ஏன் ஆலோசிக்கின்றாயில்லை? ஓ! மாமிசபட்சணியே! நினது புத்திராதிகளுக்கேனும், பந்துக்களுக்கேனும், நினக்கேனும் ஒரு கொடிய துன்பம்நேரிட்டால் நீ ஒரு எள்ளளவாவது மகிழ்ச்சிகொள்கின்றனையா? இல்லையே. நின்பொருட்டு மீன்களைப்பிடிக்கும்பொழுதும், அவைகளின் கழுத்தை முறிக்கும்பொழுதும், அவைகளை யுண்ணும்பொழுதும் நீ ஏன் கவலைப்படுகின்றாயில்லை? அவைகள்படுந் துன்பத்திற்கும், நீயும் நின்னினத்தாரும் படுந் துன்பத்திற்கும் வித்தியாசமில்லையே. துன்ப மனைத்துயிர்கட்கும் சமானந்தானே. ஓ! இரக்கமற்றவனே! நீ அவ்வண்ணம் இனிச் செய்யாதே.

க்ஷமணர் நிறைந்த ஊருக்குளெந்த வலைஞனேனும் மாமிசங் கொண்டுபோவானோ? இல்லை. அவர்கள் (சைநர்) பொருட்டு எவனேனும் மீன் பிடிப்பானோ? இல்லை. நீ மாமிசம் தின்பவனாக இருந்தால் அன்றி நின்பொருட்டு எவனு மாமிசத்தைச் சம்பாதியான். நின்வீடு மாமிசபோசனமில்லாத வீடாயிருந்தால் நின் வீட்டிற்கு எவனு மாமிசத்தைக் கொண்டுவரான். ஓ! மாமிசமுண்பவனே! வாங்குவாரில்லாவிடில் விற்பவர் கடைவைப்பார்களா? மாமிசத்தைப் பிறவித்தொட்டுத் தொடாதவர்கள் எத்தனைபேர்கள் நல்ல பலசாலிகளாக இருக்கின்றார்கள். இலைக்கறி பழம் முதலியவைகளான சுத்தாகாரத்தை யுண்டுவாழும் தபசிகள் அநேக வருஷம் ஜீவித்துச் சுகமாக இருத்தலை நீ பார்க்கவில்லையா? மாட்டையும், பன்றியையும், கோழியையும் தின்பவர்கள் அற்பாயுளாக இருந்து இறந்துபோனதை நீ பார்த்ததில்லையோ? மாமிசமன்றி வேறொன்றையுமே தின்னாதவர்களிலநேகர் நடத்தற்கும் சக்தியின்றித் தடு

மாறுவதை நீ பார்க்கவில்லையோ? ஓ! மாமிசபோசனியே! அநுசித
வுணவான மாமிசத்தையுண்டால் உண்டான வாயிலுள்ள நாற்றத்தை
யகற்ற நீ எத்தனைவிதமான காரியங்களைச் செய்கின்றாய்? நீ மாமிச
த்தை விரும்பாதுபோனால் சகல பிராணிகளும் நின்னைக்கண்டால்
எவ்வளவு சந்தோஷத்தை அடையும். அதிககஷ்டத்துடன் யாகாதி
களைச்செய்து அடையும் புண்ணியங்களைவிட அநேகவிதமான
புண்ணியங்கள் மாமிசமுண்ணாதவன் அடைகின்றான் என்று பெரி
யோர்கள் கூறுவதை நீ ஏன் கேட்கவில்லை? எல்லாம் வல்ல இறை
வன் திருவருளை எதிர் பார்ப்பவன் இறைவன் திருமனத்திற்கு
விரோதமான ஊன் தின்னலை ஒருநாளும் விரும்பவே கூடாது.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்" என்றுரைத்தபடி, ஜீவகாருண்யம்
வேண்டியவன் ஊன் தின்னவே கூடாது. ஊன் தின்பவனை ஈஸ்வர
பக்தியுள்ளவனென்றுரைத்தலும் பொய். முக்கியமாக மேற்குறி
த்த பிராணிக்குக் கொடிய விரோதமான வஸ்துவாகவுள்ளது
மாமிசபோசனமே. மாமிசபோசனமுள்ளவனை இவன் கடவுளிருப்
பிடத்தை நாடிப்போவானானால் விளக்கெண்ணை விளக்கும், விளக்
கற்சிலையும் இருக்குமிடத்திற் காளி முதலிய தேவதை சேராமை
யைப்போல கடவுளும் அவ்விடம்விட்டு விலகிவிடுமென்று பெரி
யவர்கள் உரைத்துள்ள சாஸ்திர இரகசியங்களுரைக்கின்றமை
யால் மேற்குறித்தவன் மாமிசபோசனமில்லாதவனாகவே செல்லு
தல்வேண்டும்.

மத்தியபானம்.

சி:—மதுவிலென்ன கெடுதியுளதென்று அதனை விலக்க விதி
த்தார்கள்?

கு:—மதுவினால் அறிவழிவு முதலிய அநேகம் கெடுதிகளுண்
டாதலால் கூடாதென்றுவிதித்தார்கள்.

சி:—வித்வான்கள் பெரியபெரிய காவியங்களில் ஸ்திரீபுமான்
கள் குடித்து மகிழ்ச்சியாக விருந்தார்களென்று எழுதியிருக்கின்
றார்களே.

கு:—கெடுதியான வஸ்துவாகவிருந்தாலும் நல்ல வஸ்துவாக
விருந்தாலும் உலக நடவடிக்கைகளை எழுதவந்தவர்கள் உள்ளதை
யுள்ளபடி எழுதுவார்கள், பெரிய பெரிய புராணங்களில் கவிகள்
காமிகளான ஸாமான்ய ஜனங்களின் நடவடிக்கைகளையெடுத்துரை
த்துப் பரிகசித்தனரேயன்றி நீராடியான பின்னர் கட்குடிக்கவே
ண்டும் என்றெழுதினார்களா? இல்லை. காமிகளான ஸ்திரீபுமான்க
ளின் காமக்கிரீடையை வர்ணிக்கவேண்டிய ஸந்தர்ப்பங்களிலவர்
கள் செய்யுந் துர்ச்செய்கைகளை விளக்கினார்களென்றுணர்ந்துகொ
ள். கடவுளைநாடிக் கடவுள் ஸந்நிதானத்திற்குச் செல்பவன் மாத்தி

ரமல்ல, வேறு சரீரபோஷணையாதிகளைச் செய்துகொண்டு உலகில் வாழும் ஸாமான்னியர்களுக்குங்கூட மதுகெடுதியை விளைக்குமேயன்றி அவர்களந்தஸ்திற்கேற்ற நன்மையை அது கொடாது.

ஓ! கள்ளுண்பவனே! கள் ஒரு சிறந்த பொருளல்ல. அதனை அருந்துபவர்களை அது தன்னிலைமையினின்றும் தாழ்த்திவிடும். ஆதலால், நின்னளவிற்கு ஏற்றதாகவுள்ள கீர்த்தியாதிகளை நீ கள்ளுண்டிழக்காதே. ஓ! மதுபானியே! உலகின் மனிதனைப்பிறந்தவன் நல்லவர்களால் நல்லவனென்று மதிக்கப்பெறவேண்டும். நீ எவ்வளவு உயர்ந்த நிலைமையிலிருந்தாலும் நீ கட்குடியனாகவிருந்தால், நின்னை நல்லவர்கள் நல்லவனென்று மதியார்கள், ஆதலால், நீ கள்ளினை ஒரு நல்லவஸ்துவாகக் கருதி அதனைப் புசியாதே. ஓ! சாராயமென்றுபெயருள்ள கள்ளினைக்குடிப்பவனே! நீ கள்ளையுண்டபின் நீ சுயபுத்தியுடனிருக்கின்றனையா? இல்லையே? உனக்குள்ள புத்தியின்றன்மையைக் கெடுப்பதான மதுவினைப்பற்றி யுன்னுக்குள் நீ ஆலோசித்துப் பார்த்திருப்பையாகிலதனை அன்றே விட்டுவிடுவாய். குடித்தற்குமுன்னம் எந்த வஸ்துவைக்கண்டு நாணுகின்றானோ அந்த வஸ்துவை குடித்தானபின் கண்டால் கட்குடியன் நாணுகின்றதே இல்லை. ஆதலால் மதுவருந்துவதை விட்டுவிடு என்று சாஸ்திர நிர்ணயங்களுரைக்கின்றன. பொதுவாகவே சாஸ்திரங்கள் எவனையும் மதுபானங் கெடுத்துவிடுமென்று சொல்லுமானால் கடவுளைக்காணப் பிரயாணியாக நிற்பவனே நீ கள்ளினை உண்ணென்று சாத்திரம் எவ்விடத்திலு முரைக்காது. ஆதலால் கள்ளருந்துதலை விட்டுவிடவேணும்.

சி:—அண்ணலே! சாஸ்திரங்கள் மதுபானங்கள் கூடாது என்றுரைக்கின்றன என்கின்றீர்கள். உலகினிலநேகர் மத்தியபானத்திற் கடவுள் பிரத்தியக்ஷமாக இருக்கிறார் என்றுரைத்து ஸதா குடிவெறியிலேயே இருக்கின்றார்களே ஏன் அப்படி இருக்கின்றார்கள்?

கு:—தன்னறிவு கெட்டுண்டாகும் பித்தவெறியில் அநேகமான பொய்த்தோற்றங்களுண்டாகலாம். அவைகளெங்ஙனம் கடவுளின் தோற்றமாகும். அவை பொய்த்தோற்றமென்றும், அவர்களப்பொழுது கூறும் அம்மொழிகளெல்லாம் சுத்த அபத்தமானவையென்றும் நீ உணர்ந்துகொள்.

சி:—உண்மையென்று தானேன் கருதப்படாது?

கு:—குடிவெறி தெளிந்தபின்னர், குடியர் கூறியவை குடியருக்கே தெரியாமையாலும், அவர்கட்கே அவை திர்ப்திகரமாக இருப்பதாகக் காணப்படாமையாலும் அபத்தமென்றறிந்துணர்ந்தோம்.

மேலோரும்—"கையறியாமையுடைத்தேபொருள்கொடுத்து
மெய்யறியாமைகொளல்" என்றனர். தன்னுடம்பினை

பாதுகாத்தற்கன்றோ உலகினர் நல்வீடு கட்டுதலும், நல்லாடையுடுத்தலும், பணஞ் சேகரித்தலும், உத்தியோகம் புரிதலுமாதிகளைச் செய்கின்றனர். அப்படிப்பட்டவரில் அநேகர் தமக்கென ஒரு அறிவில்லாக்குறைவினாலன்றோ பணத்தைக்கொடுத்து உடன் மறப்பைத்தருகின்ற மதுவருக்கங்களை (பீர் ஒயின் பிராந்தி பட்டை முதலிய சாராயங்களை) வாங்கிக் குடிக்கின்றார்கள். அநேகர் தம்மைப் பிறர் மதுவருந்தாத மகா யோக்கியர் என்று நினைப்பார்களென்று கருதி, கடைகளுக்குட்சென்று வாங்கி யவ்விடத்திலேயே குடியாமல் ஆள் அநுப்பி அழைப்பித்து இராத்திரிகாலங்களில் தன் வீட்டிலுள்ளவர்களிலும் சிலர்க்குத் தெரியாதவண்ணங் குடித்துப் பகலில் தன்னைப்போலன்றி கடைகளுக்குட்சென்று குடித்துவிட்டுத் தெருவிலுலவும் பழங்குடியர்களைப்பார்த்துச் சுத்த மூடப்பயல் குடிக்கத்தெரியாதவன் குடித்தா லிவ்வண்ணம் விழச்சொல்லுமோ என்று தான் குடியனல்லாதவனைப்போல சிலகாலம் பேசுவதும், பின்னர் என்றேனும் ஒருதினம் வாங்கிக்கொண்டுவந்து கொடுப்பவனுக்கு அசந்தர்ப்ப நேர்ந்தவன்று "ஆபத்திற்கு பாபமில்லை"யென்று தானே கடைக்குள் நுழைந்து மறைவாகவாங்கி வீட்டிற்குட் கொண்டுசென்று குடித்துப் பின்னர் வீட்டிற்கு மறைவாக எடுத்துக்கொண்டுபோவதென்றால் கஷ்டம். அரசசேவகர்கள் காணுவார்களானால் வம்பு நேரிடும் என்று கடைக்குள்ளேயே மறைவிற்குடித்தும் நாமென்ன நமது காசைக்கொடுத்துத் தானே வாங்குகின்றோம். நமக்கென்ன வெட்கம் என எல்லாரும் குடிக்குமிடத்திலேயே குடித்தும் பாவர்களாலும் குடியன் கொடியன் நடியன் மடையன் என்றிகழ்வான் எற்றவர்களாகின்றார்கள்.

"கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு." என்று கூறியுள்ளபடி,

குடியனொருவன் தான் குடிக்காத சமயத்துக் குடித்திருக்கும் மற்றொருவனைக் கண்டு நாணி, நாமும் குடித்தா லிப்படித்தானே செய்வோமென்று எண்ணினால் பின்னர் மதுவருந்துவானோ? தனக்குச் சுபாவமாகவுள்ள அறிவினைக் கெடுக்கும் எந்த வஸ்துவையும் புசிக்கப்படாது. அப்படி அநுசிதமான வஸ்துக்களை யுண்டுலாவுவோர் எள்ளளவும் நன்மையைச் செய்யார். நன்மை செய்யாதபோது மறுமையில் நல்ல சுகமுதலிய எதுவு மவர்கட்குக் கிடையா.

அபினாதிய வுணவு.

சி:—மாமிசம். மது என்னும் இவ்விரண்டுந்தானே கொடியவை. இவைகளைப்போல கொடிய வஸ்துக்கள் வேறேயும் இருக்கின்றனவா?

கு:—இன்னம் அநேகம் வஸ்துக்கள் இருக்கின்றன.

சி:—அவை யாவை?

கு:—அவை அபின், கஞ்சா, சுருட்டு, பொடி, பூரணாதி, மஸ்து, குடாக், செண்டு, ராமரஸம், மதனகாமேசுவரிப்பூ, ஜாதிக்காய், எட்டிக்காய் முதலியன. இவைகளிலொன்றினைத் தனியே தின்றாலும், சிலவற்றை அல்லது பலவற்றை ஒன்றாகக்கலந்துதின்றாலும், அல்லது இவைகளின் புகைகளை இழுத்தாலும், அல்லது இவற்றின் பொடிகளை முகர்ந்தாலும் புத்திதெளிவற்று, போதையென்னும் மயக்கத்திற்கு ஆளாகி, அறிவுகெட்டு கட்குடியரிலும் கொடிய துன்மார்க்கர்களாகின்றார்கள். ஐயோ! என்ன பாவம்! அநேகம்பேர்கள் தாய்தந்தையர்களையும் மனைவிமக்களையும் இழந்து, வீணாகக் கெட்டுச் சோம்பேறிகளென்னும் பட்டப்பெயர் வாய்ந்தவர்களாய் ஒரு கையில் உக்காக் குடுக்கையையும், மற்றொரு கையில் வெல்லை முதலிய இனிப்புவஸ்துக்களையும் வைத்துக்கொண்டு தலைகவிழ்ந்த வண்ணமாகக் கிடத்தலையும், பலரவரைப் பரிகசித்தலையும் பார்த்திருந்தும் அதுகாறு மப்பழக்க மில்லாத வொருவ னந்தக் கொடிய வேலையிற் பிரவேசிப்பானானால் அவனைவிட மூடனும் துன்மார்க்கனும் எவன் இருக்கின்றான்?

கள்ளும் சாராயமும் குடிக்கப் பழகினவன் அதனை விட்டவுடன் சரீரசுகத்தை அடைவான். அபின் முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகப்படுத்துபவர்கள் அவைகள் கிடையாத ஸமயத்தில் கைகால் இழுத்தல், வாயில் நுரைதள்ளுதல் சித்தப்பிரமை யுண்டாதலாதிய கொடிய வியாதிகளுக்குள்ளாகி அருமையான சரீரத்தினைத்தை இழக்கின்றார்கள். மஸ்து முதலியவைகளை யுபயோகப்படுத்துபவர்கள் தத்காலம் இருக்கும் நிலைமையை ஆலோசித்தால் மூடனும் அந்த வேலையைச் செய்ய விரும்பான். இந்த லாகிரிகளை யுபயோகிப்பவர்கள் வன்மையையிழந்து காலிருந்தும் முடவர்களைப்போல நகரவேண்டுபவராகின்றார்கள். எத்தனை பேர்களை நாம் நகரவீதிகளின் திண்ணைகளிற் பார்க்கின்றோம். அவர்களிற்பெரும்பாலார் இவ்வுலகபோகத்திற்குத் துணைக்கருவியான மிகுந்த தகுந்த செல்வமுடையவர்களே. செல்வமிருந்தும் இல்லாதுபோயும் என்ன பிரயோசனம்? மஸ்து முதலிய லாகிரிகளை உபயோகப்படுத்துவோர் ஆண்டன்மை யென்னும் புருஷத்தனத்தையுங்கூட இரவல் கொடுத்துவிட்டுத் தவிக்கின்றார்கள். யாதொரு பிரயோசனமுமில்லாத லாகிரிகளை உபயோகப்படுத்துபவன் மூடரின் முன்னே நிற்பவன்.

சி:—பெரியோர் என்று கூறப்படுபவர்களி லநேகர் இந்த மருந்துகளை உபயோகப்படுத்துகின்றார்களே அது ஏன் உபயோகப்படுத்துகின்றார்கள்.

கு:—மூடர், தம்மிலுயர்ந்தவர்களை ஒருவருக்கொருவர் பெரியோரென்றுரைத்தலும், மேற்கூறிய சோம்பேறிகள் ஒருவருக்கொ

ருவர் ஸ்வாமி என்றழைத்தலும் ஸர்வ ஸாமான்யமான வழக்கம். ஸர்வேச்வரனை தியானிப்பவனுக்குச் சரீரத்தை மறத்தலென்னும் பெருங்குணம் வழக்கம்; அந்த வழக்கத்தையும் ஈஸ்வரனை தியானிக்கு முறைகளையும் ஸம்ப்ரதாய முறையாக அறிந்துகொள்ளாதவனும் தன்னை ஸாமான்யராவது பெரியோரென்று அறிந்துகொள்ளாதவனும் தன்னை ஸாமான்யராவது பெரியோரென்று கூறவேண்டுமென்று அபிப்பிராயம் கொண்டு, கள் - சாராயம் - கஞ்சா - பூர்ணாதியாதிகளை யருந்தி உடலை மறந்துண்டாகும் மயக்கத்தினை ஆனந்தமாக நினைத்து அகங்கரித்து இம்மையிற் பழியையும் மறுமையில் நரகவேதனையையுமே கதியாகக்கொண்டு கெடுவார்கள். ஆகலால் அவர் வாய்மொழிகள் அப்பிரயோசனமானவை.

இந்த உலகத்திற் கெட்ட நடவடிக்கைக்காரர் முக்காலே அரைக்காற் பங்கும் நல்ல நடவடிக்கைக்காரர் அரைக்காற் பங்குமாக இருக்கின்றார்கள். இவையுஞ் சரியான தொகைகளல்ல இன்னும் சுருங்கும். ஆயிரம் வீடுள்ள ஒரு கிராமத்தில் ஐந்துகடை பத்துக்கடை, பதினைந்துகடை இவ்வண்ணம் லாகிரிகளையும் மாமிசங்களையும் விற்கும் கடைகளிருக்கின்றன. இனிப்புள்ளவையும் அருமையானவையுமான, தின்பண்டங்களை விற்கும் கடை இரவே இரா. இருந்தாலும் செய்யும் சரக்குகள் விலையாகா. இம்முறைகளினாலே கெட்ட நடவடிக்கைகளையுடைய ஜனங்கள் நிரம்பின உலகவாசியான ஒரு ஸதாசாரமுள்ளவன் தன்னெண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வது கஷ்டஸாத்தியம். ஜலதோஷத்திற்கு என்று புகையிலைப் பொடியை மூக்கிலிழுப்பவன் அதுமுதலதே மயமாய் ஸதா பொடியோ பொடியென்று இடுப்பிலொரு பட்டையை வைத்துக்கொண்டு ஜலதோஷமில்லாத வெயிற்காலத்திலும் அதனையுபயோகப்படுத்தி ஸகல அறிவும் பிறத்தற்கு இருப்பிடமான மண்டைச் சோற்றினையும், (மூளையையும்) கண்ணையும் கெடுத்துக் கொள்ளுகின்றான். கண்ணன்றோ ! எல்லாவுறுப்புகளைவிட இந்த சரீரத்திற்குப் பிரதானமானது அதற்குக் கேடுவரும் என்று தெரிந்தும் ஒருவன் புகையிலைப் பொடியை உபயோகப்படுத்தினால் உபயோகப்படுத்துவோனை எவ்வளவு சிறந்த விவேகியாக ஊகிக்கலாம். இந்தப் புகையிலையின் பொடியைக் காட்டிலும் அநேகம்பங்கு கெடுதியை யுண்டாக்குவன என்று தெரிந்திருந்தும் அநேகர் தம்பல்லிற்கும், உதட்டிற்கும், கண்ணிற்கும், மூளைக்கும், ஒளிக்குறைவும் துர்ப்பலமு முண்டாகும்வண்ணம் புகைச்சுருட்டுப் பிடிக்கின்றார்கள். ஸாமான்னியமானவர்களை இவ்வளவுகோபாதிகளுக்குள்ளாக்கும் மது முதலிய லாகிரி வஸ்துக்களை கடவுளை நாடிச் செல்லும் நல்லவன் உபயோகப்படுத்தவே கூடாது. உபயோகப்படுத்துவானானால் அவன் தான் நினைத்தபடி குறிப்பிட்ட இடத்தினை அடையாமல் அதோகதியை யடைவான்.

சூது.

பெற்றுவித்த வாசிரிவன் துக்களை உபயோகப்படுத்தக் கூடாமையன்றியுங் கடவுளுக்கை காய்ச்செய்பவன் கொடியதான சூது என்னும் விளையாட்டினையும் விட்டுவிடவேண்டும்.

சி:—சூதாடுவதனால் தோஷமென்னை? கொடிய செய்கையான மதுபானத்தைப்போல கெட்டதா?

கு:—சூதாடுவது மகா தோஷமான காரியம். அது மதுபானத்தைவிடவுங் கெட்டதே. கடவுளின் இருப்பிடத்தை காடிர்செல்லாத மாயான்யமானவையும் சூது தன்னிடையில் நின்றுங் கெடுத்துவிடும். சூதாடுவதில மனதைச் செலுத்தினவன் அத்தொழிலன்றி வேறொன்றிலுந் தன் மனதைச் செல்லவிடான். நிஷ்பிரயோசனமான சூதில் மனதைச் செலுத்துவதனால் ஒருவனுக்கு என்ன லாபமுண்டாகப்போகிறது?

"வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. என்றும்,

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதினு முண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு. என்றும்,

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ
அருள்கெடுத் தல்ல லுழப்பிக்குஞ் சூது" என்றும் பெரியோர் கூறியபடி, சூதாடுதலானது ஒருவனுக்குத் திரவிய லாபத்தைத் தருவதானாலும் ஒருபணம் வென்றவன் பின்னர் நூறுபணத்தினை யிழக்கின்றான். தனது சொந்த திரவியத்தை இழந்துவிடுவதுமன்றி; முன்னர் பழகாத பொய்ப்பேசவும் பழகுகின்றான். பொய்யிறுதியால் இரக்கமின்மையையடைகின்றான். இரக்கமில்லாதவன் எதற்குப்போகமானவன்? தனது திரவியங்களையும் இழந்து, பெண்டுகள் கூட கண்டகண்டவிடங்களில் பாவி! பெண்சாதி தாலியைக்கூட அறுத்துவைத்து ஆடிவிட்டானே, அவனைக் கட்டையிலே வைக்க வென்று ஆசீர்வசனங் கூறுமாறான போக்கியதைக்கும் ஆளாகிக் கெடுதியை அடைகின்றான்.

நளனென்னுமரசன் புட்கரனென்னும் ஒருவனொடு சூதாடினதனாலன்றோ தன் நாடு செல்வ முதலியவைகளை இழந்து கானம் புகுந்து மானமழிந்தான். யுதிட்டிரனென்னுந் தருமபுத்திரன் சூதாடினமையாலல்லவா இந்திரசெல்வத்தினும் மிக்க செல்வத்தினை இழக்கவேண்டியவனானான்.

பண்டைக்காலத்தரசருட் சிறந்த நளனும் யுதிட்டிரனும் வறுமையாளராமாறு செய்த சூது சாமான்யரான மற்றையோரை எம்மன்னராக இருக்கச் செய்யுமோ? செய்யா. ஸன்னியாசிகள் முதலிய சிலர் சதுரங்கமுதலிய ஆட்டங்களைச் சூதல்லவென்றும் பந்தய

பின்மையால் தோஷமில்லையென்றுங் கருதிக் கையாடுகின்றார்கள்.
ஆலோசிக்குமிடத்து இது முன் கூறிய சூதாடிகளடையும் துன்
பத்திலும் அதிகமான துன்பத்தை யடையச் செய்கின்றது. ஆத
லால் ஸதாசாரமுள்ளவர்கள் சதுரங்கம் முதலியவைகளையும் ஆட
லே கூடாது. ஏனெனில், ஸன்னியாஸிகளி லொருவர் இவ்வண்ண
முரைத்திருக்கின்றார். நான் சிலகாலங்களுக்குமுன் சதுரங்கமாடுத
லென்னும் இந்த துரப்பியாஸமுள்ளவனாக இருந்தேன். முதலில்
இந்த சதுரங்கங்களை நான் மனதின் ஓய்வை அகற்ற நல்லதொரு
வழியென்று மகிழ்ச்சியுடன் கருதிப் பழகினேன். பழகிய பின்னர்
அடிக்கடி ஆடத்தெரிந்தவர்களுடன் ஆடிக்கொண்டே வந்தேன்.
சில தினங்களுக்கெல்லாம் நிட்டைபுரிதல், அரனை அருச்சித்தல்
ஹரியை நினைத்தல் முதலிய ஒவ்வொரு காரியங்களையும் சுருக்கி
னேன். பின்னர் இரவும் பகலும் அதை ஆடுவதையே தொழிலாகக்
கொண்டு இருந்தேன். அதனை ஆடாத சமயங்களிற்கூட ஆடுவதாக
பாவனைசெய்து ஆட்டத்திற்கு வேண்டிய யுத்திகளை யுத்தேசித்
துக்கொண்டுவந்தேன் நானதனை ஆடப்பழகிய ஒருவருஷத்திற்கெ
ல்லாம தேவதார்ச்சனை முதலியவான வனைத்து நல்ல காரியங்களையு
ம் விட்டொழித்தேன். நான் அருமையாகப் படித்திருந்த சாத்திர
ங்களையும் மறந்தேன். பின்னர் அயுக்தமான நடவடிக்கையாளர்க
ளோடு ஆடப்பழகினேன். பின்னர் பந்தயமும் வைத்தாடினேன்.
அதனை ஆதாரமாகக்கொண்டு எல்லாவித கெட்ட செய்கைகளையும்
பழகி எனது நிலைமை மறந்து கேவலமானவனாயினேன். எனது குரு
வானவர் இதனையுணர்ந்து நானிருக்குமிடத்திற்கு வந்து அட துஷ்
டனே! நீ நன்மைப்படுவாயென்று கருதினேன், கடைசியில் மஹாபா
வியாகிவிட்டனையே யென்றார். உடனே நானவரைப்பார்த்து என்னரு
மையான ஐயாவே! நானப்படிப்பட்ட கெட்டகாரியமொன்றுஞ் செ
ய்யவில்லையே என்றேன். அதற்கவர் கண்சிவப்புள்ளவராய் நீ நினது
இஷ்டதெய்வத்தையும் கற்ற நூல்களையும் மறந்து ஸாமான்யனை
ஒரு அயோக்கியனைப்போல இரவும் பகலும் சூதான சதுரங்கமா
டுகின்றனையே, இதனால் நீ நின்னிலையினின்று தவறினதுமன்றி
க்கேவலம் மூடனுமாகினாய் பாவியுமாகினாய் என்றனர். இம்மொழி
கேட்ட யான் திடுமென்று சதுரங்கம் ஆடப்பழகு முன்னம் நடந்
துகொண்டதனையும் தத்காலம் நடந்துகொள்வதனையும் குறித்து
ஆலோசித்தேன். என் நடவடிக்கைகள் எனக்கே அருவருப்பாக
விருந்தன. அதனால் நான் என் குருநாதனை வணங்கி நான் இவ்வ
ளவு நிலைமையிலிருத்தலை ஆலோசியாது போனேன். எனக்கு
இனிப் பழய ஆசாரம் எவ்வாறு கிடைப்பபது என்றேன். அவர்
நீ பழயபடி சிலகாலம் நம்மிடத்திலிருந்து இக்கெட்ட செய்கைக
ளை மறந்தால் பின்னர் பழைய நிலைக்கு வருவாய் என்றனர். நான்
அவ்வண்ணமே செய்து அன்று முதல் சதுரங்கமுதலிய எவற்றை

யும் ஆடுவோரோடு பழகுதலை யொழித்தேன். பின் சில தினத்தில் எனது பழைய நிலைமையை யடைந்தேன். ஆதலால் சூதென்பது மகா கெட்டது. அது எவரையுமே கெடுப்பது என்றனர். அதனால் கடவுளிருப்பிடத்தை நாடிச்செல்லும் ஜந்துக்கள் சூதினைக் கட்டாயமாக நேரம்போக்கிற்காகவும் ஆடம்பரமையுடன் கொலைபுரிதலையும் செய்யப்படாது.

கொலை.

யாதொரு காரணத்தையுங் கருதாமலே அநேகர் பிராணிகளை வதைக்கின்றார்கள். மாமிசத்தையுண்ணும் வழக்கமில்லாதவர்களிலும் சிலர் வேட்டை (சிகாரி)யாட விரும்புகின்றார்கள். இத்தொழில் மேற்குறித்த பிரயாணிக்கு மகாவிரோதமானது. எந்த வுயிரினையும் கொல்லாமையையுடையவனிடத்துக் கடவுள் விருப்பமுடையவராகவிருக்கின்றார். ஆதலால், கொலை புரியாமையையுடன் ஜீவகாருண்ணியத்தையும் உடையவனாக இருக்கவேண்டும்.

ஜீவகாருண்ணியம்.

கடவுளை நாடிச்செல்லும் இயல்பினையுடையவன் மேற்குறித்த ஒழுக்கங்களுடன் ஜீவகாருண்ணியம் என்னும் ஒழுக்கத்தையும் உடையவனாக இருக்கவேண்டும்.

சி:—மேற்கூறிய புலாலுண்ணாமை கட்குடியாமை சூதாடாமை என்னும் இவைகளின் குணங்களுக்குள் ஜீவகாருண்ணியம் அடங்காதோ? புலாலுண்ணாமை முதலியன ஜீவகாருண்ணியந்தானே? இவைகளையன்றியும் ஜீவகாருண்ணியம் வேறே ஒன்றிருக்கின்றதோ? மாமிசபோஜனமில்லாதபொழுதே ஜீவகாருண்ணியம் உள்ளவன்தானே என்றான்.

கு:— மாமிசமுண்ணாமை முதலியவைகளைக் கைப்பற்றினதனாலேயே பூரணமான ஜீவகாருண்ணியமுள்ளவனாக ஒருவனை மதிக்கவியலாது. தந்தையுந் தாயும் மாமிசமுண்ணாதவர்களாகவும், மதுவருந்தாதவர்களாகவும் இருந்தால், அவர்கள் மக்களும் மாமிசமுண்ணாதவர்களாகவும், மதுவருந்தாதவர்களாகவும் இருக்கலாம். அதனாலே அந்த மாமிசமுண்ணாதவன் ஜீவகாருண்ணியத்தை யுணர்ந்து பிறவுயிர்க்கொலையைத் தானாகவிட்டவனல்லன். அதனால் அவனுக்கு மாமிச முண்ணாமையென்னும் அந்த ஒருவிஷயத்தினாலேயே ஜீவகாருண்ணியஞானம் உண்டாகமாட்டாது. தந்தை தாய்களாலேயா அல்லது தனது ஸஹவாஸ தோஷத்தினாலேயா, மாமிசமுண்ணப்பழகிய ஒருவன் அதனாலுண்டாகுங் கெடுதியையுணர்ந்து மாமிச உணவை விட்டிருந்தாலும் ஜீவகாருண்ணியத்தை யுணர்ந்து புலாலுண்பதை வெறுத்தானென்றுரைத்தற்கிடமில்லை. பாவத்திற்கஞ்சி மாமிசவுணவை விட்டானென்று மாத்திரம் உரைக்கலாம். மாமிசமுண்ணாத பட்டத்தினர் மாமிசமுண்ணாங் கூட்

டத்தினை வெறுக்கக்கண்டுமேலாம், மாமிசமுண்ணுதலனும் மாமிசமுண்பவனிடத்து அன்பிருந்தால் அதனையுண்ணு மனிதனைக்கொண்டு உண்பவனுக்கு மாமிசனிருந்து செய்விக்கின்றான். தின்பவனைத் தின்னுஞ்சாதியென்றும், தின்னாதவனைத் தின்னாதசாதியென்று மாத்திரம் கருதுகின்றார்கள். கட்குடியாதவர்கள் கட்குடியனுக்கு அவன் குடிப்பதுவழக்கம் எனக் கட்குடிக்க பணமளித்தல், கள் வாங்கிக்கொடுத்தல் முதலியவைகளைச் சந்தோஷத்துடன் செய்கின்றார்கள். அவர்கள் ஜீவகாருண்ணியம் உணர்ந்தவர்களானால் ஜீவர்களைத் துன்பத்திற்குள்ளாக்குவார்களா? இவர்கள் பிறஜீவிகளைத் துன்பத்திற்கு இலக்காகச் செய்தலால் ஜீவகாருண்ணியத்தை அறியாதவர்களேயன்றி ஜீவகாருண்ணியத்தை அறிந்தவரல்லர். ஆதலால், சென்றல் மேற்குறிக்கப்பெற்ற அநுஷ்டானங்களையுடையவர்கள் அந்த அநுஷ்டானங்களாலேயே ஜீவகாருண்ணியம் உடையவர்களாக ஆகார். அதுபற்றியே நாம் மேற்குறித்த குணங்களுடன் கடவுளருளை நாடுபவன் ஜீவகாருண்ணியத்தையும் கைப்பற்றவேண்டுமெனறோம். ஜீவகாருண்ணியமென்பதைச் சொல்மாத்திரமாகத்தான் அறிந்திருக்கின்றனையேயன்றி அதன் உண்மையையுணர்ந்தாயில்லை. சாத்விக இரக்கத்தில் உனக்கு அநுபவமின்மையாலுணர்ந்தாயில்லை. இனி அறிந்துகொள்வாய். இதனைக் கேள்.

(க) ஜீவகாருண்ணியத்தை ஒருவன் அறிந்துகொள்ளவேண்டுமானல் ஜீவனுடைய தன்மையை முன்னருணரவேண்டும். பின்னர் எதற்காகக் காருண்ணியமுள்ளவனாக இருக்கவேண்டும் என்பதை ஆலோசிக்கவேண்டும்.

(உ.) காருண்ணியமென்பது இன்னதென்று தெரிந்தாலொழிய அதனை அநுஷ்டிக்க முயல்பவன் அதனை நடத்தவறியான்.

(௩) அது, தனதாலோசனையாலும், ஜீவகாருண்ணியமுள்ள ஆசாரியனுடைய போதனையினாலுமே விளக்கிக்கவேண்டுவது. ஜீவகாருண்ணியமென்பது ஜீவர்களிடத்திலிருக்கும் காருண்ணியம் அல்லது உயிர்கள்மீது வைக்குங் காதல் என்று கூறுமாறுமாத்திரம் தெரிந்துகொண்டாற் போதாது.

(௪) முக்கியமாக எத்தனைபேர் உபதேசித்தாலும், தனக்குள் அந்த ஜீவகாருண்ணியமானது அவசியமானது. உசிதமானது என்று கருதினலொழிய உண்மையாக எவனும் அதை அநுஷ்டியான்.

(௫) உயிரின்மீதும் உடலின்மீதும் வரும் துன்புறுமியல்பினவல்ல. எவ்விடத்திலும் உயிரென்பது ஒருதன்மைப்பற்றியே நிற்கும். என்றுந் தந்திகளை முறுக்கிவைத்த தம்புராவானது கரத்தின் ஸ்பரிசமில்லாதுபோனல் எவ்வண்ணம் பேசாதோ அவ்வண்ணமே

சரீரமும் என்னாத் தத்துவங்களாலும் செய்யப்பட்டதாயினும் உயிரோடு கலப்புற்றதாலன்றி யாதொரு தொழிலையுஞ் செய்யாது.

(சு) கல்லுங்கிர மண்ணுமிட்டுத் தேய்த்துங் கழுப்பரப்பித் தளமிட்ட பெருமைதவீட்டின் அழகினைக்கண்டு அவ்வீடு எள்ளளவேனும் மகிழாது என்பதை நினக்கு யான் கூறவேண்டுவதில்லை. அந்த வீட்டினுள் வாசஞ்செய்யும் மனிதனேயன்றோ அவனே மகிழ்ச்சி அடைகின்றான். அந்த வீட்டின் சுவரிடிந்தாலும் சன்னல்கெட்டாலும் அந்தவீடு துன்பப்படுகிறதில்லை. அதற்குடையவனே துன்பப்படுகின்றான். அதுபோல சரீரத்தினுண்டாகும் சுகதுக்கங்களைச் சீவனே அநுபவிக்கின்றான்.

(எ) ஜீவனைச் சரீரத்தினின்றும் அப்புறப்படுத்துதலானது கொலையென்னுந் தொழிலொன்றுமாத்திரந்தான். ஜீவகாருண்ணிய விரோதமானது பிறகாரியங்களெல்லாம் ஜீவகாருண்ணிய விரோதமானவை அன்று என்று கருதுதல் கூடாமை.

(அ) பிரமாமுதல் பிபீலிகாபரியந்தமுள்ள சரீரசம்பந்தமான ஜீவர்கள்பொருட்டுச் செய்யும் அஹிதமான காரியங்களெல்லாம் ஜீவகாருண்ணிய விருத்தமானவையே.

(கூ) மாமிசம் முதலியவைகளை யுண்ணுதவர்களாகவிருந்தும் தன் இடத்தை நாடி யாசகார்த்தமாக வரும் ஏழைகள் மனநோமாறு அடியா மடையா தடிச்சி மடைச்சி இங்கொன்றுங் கிடையாது போ போ என்று அன்னோர் பிடரியைப் பிடித்துந்தி வெளியே விடுபவர்களை நாம் எத்தனை பேர்களைப் பார்த்திருக்கின்றோம். பிச்சைக்காரராக இவர்களாதற்கு என்ன கருமஞ்செய்தனரோ இவர்கள் மனம் இன்மையை யடைந்தமைக்காக எவ்வாறு தவிக்குமோ நாம் ஏழைகளைச் சுடுசொற்களாலே திட்டுகின்றோமே! நம்மையொருவன் திட்டினால் நாம் எவ்வளவு துன்பத்தை யடைவோம். அதுபோலத்தானே ஏழைகட்கும். ஆதலால் நாம் ஏழைகளை மனநோகப் பேசுதல் ஜீவகாருண்ணிய விருத்தமென அறிந்துவிடாமையாலவர்கள் மாமிசம் மது முதலியவற்றை உண்ணுதவர்களாயினும் ஜீவகாருண்ணியமுள்ளவர்களாவார்களா? ஆகார்.

(க0) மாமிசமுண்ணுமையையும் கட்குடிக்காமையையும் சூதாடாமையையும் பழகிய அநேக ஜனங்கள் பொய்சாக்ஷி பொய்ப்பத்திரம் பொய்யாணை முதலியவைகளால் அநேகரை வறுமையாளராக்கி வருத்தியும் வியாதியாளராக்கி வருத்தியும் சிறைபுகுத்தி வருத்தியும் வதைத்துநாசஞ்செய்கின்றார்கள்; இவ்விதமான செய்கையினையும் ஜீவகாருண்ணியமென்று நினைத்தல் கூடுமோ? கூடாது.

(கக) “படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள்கோவில்” என்பதற்கிணங்கச் சிலர் ஜீவகாருண்ணியங்களையே எழுதியுள்ள சாஸ்திரங்களையே படிக்கிறதும், அவைகளிலுள்ளவைகளையே பிற

க் குறைத்துவைத்து முதலியவைகளையும் செய்துகொண்டு பரோ கபடமான செய்கைகளை அந்தரங்கமாக நடத்தி சிவகாருண்ணியத்தைத் தாங்கள் உடைமையின் உண்மையைக் காட்டுகின்றனர்.

(௧௨) ஜீவகாருண்ணிய முள்ளவன் ஒரு சிற்றெறும்பு காலொடிந்து வருந்துவதைக் கண்டாலும் தன் காலொடிந்தாற்போலே அவ்வளவு துன்புறுவானோ அவ்வளவு துன்படைவான். உடைந்த தேங்காய்கண்டதும் சர்க்கரை முதலியவைகளிலும் வந்து மொய்த்துக்கொள்ளும் எறும்புகளைத் தீயைமூட்டிக் கொட்டிக் கொளுத்தியும் தனது துன்ற கால்களாற் றேய்த்தும் அழித்து மகிழ்ந்துலாவுவோர், பற்றையமாம் பொச்சியரல்லரேனும் ஜீவகாருண்ணியமுள்ளவர்களா?

(௧௩) பாம்பு, தேள், பூரான், செய்யான் முதலியவைகளைக் கண்டால் அவைசென்றுத் தங்குமிடம்வரைக்கும் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்து பாம்பென்றால் கேட்டவுடனே தடியையெடுத்துக்கொண்டேங்கே யெங்கே யென்றலறும் பாம்பு முதலியவைகளைக் கண்டால் தம்பி உன்னிடத்திலொன்று சொல்லவேண்டுமென்பது, ஆனால் பாவம் என்னசெய்யலாம் விதியில்லை என்று அவனிடத்தில் அந்த ரகசியத்தையுரைத்துவிட்டுத் தான்மாத்திரம் வெளியேபோய் நின்று அவன் பாம்பினை அடித்துக் கொன்றுவிட்டான் என்ற சத்தம் அடியொலியாற் றெரிந்துகொண்டு சரிப்படுத்திவிட்டையா என்று கேட்டுமகிழ்வோரும் ஜீவகாருண்ணியமுள்ளவர்களாவார்களா? இவர்கள் ஆடுமுதலியவைகளை வாங்கி வளர்த்து வேறொருவனிடங்கொடுத்துத் தனக்குத் தெரியாமலறாப்பித்து அவைகளின் ஊனை வேகவைத்துத் தின்னும் ஜீவகாருண்ணியருக்குத் தோழரன்றோ?

(௧௪) ஜீவகாருண்ணியம் உண்மையிலுள்ளவன் பிறவுயிர்களுக்குண்டாகும் எவ்வித துன்பங்களுக்கும் வருந்துவான். எவன் பிறவுயிர்களின்பொருட்டு இரக்கமில்லாதவனோ அவன் ஜீவகாருண்ணியமில்லாதவனே.

(௧௫) ஸஹோதரபாவம் என்னும் நல்லபாவம் உண்டாதற்கு முன்னே சகல பிராணிகளிடத்திலும் ஒருவனுக்குச் சிவகாருண்யம் உண்டாகாது.

சி:—ஐய! ஜீவகாருண்யம் வேண்டுவதுதான்; அதனிலும் தாரதம்மியமில்லையா? புலி வளர்ப்பவன் அதற்கு ஆட்டிமாமிசந் தானே போடவேண்டும், அது புல்லினைத் தின்னுமா?

கு:—புலி வளர்ப்பவன் புலிக்குப் புல்லினை இட்டு வளர்க்கட்டும் என்று நான் சொல்ல வரவில்லை. புலிவளர்ப்பவன் ஒழுக்கமுடையவனல்லன். நாம் இங்கெடுத்துக்காட்டிய ஜீவகாருண்யமெல்லாம் கடவுளைக் காணவிரும்பினவனாக நிற்கும் சதாசாரமுள்ளவனுக்கேயன்றி பிறர்க்கது கட்டாயமென்று எமது அபிப்பிராயமல்ல.

சி:—ராஜாக்கள் முதலியோர் வேட்டையாடுகிறார்களே, புலி முதலியவை வளர்க்கிறார்களே, எதிர்த்த பகைவரைக் கொல்லுகின்றார்களே, குற்றஞ்செய்தவர்களைத் தண்டிக்கின்றார்களே அவைகளும் இங்குரைத்தபடி ஜீவகாருண்யமன்றோ?

கு:—பிரஸ்தாப விஷயத்திற்கும் அரசர் விஷயத்திற்கும் சம்பந்தமேயில்லை. பிரஸ்தாபவிஷயம் பந்தத்தாலுண்டான துன்பத்தை நிவர்த்தி செய்துகொள்ளுதற்குப் பந்தரஹிதனான ஈஸ்வரனிருக்குமிடத்தை நாடிச்செல்லுமவர்களைப் பற்றியது. அரசராவார் இறைவனால் நியமிக்கப்பட்ட தலைவராதலால் அவர்கள் பிறருயிரைக் காக்குமாறும் மகிழ்விக்குமாறும் தங்கள் தங்கள் தேசங்களுக்கேற்றவண்ணமாகச் செய்யுங் கருமங்களெல்லாம் உத்தமமாகவே முடியும். புலியின் சரீரத்திற்கும் மனிதன் சரீரத்திற்கும் வித்தியாசமில்லையாயினும், புலியானது இறந்தால் அதனினும் நல்லொரு சரீரத்தை யடையுமாம். மனித சரீரத்திற்கு உயர்ந்த சரீரமாகவும் முத்த சரீரமாகவும் வேறெந்தச்சரீரமும் இரா. அறமுதலிய சிறந்த பொருள்களுக்கு இருப்பிடமானதும், இனிப்பிறவாமையை யடைதற்கு யோக்கியமானதும் நரசரீரமே. நரசரீரங்களை யூறுபுரியும் பிறசரீரங்களை, வேட்டை முதலிய முகாந்தரங்களில் வதைப்பதனு லரசர்கள் பாவிகளாகவாகார்கள்.

சி:—சரி, ஜீவகாருண்யம் என்னும் சொற்கிணங்கிய பொருள் வேட்டை முதலியவைகளின் இன்மை யுண்மையே. ஆனால், ஆலோசிக்குமிடத்து, ஜீவகாருண்யமே அருகும்போலும். அரசர்கள் பந்த மோக்ஷத்தை விரும்பினவரல்லர்; ஜனங்களின் சரீராதி போகங்களையே கருதினவர்கள். ஆதலால் இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லையென்பது உண்மையே. இனிமேல் கூறவேண்டியவைகளையும் கூறுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நிராசை.

கு:—முக்கியமாக ஜீவகாருண்யமென்னும் அரிய விரதத்தைக் கடவுளிடத்தை நாடிச்செல்பவன் கைப்பற்றவேண்டுவது கட்டாயம். ஜீவகாருண்யத்தைக் கைப்பற்றுவதைப்போல நிராசையையும் கைப்பற்றிச் செல்லுதல் வேண்டும்.

சி:—நிராசையை யேன் கைப்பற்றவேண்டும்? நிராசை யென்றால் ஆசையில்லாதிருத்தல். எதிலும் ஆசையில்லாதவனுக்குக் கடவுளிடத்தி லெவ்வண்ணம் ஆசையுண்டாகும்?

கு:—மருந்தருந்துமவன் ஒன்றையுமுண்ணப்படாதென்றால் அபத்தியமான பதார்த்தங்களைமாத்திரம் உண்ணப்படாது; பத்தியபதார்த்தங்களை யுண்ணலாம் என்று பொருள் ஆதலைப்போல, நிராசையென்றது இவ்விடத்தில் கெடுதியான ஆசைகளை யொழிக்கவேண்டும் என்று பொருளேயன்றி, நீ கூறியவண்ணம் எல்லாவ

னைகளையும் ஒழிக்குமியல்பல்ல. அவ்வாறு கருதுதல் அபிப்பிரா யக்குறைவினாலேயேயாம். "நிராசையன்றித் தெய்வமுண்டோ நினைக்குங்கால்" என்றுரைத்தவர் நிராசையாலான குணத்தினை யுணர்ந்தவர். நிராசையைக் கைப்பற்றியவரையினால் விசுவாமித்தி ரர் தமது எண்ணங்களையெல்லாம் நிறைவேற்றிக்கொண்டனர். நிராசையைக் கைப்பற்றினவன் மெய்ஞ்ஞானத் திடமான கடவுளி னிடத்தை யடைவான்.

மோகம்.

நிராசையைக் கைப்பற்றுதலுடன் மோக மின்மையையும் கைப்பற்றவேண்டும். மோகமென்பது ஒருவனிடத்தில் ஒருவனுக்குண்டாகும் அளவிறந்த பிரீதி. அது எவரை யும் கெடுக்குமே. தசரதனென்னும் அரசன் தன் மோகத் திற்குப் பாத்திரமாக விருந்த ராமனென்னும் மகன் காட்டுக்குச் சென்று விட்டதனாலேயே உயிர்துறந்தான். வசிட்டன் நிராசை முதலிய சிறந்த குணங்களை லக்ஷரிக்கப்பெற்றிருந்தும் தம் பிள்ளைகளான நூறுபேர் ஏககாலத்தில் இறந்துபோனமையால் அவர்கள்மீதுள்ள மோகத்தால் தன்னிலையை மறந்து பிராணனை விடமுயன்றான். நாரதன் ஒரு பெண்ணினிடத்துவைத்த மோகத் தால் எல்லாரும் பரிகசிக்கத்தக்க குரங்கு முகத்துட னிருந்தான். இந்திரசேனை புருஷபோகத்திலிருந்த மோகத்தால் பலபுருஷரைப் புணரவேண்டியவளானாள். சித்திரசேனை அடக் காத மோகத்தால் ஆனிற்பெற்றத்தியாமாயை பாடவேண்டியவளாயி னாள். ராஜவாகனன் அவந்திசுந்தரியின்மீது வைத்த மோகத்தா லிரண்டுமாதம் சிறையிற் கிடந்தான். ரிஷியென்பவன் காமமஞ்ச ரியினிடத்துவைத்த மோகத்தால் அருந்தவமிழந்தான். மோகத் தால் கஷ்டமடைந்தவர்கள் அநேகர் அநேகர். சாமான்யமான இயல்பிருக்கிறதே மோகம் அவ்வளவு தீங்கைச் செய்யுமானால் அதனை அடியோடொழிக்கவல்ல ஆண்டவனை நாடிச்செல்பவனுக் கது கூடுமா? கூடாது கூடாது.

காமம்.

மோகத்தைவிடுவதோடு காமத்தையும் விடவேண்டும். காம மென்பது தகாத ஒவ்வொன்றிலு முண்டாகிற இச்சை. இந்த இச்சையானது கடவுளை நாடிச் செல்பவனிடத்தி லிருக்குமா னால் அவன் கடவு ளிருப்பிடத்தை யடையான். காமமானது சாமான்யமானவர்களின் எண்ணங்களையே நிறைவேறவொட்டா து. காசிபனுக்குப் பிள்ளையும் மாயைக்கு மகனுமான சூரபன்ம னென்பவன் இந்திராணி போகத்தை யநுபவிக்கவேண்டுமென் று கொண்ட துராசையினால் பந்து புத்திர மித்திரர்களுடன் இற ந்துபோனான். மனித சரீரத்திலேயே தேவராஜபதவியை அடை ந்த சந்திர வம்சிச ராஜனான நகுஷனென்பவன் ஆசையினாலே

தான் இந்திரபதவியை இழந்து மலைப்பாம்புருவாயினன். முக்கியமாக ஆசையென்பது கடவுளை நாடிச் செல்பவனை அமிழ்த்திக் கொல்லும் ஆழமான மடுவினையொத்தது. ஆதலால் மேற்குறித்த பிரயாணியானவன் முன்னுரைத்த தானமான கடவுளிடத்தை யடையுங்காறும் நிராசையினனாய்ப் போதல் வேண்டும்.

லோபம்.

காமத்தை யொழித்துவிடுவதோடு லோபத்தையும் ஒழித்து விடவேண்டும். லோபமென்பது காமத்தைவிடவுங் கெட்டது. இதனால் துரியோதனாதிகள் பிரமாதமான சண்டையைப் பதினெட்டு நாள் செய்து பந்துபுத்திரவர்க்கங்களுடன் பிராணனையிழந்தார்கள். ஆதலால் இதனையும் விட்டுவிடவேண்டும். இந்த லோபத்தை விடுவதுபோலவே குரோதம், மதம், அகங்காரம் முதலிய துர்க்குணங்களையெல்லாம் விட்டவனாய் நாம் சொல்லும் மார்க்கமாகப் போகவேண்டும். போனால் கடவுளிடத்தையடைவான்.

சீ:—இவையன்றித் தங்களாற் கூறப்படும் மார்க்கமாவதென்ன?

கு:—என்னாற் கூறப்படு மார்க்கமாவது இயமநியமாதிகள். அவ்வியமநியமாதிகளைக் கைப்பற்றி, வாசியென்னும் குதிரையின் மேலேறிக்கொண்டு பிரயாணமாகப் போகவேண்டும்.

சி:—எந்த வழியே போவது?

கு:—குண்டலிபுர வழியே போகவேண்டும்.

சி:—குண்டலிபுரமென்பது எங்கேயிருக்கிறது? அது எந்த ராஜதானியைச் சேர்ந்தது?

கு:—அது பரவெளிராஜதானியிலிருக்கின்றது.

சி:—அந்த குண்டலிபுரம் பதிலரசனாலோ சுயஅரசனாலோ ஆளப்படுவது?

கு:—பதிலரசனாலாளப்படவில்லை. ஆனாலும் அது மேற்குறித்த பரவெளிராஜதானிக்கடங்கிய சிறியராச்சியம்.

சி:—அந்த ஊர் அரசன் பெயரென்ன?

கு:—அரசன் பெயர் கணேசன், அவன் மனைவி வல்லபை. இவனூர்க்கோட்டை வட்டமானதும் நாலு அலங்கங்களையுடையதுமாகவுள்ளது. இவன் மாளிகைக்கு மூலஸ்தானபுரமென்று பெயர். அதிற்சென்றவர்களும் அங்கே வசிப்பவர்களும் அவனையே பெரியராஜனாக மதிக்கிறதும் உண்டு.

சி:—பின்னை யெவ்வழியே போகவேண்டும்?

கு:—பின்னர் நேரே மேற்புறமாகப் போகவேண்டும். மார்க்கத்தில் இரண்டுநாழிகைவழிதூரம் காடுமேடுகளுண்டு. அவ்விடங்க

ளிலெல்லாங் குதிரையை நிதானமாகக் கொண்டுபோகவேண்டும். போனால் சதுர்முகபுரத்திற் சென்று சேரும். அச்சதுர்முக புரத்திற்கும் குண்டலிபுரத்திற்போல அரசனுண்டு. அவ்வரசன் பெயர் சிர்ஷ்டா. அவனிருக்கு மாளிகை சதுரச்ரமான கோட்டைக்குள் வெகு அழகானதாகவிருக்கும். அதன் பெயர் சுவாதிஷ்டான மந்திரம். அதிற்செல்லுவோரும் அதில்வசிப்பவர்களும் அவனையே பெரியஅரசனை மதித்திருக்கின்றார்கள். அதைக்கடந்தப்பாற்சென்றால் சற்றுதூரம் வளைவாக நீர்சூழ்ந்தஇடம் ஒன்றுண்டு. இவ்விடை வெளியிற் குதிரையை வெகுபக்குவமாக நடத்திக்கொண்டு போக வேண்டும். போனால் அது நாராயணபுரத்திற்கொண்டுபோய்விடும்.

சி:— அவ்விடத்திலேதாயினும் விசேஷமுண்டா?

கு:— உண்டு.

சி:— அவை என்ன?

கு:— அவ்விடமானது நீலமயமான பொருள்களால் நிரப்பப் பெற்று விளங்கும். அதன் தலைவனான நாராயணன் அர்த்தசந்திராகாரமான கோட்டைக்குள் அழகாகக் கட்டப்பட்டுள்ள ரத்நபூரம் அல்லது மணிபூரகம் என்னும் மாளிகையில் கண்மூடியபடியே ஒரு கையைக் கீழே வைத்துக்கொண்டு சயனித்திருப்பான். அவனுக்கு மனைவியரான மங்கலாதேவியென்பவளும் லாகினிதேவியென்பவளும் தலைப்புறத்திலும் காற்புறத்திலும் இருப்பார்கள். இந்த வளமான நகரத்தில் வாசம்செய்பவர்கள் அந்த நாராயணனையே ஒப்பற்ற அரசனாக மதித்திருக்கின்றார்கள். அவ்விடம் செல்பவர்களும் அவ்வண்ணமே நினைப்பது வழக்கம். இவ்வரசன் நல்லசுந்தரகாத்திரன். இவனதிந்த வளங்களையும் வைபவங்களையும் பார்த்தவன் பின்னும் மேற்புறமாகச்சென்றால் அங்கே ஆறுநாழிகைவழிதூரம் நெருப்புருவமான இடமிருக்கின்றது.

அவ்விடத்திற்செல்லும்பொழுது குதிரை பத்திரமாகச் செல்லும். சென்று மிகவும் உன்னதமானதும் அக்கினிமயமானதுமான பிநாகபுரத்திற்குள் நுழையும். அவ்விடத்தில் மகா அழகானதும் முக்கோணமானதும் ஆன ஒரு கோட்டையின் நடுவில் மணிமயமானதும் மநோகரமானதுமான அநாகதமென்னும் மாளிகை யொன்றுண்டு. அதனில் அந்நகராசனான பிநாகன் தன் பத்னியான காக்கிபாயனியுடன் இருப்பான். அங்குள்ளவர்களெல்லாம் அவனையே சிறந்த அரசனாக மதிப்பார்கள். அவ்விடம் அதிக உஷ்ணப்ரதேசமானாலும் அதில் வாழ்பவர்களெல்லாம் சுவாலைப்போன்ற சரீரமுள்ளவர்களாகவே இருப்பார்கள். கடவுளிடத்தைநாடிச்செல்பவரில் அநேகர் இதைக்கடந்து போகமாட்டார்கள்.

சி:— பின்னையென்ன செய்வார்கள்?

கு:— இவ்விடத்திலேயே தங்கி விடுவார்கள்.

சி:—தங்காமற் செல்பவர்கள் பின்ன ரெந்த வழியாகப் போகவேண்டும்?

கு.—அவ்விடத்தினின்றும் மேற்புறமாகவே போகவேண்டும். போகும் வழி மகா கெட்டது. காற்றதிகம். அக்காற்றானது ஒருவேளை இந்தக் குதிரையைக் கீழே தள்ளிவிட்டாலுந் தள்ளிவிடும். வெகு பக்குவமாய்ச் செங்குத்தாய் ஏறவேண்டும். ஏறினால் எதிரில் அழகானதும், ஊதாவர்னமான பூமியினால் சூழப்பெற்றதுமான மகேசுரபுரந் தோன்றும். அதனுள் சாவதானமாக நுழைதல் வேண்டும். நுழைந்தால் அவ்விடத்தில் அறுகோணமான வகாரக்கோட்டையினடுவில் விசுத்திபுரமென்னும் பாரி மாளிகையில் நவரத்நகசிதமான கமலபீடத்தில் மஹேசுவரனென்னும் அவ்வூரரசன் தன் மனைவியான மகேசுவரியென்பவளுடன் அநேக பரிவாரங்கள் சூழ வீற்றிருப்பான். அவனிடத்தில் வாழ்பவர்கள் எப்படி யவனையே சிறந்தவனாக மதிக்கின்றார்களோ அப்படியே சென்ற பிரயாணியும் மதிப்பான். அவ்வண்ணமே மதித்தாலும் அவ்விடத்தில் இராமல் விரைவாக அங்கு நின்றும் பிரயாணமாகிப் போகவேண்டும்.

சி:—ஐய! இன்னம் எவ்வளவு தூரம் போகவேண்டும்? இப்படியே இன்னம் எத்தனை ஊர்களைத் தாண்டவேண்டும்?

கு:—இன்னம் ஒரு ஊர் தாண்டவேண்டும்.

சி:—ஆனால் அதையும் சொல்லுங்கள்?

கு:—மஹேசுரபுரியிலுள்ள வைபவங்களைப் பார்த்தவன் அங்குநின்றும் மேற்புறமாகச் சென்றால் சற்று தூரம் இருள்மயமான குகையொன்று காணப்படும். அக்குகை இருள்மயமாயிருப்பதுமன்றி நெருக்கமாயும் இருக்கும். நெருக்கமாகவிருந்தாலும் இந்த வாசியென்னும் குதிரைமாத்திரம் அவ்வழியே தாராளமாகச் செல்லும். சென்றால் அதற்கப்புறத்தில் நிலவினொளிபோன்ற ஒரு பிரகாசம் எப்பொழுதுமிருக்கும். அதனைக்கண்டு மயங்காமல் அப்பாற்சென்றால் அங்கே கொள்ளிவாய்ப்பிசாசுகள் சுழன்றுசுழன்றாடும். அதனையும் இதுவும் வியக்கத்தக்க ஆச்சரியமல்லவென்று அதற்கும் மேற்புறமாகப்போகும்பொழுது இதுவரைக்கும் கடவுளூருக்குச் செல்பவனையும் அவன்றோழனையும் ஒன்றாய்ச் சுமந்துவந்த குதிரை அவன்றோழனை மாத்திரம் சுமந்துகொண்டு அவனைக் கீழே தள்ளிவிட்டுக் கீழ்ப்புறமாகக் காணப்படும் வாசலில் நுழைந்தோடிப்போக முயலும். அச்சமயத்தில் குதிரையை விட்டுவிட்டாலும் கெடுதி, விடாதுபோனாலும் கெடுதி. ஆதலால் அக்குதிரை அவ்விடஞ் செல்லும்பொழுது அதன் இதம்போல நடத்திக்கொண்டுபோனால் வழியில் இக்குதிரைமிரளும்வண்ணம் பேரிகைகளைப் படபடவென்றடிப்பார்கள். கொண்டுபோகின்றவனுடைய வல்லம

க்கினால் அக்குதிரைமேலேயே அப்பாற்போகுமானால் அக்குதிரை யும் குதிரையின்மேல் வருவோரும் செக்கிப்போகும்படி வீணை, முழவம், இன்னிசைக்குழல் முதலியவைகளைச் சிலர் ஊதுவார்கள். அவைகளையும் இவன் லட்சியஞ் செய்யாமல் அப்புறஞ்சென்றால் பின்னுங்கொடிபோன்ற ஒரு சோதிகாணும். அச்சோதி வழியே சென்றால் அதுசுகனையுடைய நகரமான நடனபுரத்திற் கொண்டுசேர்க்கும். அவ்விடத்திற்சென்று சேர்ந்துவிட்டால் பின்னர் பிரயாணியானவன் சுவர்க்கப்பட்டணத்தை அடைந்துவிட்டானென்றே கருதலாம். அங்குச் சென்றவுடன் பிரயாணியானவன் அங்குள்ள ஒவ்வொரு விசித்திரங்களையுங் கண்டு பிரமிக்காமல் நகரத்திற்குள்ளே புகுந்தால் அவ்விடத்தில் வலையாகாரமானதும் சுவர்ணநிறமானதுமான கோட்டையொன்று தோன்றும். அக்கோட்டைக்குள் நுழைந்தால் அங்கே பிரஹாகாரமான ஸ்படிகமணிகளாலேயே இயற்றப்பெற்ற விசித்ரமான ஆக்ஞாபுரமென்னு மாலயத்தில் விசித்திர ரத்நபீடத்தில் சிரித்த முகத்துடன் ஸதாசிவனென்னும் மஹாராஜன் தன்னையுந் தன்னிறைவனையுங் காணக்கருதி அதிக கஷ்டத்துடன் பல காடுநாடுகளையெல்லாங் கடந்து தன்னகர்க்கு வந்ததைக் குறித்து மகிழ்ந்து, தன்னைநாடிவரும் பிரயாணியையே பார்த்துக்கொண்டிருப்பன். பிரயாணி பிறவிடங்களிற்போல குதிரையினின்றும் இறங்கி நடக்கவேண்டுவதில்லை. எதிரிற் காணப்பெற்றவிடத்துண்டாகும் அன்பினால் குதிரையைவிட்டிறங்கினால் அக்குதிரையுடனே இவனை முதலில் எந்த இடத்தில் தன் முதுகில் ஏற்றிக்கொண்டதோ அந்த இடத்திலேயே கொண்டுவந்துவிட்டுத் தன்னிலிடம் போய்விடும். உற்றுப்பார், எவ்வளவு கஷ்டம். ஆதலால் குதிரையிலிருந்தவண்ணமே மகாராஜாவான ஸதாசிவனை வணங்கி எதிரில் நின்றவுடனே, அக்காருண்ணிய மன்னவன் இவன் இதுவரைக்கும் வழிகளிலடைந்த கஷ்டங்களை யொழிக்கும்வண்ணங்கருதித் தன்றொட்டிலுள்ள அமிர்தசுனையிலுள்ள மதகினைத் திறப்பிப்பான். திறப்பித்தவுடனே இவன் நிற்கும் இடத்திற்குச் சுனை மேற்புறத்திலிருப்பதால் அவ்வமிர்த நீர் தலைக்குமேலாக ஒழுகிவரும். உடனே இவன் முன்னேகண்ட ஆச்சரியங்களை திரஸ்கரித்துவிட்டு மேற்புறமாகச் சென்றதுபோல செல்லாமல் அந்த அமிர்தசுனைநீரைக் குதிரையிலிருந்தவண்ணமே அன்பொடு புசிக்கவேண்டும். புசித்தவுடனே இதுகாறும் இருந்த களைப்பு, இளைப்பு, மறப்பு, வெறுப்புமுதலிய அனைத்தும் அடியோடகன்றொழியும். ஒழிந்தபின் சிலதினங்கள் அங்குத்தங்கி இருக்கலாம். தங்கி இருந்தபின்பு அம்மன்னர்மன்னனான ஸதாசிவன் இனி நின்னெண்ணம் நிறைவேறும். நீ கவலைப்படாதே. இவ்வளவுதூரம் நின்னை அழைத்துக்கொண்டுவந்த நன்றுகுதிரையாலும், நின் ஸகாவான இந்த மானனாலும் கடவுளிடத்திற்கு உன்னை இட்டுக்கொண்டுபோக முடியாது. இனி நமது தயவினால் நீ கடவுளைக்காண்பாய். கடவுள் இரு

க்கும் இடம் எத்தனை கோடி காதத்திற்கப்பாலுள்ள தென்று கோடி காதத்திற்கு அப்பால் உளது என்றுரைத்து, ஜோதிஷன் இவனை மேலே மேலே போகுமாறு திட்டஞ்செய்வான். இவனும் ஜோதிஷபண்டிதன் தயவினால் அனைத்து நகரத்திலிருந்து மேற்புறமாகச் செல்வான். சென்றால் மேற்புறமாக ஒரு சக்கரவாளக் கோட்டை யென்று தடையாக நிற்கும். அக்கோட்டையைக் கடத்தற்கு அசாத்தியமாதலால் அக்கோட்டைக்குள் இருந்துகொண்டே இனிச் செல்வது எங்ஙனே என்று சற்றே வருந்துவான். உடனே பொன்மயமான கோட்டையானது திறவுபட்டு இவனுக்கு அப்புறத்திலுள்ள வைகுந்த வைபவங்களுந் தோன்றும். பிராமணனானவன் அங்குள்ள ஆச்சரியங்களைப் பார்த்து, இதென்ன கதைபோலே இருக்கின்றதெல்லாம் இங்கேயிருக்கிற ஆச்சரியங்களையெல்லாம் நாம் பார்க்கின்றோமே யென்று பரமாகிய தோழனுடன் மகிழ்ச்சியடைந்து நிற்பான்.

சி:—அங்கே என்ன விசேஷமான ஆச்சரியம் இருக்கின்றது?

கு:—அங்கே அநேக விசேஷங்களிருக்கின்றன.

சி:—அவை யாவை?

கு:—கிரண சபாமண்டப முதலியன.

சி:—அவைகளை விளக்கமாக உரைக்கவேண்டுகின்றேன்.

(க) பரமரகஸ்யமான இதனைப் பிறர்க்குரைத்தலே கூடாது. இது மகாரகஸ்யமான விஷயம். அதனால் அதிமேலான ஞானமுள்ள பெரியோர் இவ்விடத்தில் அதிகாரிகளென்று சொல்லுவர். அன்றியும், சொன்னதை அன்போடு கிரகிக்காதவனைப் பிறன், பிறன் என்று நூல்கள் உரையாநிற்கும். எவன் சொன்னதைக் கிரகிக்கின்றவனோ அவன் எவனாயினும் சரி, அவன் சண்டாள குலத்தவனாயினும் இந்த ரகஸ்யத்தைக் கேட்க யோக்கியனாகின்றான். சண்டாளகுலத்திற் பிறந்தவனாயினும் சொன்னதைக் கிரகிக்க சக்தியுள்ளவனானால் அவன் இதனைக் கேட்கக் கூடியவனாகின்றான். ஜாதி முதலியவைகளைச் சுட்டிச் சிலர் சூத்திரர் முதலியோர்களை அநதிகாரிகளாகக் கூறுவார்கள். அது தப்பிதம் என்று நான் வெகுகாலத்திற்குமுன்னமே சொல்லியிருக்கின்றேன். பிராமணசாதியிற்பிறந்தவனும், கௌசிகனென்று பெயருள்ளவனுமான ஒரு பிரமசாரியானவன் கொடூர தவமுள்ளவனாக இருந்தான். அவன் ஒரு தினம் பிச்சைக்குப் போகும் வண்ணம் ஒரு கிராமத்தைக் கருதிச் சென்றான். செல்லும் வழியிற் சற்றே வெயிலதிகமாக விருந்தமையால், ஒருமாமர நிழலைக்கண்டு இளைப்பாறுமாறு இருந்தான். அப்பொழுது மரத்தின்மீது இருந்த ஒரு கொக்கானது இவன் தலையின்மீது மலமோசனஞ் செய்தது. செய்யவே இவனுக்குக் கோபம் பிறந்தது; இரண்டு கண்களினும் இரத்தம் சிதற அந்த கொக்கினைப் பார்த்தான். உடனே அது அற்பப்பிராணியானதால்

இறந்து கீழே விழுந்தது. கொக்கிறந்ததைக்கண்ட இவன் நம்மை விடச் சிறந்த தவசி கிடையாதென்று மகத்தான அகம்பாவமுக்க றைய் நிமிர்த்திய தலையுடனெழுந்து எதிரிலுள்ள ஒரு பார்ப்பனத் தெருவிற் பிச்சைக்குச்சென்று ஒருவீட்டின் வாய்தலையடைந்து பவதிபிக்ஷாந்தேஹி என்றனன். உள்ளேயிருந்த கல்யாணியான மாது தட்டத்தி லன்னமெடுத்துக்கொண்டு வெளிவாசலை நாடி வரும் பொழுது அவள் கணவன் எதிரே களைப்புடன்றோன்றி, அடி மாதே! களையும் தாகமு மதிகரிக்கின்றமையாற் கொஞ்சம் தாகத்திற்குக் கொண்டுவாவென்ற சொல்லைக் கேட்டுத் தட்டத்தினைத் தரையில் வைத்துவிட்டு உள்ளே சென்று கணவன் கூறினவைகளைச் செய்து அவனிளைப்பையொழித்துவிட்டு ஆ! ஐயோ! மேலோர்க் கன்னமளிக்க மறந்தேனே எனச் சற்றிடை துவள சிறுசிலம்பொலிப்ப விரைந்துவந்து அவன் சோளியிற் சோற்றைக் கொட்டிவிட்டு, சுவாமி! மன்னிக்கவேண்டும் உள்ளே கொஞ்சம் அவசரமான காரியம் இருந்தமையாற் சற்றே தாமதமாய்விட்டது என்று பொறுமையுடன் உரைத்தனள். அம்மொழிகளை அங்கீகரியாமல் கௌசிகன் கொக்கைப்பார்த்ததுபோல பார்த்தனன்.

இவன் பார்த்த குறிப்பினைக்கண்ட அவள் இவன் சாஸ்திரஇர தயங்களையறியாத கசடன் என்றுணர்ந்துகொண்டு, மறையோய்! என்னைக் கொக்கென்று கருதினையோ? யான் கொக்கல்லேன் என்றாள். இம்மொழியைக் கேட்ட வம் மறையவன் அப்பிறைபொரு நுதலியின் பெருவாய்மொழியைக் கேட்டு வியப்படைந்து, அவளையன்பொடு பார்த்து, ஓ அம்மா! யான் பிரமசாரி. எனக்குக் கல்வி முதலிய பலவும் வரும். வந்தும் தங்களைப்போல உண்மையுணரும் ஆற்றலின்றி வீணே கர்வங்கொண்டுகிடக்கின்றேன். என்மீது கருணைபுரிந்து, நான் நல்ல இயல்பினனுமாறு செய்தல் வேண்டுமென்று பலகால் வேண்டிக்கொள்கின்றேன் என்றான்.

(பார்ப்பினி) நீ பலகலைகளைக் கற்றிருக்கின்றனையென்று கூறியது பொய்யல்ல. கற்றிருந்தும் அவைகளின் நுட்பம் நின்மனதிற்றுப் புலப்படவில்லை. எவன் ஒரு விஷயத்தின் நன்மையை முழுமை அறிந்திருக்கின்றானோ அவன்தான் கற்றவன். நீயும் அவ்வண்ணமாக வேண்டுவையேல் அவைகளை நன்குணர்ந்தவனிடமே செல் என்றாள்.

கௌசிகன்:—மாதாவே! அருமையான சாஸ்திர ரகஸ்யங்களை உணர்ந்திருக்கும் பிராமணர் எங்குள்ளார்? தாங்களறிவீர்கள். நானப்படிப்பட்ட பெரியோரைத் தரிசிக்கவேண்டும் என்றனன்.

பார்:— (சிரித்துக்கொண்டு) சாமான்ய ஜந்துக்கள் நினைப்பதைப்போல் நீயும் நினைக்கின்றாய். அநேக நூல்களைக்கற்றிருந்தும் உன

க்குச்சாதியபிமானம் போகவில்லை. மனிதரெல்லாம் ஒரேஜாதியார். மிருகங்கள், மரங்கள் முதலியன மனிதருக்கு வேறான ஜாதி. பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திராதி ஜாதிகளெல்லாம் கட்டுப்பாடான தொழிலைப்பற்றி வைத்துக்கொள்ளப்பட்டதென்று உணர்ந்துகொள். பிராமணர் முதலியோர் தொழின் முறையாலுயர்ந்தவரேயன்றிப் பிறப்பு முறையினாலே உயர்ந்தவரென்று கூறுதல் உண்மையில் எந்த விவேகிக்கும் சம்மதமாகாது. விவேகிகளால் மதிக்கப்படாத விஷயங்கள் பயன்படாதன என்று நீயே உணர்வாய். விவேகமுள்ளவன் எந்த ஜாதியானாகவிருந்தாலும் அவனிடத்திலுள்ள விவேகவிஷயங்களைக் கிரகிக்கலாம். ஆதலால் நீ சாத்திர உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டுமானால் மிதிலாபுரத்திலுள்ள தருமவியாதனிடஞ் செல். தருமவியாதன் = தருமமுணர்ந்த வேடன். சென்றவுடன் அந்த அருந்தவஞானி நினக்குச் சகல ரகஸ்யங்களையும் உணர்த்துவான். நீ இப்பொழுதே அவ்விடத்திற்குப் போவென்றாள்.

அரிய விஷயங்களைக் கேட்டவுடன் ஆவலுள்ள அம்மறைமுனிவன், உடனே அந்த பார்ப்பினியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு மிதிலா நகரமடைந்து தருமவியாதனைத் தேடினான். தேடினவனுக்குத் தருமவியாதனை யுணர்ந்தவர்கள் கடைவீதியிலிருக்கின்றானென்றுணர்த்த, இவனங்குச்சென்று எதிரிலிட்ட வட்டப்பலகையின்மீது வைக்கப்பட்டதும், கயிறுகட்டி எதிரிற்றொங்கவிடப்பட்டதுமான ஆடுமுதலியவற்றின் மாமிசங்களை அரிந்தரிந்து விற்றுக்கொண்டிருப்பவனும், அகமுகமாகச் சிவஹோம்பாவனை செய்கின்றவனுமான அம்மகாபுருஷனைக் கண்டு கௌசிகப்பிராமணன் மகத்தான நாணத்துடன் ஒருபுறமாக ஒதுங்கி நின்றான்.

கௌசிகன் வந்திருப்பதையும், அவன் பிராமணியாலேவப்பட்டிருப்பதையும், தத்காலம் நாணி நிற்றலையும் உணர்ந்து, கடையிலுள்ள தனது வியாபாரமாயின பின்னர் கடையினின்றும் வெளிவந்து கைகால் முதலியவைகளைச் சுத்தி செய்துகொண்டு ஆசமனஞ்செய்து சரீரபவித்திரனாய்ப் பிராமணன் நிற்கும் இடத்தையடைந்து அவனுக்குபசாரமொழிகூறி அவனைத் தனது வீட்டிற்கு அழைத்துச்சென்று ஒருபீடத்திலமர்த்தி மாமிசம்விற்பது தான்பிறந்த வமிசத்திலுள்ள ஜீவனோபாயமாதலாலும், அரசனாகிய ஜனகன் அந்தந்த மரபினரின் பூர்விகர் என்னென்னதொழில் செய்துகொண்டிருந்தார்களோ அந்த தொழிலையே செய்யவேண்டுமென்று கட்டளையிட்டிருத்தலாலும், குலவித்தையை இழக்குவதை யிழிவு இன்மையாலும் இந்த மாமிசம் விற்கும் தொழிலையே செய்கின்றேன் என்று கூறினான். உடனே பிராமணன் அந்த தருமவேடனிடத்தில் அநேகமான ரகஸ்யங்களை யுணர்ந்துகொண்டான். பிராமணனாகிய கௌசிகனுக்கு வேடனை தருமன் குரு

வாயிருத்தலாலும், அவன் கூறிய ரகஸ்யங்கள் சாத்திரவிருத்தமானவையன்மையாலும், பிறனென்பதற்கு அபக்குவமென்றுபொருளேயன்றிச் சாதி முதலியவைகளையல்லவென்றுணர்ந்துகொள் மகனே! சாதியிற் பற்றுள்ள சுத்தசாமான்யமானவர்கள் இதனையறியார். ஜகதீசனுக்கு அனைவருமொரேதன்மையினராகிய பிள்ளைகள். தந்தைக்குத் தன் மனம்போல நடப்பவனிடத்திலதிகமான பிரியமும், தன்னிஷ்டம்போல் நடவாதவனிடத்தில் மிகுந்த அப்பிரியமுமுண்டாகி, ஒழுங்குற நடவாதவனை சிக்ஷித்து ஒழுங்குற நடத்துவான்.

சி:—எந்தை பெருமானே! ஏகாசிவனாலனுப்பப்பட்டு மேல் வெளிப் பிரதேசத்திற்குச் சென்றவன் பின்னர் என்ன வியல்பினையடைவான் என்று கேட்கும் அவசரமுடையவனாக விருக்கின்றேன்.

கு:—நல்லது, உன்னிஷ்டப்படியே மேல்வெளிக்குச் சென்றவனடையும் இயல்பையுமுணர்த்துகின்றேன். மேல்வெளியையடைந்தவன் அவ்விடத்திலொரு க்ஷணநேரம் நின்றவுடனே பளிங்குக் கண்ணாடியாலான ஒருவட்டமான வீடொன்று தோன்றும். முன்னம் இவ்விடத்திலில்லாத இது இப்பொழுது எனக்குத் தோன்றியது என்று பார்த்துக்கொண்டு நிற்கும்பொழுதே அக்கண்ணாடியின் நடுவிலொரு வட்டமான சீதளவொளியொன்று தோன்றும். அதனையுற்றுப்பார்த்துக்கொண்டு இருப்பானானால் அவ்வட்டவொளியினடுவில் அநேக இதழ்களையுடையதும், பகற்காலத்தில் வெயிலிலொருபுறமாகப் பிடித்த உயர்ந்த படிகத்திலுண்டாகுமொளியைப்போலவும், அல்லது அற்பசிமாதத்துப் பௌர்ணமியினன்று மேகசாலங்களாற் மறைக்கப்படாது விளங்கும் பூரணசந்திரனெதிரிற் பிடித்த கனத்த பளிங்கிலுண்டாகும் நிறத்தைப்போலவும் காணப்படும் ஒரு அற்புத பீடந்தோன்றும். அதனையுற்றுப் பார்த்துக்கொண்டு நிற்பானேல் அதன்மீது இவன் நாடிச்சென்ற கடவுள் எழுந்தருளியிருப்பார். அங்கெழுந்தருளியிருக்குங் கடவுளை அன்பொடு பணிவானேற் பணிந்தவன் அக்கடவுளின் கடாக்ஷவீக்ஷண்யத்தினால் சகல பந்தங்களினின்றும் விடுபட்டவனாவான். இவ்வண்ணமான தரிசனத்தையுடையவனைத்தான் அநுபவஞானியென்றுரைப்பது. இவ்வாறான அநுஷ்டானமில்லாதவன் ஒருநாளும் இனிப் பிறக்குந் தன்மையினின்றும் விலகான்; பிறந்ததனாலாகிய பெருவாழ்வினையுமடையான். நீயும் என்னாலுரைக்கப்பட்ட இவ்வரிய விஷயத்தை அநுபவத்திற்குக் கொண்டுவரக்கடவை. இவ்வநுபவமுடையவனாக நீ இருப்பையானால், உன்னை எவ்வித பந்தங்களும் பற்றா. பளிங்கிலெப்படி பஞ்சவன்னம்பற்றாவோ அப்படியே உன்னிலுமென்றறியக்கடவை. நீ என தருமைக்குமாரனாதலால், இந்த பரமரகஸ்யமான என்னநுபவ

த்தை யுனக்குரைத்தேன். மேலு முன்பனைத்துசுந்தவர்களும், மோ
க்ஷதாகமுள்ளவர்களுமான நல்லவர்களுக்கெல்லாம் உபதேசிக்கக்
கடவை. இந்த நல்ல அநுபோகத்தையிருந்த மஹான்கள் சரி
த்திரங்களை நீ கேட்டிருக்கின்றாயல்லவா? அநுபவமில்லாமல் வாசா
மாத்திரமாக அதிகமாகப்பேசுபவர்கள் அநேகருண்டு. அவர்களு
ள்ளேயே அவர்களைச்சிரிக்கும் இனி இதனிற்சந்தேகமுள்ளவனுக்
கு நரகமுண்டாகும். பிறக்கும்பொழுதே மஹாஞானியாகப்
பிறந்த சுகப்பிரம்மமும் சந்தேகத்தால் அதற்கு நிவர்த்திதேட
அநேககாலமுழன்றனர். ஆகையால் நான் சொன்னவிதத்திற் சந்தே
கங்கொள்ளாதே என்றார். உடனே சிடன் அடிபணிந்து, என்னை
யாண்ட குருநாதா! சுகமுனி சந்தேகமுடையனாகி நிவர்த்திதே
டினார்? எப்பொழுதது? இதென்ன ஆச்சரியம்! அந்த சரித்திரத்தை
எனக்கு உரைத்தருளவேண்டும் என்றான்.

புன்வனராசகுமாரனுக் குத்தரவித்தையுரைத்த
முதலத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவதத்தியாயம்.

முனிவன் உத்தரவிந்ததையாப் புகிடப்பதிந்த தக்கஞானியாகுந் தகரியல் சொற்றது.

சுகசரிதம்.

இவ்வொழிவைக்கேட்ட குருவானவர் மௌனமான பார்வையுடன் தனது சீடனைப்பார்த்து, இக்கவிக்கிரசிக்கிரம் நிவறுப் பிரபஞ்ச விக்கிரகங்கட்கநுகூலமாக இருந்துவைக்கின்றான். மஹாபுருஷ வியாஸரொருநாள் அரண்மனையில் நித்திரையடைந்துகொண்டிருந்தார். அப்பொழுது அவர்கண்முன்னே ஆகாயமேலாகவாசியான அப்ஸரஸொருத்திகொடியிடையசைய மலர்ப்பூப்பாவெனத்திரிலுள்ள ஒருபதரினருகில் வந்தனள். வந்தவளை இவருற்றுப்பார்த்தார். பார்த்தவுடனே இவர் மனம் அரணிகடைவதினின்றும் திருமிக்க அச்சமான பொருளான மரத்தின் சாரமுக்தப்பென்று விழுந்தழுந்தியது. அழுந்தினவுடனே இவர் முன்னமே பெண்களினுருவங்களில் விருப்பமில்லாமையுண்டாகுதற்கேற்றனிசமாக, பெண்களினவயவங்களிற் கந்தவேதைவலமான சேரமம் என்றும், சிலவருஷங்கள் சென்றால் வெள்ளென வெளுக்கநிலமென்றும், எண்ணையுடபாதுவருமிட்டுப் பிரமிக்க மூளி மாதிகளைச்சுட்டு மதிப்பைசையாகிய விழிகளினாலும், சிப்பிட்டொருகளினாலும், பொய்மையுமும் பொய்யொளியும் பொருந்தி பத்தயன்றி இயற்கையில் சுரும்பேனும் பிடித்துக்கிடக்கும் எனத் துவக்குடன் சிப்பிட்டறச்சுருக்காறுவதென்றபின்று வெறுக்கதகனயம்மறந்து, இவர்களுக்கல் மைம்முகிலோ அறலோ என்னகருமை என்னபிரகாசம் என்னமயமைம் என்கனிருந்தா லிவ்வண்ணமாகவன்றோ விருக்கவேண்டுமென்று கூந்தலையும், தெய்ந்து வரிவிருந்து சிவந்து வெள்ளொடாவதென்று மதியுக்கென்று பிறக்கும் தேசிப்போர் இதுவளம்பெறுமிளம்பிறைபோவென்று நெற்றியையும், சின்னாட்குப் பின்றை காம்பார் சீலைதன்னைபோவென் பகழுமாறு உதிர்க்கும் வெளுக்கும் ஒளிகெடு முரோமங்களின் வரிசையன்றி வேறில்லை. இதனைக்கண்டு மயங்கப்படாதென்னுமது நீங்கி மாமனுமிதிபுரு சிருடல்வைத்த சேரிய கறுப்புவில்லோவல்லது கூந்தனைமேகந் கொளுத்திவிட்ட பருப்புவில்லோவென்று புருவத்தினையும், செப்பாமுதுவந்தே திகழ்மையில்லதே வெற்றெனும்பெயற்ற நோக்கும்பினைன்பதை மறந்து கொம்பிலலர்ந்து விளங்குங்குமிழோ, அம்பிகாபதி கலைபிறந்துரும்மத்தினலதோவென்று மூக்கினையும், பின்னுமெலாளிகெடுவது இரத்தமுநரம்புமே பெய்திகிடப்பது உவர் நீருடனே பீளைசாருவது பிரட்டன்முதலிய பெருப்பாகட்டுடையதும் அகித்தா இதற்கிணையற்கை. அதவி சிதனைக்கண்டு மயங்கள்பின் என்பதற்று முரனுப் அனைகடலமுதோ, கொவ்வைபழிவிடமோ, மன்மதன்

கண்டேயோ, மயிலினைப்பிணையோ, கிளிக்கைசேவலே, நிருதறிசேலே, மான் கொண்டேயோ, காமன் கிளியே, நிலையறிகடலே, விலையறிய [illegible] என்று கண்ணீர்களைக் கோலமுற; [illegible] [illegible] என்றுரைத்தார். [illegible]
என்று கூறுவதைப் பறந்து புல்லின் மேல்லரும்போ அல்லது முழுதும் [illegible] இன்றிறு முருகேசா, அணி புத்துக்கள் யாராவிக் கூராக்கியா அறப்பிரயன் மாட்டிவைத்திருக்கிறாயோ ஆ! ஆ! என்ன அழகு என்று பற்களையும்; புலவுகமழும் புண்ணீர் செறிந்து நரம்புமுதலிய [illegible] [illegible] [illegible] டோவென்று அதரத்தினையும் பைபோற் கருங்கும் பளபளப்புடன் மையாவதன்று ஒளிகெங்காலமுமுளது பயங்கன்மின் என்பார். இரண்டைக்கண்ணுடியோ இதுவென்று கன்னத்தினையும்; நாற்றுநீர் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] த்தியோ இவள் வார்காதென்று காதினையும், கீற்றுப்பொருந் தி முறுக்கிக்கிடக்கும் தோல் போர்த்த வெண்பேயிதென்ற தை மறந்து வலம்புரிச்சங்கோ நலம்புரி கமுகோ என்று கண்ட த்தினையும், சிறுரோம முறுதோலின் செறிவு மெலும்பின்செறிவு முறுவதன்றி யில்லையெனவுரைப்பதைவிட்டு மாரன் கையின் மாநாணியேற்றுமல் நெருநற்பிடித்த சிறுவில்லும் அர்ஜுன் [illegible] இரு க்குமாறுடைத்த எழிற்படைவீடோவென்று தோய்பிலையும் தோ [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கழிந்தால் [illegible] [illegible] மறந்து [illegible] [illegible] [illegible] [illegible] வென்று கொங்கைகளையும் கருதி [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வென்று [illegible] யும் கொடியோவென் றி டையையும் பிடியோவென்று நடையையும் பாலோவென்றுடை [illegible] [illegible] வென்று தொடையையும் கருதித் திக்கடைவ [illegible] [illegible] சென்று அப்பாதினைக் கண்டனர்.

[illegible] [illegible] அவ்வழித்தகாதத்தோன்றினர். தோ [illegible] இரக்க [illegible] [illegible] அப்பொழுதே [illegible] [illegible] [illegible] [illegible] நோக்கிச் சென்றனர். [illegible] [illegible] தந்தையானவர் மைந்தனைக்கருதிச் [illegible] [illegible] [illegible] அதற்குச் [illegible] [illegible] [illegible] தந்தையாக [illegible] [illegible] [illegible] இவைகளெல்லா

பேனெமினென்று கேட்கின்றனை. என்று கருதினார் உடனே அசரீரி
வியாத! நின்மகனின்று சர்வவியாபியாக விருக்கின்றான். ஆதலால்
நாங்களெமினென்றோம் என்றது. இதனைக்கேட்ட வன்னோர் பிரமத்
தைத் தியானித்தவன் அநுபவமுதிர்விற் பிரமமாகவன்றி வேறெ
துவாக வாவான், சரிதானென்று தன் மகற்குப் பின்னாலேயே செ
ன்றனர். சென்றவர் வழியிலுள்ள ஒரு ஆற்றிலாடையின்றி நீராடிய
மாதர்பலர் சுகரைக்கண்டு ஆடையில்லாமலே அருகில்வந்து பார்
த்தலையும் பின்னர் தன்னைக் கண்டவுடன் வெட்கித் திடீரென்று நீரி
ற்குதித்து முகங்களையன்றிப் பிறவுறுப்புகளை மறைத்து நிற்றலையு
ம் கேட்டுக்கண்டு அவரருகிற்சென்று ஓ, கட்டழகியரே நீங்கள் முன்
சென்ற புருஷனைக் கண்டவுடன் ஆடையாபரணங்களின்றி அவன
ருகிற்சென்று பார்த்தீர்கள். பின்வந்த வயது தளர்ந்த புருடனாகிய
என்னைக் கண்டவுடன் வெட்கி நீரிலிறங்கியுறுப்புகளை மறைத்துக்
கொண்டீர்கள் எனக்கும் முன்சென்றவனுக்குமுள்ள வித்தியாச
மென்னையோவென்றனர்.

இம்மொழியைக்கேட்ட வக்கொம்மை வெம்முலைக் கொம்
பொடி மடவார், அம்மம்ம! இது என்ன ஆச்சரியம், இவர் இற்
படி கேட்கின்றாரே என்று ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து
சிரித்தவர்களாய், வியாசரைப் பார்த்து ஐயாவே! முன் சென்றவர்
சரீரத்தால் நம்போன்றவராயினும் செய்கையால் நம்போன்றவ
ரல்லர். நீவிரே அவர்க்குக் குருவாயினும், நம்மாலுபதேசிக்கப்
பெற்றாகளப்பெமாழிப்படி. அவர் சரியானதுநெருப்பாக விறைவிலா
வறைபோல உண்மையான கடவுளுடனேகலந்து அக்கடவுள்வடி
வே தன் வடிவாய் தனக்கு வேறு வடிவில்லாதவராய்ச் செல்கின்ற
னர். செல்கின்றோமென்னுமெண்ணமு மவர்க்கில்லை. நமக்கோ
ஞானமிருப்பினும் தத்வமயம் அதனிலின்றிக் கேவலம்ஈஷணாத்தி
ரயத்திலழுந்தியுள்ள அஞ்ஞானிகளைப்போல என் மகன் என்னும்புத்
திரேஷணையிற் சிக்கிப் பிரமநிலையிலின்றி உலக நிலையிலாயிருத்த
லால் நம்மைக் கண்டவுடனெங்கட்குக் கபடபுத்தியுண்டாகியது.
யௌவனிகளான பெண்களின் உறுப்புகளை எவ்வளவு இழிந்த
தென்று அந்த யௌவனிகள் கருதி அவைகளை யவமதித்தலாலும்
யௌவனர்களான புருடர்கள் அவைகளையே மிகவும் உயர்ந்த
பதார்த்தங்களாகக் கருதுகின்றார்கள். என்பதை யநுபவமாக
அறிந்த நாங்கள் சிலதினத்திற்கு முன் தேவமாதின் இழிந்த
உறுப்புகளின் மனஞ் செலுத்திப் பிராணாதாரமான விந்துவை
இழக்கவிட்டவர் தேவரீர் என்று அறிந்திருத்தலால், நீரிலுறுப்புக்
களைமறைத்துக்கொண்டோம். சுகர் எந்தவிதமான அநுஷ்டானத்
துடன் செல்கின்றாரோ அந்த விதமான அநுஷ்டானத்துடன்
தேவரீரும் வந்தால் நாங்களவரைக் கண்டதுபோலவே காண்
போம். சுகர் நாங்கள் அவரைக் கண்டதை அவர் காணாத வண்

னமே தாங்களுமெங்களைக் காணமாட்டீர்கள் அவர் ஏகமேவாத்விதீயம் பிரமம் என்னும் சுருதிப்படி பிரமமன்றி இரண்டாவது பதார்த்தத்தைக் காணாதவராகச் செல்கின்றார். தாங்களும் அவ்வண்ணம் சென்றால் யாரும் அதனில் நீரும் நீரில் நாங்களும் இருப்பதாக தாங்கள் எங்ஙனங் காண்பீர்கள்? சுசாதி விஜாதி சுவக்தபேதரகிதமான பரப்பிரமத்தையன்றோ காண்பீர்கள் என்றனர்.

இம்மொழிகளைக்கேட்ட மேலோர், சரிதான் நாமிப்பொழுது உலகத்திலுள்ளபொருள்களைப் பிரமத்திற்கு வேறானதாய்க்காண்கின்ற அஞ்ஞனைப்போலவிருக்கின்றேம். பிரமநிலையிலோ இவையொன்றுந்தோன்றா? நாம்இவர்களை வினவியது அநுபவத்திலில்லாமையாற்றான் நாம் எல்லாவுண்மைகளையும் உள்ளபடியேயுணர்ந்திருந்தும் நமக்கிவ்வண்ணமான ஒருமூடத்தனமுண்டாயிற்றே எவனுக்காயினும் சரிதான் பிரமாநுபவம் விலகினால் இத்தகையகெடுதிகள் அனைத்துமுண்டாகும், என்று கூறிக்கொண்டே திரும்பிப்போய்விட்டார். தந்தையானுபதேசம்பெற்று வடபுல நோக்கிச் சென்ற சுகப்பிரமவிருடியானவர் அநேக ஆயிரம் யாண்டு அபரோக்ஷஸாக்ஷாத்காரமாயிருந்து ஒருநாள் கண்ணைத்திறந்து பார்த்தனர். பார்த்தவர்க்கு உலகம் நித்தியமானதாகக் காணப்பட்டமையால் இவ்வுலக மாதியவனைத்தும் அநிர்வசனீயம் என்றுகருதி ஏகமேவாத்துவிதம் பிரமமென்னுஞ் சுருதியை நம்பிக்கெட்டோமே உலகு முதலியவனைத்தும் நித்தியமானவையாவே காணப்படுகின்றனவே. இதற்கினி யென்செய்வது நாம் வீணா அபார்த்தம் பண்ணிக்கொண்டு அநேக வருஷங்களைத் தொலைத்தோமே சீ, இனி இந்த ஸந்தேகத்தை யகற்றிக்கொள்ள வேண்டுவதுதானென்று பின்னும் தந்தையான வியாசரைத்தேடிக்கொண்டவரிருக்குமிடத்திற்குவந்து அவரை வணங்கிப் பிரமோபதேசஞ் செய்யவேண்டுமென்று கேட்டனர். ஞானியான வியாசர் தமது மனதிற்குள் பரிதி இருளகற்றத் தீபநாடிய கதையைப்போல பிரமமே வடிவமாக விளங்கும் இவன் பிரமோபதேசங் கேட்பதும் என்று கருதிக்கொண்டு, மைந்த! எனக்குத் தெரிந்த பிரமோபதேசத்தை யுனக்குரைத்த தநேககால மாயிற்று. நீ எனக்கு மகனாதலா லதனை அலக்ஷியஞ் செய்துவிட்டனை. இனி யுனக்கு நானுபதேசிக்கவேண்டிய தொன்றுமில்லை. நான் சொன்னதன் உண்மையை நீ ஸ்ரீநாரத பரமாத்மாவைக் கேட்டறிந்துகொள் என்று ஸ்ரீ நாரதரிடத்திற்கு வியாசர் சுகப்பிரமத்தை அழைத்துச்சென்று ஸ்வாமின் இவருக்கு ஞானோபதேசஞ் செய்யவேண்டும் என்றார். அவரும் வியாசர்கூறியவண்ணமே கூறினார். அவ்வுபதேசத்தைக் கேட்டுக்கொண்டு அதே அநுஸந்தானத்திற் சிலவருஷகாலமிருந்து பின்னும் உலகம் முன்னிருந்தது போலவே இருக்கக்கண்டு வியாசரிடஞ்சென்று தனக்குள்ள ஸந்தேக மொழியாமையையுரைத்து நிவிர்த்தியுண்டா

க்கித்தாவேண்டுமென்றனர். இம்மொழியைக்கேட்ட வியாசர் நாரு னாக்கவண்ணமே நாரதருரைத்தும் அருமைக்கிசெய்விருக்கும் இன்னும் இந்த மகாஞானியின் சந்தேகம் விலகவில்லையே யென்று அவனையுடனழைத்துக்கொண்டு ஸ்ரீகைலாசத்திற்குச்சென்று அங்கு ஞானாசிரிய சிரோமணியாய் வெழுந்தருளியிருக்கும் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியின் பாதகமலங்களில் விழுந்து வணங்கி எந்தை பெருமானே! இந்தவென்மகன். இவனுக்கு ஞானோபதேசஞ்செய்யவேண்டுகின்றேன். இவனது அஞ்ஞானத்தை யகற்றுமாறு வேண்டிக்கொள்கின்றேனென்று தண்டமுன்னேவீழ்ந்திட்டனர். பின்னர் தக்ஷிணாமூர்த்தியும் அவருக்குப் பிரம்மோபதேசஞ் செய்தனர். உபதேசமானது வியாசரும் நாரதரும் கூறியதுபோல் இருந்ததேயன்றி வேறின்மையைக்கண்டு வியாசருடன் ஸ்ரீபரமாசாரியரான பரமேசுவரனையும் வணங்கி ஒரு மலைக் குகையை யடைந்து அங்கு ஏகாந்தமாயிருந்து பலவற்றையுஞ் சிந்தித்து இன்பானந்தமயனிருந்துக் கண்களைத் திறந்து பார்த்து முன்னை சகலம் இன்னம் முன்னிருந்த வண்ணமே யிருக்கின்றதே என்று வாட்டத்தை யடைந்து வியாசரை யடைந்து தன்னு மனக்குறையை யுரைத்தனர். அதற்கு வியாசர் மைந்த! நீ இனி யறியவேண்டியதொன்றுமில்லாதிருந்தும் உன் மனதிலுள்ள சந்தேகம் இன்னம் நீங்கபாடில்லை. பிறக்கும் பொழுதே ஞானானுபவத்துடன் பிறந்த உனக்கு வினை நீங்காத சந்தேகம். நானும் என்னை பெற்றவனும் எனது சந்தேகத்தை நீக்குமாறு யத்தனித்தேனும், நான்முகன் முறையும் நீ சந்தேகமென்று வந்தபோது வினைவருக்கும் முதற் குருவான ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியைக்கொண்டும் உன் சந்தேகத்தை யகற்றினேன். தக்ஷிணாமூர்த்தியினும் உயர்ந்த குரு வேறெவரும் இல்லை. ஆனால் இனி நின் சந்தேகமொழியவேண்டுமேல் மிதிலாதிபனை ஜனகனிடஞ்சென்று கேள் என்றனர். அம்மொழியைக் கேட்டவம்மகாமௌனி யப்பொழுதே மிதிலையைநோக்கிப் பிரயாணமாய் மிதிலைநகரை யடைந்தனர்.

மிதிலை நகரின் தலைவாசலிற் றடையில்லாது அவதூதராய் வருவதைக்கண்ட காவலர் அவரை வாசலிற் றடுத்து நிறுத்தி விட்டுச்சென்று அரசனுக்கு உணர்த்தினார்கள். அரசன் தனது வியாபக திருஷ்டியினால் வந்திருப்பவர் சுகரென்றும் அவர் இயற்கை ஞானியாக விருந்தும் சந்தேகத்தினாலிப்பொழுது இவ்விடத்திற்கு வியாசர் சொற்படி வருகின்றார். என்றும் வருமிவரது சந்தேகத்தை நீக்கிவிடவேண்டும். இவருக்குச் சந்தேக மிருப்பதினாலே கொஞ்சமிப்பொழுதில்லாது போனாலும் பின்னாளிலது மிருக்க அஞ்ஞானத்திற் கிடமாக்கிவிடு மாதலின் சாமர்த்தியமாயவர் சந்தேகத்தை யகற்றவேணும் நம்பியும் வியாசரும் நாரதரும் அவ்விருவரினுஞ் சிறந்த தக்ஷிணாமூர்த்தியும் இவரைக் கண்டவுடனே யகற்றாத உப

தெரிந்துண்டவையாதும் வற்றுறுத்தி இருந்தானிது என்று உகல் பற்றை மெய்யிருந்தபல் விட்டவையாதும் இக்கதிக்காளாயினர். என்றுங்கருதி யபுகிசைய அரசவைக்கே செறுத்திவைத்தனர். அபுகியையும் கடர் மனிக்கைப் பெய்யையுங்கொண்ட விக்கேயென்று கருதாதிருந்தனர். உறுப்பெல்லாந்தெரியத் தக்க மெல்லிய வெள் ளாடையணிந்த அநேகம் வேசையர்கள் இவர் கண்முன் ஆடல்பாட லு முதலியவைகளைச் செய்தனர். அவைகளிலு மிக்கசு மனந் செலுத்தினரில்லை: இவ்வண்ணமான பரமயோகிகளாயினு பின் னவடையாளாதின் நிதிக் அரசனுடை ஜனகன் தனிமையான ருஷி ராஜமான பாலனைக்கொடுக்கப்பட்ட உபாக்த ஆனைத்தில் அ ருகி விக்கையான பரமுத் திடருதுக்குவிருந்து வைக்கதாவிக்கிபி ன்பொருட் கொந்துள்ள சுகனை யழைப்பித்தனன்; சுந்த அந்தபுரா த்தமாவே உலகநடவடிக்கைகளை யறியாதவராதலால் அரசனெதி ரில்வந்து மௌனமாகநின்றனர். அதுகண்ட வரசன் தன்னினும் சிறந்த பரமஞானியான சுகனை யிருக்கும்படி ஆக்யாபித்தனன். இருந்தகைகளும் தனதருகிட்டான ஜெயவிக்கவே மனத்தைச் செலு த்தி பரமாச்சரியமே வடிவமாய் விளங்கினர்; அரசனும் ருஷிகளை சுகனைக் குழுப்பினும் மற்றெருகளில்லை அக்கினிக் குழுபினும் அமைத்துக்கொண்டிருந்தனர். இனிக்கண் இவ்வண்ணம் பலவா யின. இவைக விவ்வண்ணமிருக்கக் குணாதவர்களும் கிரியை யாதிகளைக் காசுகொடுத்தின் மிருந்த வெள்ளையுடையாரும் தாதுமேல்மும்பட பெல்லைப் இத்திதவிணை யடக்கொண்டு செல்வா ரும். சடைமுடிகளானும் மரவுரிகளானும் பல்வேறுதளைத்தா னும் பிரகாசிப்பாரும், பிரமதேஜஸ் ஜொலிக்கின்ற முகமண்ட லங்களால் பரிதியை நாணச் செய்வாரும் தண்டகமண்டலதால பத்திராதிகளை யுடையாருமான, சச்சந்தன் - ஜீனன் - ஜீவகன் - பாவகன் - கந்துகன் - ஜாபாலன் - கோபாலன் - யபாலன் - பூபா லன் முதலிய அநேகமாயிரம் பெரியோர் சனகபன்னகைக் கண்டு ஞானகலைசவிளைவனாவனென்றென்று போந்தார்கள். போந்தா னை அரசனேவகர் உள்ளனுப்பினையையாதும் வளமென்று அரச ஞா னியாதும் அந்தண ஞானியாதும் செயலை நோக்கி இவனென்னை யோ வர்மைக்கண்டு போகின்றுரில்லை. இருவிழிகளும் திறக்கப் பட்டிருக்கின்றனவே யச்சமுழுக்கின்றதே, சரி பார்க்கலாமென் றிருந்தார்கள் பின்னர் இருவரு மியங்கா மனத்தினராக விருக்க லைகக் கருதிக் தாங்களும் ஒன்றை கூறமாட்டாமை தாக்குந்தெய்த செய்யமாறு கருதியுந் தியானஞ் செய்யவெண்ணியப் பலங்களைத் திருத்திய நுஷ்டிப்பிலிருந்தனர்.

உதறப்பட்ட கைகளையுங் கால்களையு முடையவர்களாகச் சில நாழிகையுஞ் சில விடிதமுமாக இருந்து தெளிந்து கைகளைப் பின் புறமாகவுஞ்சிக் கோட்டாவிவிட்டுத் தாடிமுதலியவைகளை யுரு

விக்கொண்டு இடது தோளிலும் வலது தோளிலுமாக மாறிமா றிச் சாய்க்கப்பெற்ற தலைகளுடன் சுகருஞ் சனகரு மிருப்பதைப் பார்த்துப் பார்த்துச் இன்னமெழுந்திருக்கக் காணோமேயென்று கருதினர். இதற்குள் சனகமன்னவன் இரண்டு கண்களையு நன்றா கத்திறந்து எதிரிலிருப்பவர்களைப் பார்த்து மகரிஷிகளென்று தெரிந்துகொண்டு திடுமென்று தானிருந்த ஆசனத்தினின்றும் எழுந்து ஐயன்மீர் நீவிர் வருவதை யுணராதுபோயினேன் மன்னிக் கவேண்டும் என்று கரங்குவித்து வணங்கி அவர்களை யுபசரிக்க வேண்டிய முறைப்படியேயுபசரித்து அவர்கள் சாமான்களை வைத் தற்கு இடமளிப்பித்துப் பூசைமுதலிய நடத்தி யுணவருந்தி வரு மாறனுப்பினர். பின்னர் தன்னெதிரிலிருந்த சுகரைப்பார்த்து எங் குவந்தீ ரென்றனர். சுகர் நான் சந்தேகநிவர்த்தியின் பொருட்டுத் தங்களைக் கண்டேனென்றனர்.

ஜனகர்:—ஸந்தேகமாவ தெந்தவிஷயத்தில்.

சுகர்:—தேகாதி பிரபஞ்சமனைத்தும் பொய்யென்றும் ஆத் மாவே மெய்யானதென்று முரைக்கும் பெரியோர் மொழிய நுபவத் திலொத்து வரவில்லையே, அநுபவத்திற்கு மாறான விஷயத்தை யேன் உரைக்கின்றார்களென்னும் விஷயத்தில்,

ஜன:—தேகாதி பிரபஞ்சங்களை யெப்பொழுது பொய்யென் றுரைத்தனர்?

சு:—பாரமார்த்திகத்தில்.

ஜன:—பாரமார்த்திக மென்பதென்னை?

சு:—வியவகாரமல்லாதது.

ஜன:—பரமார்த்ததிசையி லுலகாதிக ளுண்டா?

சு:—இல்லை.

ஜன:—இல்லாதபோது ஸந்தேகமென்ன?

சு:—இப்பொழுது காணப்படுதலால்.

ஜன:—இப்பொழுது நீர் மஹான்களுரைத்துள்ள அநுஷ்டிப் பின் வண்ணமன்றி வியவகார சொரூபமாக விருத்தலா லுமக்கிப் பொழுது அவ்வண்ணங் காணப்படுகின்றது. உலகாதிகளைப் பிரம மாகக் காணும்பொழுது தவை வேறு வேறாகக் காணப்படுமானால் ஏனிப்படி தோற்றுகின்றனவே என்று கேட்கலாம். அஃதின் மையா லுமக்குண்டான ஸந்தேகம் அநாவசியமானதே. பூர் வாநுஷ்டானிகளான மௌனிகள் உண்மையைத்தானுணர்ந்திருக்கி ன்றனர். அவர்களுரைத்த உண்மையைத்தான் வியாச நாரத தக்ஷி ணாமூர்த்தியாதிகளுமக் குரைத்தனர். ஸந்தேகிக்கவேண்டாம் ஸந் தேகமுண்டானால் விபரீதமுண்டாகும், அதனால் அஞ்ஞானமுண்

டாகும். ஆகலால் நிஸ்ஸந்தேகியாய் அபரோக்ஷஞானநுபூதிமானாய் விளங்கும் தாங்கள் எவ்விடத்திற்குச் சென்றாலும், எவரைக்கேட்டாலும் இதனிலுயர்ந்த பதவியை யுரையார். இதனிலுயர்ந்த தொன்றில்லை. இதுவே ஸத்தியம். நீர் கண்டதே யுண்மைக்காக்ஷி. உமதநுபவமே ஞானநுபவம். மனத்திலையங் கோடல்வேண்டாம். உமக்குண்டாகும் ஸந்தேகம் சூரியனுக்குத் தன்னை இருள் சூழ்ந்துகொள்ளுமோ என்று உண்டாகும் ஸந்தேகம் போன்றதும் தன்னிலவு சுடுமோவென்று சந்திரன்கொண்ட ஸந்தேகத்தைப் போன்றதுமாதலால் பிஷ்டபேஷணநியாயமாக வீணே காலம் போக்காமலிருக்க என்றனர். இவர்களிவ்வண்ணம் ஸம்பாஷித்துக் கொண்டிருக்கின்ற ஸமயத்தில் முன்னம் பல காரியார்த்தமாக வந்துள்ள முநிவரனைவரும் மாத்தியான்னிகமாதி முடித்துப் போசனமருந்திச் சனகன் சபைக்கு வந்தனர். வந்தவர்கள் சுகரைப் பார்த்து இவரு நம்மைப்போன்ற இருடிதானே என்று அவமதிப்பாக மதித்துக்கொண்டிருந்தனர். இவர்கள் மனக் கருத்தையுணர்ந்து ஜனகராசன் சுகருக்கும் இவர்களுக்குமுள்ள தாரதம்மியங்களை இவ்விடத்திலேயே விளக்கிவைக்க வேண்டும் அதுவுஞ் சாத்திரமாகப் போதாது அநுபவ முகத்தானே செய்தல் வேண்டுமென்று கருதிக்கொண்டு, வந்த ஒவ்வொருவரையும் பார்த்து என்ன சங்கதிக்காகவோ தாங்கள் இவ்வளவு தூரம் வந்தீர்கள் என்று கேட்டனர், உடனே அவர்களிற் சிலர் நாங்கள் மகாவாக்கிய லட்சியார்த்த ரகஸ்யங்களைப் பற்றிச்சில வினவ வந்தோமென்றும் சிலர் நாங்கள் பௌண்டரீக யாகத்தை யுத்தேசித்துச் சில கூற வந்தோமென்றும் வேறுசிலர் பஞ்சப் பிரணவ பதார்த்தங்களை வினவ வந்தோமென்றும் மற்றுஞ் சிலர் வாச்சாயன ரியற்றிய போகசூத்திரங்களி னுண்மைப் பொருளை யுணர வந்தோமென்றும் பின்னுஞ் சிலர் மஹாஞானியான தங்களைப் பார்க்கவேண்டுமென்னுமாசையாலே பார்க்க வந்தோமென்றும் பலவாறாக உரைத்தனர். உரைத்தவர்கட்கெல்லாம் பொருத்தமான சமாதான முரைத்துக் கொண்டிருக்கும் பொழுதே ஒருவன் விரைவாக ஓடி வந்து அண்ணலே குதிரைலாயத்திற் தீப்பற்றிக் கொண்டது என்றனன்.

அதற்குச் சனகமன்னவன் யாதொருபதிலு முரையாதிருந்தனன் அப்பொழுது வந்த முனிவர்கள் இவனுக்குத் திரவியாதிகளில் லட்சியமின்மையைக் காட்டுகிறானென்று நினைத்துக்கொண்டு இருந்தனர். உடனே பின்னு மிரண்டுபேர்க ளோடிவந்து பசுக் கொட்டாய்களிலும் நெருப்புப்பிடித்தெரிகிறது என்றார்கள், அதனையும் ஜனகன் செவிகொடுத்துக் கேளாமலே இருந்தனன்; பின்னர் சில ரதிக விரைவாக வோடிவந்து யானைக்கூடங்களிலும், ஆயுதசாலைகளிலும், உக்கிராணங்களிலும் நெருப்பற்றிக் கொண்ட

தென்றார்கள். அப்பொழுது மன்னவன் அதனைக் கவனிக்காதிருந் தனன். இவைகளைக்கண்ட முனிவர்கள் இவனென்னவிதமாய் பேசு கின்றானே யென்னமோ இன்னம் பார்க்கலாமென் றிருந்தார்கள். பின்னுஞ்சிலரோடிவந்து இந்நகரியெல்லிடங்களிலுந் தீப்பற்றிக் கொண்டது. இந்தசாமான்பட்டத்தின் மேற்கூரையிலும் பற்றியெரிகி ன்றது; இனிக் கணநேரத்திற் கெல்லாம் அது எங்கும் பரவிவிடு மென்றனர்.

இம்மொழிகளைக் கேட்ட விருந்தினரான மௌனியர் ஓ! ஓ! நமது சாமான்களை வைத்துள்ள அறைகளில் நெருப்புப் பற்றிக் கொண்டாலென்னை செய்வது? குடை, பாதக்குறடு, மான்றோல், ஸத் துமா, பொரி, வெல்லம், பணம், மரவுரி முதலிய நமது ஸாமான்க ளெல்லாம் அழிந்துபோய்விடுமே சீக்கிரம்போவோம் வாருங்கள் தங்கள் ஸாமான்களைப் பத்திரம் செய்யும்பொருட்டு எழுந்துசென் றனர். அக்கினி அந்த ஸபாமண்டபத்திலும் நன்றாய்ப் பற்றிக்கொ ண்டெரியவாரம்பித்தது. அப்பொழுதுஞ் சனகன் அசையாமலேயி ருந்தனன். அவனுடனிருந்த பிரமப்பிழம்போ சற்று மசையாம லேயிருந்தது. பின்னரந்நெருப்பு சுகமுனியின் உடம்பிலும் பற்றி யெரிந்தது; உடன்மீது தீப்பற்றிக் கொண்டபொழுதும் சுகப்பிர மம் அசையவே இல்லை, பின்னரத் தீ! சனகன்மீது தாவி அவனை காற்குள் புகுந்தடங்கியது. அடங்கிய சிறிது நிமிஷத்திற்கெல் லாம் ஊர்முழுதிலும் பற்றியெரிந்த நெருப்பானது சொப்பனம் கண்டவன் கண்விழித்துக்கொண்டவுடன் கண்ட கனவினைத்தாப் பிரத்திபக்ஷமாமாறுபோல இல்லாமலாகியது. இவ்வாச்சரியத்தைக் கண்ட முனிவரெல்லாஞ் சனகன் ஸபைக்குப் பின்னரும் வந்தார் கள். வந்தவுடனே சனகமன்னவன் அவர்களைப் பார்த்து முனிவர் களே சுகருக்கும் உங்களுக்குமுள்ள வித்தியாசத்தை அக்கினியின் சம்பவத்தால் நானறிந்துகொண்டேன் நீங்களறிந்தே இருப்பீர் கள். இவர் இயற்கைஞானி = பிறக்கும்பொழுதே ஞானி. நா மெல்லாமோ இடையிலுண்டான கருமபரிபாகத்தால் அப்பியா ஸக்கிரமத்தால் ஞானத்தை யடைகின்றோம் ஆதலால் இவரை நம்போன்றவர்தானே யென்று மதித்தல் தகுமானதற்கியல் பன்றாம். நீங்களெல்லாம் சுகஞானவல்லவாதலால் அவ்வண்ணங் கருதமாட்டீர்களென்று நான் அறிவேனென்று தகுந்த மொழிக ளாற் சுகருடைய பெருமையை விளக்கி அவர்கள் கேள்விகளுக் கெல்லாம் தகுந்த பதிலுரைத்தவர்களை யனுப்பிவிட்டு சுக ரைப்பார்த்து மேலோரே! தும்மைபந்நோனம் ஒருநாளும் வாதி யாது. நீர் எதனை அறிந்திருக்கிறீரோ அதனைத்தான் மேலோர்க ளறிய விரும்புகின்றார்கள். ஆதலால் இனிச் சந்தேகங்கொள்ளா திருக்க வேண்டுகின்றேன் இஷ்டம்போல செல்லலாமென்று அவரை யனுப்பிவிட்டான். அவரு மன்று முதலாகச் சந்தேக

ஸித்தராய் விளங்கினார். இவரன்றியு மின்னொருவர் ஒரு மஹா ஞானிக்குற்ற சீடராகவிருந்தனர். ஜகத்குருஸ்வாமியென்று பெயருள்ள மஹாஞானி தன் சிஷ்யரான சிக்ஞானவான் என்னுஞ் சீடருக்கு எல்லாக்கலைகளையும் நன்றாய்ப் பழக்கிவைத்தனர். நாளடைவிற் குருபாதசுசுருஷையால் ஆத்மஞானமு முடையவனாகினார். இங்ஙனமானவர் விருத்தனை குருவினைவிட்டு விலகாதிருந்தனர். குருவுஞ் சீடனுமாக பொருமித்து ஒரு அர்த்தோதயபுண்ணியகாலத்தை யுத்தேசித்து இராமேசுவரத்திற்கு யாத்திரையாயினர். யாத்திரைசெய்பவர் வழியிலொரு கல்லால நிழலி லுச்சிப்போதிற் றங்கினார்கள். குருவானவர் சீடனைப்பார்த்து குழந்தாய் கொஞ்சம் தண்ணீர்கொண்டுவா நாவறளுகின்றது மயக்கமுண்டாகின்றது என்றனர். அம்மொழிகேட்ட பிரியாச்சீடர் கமண்டலமுங் கயிறு மெடுத்துக்கொண்டு ஜலம் மொண்டுகொண்டுவருமாறுசென்றனர். உடனே குருவினுயிர்க்கு சிக்கமான காலமுண்டாய்விட்டது. இதனையுணர்ந்த குரவன் நீருக்குச்சென்ற சிக்ஞானவான் குரு கீதையி லுரைக்கும்வண்ணமான குருபக்தியுள்ளவன், இவனுடைய ஸந்தேகத்தை யகற்றுதற் குமுன்னே நமக்கு விதேகமுத்தியுண்டாகின்றதேயென்று அவருக்குரைக்கவேண்டும் ரகஸ்யத்தை எதிரிற் கிடக்க ஓலையிலெழுதிவைத் துயிர்விட்டனர். இதனை வழியிற் செல்வாளான ஒத்திபொருத்தி கண்டு அவ்வோலையை யெடுத்துக் காதிலிட்டுச்சென்றனள். இவளோலையை யெடுத்துச் சுருட்டிக் காதிலிட்டுத் திரும்பும்பொழுது வந்த சிக்ஞானவான் தங்குருவினுடைய திருமேனியை அடக்கஞ்செய்துவிட்டு அவள்பின்றற்போய் பன்னிரண்டுவருஷம் அவட் கூழியஞ்செய்து அவள் காதோலையை வாங்கிப்படித்துச் சந்தேக நிவாரணராய் முத்தராய் விளங்கினார். இத்தப் பெரியகதையை புரைத்தற்கிடமன்மையாலுனக்குச் சுருக்கமாக வுரைத்திலேன். யதார்த்தமான ஞானியானமையினுலன்றோ சிக்ஞானவான் தொம்பச்சியின் பின்றற் பன்னிரண்டுவருஷந் திரிந்தனர். எப்பொழுதுஞ் சந்தேகமே வடிவமானவர்கட் கெதுவும் பலிக்காது. ஆதலால் ஆத்மஞானம் அடைந்து பரமேசுவரனை அறிந்து அநுபவிப்பவன் விரைவ ஸந்தேகமுடையவனாக ஆகவே கூடாது.

முனிவன் உத்தரவிந்தையை உறுதிப்படுத்தச்
சுத்தஞானியாஞ் சுகரியல் சொற்ற
இரண்டாவதத்தியாயம்
முற்றிற்று.

மூன்றுவதத்தியாயம்.

முனிவன் எம்மதத்திலேனு நின்று உண்மையில் இறைவனைக்கண்டவன் முத்தனே என்றும், மரண நிலேயி லிறைவனை மறக்கிற் பிறவிவருமென்றும் உரைத்தது.

சி:—இதுநிற்க, மேற்கூறிப் போந்தவற்றுள் விட்டதை விளக்க வேண்டிக்கொள்கின்றேன்.

கு:—நாமெனடுத்த விஷயத்தைக் கொண்டுவந்து எங்கே முடித்தேன்.

சி:—துவாதசாந்தமென்னும் பரவெளியிலுள்ள கிரணசபா மண்டபத்தைப் பற்றி நிறுத்தினீர்கள். அம்மண்டபத்தினுள்ளே விளங்கும் அதிசயத்தையும் கடவுளினிருப்பிடத்தையும் நன்றாக விரித்துக்கூற வேண்டுகின்றேன்.

கு:—மேற்கூறிய நிலவொளி மணிமண்டபத்தின் நடுவில் விளங்கும் கமலபீடத்தின் நடுவிற் பிரயாணி கருதிச் சென்றபொருளான கடவுள் நிச்சலமானவராக விளங்குவார். அவரைக்கண்டவுடனே இவன் ஸகல பந்தங்களையு மொழித்து முத்தனென்று பெயருள்ளவனுகின்றான் என்று முன்னமே கூறினேன். நிற்க, பாநுவினைக் கண்டவுடனே அவனது கிரணவிசேஷத்தால் அவனை நாடிச் சென்றவன் ஸகல பதார்த்தங்களையும் இன்னது இன்னதென்றறிந்துகொள்ளுமாறுபோல முமுட்சுவும் மேற்குறித்த தானத்திலுள்ள பரமபுருஷனைக் கண்டவுடனே தன்னை இன்ன வியல்பினனென்றும் இதுகாறுந் தான் காணுதன்று கண்டவனெவனோ வவனே தனது தலைவனென்றும் தனக்குண்டான பந்தமெல்லாம் அபிமானத்தாலுண்டானதேயென்றும் அபிமானமும் அஞ்ஞானத்தாலேயே யுண்டானதென்றுமறிந்து "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றபடி யவனருளாலே யவனை யடைந்து அவன் மயமாக விளங்குவான். இதுதான் பந்தக்கழல்வுக்கேற்ற நல்வழியென்றனர்.

சி:—இவ்வளவையும் சாவதானமாகக் கேட்டுணர்ந்த ஞானகலாவிலாசவர்மன் தனது குருவின் சரணயுகளங்களை வணங்கி எம்பெருமானே ! இதொரு மார்க்கமே பந்தநிவர்த்திக்கேற்ற மார்க்கமானல் முமுட்சுவானவன் பரவெளிநாட்டிற்கண்டவிறைவனை என்னவுருவமுள்ளவனாகக்காண்பான்? அதனையுரைத்தல்வேண்டும்.

கு:—மைந்த! சென்ற முமுட்சுவானவன் எந்தவிதமான அநுஷ்டானமுடையவனோ அந்த விதமான சொரூப முடையவரா

க் கடவுள் அங்கு விளங்குவார். "தன்னைக்கண்ட வெண்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமாகிய வீசன்" என்றும், யத்பாவந் தத்பவதி" என்றும், "கற்பாரிராமனையே" என்றும், "நின்னெனிமைய யிவ்வுலகமென்றும், "நீயன்றி யேதுலக" மென்றும், "அறுமுகப்பிரமமாகி ஆருறையு நீத்து" என்றும் வருவனவற்றாலும் பிறவற்றாலும் ஆராயுங்கால் எவன் இறைவனை எப்படிக் கருதியிருக்கின்றானே அவன் அப்படியே காண்கின்றான்.

சி:—செல்வோர் மேனிலையிற்கூறியவனுன கடவுளொருவனை மாத்திரம் அவ்வாறு காண்பார்களா, குண்டலிபுர முதலியவைகளிலுள்ளவர்களையும் அவ்வாறு வேறுவேறு இயல்பினராகக் காண்பார்களா? இந்த ரகஸ்யத்தை அடியேன் அறிந்துகொள்ளும் வண்ணம் உரைத்தருளல்வேண்டும்.

கு:—நின்னால் வினவப்பட்ட விது மஹா ரகஸ்யமானதும் அநுபவிகளாலன்றி அப்பியாஸிகளாலறியப்படாததுமானதேயாம். பரவெளியிற்போலவே குண்டலிபுர முதலியவைகளிலும் என்று அறிந்துகொள். சில முமுட்சுக்கள் கடவுளை நாடிச் செல்லு மார்க்கத்தில் ஊர்களே யிராதென்று கூறி யூர்களையும் ஊராள்வோரையும் ஊர்க்குடிகளையுங் காணுமலே செல்லுவர். வேறு சில முமுட்சுக்கள் மூன்று நகர்களில் தங்கி நாலாவது பரவெளிநாட்டை அடைவார்கள். சில முமுட்சுக்கள் இதே குண்டலிபுரமுதலியவைகளிற் பெண்களை யரசினராகவிருக்கக்கண்டு செல்வார்கள். பரவெளியிலுள்ள கிரணசபாமண்டபத்திலும் கடவுளைப் பெண்ணுருவமாகவே காண்பார்கள். அவ்வண்ணங் கண்டவர்களும் நான் முதலிலுரைத்த முமுட்சுவினைப்போலவே பந்த நிவிர்த்தியையும் நிரதிசயவின்பத்தையும் இனிப்பிறவாமையையுமடைவார்கள். வேறுசில முமுட்சுக்கள் மேற்குறித்த மார்க்கங்களி லிருப்பவர்களின் பெயர்களை நாமுரைத்தனபோலவன்றி அச்சுத வாஸுதேவ ப்ரத்தியும்ன பத்மநாப நாராயணுதிகளாக மாற்றியுரைப்பார்கள். மாற்றியுரைத்தன்மாத்திரமன்றி உருவங்களையும் அவ்வண்ணமே காண்பார்கள்.

சி:—இவ்வண்ணம் பல வேறுவிதமாகக் காணுமவர்களடையும் பலன்கள் பலவேறு வகையினவாகவன்றி யொன்றாகவிருக்குமாவென்றறிந்துகொள்ளும் விருப்பமெனக்குள்ளதனைப் பின்னர் ஸாவதானமாகக் கேட்டற்குமுன்னே மறப்பெனும் பகைவனால் மடக்கப்பட்டு இடர்க்கடற்புகுதலை அடைதல்வேண்டிவருமேயென்று இடையிலிதனைக் குறுக்கேவினவினேன்.

கு:—மெழுக்குப்பல்லுள்ளவன் உருக்குக்கடலையைத் தின்னவேண்டுமானுல் எவ்வளவு கஷ்டப்படவேண்டும் பார். அதனைப்போல ஆத்மஞான வித்தையின் ரகஸ்யங்களை அறிந்து மனதில

மைத்து அநுபவிப்பதென்றால் மகாகஷ்டம். இந்த விஷயங்களில் எப்பொழுது ஸந்தேகங்கள் உண்டாகின்றனவோ அப்பொழுதே அவைகளை நிவர்த்தித்துக்கொடல் வேண்டும் என்பது முன்னோர் துணிபேயாம். அதனால் நீ இடையிற்கேட்டுமிவை குற்றமாகா. பசியை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டியவர்களிற் சிலர் குளகிர்த பாயஸாதிகளோடுகூடின சித்திரான்னங்களை யுண்ணுகின்றனர். சிலர் இலைக்கறி கிழங்கு முதலியவைகளை யுண்ணுகின்றனர். சிலர் அப்பம் வடை தோசையாதிகளை யுண்ணுகின்றனர். சிலர் புல்லரிசிச்சோறு கூழ் முதலியவற்றை யுண்ணுகின்றனர். சிலர் தென்னங்கள், ஈந்தின்கள், பனையின்கள், கோழிமாமிசம், பன்றிமாமிசம், ஆட்டுமாமிசம், மாட்டுமாமிசம், மீன், நண்டு, நத்தை, முட்டை முதலியவற்றைவிரும்பியுண்ணுகின்றனர். சிலர் கொள்ளு, காராமணி, துவரை முதலியவற்றின் புழுக்கல்களைத் தின்னுகின்றனர். சிலர் ஈச்செல்களை யருந்துகின்றனர். இவ்வண்ணம் அநேகமாயிரமான மாறுபாடும் வேறுபாடும்பொருந்தினவுணவுகளையுண்டவர்களனைவரும் பசிநிவிர்த்தியென்னும் ஒரேவிதமானபலனை யநுபவிப்பதைப்போல இவர்களும் வேறுவேறான மார்க்கங்களாகவிருந்தாலும் கடவுளைக் காண்டலும் பந்தநிவர்த்தியடைதலும் இனிப் பிறவாமையெய்தலும் நிரதிசயாநந்தசுக மநுபவித்தலும் கடைசியில் ஒரேவிதமாகத்தான் என்று அநுபவிகள் உறுதியாக உரைப்பார்கள். சுத்தாகாரத்தை யருந்தினவனுக்கும் பசிநிவிர்த்தியின் வஸ்துக்கள் அசுத்தாகாரமான மீன் இறைச்சிகள் முதலிய வுண்டவனுக்குந்தமார்க்கத்தை யநுசரித்தவனுக்கு விருப்பமானதாகத் தோற்றுமையுண்மையும் பசிநிவிர்த்தி லக்ஷியமுமா மாறுபோலவே இம்முத்தி மார்க்கமும் என்றுணர்ந்து கடைசியலக்ஷியமாத்திரமங்கீகரித்துக்கொள்ளுதல்வேண்டும். மேற்குறித்த பாவெளிநாட்டிற்குச் சென்றவன் எந்தமார்க்கப்படியே சென்றாலும் அவன் கடவுளைக்காண்பான். கடவுளைக்கண்டபின் பந்தத்துடனிரான். பந்தத்துடனில்லாதபொழ்து முத்தனாயினான். முத்தனாகவுள்ளவனுக்குப் பின்னரொரு குறைவுங்கிடையாது. இதுகாறுமென்னாற் கூறப்பெற்றவிம்மார்க்கமேயுயர்ந்தமார்க்கம். இதனையன்றியுள்ள பிறமார்க்கங்களின்வழியே சென்றாலும் கஷ்டசாத்தியமாக நாளடைவின் முத்தியையேயடைவான். ஒருவன் முத்தியடைந்தாலுலகமுழுமையும் முத்தியடையாது. ஒருவன் ஞானியானாலுலகமுழுமையும் ஞானமாகா. தூங்குவோனுக்கு உலகமாதியனைத்தும் தூக்கத்தினின்றும் விழித்துக்கொள்ளுகிறவனுக்கும் எவ்வண்ணமின்மையானதாகவிருக்கின்றதோ அவ்வண்ணந்தான் ஞானநுபவத்திலும். விழித்திருப்பவனுக்குஉலகமாதியுண்மையாதல்போலவே அநுபவவிழிப்பிலும். ஆனால் நித்திரையிலுலகமாதியவின்றென்று நித்திரைசெய்து அழிந்தவன் விழித்துக்கொண்டிருக்கும்பொழுது நித்திரையிலுலகமாதிய இல்லவே இல்லையென்று துணிந்துகூறுதற்கு நியாயமி

ருத்தலைப்போல ஞானநுபவத்திற் கடவுள் சந்நிதியை யடைந்து நின்றவனுக்கு அவ்வநுபவ நிலையில் தேகாதி பிரபஞ்சங்கள் இன்மையினால் அந்நிலையிலில்லாதபோழ்தும் அநுபவத்துணிவால் தேகாதி பிரபஞ்சங்களை யில்லையென்றுரைக்கின்றானென்று கூறுவது சாஸ்திரவிர்தயமென்றறிந்துகொள்.

சி:—இவ்வித பரம ரகஸ்யமான அநுஷ்டானத்தி லிருப்பவனுக்கு அநுஷ்டானத்திற்கு ஆதாரமான சரீரமழியுங் காலத்து அவனெவ்வித வியல்பினனாவான்?

கு:—அவன் சரீர மகலுங்காலத்து அவன் எவ்வித வாசனையுடையவனாக விருக்கின்றானோ அவ்வித இயல்பையே அடைகின்றான்.

சி:—பரவெளிநாட்டிற்குச் சென்று பரமனைக்கண்டவனுமா? வாசனைக்குத் தக்கபயனை அடைகின்றான்?

கு:—சரீராந்தியத்தில் அத்தகைய நல்லநுஷ்டான மில்லாது போனால் இந்தசரீரவிழுப்பில் இந்த சரீரவிருப்பிற்கண்ட பரமேசுவரனை எங்ஙனம் பின்னர்க் காண்பான்? "அண்டத்திற்போல பிண்டத்திலும்" என்று கூறியிருக்கின்றார்களே நீயதனையேன் நிதானிக்கவில்லை?

சி:—அண்டத்திலுள்ளது பிண்டத்திலுமுண்டு என்று கூறவறிவேனேயன்றி யதனுண்மையை யறியேன்.

கு:—உலகங்களையெல்லாம் படைத்த பரம கருணாநிதியான பரமேசுவரன் உலகங்களுக்கு மேலேயன்றி வேறெங்கும் வஜாதியனாகவிரான். அதனாலேதான் கடவுளை நாடிச் செல்பவனும் உண்மையான கடவுளைப் பிண்டமான சரீரத்திற்கு அப்புறமான துவாதசாந்தமென்னும் பரவெளியிலேயே காண்கின்றான். அண்டத்திலும் அக்கடவுள் உலகமாகிய தனது சரீரத்திற்கு அப்புறமான பரவெளியிலேயே சகல காரணனாக விளங்குகின்றான். எந்த ஆத்துமாவானவன் பிண்டத்திற்கு அப்பாலுள்ள பரவெளியில் இறைவனைக் காண்கின்றானோ அவன் எத்தனை காலங் கழித்தேனும் சரீராந்தத்தில் அண்டத்துக்கப்பால் விளங்கும் பரமேசுவர சந்நிதியை யடைந்து ததாகாரமாய் விளங்குவான். இதுவே உன்னா லறிந்துகொள்ளவேண்டிய விஷயம். எவனுக்கு நல்லநுஷ்டானமில்லையோ எவனுக்கிந்த விஷயத்தி லநுபவமில்லையோ அவன் சரீராந்தியத்தில் சிரசின் மத்தியகபாலத்தின் வழியே சரீரத்தினின்றும் வெளிப்படான். எவனுக்குத் துவாத சாந்தத்தில் தியானப்பியாஸமில்லையோ அவனுக்குக் கபாலபேதனமாகிச் செல்லும் வழியுமுண்டாகாது. சரீர நஷ்டத்திற்குப் பல வகையினவான வியாதியாதிகள் காரணமாகவரினும் ஆன்மா அந்த சரீரத்தைக் கபாலமார்க்கமாகத்தான் விடவேண்டும். மேற்குறித்த நல்லநுஷ்டான முடையவனுக்கு அநேக வி

யாதியாதிகள் வருவேவரா. அதவா வரினும் நீடித்து நில்லா. நிற்கினும் பிறர் சரீரத்தைத் துன்புறுத்துவனபோலத் துன்புறுத்தா.

சி:—ஞானாநுபவியாக வுள்ளவன் சரீரத்தை விட்டு விலகும்பொழுது ஞானாநுபவமின்றி சாமான்யவாசனையில் நின்று சரீரத்தை யிழப்பதனால் உண்டாகும் தோஷமென்னையோ?

கு:—பிறப்பொழியாமையோடு சிந்தனை யெதிற் சென்றதோ அதேமயமான சரீராதிகளு முண்டாகும்.

சி:—அவ்வண்ணம் எவரேனும் ஞானியாகவிருந்து சரீராந்தியத்திலுண்டான வாஸனாதோஷத்தால் கடவுள் ஸந்நிதியை யடையாமல் இழிவடைந்திருக்கிறார்களா? இருந்தால் என்மன வையமகலுமாறுரைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

எம்மதத்திலேனு நின்று உண்மையி லிறைவனைக்கண்
டவன் முத்தனே என்றும்,
மரணநிலையி லிறைவனை மறக்கிற் பிறவிவருமென்றும்
முனிவனுரைத்த மூன்றாவதத்தியாயம்
முற்றிற்று.

முனிவன் ஸகவாஸ தோஷத்தால் மரண நிலையில் இறைவனை மறந்து அன்னியபதார்த்தங்களை நினைப்பவர் அந்த உருவமான பிறப்பினை யடைவாரென்பதற்குச் சான்றாக ஜடபரதசரித முரைத்தது.

ஞா:— பிரமஞானியான விசுவாமித்திரருக்குப் பேரனும் துஷ்யந்த மன்னனுக்குப் புத்திரனுமான பரத சக்கிரவர்த்தியை அறியாதார் அவர் ஜீவகாலத்தில் வெகு சுருக்கம். அந்த பரத மன்னவன் அநேககாலம் அரசாளுகையிலிருந்து பின்னர்த் துறவுபூண்டு வனத்திலிருந்து ஒரு மானின் ஸகவாஸத்தால் மூன்று ஜன்மங்களை யடைந்தனன். ஆதலால் ஸகவாஸ மெதிலோவொருவனுக்கு மிகுமோ அதின் ஸம்பந்தமான ஜன்மம் கட்டாயம் வரும் என்றனர்.

சி:— எந்தை யெம்பெருமானே! பரதராஜனுக்கு எக்காலத்தில் எந்தக் காரணத்தால் மானின் ஸகவாஸம் உண்டாயிற்றென்றும் எங்கனித்தத்தி லிழிந்த பிறவியாகப் பிறந்தாரென்றும் எவ்விதமாக இருந்தாரென்றும் அறிந்துகொள்ளும் ஆவன்மிகுந்த வெனக்குப் பரத சரிதத்தை விரித்துரைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஞா:— கிரிவிரிசிரமென்னு மலைநாட்டையாண்ட மன்னவனை கௌசிகராஜன் வதிட்டரால் ஞானியாகி இமயகிரிப் பிரதேசத்தில் அருந்தவஞ் செய்துகொண்டிருந்ததனை யுணர்ந்த தேவர்கள் அவரது மனோவபிப்பிராயமின்னதென்று அறிந்துகொள்ளும் ஆற்றலின்மையால் தங்கள் தேவபதவியை விரும்பியே இவ்வண்ணம் தவஞ் செய்கின்றவனாயிருக்கலாமென்று கருதித் தங்கள் நாட்டுத் தாசியான மேனகை என்பவளை யழைத்துச் சென்று ராஜரிஷியான கௌசிகனுடைய தவத்தை யழித்து வரக்கடவை என்றனர். அம்மொழிக்கிணங்கியவம் மோகினிப்பெண் அவர் தவஞ்செய்யுங்காட்டையடைந்து அவரை மயக்கிப்புணர்ந்து அவரது தவத்திற்கு விக்கினமாக இந்திரிய ஸ்கலிதஞ் செய்வித்தனள்.

தவஞ் செபமென்னும் இவைகளைச் செய்பவர்களும், விரத நியமாதிகளை யுடையவர்களும், நல்ல மருந்துகளை உண்பவர்களும் பகலில் தூங்குதல் மாதர்போகஞ் செய்தல் சூரியோதயாஸ்தமனங்களிலுறங்குதல் சொப்பனத்திலிந்திரியஸ்கலிதமாக்குதல் கோபித்தல் சபித்தலென்னுமிவைகளைச்செய்யில் மேற்கூறிய ஜபதபவிரத நியமௌஷதாதிகளின்பலன்கள் அப்பொழுதே கெட்டொழியுமென்று நாமுணர்ந்திருந்தும் தவத்திற்கிடையூறாக இவளை யணைந்தோமே. நம்முடைய புத்தி யென்ன புத்தி யென்று இகழ்ந்து விசு

வாமித்திரர் அவ்விடத்தையகன்று வெகு விரைவாக வேறோரிடம் நாடித் தவம்புரியச்சென்றனர்..

அருந்தவமழித்த மேனகை மேனாட்டினளாதலால் உடனே பெண்மகவொன்றைப் பெற்றனள். பெற்றாட்கு அப்பெண்ணினை வளர்க்கவேணுமென்னும் விருப்பந்தோன்றாமையால் அவ்விடத்திலேயே போட்டுவிட்டுச் சுவர்க்கம்புகுந்தனள். மாதாபிதாக்களால் உதாஸீனமாக விடப்பட்டவச்சிறுமி பாநுவெப்பத்தால் பரிதபித்தலைக்கண்ட சகுந்தலைப்பட்சிகள் = மஞ்சள்நிறமான கழுகுகள் அநேகங்கள் தங்களிறகுகளைவிரித்து அம்மகவின்மேனியில் வெயில்வெப்பம்படாதவண்ணம் காத்தன. மாத்தியான்னியகம் நிறைவேற்றுமாறு மாணவ கூட்டத்துடனவ்வழியே வந்த மகரிஷி கண்ணுவர் இக்குழந்தையைப்பார்த்து இக்குழந்தை இவ்விடத்தில் எங்ஙனம் வந்ததென்று ஞானதிர்ஷ்டியாலாராய்ந்து நடந்தவிஷயங்களையுணர்ந்துகொண்டு பரமசந்தோஷமாய் அவளை மாணவர்களைக்கொண்டு எடுப்பித்துத் தனதாசிரமத்திலிருக்கும் தனதுமனைவியான கௌதமிக்கு நடந்த வரலாற்றையுரைத்து நான் இவட்குச் சகுந்தலையென்று பெயரிட்டேன். நீ நினது பிரியம்வதை அநஸூயைகளைக்காட்டிலும் நன்றாகப் போஷிக்கக்கடவை என்றளிப்பித்தனர். பின்னர் இவள் பூவுலகத்திலுள்ள மாதரனைவரிலும் சிறந்த அழகுங்குணமுமுள்ளவளாகி வளர்ச்சியடைந்து சகல கலைகளையும் கண்ணுவரால் அறிந்துகொண்டு கலைவாணியின் அபராவதாரம்போலவிருந்தனள்.

இவள் இவ்வண்ணமிருக்குநாளில் ஒருதினம் துஷ்டியந்த மன்னவன் மானொன்றைத் துரத்திக்கொண்டு கண்ணுவாச்சிரமத்தினருகிலடைந்து சகுந்தலையைக் கண்டு காமுற்று அவளை மணந்து நின்னை யான் என்னகரிற் புகுந்தபின்னர் அழைப்பித்துக் கொள்கின்றேனென்று தனது முத்திரை மோதிரத்தினையவளிட மளித்துத் தான் அரண்யத்திலிருந்த தனது தோழர்களுடன் கலந்து நாட்டிற்புகுந்து கோட்டைக்குள் விளங்குந் தனதுவீட்டிற் புகுந்திருந்தான். துஷ்டியந்தன் சென்றவுடனே சகுந்தலை நாமென்னகாரியஞ் செய்துவிட்டோம். நமது தந்தைக் கிந்த சங்கதி தெரிந்தா லாச்சிரமத்திற் கசங்கியத்தை யுண்டாக்கினாளே யெனச் சாபமிடுவாரோ என்று பயந்து இனியென்ன செய்வது என்று நடுங்கிக்கொண்டிருக்கும்பொழுது கண்ணுவர் வந்தனர். வந்தவர் சகுந்தலையானவள் முகவாட்டத்துடனிருப்பதைக் கண்டு இவள் எந்தக் குறையினா லிவ்வண்ணமிருக்கின்றாள்; இவளுக்குண்டான குறையென்னவென்று பார்ப்போம் என்று தாடியையுருவினபடியே இரண்டுகண்களையுமூடிக்கொண்டும் வயிற்றைத்தடவிக்கொண்டும் இடதுகாலைச் சற்றே வளைத்துக்கொண்டும் ஏழெட்டு நிமிஷம் மௌனமாக நின்று கண்களைத்திறந்து மகளே சகுந்தலா

அநுசரித்த. நீ செய்த இக்காரியம் எனக்கு ஒருபோதுங் கோபத்தை யுண்டாக்காது. நான் எண்ணியிருந்தபடியே நீ செய்தனை. வெகுசந்தோஷம் வெகுசந்தோஷம். இப்பொழுது நின் வயிற்றிற் சகத்தனைத்தையுந் தனது ஆட்சிக்குள்வைத்து ரக்ஷிக்கும் ஸ்ரீமந்நாராயணனைப்போல ஜகத்ரக்ஷணம் செய்யத்தக்க மஹாபுருஷனிருக்கின்றான். இன்னுஞ் சிலநாளிலவன் வெளிப்பட்டுத் திக்கசொப்பனரூபமான இந்தலோகத்தி லனேககாரியங்களைச் செய்வான். அநேககாலம் இவ்வுலகாண்டவனாயிருந்து பின்னை மண்ணினுஞ்சிறந்த ஞானியாவான் என்று கூறி அவட்குண்டாயிருந்த அச்சத்தை யொழித்து நிட்டைக்குச் சென்றனர்.

ஒருதினஞ் சகுந்தலையானவள் சென்றதலைவன் இன்னம் என்னை யழைப்பித்துக்கொண்டு செல்லக்காணேமே. ஒருவேளை அரண்மனைப்பெண்களின் அவ்வளவு நாகரீகத்தை வகிக்காதவள் யானென்று என்றனை மறந்தனரோ? புருஷர்களெல்லாம் பெண்களை யேமாற்றும் வழக்க முள்ளவர்க ளென்கின்றார்களே, அச்செய்கையை யிவரு முடையரோ? என்னைப் படைத்துக் காத்தழிக்குந் தெய்வமே! நின் சித்தமெப்படியோ? நின் சித்தத்தின்வண்ணமன்றி வேறெதுவும் நடக்குமோ? நடவாதே என்று கருதிக்கொண்டிருக்கும் பொழுது ஸன்னியாஸியொருவர் பிக்ஷைக்காக வாசலில்வந்து நின்றார்; பிக்ஷையுங் கேட்டார்; தான் நிற்கவேண்டியவளவிற்கு அதிகமாகவும் நின்றார். எதிரிலிருந்த சகுந்தலை வேறு கவலையிலிருந்தமையால் ஸன்னியாஸியைப்பற்றி ஒன்றுங் கருதினளில்லை. பார்த்தார் ஸன்னியாஸி, திரும்பிப்போவதே சரியென்று போகும்பொழுது, இவள் எவனுடைய விசாரத்தினால் என்னை அலக்ஷியஞ் செய்தனளோ அவன் இவளை மறந்துபோகக்கடவன் என்று சபித்துக்கொண்டே போயினர்.

இவர் சாபமிட்டுக்கொண்டு போதலைக் கண்ட சகுந்தலையின் தோழியர்களான சில இளஞ்சிறுமியர் ஓ! ஓ! இவர் அவளைத்தான் சபித்துக்கொண்டுபோகிறார். ஐயோ பாவம்! அவள் தன் புருஷன்மீதுள்ள கவலையே கவலையாகவிருந்திருப்பாள், இவருக்கது தெரியாது என்று அவரை வழிமடக்கிக் காலில் விழுந்து ஸ்வாமின்! அவள் தன்புருஷன்மீது கவலையாக விருந்தமையாற் பிட்சை போட மறந்திருப்பாள். இதற்குமுன்னெல்லாம் தங்களுக்குப் பிட்சை கொண்டுவந்து தரும்போது நாங்கள் பார்த்திருக்கின்றோம் ஆதலால் தாங்கள் மன்னிக்கவேண்டும் என்றவுடன், மனமிரங்கி அவனிவட்களித்த வங்குலியை யவன் கண்டால் அவன் இவண்மீது அன்புள்ளவனாக விருப்பானென் றுரைத்துப்போயினர். தோழியர் இதனையவட்குரைக்க மறந்தனர். இஃதிங்ஙனமாக ஒருநாள் யமுனையில் நீராடும்பொழுது சகுந்தலை தன் கணவன் தனக்களித்த முத்திரைமோதிரத்தை ஆற்றிலிழந்தனள். ஒன்பது மாதக் கர்ப்பமாக விருக்குஞ்

சமயத்தில் கண்ணுவர் சகுந்தலையைவிளித்து மகளே! இவ்வளவுகாலந்தான் நினக்கிந்த ஆச்சிரமவாசம். இனி நீ நின்கணவனிடமே செல்லென்று புருகுத்சனையும், பிராமணனையும், கௌதமியையும் துணையாக்கித் துஷ்யந்தனிடமனுப்பினர். ஆச்சிரமத்திலுள்ள அனைவரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு சகுந்தலை தன்னாயகனிருக்கும் நகரத்தையடைந்து, புருகுத்சனைக்கொண்டு தன்வருகையை அரசனுக்குணர்த்தினள். அவன் அவள் என்னைக் காணவேண்டுமானால் சபா மண்டபத்திற்கு வரலாம் என்றனன்

உடனே சென்றவன் திரும்பிவந்து சகுந்தலையை அரசசமுகத்திற்கு அழைத்துக்கொண்டு சென்றான். அரசன் இவளை முன்னொருகாலுங் காணாதவனைப்போல நீ யாவள்? நினக்கென்ன குறை? எதன்பொருட்டு என்னைக் காணவந்தனை என்றனன். அதற்கவள் யான் சகுந்தலை. எனக்கொருகுறையுமில்லை. எனது பிராணநாதர் தாங்களாதலால் தங்களைக் காணவந்தேன் என்றனள். அம்மொழிகளைக்கேட்டவம்மன்னவன் கறுக்குற்றவனாகி, இதென்ன ஒழுங்கீனமான வசனம். எவனோ கொடுத்த குழந்தையையும் வயிற்றிலே வைத்துக்கொண்டு, நீ என் கணவன் என்றுரைக்குமுனக்கு வெட்கமில்லையா? நீ பெண்ணா வெட்கங்கெட்டவளா? வேசைதனுங் குணமாறாட்டமானவளா என்று பலவாறாக இகழ்ந்தனன்.

அதுகேட்ட மாதர்சகுந்தலையாள் மனது திகைத்துவருந்தி, எது செய்வேன் தெய்வமே என்றேங்கி நிற்கும்பொழுது, உடன்வந்தவர்கள் இவள் கண்ணுவமகரிஷியினுடைய புத்திரி. இவளைத் தங்கள் அரண்மனைக்குரியவளாக அங்கீகரிக்கும்வண்ணம் அம்மகான் எங்களிடம் உரைத்தருளினர். இவ்வெண்ணிறமான உரோமங்களையுடைய இவ்வம்மை கண்ணுவருடைய தர்மபத்தினியும் கௌதமருக்குத் தங்கையுமாக வுள்ளவள் என்றனர்.

அரசன் விருத்தையான கௌதமியை இருகரங்களாலும் வணங்கி, இவள் கருப்பவதியாக இல்லாவிட்டாலும் மகான்களுடைய சொல்லினிமித்தம் அங்கீகரிப்பேன். அவர் என்னைச் சபித்து அதமாக்கினாலும் நான் வேறொருவனுடைய கருப்பத்தையுடைய இவளை ஒருபோதும் அங்கீகரியேன். நீங்கள் இவளை அழைத்துக்கொண்டுபோங்கள் என்றனன்.

உடனே புருகுத்சனாகியர் அரசனைப்பார்த்து எங்கட்கிறைவராய மேலோர் தங்கள் ஸந்நிதியில் இவளை விட்டுவரும்வண்ணம் உத்தரவளித்தனரே அன்றித் திரும்ப அழைத்துக்கொண்டு வந்துவிடும்வண்ணம் உத்தரவளித்தாரில்லை. ஆதலால் நாங்கள்மாத்திரமே செல்கின்றோம் என்றுரைத்துச் சகுந்தலையைப்பார்த்தனர். அவள் அவ்வரசனைப்பார்த்து மாதந் தெப்தி காலம் வார்த்தைதயுடையாளோ திகளையெல்லாம் முறைத்துரைத்து வாதாடியும் அவ்வவைகளை யங்கீ

தரியாமையால் அவன் இனி நாம் என்செய்வது என்று தடுமாறி மனங்கலங்கிப் பிரஜைகொண்டு பிராணத்தியாகத்தையாவது செய்துகொள்ளலாமா என்றாலோசிக்குங்காலத்து, திடீரென்றொரு மின்னல் மின்னியது. மின்னற்குப்பின்னர் சகுந்தலையென்பவள் அந்த சபையிலில்லாது மறைந்துபோயினள்.

பின்னர் கௌதமிபாதிபர் கண்ணுவாச்ரமம்புகுந்து நடந்தனவற்றை அவரிடமுரைத்தவுடனே அவர் மகாஞானத்துடன் ஆழமாக ஆலோசித்து இப்பொழுது நமது சகுந்தலை தனது தாயான மேனகையினால் மின்னல் உருவமாக வந்தெடுத்துக் காசிபாசிரமத்திற் சேர்க்கத் தெருதனுடைத்தாச் செல்லப்பட்டமையால் இவ்விடத்திற்போல சுகமாகவே இருக்கின்றாள். அரசனிவளை மறந்ததற்குக் காரணம் மன்னியாமையான துர்வாஸரிட்டசாபமேயாமென்றனர். உடனே ஆச்ரமவாஸிகளெல்லாம் துக்கந்தனை வெறுக்காமலிருந்தார்கள்.

இஃதிங்ஙனமாக ஒருநாள் மடுவின்மீன்பிடிக்க நுளையனொருவன் — செம்படவன் ஒருமீனின் வயிற்றிலிருந்த முத்திரைமோதிரத்தைக்கண்டு இது மஹாராஜாவினது என்றுணர்ந்து அதனை அவனிடமளித்தான். மோதிரத்தைக்கண்டவுடனே துக்கந்தன் சகுந்தலையின்பேரில் அடங்காமோகமுடையவனாய் அன்றுமுதல் அழுதுபுலம்பி இனியென்செய்வது என்று இரவும் பகலும் அந்தசிந்தனையாகச் சிலகாலங்களைத்தள்ளினான். பின்னொருதினம் ஒரு காரியார்த்தமாக மேருவின்சாரலை அடைந்தான். அவ்விடத்திற்றன்னுடையசரீரத்தினை யொத்தசரீரத்தினையுடைய சிறுவனொருவன் சிங்கக்குட்டிகளைப்பிடித்துவிளையாடுவதைக்கண்டு அவனருகிற்சென்று அவன் கையைப்பிடித்துக் கைரேகைகளைப்பார்த்து ஆ! ஆ! இவன் என்னிலுஞ்சிறந்த அரசனாகவேண்டுமேயென்றுகருதிக்கொண்டு சிறுவனே நீ எங்கிருப்பவனென்றான். அவன் காசிபாசிரமத்தைக்காட்டினான் உடனே இவனங்குள்ள காசிபாசிரமத்திற்குட் புகுந்தான் புகும்பொழுது வழியில் நின்றுகொண்டிருந்த சகுந்தலை களித்தமுகத்துடனவனை யுற்றுப்பார்த்துத் தன்னை வஞ்சித்த வாசனென்று தெரிந்துகொண்டு விலகி யுட்புறமாகப் போய்விட்டாள். தன்னெதிர்க் காணப்பட்டவளும் அழகினையும் வெட்கத்தினையும் உடையவளுமான சுந்தரியை யுற்றுநோக்கி இவளே சகுந்தலையென்று தெரிந்து மகத்தான ஆச்சரியமுந் துக்கமும் ஆசையுமுடையவனாய் ஒன்றுந்தோன்றாமலொருநிமிஷம் நின்று நாமோ இவள் விஷயத்தில் மகத்தான அபராதஞ் செய்திருக்கின்றோம். நம்மாலன்றுகூறப்பட்ட இழிமொழிகளைக்கருதி இவன் சுத்தஅநசிதமானவனென்றுகருதி நமக்கிவள்முகங்காட்டமாட்டாளோ? அங்குவனத்திற்கண்ட சிறுவன் இவள்மகனாகத்தானிருக்கவேண்டும், இவ்விடமோ மகாயோகியுஞ்ஜகத்துக்கெல்லாம் ஆதிபிதாவுமான,

காசிபருடைய ஆச்ரமம் இங்கே; நாமொருகாரியமுஞ்செய்யவியலாது. தோத்திரத்திற்கிரங்காதவர்யார். இவள் கண்ணுவருக்கு மகளாகநின்றவள்; இப்பொழுது காசிபராலும் அபிமான புத்திரியாக வளர்க்கப்படுகிறாள் என்று கருதிக்கொண்டு பிரமிக்கும்பொழுதே அதிதியென்னு மனைவியோடுகூட ஜடாதாரியான காசிபர்வாசற்படியினெதிரேவந்து மன்னவனே உள்ளேவரலாம் கவலைப்படவேண்டாமென்றனர். இம்மொழியைக்கேட்டவுடனே உள்ளங்குளிர்ந்து நாவினீரூறிக் காதுமந்தமுமொழிந்து துஷ்யந்தன், பார்வதி, பரமேசுவரர்களைப்போல வாசற்படியில் வந்துநின்றவர்களை நமஸ்கரித்து அவர்களாலுள்ளே அழைக்கப்பெற்று அதிதிபூசைகளையங்கீகரித்து அவர்களளித்த ஆசிமொழிகளை ஏற்றுக்கொண்டான். பின்னர்காசிபர் உச்சிப்போதினுணவையளித்து இளைப்பகற்றி அதிதியுந்தானுமாக இருந்து துஷ்யந்தனைப்பார்த்து நின்மனைவியானசகுந்தலை நின்னால் கடிந்துரைக்கப் பெற்றவன்றே தன்னன்னையான மேனகையினா லிவ்விடத்திற் கொண்டுவந்துவிடப்பட்டாள். அன்றுமுதலின்றளவும் இங்கேயே இருக்கின்றாள். சிறுவனும் பிறந்திருக்கின்றான். நான் அவனுக்குப் பரதனென்று பெயரிட்டிருக்கின்றேன். உபநயனஞ்செய்து எல்லாக்கலைகளையுங் கற்பித்திருக்கின்றேன். நீ இவளைமறந்தது துருவாசரிட்ட சாபத்தானேயன்றி நினது குற்றத்தால் அன்றென்றறிந்துகொள்; கண்ணுவரும்யானும் இவளுங் கௌதமியும் விசுவாமித்திரரும் மேனகையும் நின்னை வெறுக்காதிருத்தற்குக்காரணம் சாபத்தால் நீ இவளை மறந்திருக்கின்றாயென்று தான். சகுந்தலையும் சாபவரலாற்றையுணர்ந்தே இப்பொழுது நின்மீது வெறுப்பின்றி இருக்கின்றாளென்று சகுந்தலைக்கநேக தேறுதல்வசனங்களையுரைத்து இவனுடன் சிறுவனையுஞ்சேர்த்து அனுப்பிவைத்தார். காசிபராலநுப்பப்பட்டு ராஜதானியையடைந்த துஷ்யந்தன் மந்திரியாதியருக்கெல்லாம் வரலாற்றையுரைத்துச் சகுந்தலையைத் தனது பட்டத்தரசியாகக்கொண்டு அநேக காலமரசுபுரிந்து உபநயனஞ்செய்யப்பட்டுக் காசிபரிடத்திலேயே சகல கலைகளையும் உணர்ந்துவந்த தன்மகன் பரதனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து முடியுங் குடையுஞ் செங்கோலுமளித்து நாடாளச்செய்து மனைவியான சகுந்தலையுடன் கண்ணுவாச்ரமத்தையடைந்து ஞானோபதேசம்பெற்று முத்தியடைந்தான்.

இவ்வுலகமுழுமையிலுந் தனது செங்கோலே செல்லுமாறுசெய்து பூமியின் பலமான பாகத்திற்குத் தன்பெயராற் பரதகண்டமென்னும் பெயருண்டாக்கி மனிதனாகப்பிறந்தவன் அநுபவிக்கவேண்டிய அனைத்துவிதமான போகங்களையும் அநுபவித்து அநுபவித்து அநுபவிக்கும் போகமெல்லாம் அநுபவித்ததையே அநுபவிப்பதன்றிப் புதிதொன்றுமின்மையால் அவைகளில் வெறுப்புற்று இதன்குணமிவ்வளவுதானென்று தான்புரிந்த அரசினைத் தனது மைந்தனிடமொப்பித்துவிட்டுத் துறவடைந்து

காசியாசிரமத்திற்குச் சென்று காசிபரிடத்தில் ஞானமார்க்கங்களை நன்றாயுணர்ந்து மகாயோகியாய் வேதாந்த விசாரணைசெய்துகொண்டு கங்கைக்கரையிலுள்ள நிச்சலமான ஒருவனத்திற் பர்ணசாலையொன்றியற்றி அவ்விடத்திற் சிஷ்யர்முதலியவர்களிருப்பினும்பந்தமென்று ஸர்வசங்கப்பரித்தியாகஞ்செய்து காலையிலெழுந்தாற் கங்கையின்முழுகிக் கரையேறி வடக்குமுகமாகவிருந்து காணப்படுஞ் சராசரங்களனைத்தையும் பரமேசுவரசொரூபமாகப் பார்த்துக்கொண்டு சற்றுநாழிகையிருந்து பின்னர்நானார் என்னெதிரிற் காணப்படும் இந்தசகத்தாதிகளெதனினின்றும் உண்டாயின. என்னையுங்காணப்படுமிந்தச்சகத்தையுமன்றி மூன்றாவதுபதார்த்தமொன்றுண்டா என்று ஆலோசித்து நானே ஆத்மா இந்தசகத்தெல்லாம் இந்த என்னுடைய போகத்திற்குரியவை எனக்குத் தநுகரணபுவனபோகங்களையளித்தவன் பரமாத்மா அவனாலுண்டாக்கப்பட்டவையேயிக்காணுமனைத்தும் என்று சிந்தனைசெய்துகொண்டிருக்கும்பொழுது ஆற்றில் நீரருந்தவந்த இளமானொன்று நீரிற்றவறிவிழுதலைக்கண்டு விரைந்தோடிச்சென்று அதனையெடுத்துக் கரையிலாக்கினர். தன்னாற் கரையிலாக்கப்பெற்ற மான் மிகவும் இளமையானதாகையாலும் அதன்றாய் அதனருகிலின்மையாலும் அதற்குத் தன்னைத்தவிர வேறேபோஷகர் இல்லையென்று மதித்து அருகிலிருந்து அதன்முதுகைத் தடவிக்கொடுத்துச் சிறிதறுகம்புற்களைப்பறித்து வாயிற்கொடுத்துத் தின்னச்செய்து அநாதையான அதனைத் தானே இரண்டுகைகளாலும் வாரியெடுத்துத் தனது ஆச்ரமத்திற்குக் கொண்டுபோய் உள்ளே வைத்துக்கொண்டு புன்முதலிய விட்டுபசரித்து வந்தனர். மிருகங்களிற் பரமசாதுவான மானும் கண்டோர் மனமிரங்கும்வண்ணம் மிரளமிரள விழித்தது.

அதன்விழிப்பைக்கண்ட விவர் அதற்கவ்விழிப்பு இயற்கையென்று கருதாது, தன்னைப்பார்த்து என்னை நீயே காப்பாற்றவேண்டும் என்று குறிப்பிக்கின்றது என்று தீர்மானித்தவராய்த் தினமு நிஷ்டைகூடிப் பிரமானந்தாநுபவத்திலிருக்குங் காலமல்லாத காலத்திலெல்லாம் மானினைப் பாலித்துக்கொண்டுவந்தனர்.

"மரத்தைமறைத்தது மதயானையென்றபடி" தேகாதிபிரபஞ்சமனைத்தையும் பிரமமாகவேகண்டுள்ளவர்க்குத் தத்துவசோதனையாலுண்டான அநுபவாதிக்கியத்துடன்மிருகலாலனத்தாலுண்டானபக்ஷாதிக்கியமும் மிகுந்துவளரச்சிலகாலமிருந்தனர். ஒருதினம் ஆகாயத்தை யுற்றுநோக்கிய இவர்க்கு வானத்திலுள்ள பரிதி துவாரமுள்ளதாகக்காணப்பட்டது உடனே இவர் தன்மனதிற்குள் ஒருமனிதன் தனதுசரீராவஸானஸமயத்தில் நல்லநிலைமையிலிருந்து ஜீர்த்தமானசரீரத்தை விடவேண்டும். அவ்வண்ணம்விட்டால் சரீரத்தைவிட்டஜீவன் நல்லநிலைமையை யடைவான். அதாவது நல்லசரீரத்தை நல்லவுலகத்தில் நல்லபோகத்தின்பொருட்டு அ

னடைவான். இவ்விதமன்றிப் பரப்பிரமபாவனைசெய்தால் பரப்பிரமத்தையடைவான். ஈசுவரபாவனைசெய்தால் ஈசுவரபாவத்தையடைவான். எவ்வளவு ஞானநூல்களை யுணர்ந்திருந்தாலும் சரீராந்தியத்திலுணர்ச்சிக்கேற்ற நினைவில்லாதுபோனால் கற்றனவெல்லாம் பாழாமாறு நினைப்பதற்கேற்ற ஜன்மம்வருவது ஸத்தியம் ஸத்தியம். ஆயிரமாயிரமான சீடர்களுக்கு ஞானோபதேசஞ்செய்துகொண்டு ஞானியாகவும் ஞானாசாரியராகவும் இருந்த பெரியவரொருவர் தமது சரீரத்திற்கு அந்தியம் உண்டாகுந் தருணமுணர்ந்து இனி நாம் விதேகமுத்தியை அடைந்துவிடவேண்டுமென்று நிர்மாணித்துத் தன்சீடர்களையெல்லாமழைப்பித்து மக்களே! நான் சரீராதி யவயவங்களுடன் பொருந்திய நித்திய பரமேசுவரனுடைய சன்னிதானத்திலிருக்க விரும்பாமல் ஸர்வவியாபியான பிரமமாகவே ஆகின்ற விதேகமுத்தியை இன்றுச்சியிலடையப்போகின்றேன் நீங்களெல்லாமப்பொழுது என்னருகிலேயே இருங்கள் நான் விதேகமுத்தியை அடைந்ததை நீங்களுணர்ந்துகொள்வான் என்றெற்செய்யப்பட்டுள்ள தபோவல்லபத்தால் இங்கொன்றுசெய்கின்றேன் அதாவது இந்தநாக்கில்லா தமணியை இவ்விடத்திற் கட்டிவைக்கின்றேன் இம்மணி இந்தசரீரத்தினின்றும் நான் விலகியவுடனே இது கண கணவென்றடிக்கும் இதடியாதுபோனால் நான் உடனே வேறுசரீரத்தையடைந்து ஸமானயனுப்விட்டேனென் றுணர்ந்துகொள்ளுங்களென் றுரைத்து மணியைக்கட்டுவித்து, அனைவரையும் நிச்சலமாகவிருக்குமாறு திட்டஞ்செய்து தான் வடக்குமுகமாகப் பதுமாசனத்திலிருந்து சாமவேத மஹாவாக்கியமான தத்துவமஸி என்பதைநினைத்து முன்னே த்வம்பதசோதனைசெய்து த்வம்பதவாச்சியார்த்தனான ஜீவனை அவித்தியாஸம்பவனான அஸம்பவனுங் ஜலாகாயம்போல்பவனுமா மென்றகற்றி லட்சியார்த்தனை கூடஸ்தனைக் கடாகாயம்போல்பவனென்றுணர்ந்து நாம்கூடஸ்தனேயன்றி ஜீவனல்லவென்று றுதியாகவைத்துக்கொண்டு தத்பதசோதனையிற் தத்பத வாச்சியார்த்தனான ஈசுவரனை மாயாஸம்பவனும் மேகஜலாகாயம்போல்பவனும் அநிர்வசனீயமானவனுமென்றகற்றி மகாகாயம்போல லக்ஷியார்த்தனை பிரமத்தைச் சர்வகாரணனாகவுணர்ந்து அசிபதப்படியே ஐக்கியஞ்செய்து நற்குஞ்சமயத்தில் அவர் நிஷ்டையிலிருந்த வீட்டினருகில் ஒருத்தி இலந்தைப்பழம்வாங்கலையோ ஓ ஓ ஓ இலந்தைப்பழம், என்று கூவிக்கொண்டுவந்தனள். இங்ஙனம் பண்டமாற்றுவாள்கூறிய பாழும்மொழி இருவகையிலட்சியங்களையும் ஏகபடுத்திக்கொண்டிருந்த ஞானியாரதுகாதிற்பட்டது, பட்டசமயத்தில் நினைப்பெல்லாம் அந்தப்புறமே திரும்பின; திரும்பினஸமயத்தில் அவரதுசரீரத்திற்கும் அவருக்குமுள்ளஸம்பந்தம் ஒழிந்தது. உடனே அருகிலிருந்தசிஷ்யர்கள் ஆ இதென்னவிந்தை; நம்பாமொழியுடைய வப்பா விதேகமுத்தியடைவதாக வுரைத்தனரே விதேகமுத்தியடைந்திருப்பாரா

யின் நாவற்றமணிமுழுக்குமே அவர்மொழிப்படி பழமுழுங்களில்லையே. நமதுகுருநாதனுடைய மதப்படி இப்பொழுதவர் எந்தவாஸனைபலத்தால் ஜன்மமடைந்திருக்கலாம் அவருக்கு யாதொருவஸ்துவிலும் பிரியங்கிடையாது. ஆனல் இலந்தைக்கனிகளின்மட்டும் விருப்பமுண்டு. இப்பொழுது இலந்தைப்பழமோபழமென்றெருக்கிறவினல் அதனலவர் இலந்தைக்கனிக்குள்ளே ஜன்மித்திருக்கவேண்டுமென்று ஓட்டமாக வீதியிலோடிச்சென்று இலந்தைப்பழக்கூடையைப் பிடுங்கிக்கொண்டு அதற்கவள் கேட்டவிலையைகொடுத்து விட்டிற்குள்ளேகொண்டுவந்து ஒவ்வொருபழமாக நசுக்கினர்கள்; இலந்தைக்கனிக்குட் புழுவாகப்பிறந்திருந்த ஞானியார் நசுக்கப்பட்டு விதேகமுத்தியை அடைந்தனர் உடனே அவர் வாய்மொழிப்படி நாவற்றமணியும் நன்றாய்க் கனிர் கனிரென்றடிக்கது இவ்வாச்சரியத்தைக்கண்ட மாணவர்கள் மகாசந்தோஷத்துடன் ஆசாரியசரீரத்தை அடக்கஞ்செய்தனரென்று நமதாசிரியர் நமக்குரைத்தனரன்றோ ஆகலால் விதேகமுத்தியையோ அல்லது ஸதேகமுத்தியையோ எதையேனுங் கருதுவோர் கருத்துமாறுமலே இருக்கவேண்டும் எவ்வளவு சாமர்த்தியமுடையவனுக விருந்தாலுந் தனது ஸாமர்த்தியத்தை மரணமயத்தி லுபயோகப்படுத்த அறியாதவன் நிஷ்பிரயோசனத்தைத்தான் அடைவான். சரீரவஸான ஸமயத்திற் தனது நல்லறிவுடான நினைவு இல்லாதவனுக்கு எதுவுஞ் சித்தியாது. சித்தியாது.

மரணக்குறி.

இதற்காகத்தானே பெரியோர்கள் ஒருவனுக்குண்டாகும் மரணத்தை ஒருவருஷத்திற்குமுன்னே அவனறிந்துக்கொள்ளுமாறு அநேக தந்திரங்களை அமைத்து வைத்திருக்கின்றனர். ஒருவருட முதல் பதினென்று பத்து ஒன்பது எட்டு ஏழு ஆறு ஐந்து நாலு மூன்று இரண்டு ஒன்று என்னும் மாதங்கட்குள் உண்டாகும் மரணங்களுடைய தன்மையை அறிந்துகொள்ளவும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அன்றியும், ஒருமாதத்தின் முப்பது தினங்களிலும் உண்டாகும் மரணங்களையும் அறிந்துகொள்ளுமாறு தந்திரங்காட்டியிருக்கின்றார்கள். அவை சாயாபுருடனைப் பார்த்தல் சரம் பார்த்தல் இந்திரவில்லினைப்பார்த்தல் தன்வாய் நீர்நிழலையப்பார்த்தல் தன் மார்பு நீர்நிழலைப்பார்த்தல் பானுவைப்பார்த்தல் முதலியவைகளாக அநேகங்களை உண்டாக்கி யிருக்கின்றார்கள். அக்கலைய மரணக்குறிகளில் நான் இன்று ஆரியமண்டலப் ஓட்டையாகவிருப்பதாக கண்டிருக்கின்றேன். அதனல் எவ்விதமாகவேனும் இன்று எனது சரீரத்திற்கு நஷ்டம் நேரிடும். இந்நஷ்டம் நேரிடாவண்ணங் காத்தாலும் இன்னெருநாறையும் கஷ்டமான நஷ்டம் நேரிட்டேயாதிராது. சரீரமிருக்கிறவரைக்கும் சுகதுக்கங்கள் மாறிமாறிவரும் என்று கருதியே விவேகிகள் சரீரமு

த்திவை யடையவிரும்புகின்றார்களில்லை. தேவர்களால் சன்மானிக்கப்பெற்ற கட்டுவாங்க மகாராஜன் இந்திராதிஸமஸ்த தேவர்களுமொன்றாகக்கூடி மன்னவனே! நீ எங்களுக்கு உபகாரியாதலால் நாங்களனைவருமாக ஒருமித்து நீ கேட்கும் வரத்தையுனக்குக் கொடுக்கச் சித்தமாக விருக்கின்றோம் கேள் என்றவுடனே சாஸ்திர இரகசியங்களை யுணர்ந்துள்ள அம்மன்னவன் உலகபோகாதிகளினளவை நன்றாயறிந் தநுபவித்தவனாதலால் அவைகளில் விருப்பங்கொள்ளாது தேவர்களே! எனக்கு இன்னம் எவ்வளவு ஆயுள் இந்த சரீரத்திலிருக்கின்றது, அதனை யுரையுங்களென்று வினவினன் அதற்கம்மாவிபுதர் ஆலோசித்துக் கட்டுவாங்கனே! உனக்கின்னம் இந்த சரீரத்தில் மூன்றேமுக்கால் நாழிகையான ஒரு முகூர்த்தந்தானிருப்பு என்றார்கள். அம்மொழியைக் கேட்ட செம்மல்சரி, நான்போய்வருகிறேனென்று அதிவிரைவாய்ப் பூவுலகத்தை யடைந்து ஏகாந்தத்திலிருந்து: காணப்படு மிவ்வனைத்தும் பஞ்சீகிருத பூதகாரியம் அவற்றில் யாது பிருதிவியின் காரியமோ அது பிருதிவியின் சொரூபம் நீரின்காரியம் நீரின்சொரூபம் தீயின் காரியம் தீயின் சொரூபம் காற்றின் காரியம் காற்றின் சொரூபம் ஆகாயத்தின்காரியம் ஆகாயத்தின்சொரூபம். இவ்வாறு தூலமான விப்பிரமாண்டங்கள் முழுமையும்பஞ்சீகிருத பூதசொரூபம்பஞ்சீகிருத பூதமும் அபஞ்சீகிருத பூதசொரூபமேயாம் அபஞ்சீகிருத பூதத்தையன்றி யாராயுங்காலிவை வேறேயின்றாம். இவையன்றி நுண்மையானதாகவும் அநுமானித்துணர வேண்டியவுமான மனம்புத்தி சித்தம் ஆங்காரம் சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்ஙுவை ஆக்கிராணம் வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தம் பிராணன் வியானன் சமானன் உதானன் அபானன் முதலியவை அபஞ்சீகிருதபூதங்களின் சூட்சும காரியமேயாதலால் அவை அபஞ்சீகிருதபூதமேயாம் இவைகளுள் அந்தக்கரணங்கள் பூதங்களின் சத்துவகுண காரியமாதலால் அவை சத்துவகுண சொரூபமாயின, வியானாதி வாயுக்களெல்லாம். மேற்குறித்த அபஞ்சீகிருத பூதங்களின்ரஜோகுண காரியமாதலின் அவை அதன் சொரூபமேயாம். இதன்றிக் குமேந்திரியம் பிருதிவியின் ரஜோகுணக்கூற்றின்காரியமாதலின் அது அதன் ரஜோகுணசொரூபம் கிராணேந்திரியம் பிருதிவியின்ஸத்துவகுண காரியமாதலின் அது பிருதிவியின் ஸத்துவகுணசொரூபம் அவ்வண்ணமே சிங்ஙுவையும் உபத்தமும் அப்புவின் ஸத்துவகுண ரஜோகுணகாரியமாகலின் அப்புவின் ஸத்துவரஜோகுணசொரூபம். சட்சுவும் பாதமும் அக்கினிபூதத்தின் சத்துவகுணரஜோகுண காரியங்களாதலின் அவைகள் அவைகளையுடைய தீயின்சொரூபமே யாம் துவக்கும்பாணியும் பாணி=பாணி இடுதலேற்றலைச் செய்யுமொருதத்துவம், வாயுபூதத்தின் சத்துவகுண ரஜோகுண காரியமாதலின் அதன்சொரூபமேயாம். சுரோத்திரேந்திரியமும் வாக்கிந்திரியமும் ஆகாயபூதத்தின் சத்துவகுண

ரஜோகுண காரியமாதலின் ஆகாயபூதத்தின் சத்துவகுண ரஜோகுண சொரூபமேயாம். இவ்வண்ணமாக விருத்தலாலிவையனைத்தும் அபஞ்சிகிர்தபூதங்களையன்றி வேறேயின்றாம். இப்பூதங்களையு மூன்றி ஆராயுங்கால் பிருதிவிபூதமும் அப்புபூதத்தின் காரியமாதலின் அது அப்புபூதத்தையன்றியின்றாம். அப்புபூதமும் அக்னிபூதத்தின் காரியமாதலின் அது அக்கினிபூதத்தை யன்றியின்றாம். அக்கினிபூதமும் வாயுபூதத்தின்காரியமாதலின் அது வாயுபூதத்தையன்றியின்றாம். வாயுபூதமும் ஆகாயபூதத்தின் காரியமாதலினது ஆகாயபூதத்தை யன்றியின்றாம். ஆகாயபூதமும் தமோகுணப் பிரகிருதியின் காரியமாதலின் தமோகுணப் பிரகிருதியின் சொரூபமேயாம். தமோகுணப் பிரதானப் பிரகிருதியும் அவ்வியக்தத்தின் அவஸ்தா விசேஷமாதலின் அவ்வியத்தசொரூபமேயாம். அவ்வியக்தமென்பதோ பிரமசேதனத்தின் சத்தியேயாம். ஆதலால் அவ்வியக்தம் பிரமசேதனத்தை யன்றியின்றாம். இதனால் அந்த பிரமமொன்றே திரிகாலங்களிலுமுள்ளது. அழியாதது. அந்த பிரமத்தையே நானடையவேண்டும். அடைந்தால் அந்த அத்வைதப்பிரமமாகவே நான் ஆவேனென்று தத்துவமசி என்னும் சாமவேதமகாவாக்கியார்த்தத்தை யநுவதித்து நீயதுவானாய் என்னும் பொருட்படி ஜீவன் முக்தனாய் ஒருமுகூர்த்தமானவுடனே விதேகமுக்தனானென்று மஹான்கள்கூறுவதைக் கேட்டறிந்திருக்கின்றனன். ஆதலால், இன்று சூரியமண்டிலம் ஒருதுவாரமுடையதாகவிருக்கக்கண்ட என்னுடலமழியாதிராது என்று தீர்மானித்துக் கொண்டிருக்கும்பொழுதே சரீரவகற்சிக்கேற்ற சிலவடையாளங்கள் காணப்பட்டன. உடனே பரதசக்கரவர்த்தியார் ஒரு ஆதனத்தில் பதுமாசனமாகவிருந்து நான் இனிச்சனனம் வராதிருக்கத்தக்க முக்தியையடைவேனென்று ஜகத்ஸ்வாமியான ஸ்ரீமந்நாராயணனது பரமபதத்தையடையுமாறாக ஸ்ரீஜனார்த்தனனை ஞானவாயிலாகத்தியானித்தனர். அப்பொழுது ஆச்ரமத்திலிருந்த இளமானானது இவரருகில்வந்து இவரை இரக்கத்துடன் உற்றுப்பார்த்தது. பார்த்தவுடனே அவர் ஐயோபாவம்! நாமகன்றால் இம்மானெப்படிப்பிழைக்கும்? இது நம்மைவிட்டுக் கணநேரமும் பிரிந்ததில்லையே? நாமெப்பொழுது சற்றே தேகவயர்ச்சியுடனிருத்தலைக்கண்டவப்பொழுதே கண்களில் நீர்ததும்பப் பார்க்கின்றதே? என்னையன்றி இந்தவனத்துமிருகமெப்படியுயிர்வாழும்? இது மனிதனாகிய என்னால் நாள்தோறும் தடவிக்கொடுத்தல் புல்லரிந்தூட்டல் முதலியகாரியங்களால் என்மீது அடங்காவன்பு பொருந்தியதாயிற்றே என்செய்வேன் தெய்வமே! உயிர்போன்றமானினை நானெவ்வண்ணம்விட்டுப் பிரிவேன்? தாடியும் மீசையுமுள்ள வேடரெவரேனும் வில்லுமம்புமுடையராகவன்றி வருவார்களானால் அவர்களை இது ஒருவேளை நான்தானென்று வாலாட்டிக்கொண்டருகிற்செல்லுமே. சென்றால் அக்கிராதர்கள் இதனைக்கொன்றருந்தாதுவிடுவார்களா? 'ச் ச்'

ஹரி ஹரி முகுந்தகோவிந்த ஆ என்செய்வேன் என்னருங்குழந்தையைவிட்டுப் பிரியத்தக்ககாலம் எனக்குண்டாய்விட்டதே! உலகவாணர் எவ்வண்ணமோ தமதரியபிரியவஸ்துக்களை வெறுத்து இறக்கின்றனரோ. நமக்கவ்வண்ணமிறக்க மனம்வரவில்லையே என்று மனதில் நினைத்துக்கொண்டே பின்புறமாகவுள்ள சுவரிற் சாய்ந்தவண்ணமே மரணாவஸ்தையையடைந்தனர். மரணாவஸ்தையிலிவருக்கு எந்ததத்துவவிசாரணையும் தேவோபாசனையும் எந்தமதஞானமும் உதவியாகவந்து நிற்கவில்லை. பின்னெதுவந்து நின்றதென்றால், நாலுகாலும் ஒருவாலுமுள்ளதான வளர்த்த கலைமானினுருவமே கண்முன்னும் மனதிலும்வந்து குடிகொண்டு நின்றது. ஐயோபாவம்! இவர்கட்டுவாங்கசரிதம் மகாஞானிசரிதம் முதலியவைகளைச் சிந்தித்து மரணாவஸ்தையிற் பரப்பிரமத்தியானஞ் செய்தாற்றான் பரப்பிரமமாகலாமென்றுகொண்ட துணிவாதியவனைத்தையுமறந்து மானின் ஸ்மரணையே ஸ்மரணையாய்ச் சரீரத்தை இழந்தனர். இவ்விதநிகழ்ச்சியாலிவர் உடனே ஒருமானின்வயிற்றில் மானாகப் பிறந்தனர். மானாகப்பிறந்த இவர்க்கு இவர் முன்செய்தபுண்ணியங்களின் விளைவால் முன்சென்மஞாபகம் உண்டாகியது. உண்டானவுடனே இவர் தமதுமனதிற்குள் ஹாகஷ்டம் பிரமவிருஷியென்றுலகிலுள்ளாருரைக்கும் விசுவாமித்திரனுக்குப் பேரனும் கண்ணுவனுக்கும் காசிபனுக்கும் செல்வச்சேடனுமாகவிருந்த யான் ஸஹவாஸதோஷத்தாலன்றோ? இந்த திரியக் = மிருகம். ஜன்மமுடையவனானேன் மனிதஜன்மமெடுத்தவர்களிலென்னைப்போல உயர்ந்தநிலையிலிருந்தவர்களும் பின்னரென்னைப்போல இவ்வளவுதாழ்ந்தநிலையையடைந்தவர்களும் முக்காலத்திலும் இரார் என்று தீர்மானித்துக்கொண்டு கண்டகாநதியினருகிலுள்ள சாலக்கிராமமென்னுங்காட்டில் பூர்வஜன்மநேயஜன்மமானமிருகஜன்மத்தை ஒழிக்கற்கு புன்பஸஹவாசமின்மையேவழியென்று யாதொருஸஹவாஸமுமின்றியிருந்து வெகுவிரைவிலச்சென்மத்தை யொழித்தனர். மான்சரீரத்தைவிட்டவம்மன்னவற்குப் பின்னர் ஒருமனிதசரீரங்கிடைத்தது; அச்சென்மம் இழிகுலங்களிலாகாமல் உயர்குலத்திலேயே யுண்டாகியது உயர்குலமகனாய்ப்பிறந்தகாலத்திலும் மான்சன்மத்திற்போலவே மூன்றாவது ஜன்மத்தின்நினைவு நன்றாயுண்டானமையால் அம்மம்ம ஸகவாசதோஷத்தாலன்றோ இத்தனைகேடுகளுமுண்டாயின: இந்தஜன்மத்தில் எனது பூர்வோத்தரஜன்மவநுஷ்டான ஞாபகமனைத்தும் மறவாதிருத்தலால் வேறொருவர் ஸகவாஸத்தாலொன்றுமுணரவேண்டியதில்லை. இனி நான் உணர்ந்துள்ள வுணர்ச்சியின்பயனை யநுபவித்தாற் போதுமென்று தீர்மானித்துப் பெற்றோர்முதலியோர் இவனொருமூகனென்று கருதும்வண்ணம் பலகாலமிருந்து விதேகமுத்தியையடைந்தனர் என்றுரைக்கின்றார்கள்.

வர்மா! பரதசக்கரவர்த்தியாகவிருந்து மிருகஸகவாசத்தால் மானாகிப் பின்னர் மனிதனாகி முத்தியடைந்தமையா லிவனை யனைவருஞ் சடபரதனென்று கூறுவாராயினர். மஹாஞானியாகவிருந்தாலும் மரணஸமயத்திற் கட்டாயமாக ஆத்மஞானநுபவத்திலேயே இருத்தல்வேண்டும். இராதுபோனால் முத்திமுதலிய நன்மைகளெதுவுஞ் சித்தியா என்பனவாதிகளை மரணதருணத்திலாலோசித்துக் கட்டுவாங்கன முதலியோரின் சரிதங்களை ஞாபகத்திற்குக்கொண்டுவந்து மஹாஞானியான பரதசக்கரவர்த்திக்கே ஒருமானோடுண்டான பழக்கத்தா லிழிந்த ஜன்மம் வருமானால் அநேககேவலதுக்களில் மோகப் பிரமோதங்களையுடையோர்கதி எக்கதியாகுமென்றுபார். ஆதலின் ஒருவன் அன்னிய ஜன்மத்தி லெவ்வித பதவியையடைய விரும்புகிறானோ அவ்வித வியல்பினனாகவே இருத்தல் வேண்டும். ஆதலால் மரணசமயத்தில் தனது நல்லநுஷ்டானத்தைக் கைவிடப்படாது என்று என் அறிவிலுறுதியாகத் தோன்றுவதை யுனக்குரைத்தேன் என்றனர்.

முனிவன் ஸங்கவாசதோஷத்தா லிறைவனை மறந்து
அன்னியபதார்த்தங்களை நினைப்பவர்
அந்தவுருவமான பிறப்பினையடைவாரென்பதற்குச் சான்றாக
ஜடபரதசரிதமுரைத்த
நான்காவ தத்தியாயம்
முற்றிற்று.

ஐந்தாவதத்தியாயம்.

மரணத்திற்கு முன்னர் பாவச்செயல்களைச் செய்பவன் மரணஸமயத்தில் நல்ல நினைவால் நல்லகதி அடைவானாவென்ற வினாவிற்கு விடையாக பாவிக்கு நல்லநினைவு மரணஸமயத்தில் வரவே வராது; வராமையால் நல்லகதியை யடையான் என்றும், பொய்ச்சடங்கியற்றி இழிபுகழை நாடுவோர் கூற்றே யிக்கூற்றென்று முரைத்தது.

சி:—குருநாதா! தங்களாலுரைக்கப்பெற்ற அரியபெரிய சரிதங்களைக் கேட்டவுடனே என்மனத்தில் வொருவிதமான அசங்கை தோன்றுகின்றது.

கு:—என்னாலுரைக்கப்பெற்றவைகளைக் கேட்டவுடனே உனக்குச் சந்தேகநிவாரண முண்டாகவேண்டியதற்குமாறாய் அசங்கை தோன்றியதற்கு திசயிக்கின்றேன். உனக்குண்டான அசங்கையை யெனக்குரைத்தால் நானச்சங்கை யகலுமாறு வழிகாட்டுகின்றேன் என்றனர்.

சி:—மஹானுபிருந்த ஜடபாரதர் மானுவல்லைதயிலுண்டான வாஸனையால் மூன்று ஜன்மம் அடைந்தாரென்றும் ஞானியாமொருவர் கிருமியாகவாயினுமொன்றும் கூறியவற்றை யுத்தேசித்தால் உள்ள நாளெல்லாம் ஒன்றுஞ்செய்யாமலே இருக்கலாம், மரணவேளைதயில் செய்துகொள்ளும் ஸ்வல்பமுயற்சியால் முக்திமுதலியவற்றை அடையலாமென்று தோன்றுகின்றது; அல்லயும் பிரபஞ்சாரியாயிருந்து கிரகஸ்தனாகி வானப்பிரஸ்தனாய் ஸந்நியாஸியாகி ஞானவிசாரணைசெய்து முத்தியடையவேண்டிய தில்லையேயென்று தோன்றுவதுடன் இன்னுமொன்றுந் தோன்றுகின்றது.

அது யாதெனில்: குலத்தொழிலே மாமிசம் விற்குந்தொழில் சாதியிலுந் துலுக்கன் நித்தியமும் ஆயிரம் ஆட்டிற்குக் குறையாமற் கத்தியினால் கழுத்தறுப்பான், கள்ளுங்குடிப்பான், மிருகங்களைப்போல புணர்ச்சியிலும் விருப்பமிக்குலாவுவான்; அப்படிப்பட்ட கொடிய துன்மார்க்கனை ஒருவன் கோவிலுக்குட்சென்று தொழுவாரொடுகலந்து மண்டியிட்டிருந்து ஹல்லாவேயென்று அவன் மூதாதையர் வழக்கப்படி தலைகவிழ்ந்தான். உடனே இறந்தான் என்று வைத்துக்கொள்ளுவோம். அல்லது ஒருவன் சோற்றை யுருட்டி வாயிற் கவ்வும்போது சிவாவென்றுரைத்துப் பிராணனைவிட்டான். அல்லது ஒருவன் தும்மும்பொழுது

நாராயணா நாராயணாவென்று கூறி யிறந்தான். இவ்வண்ணமே பிறந்தநாள்முதற் கெட்ட செய்கைகளை யியற்றுமின்னோர் முதலியோர் ஹல்லா சிவன் ஹரி என்னும் இவர்கள் உலகங்களையல்லது இவர்கள் கருணையை அல்லது நல்ல ஜன்மங்களையடைவார்களென்று கருதக்கூடுமா. அவ்வண்ணங் கருதக்கூடுமானால் அது பசுவைக்கொன்ற பாவம் அதன்தோலை பார்ப்பானுக்குச் செருப்புக்குக் கொடுத்தாற் போகுமென்று கூறுவதைப்போன்றதாகுமே என்பதுதான் என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட குரவன் தன் மாணவனைப்பார்த்து மகனே, நீ கேட்ட இக்கேள்வி ஸாமான்யமானவர்களாற் கேட்கப்படுவனவற்றிலொன்றும். அது எவ்வண்ணமேனுமாகட்டும்; நானுரைப்பதைக்கேள். என்னா லுரைக்கப்பெற்றவைகட்கும் உன்னால் வினவப்பெற்றவைகட்கும் அஜகஜ வித்தியாஸமுண்டு. பாவச்செயல்களைச்செய்யு மொருவன் மரணஸமயத்திற் புண்ணியசொரூபியான கடவுளின் நாமத்தைச் சொல்லிக்கொண் டிறப்பானானால் அவன் அவனது மரணாவஸ்தையிலுண்டான தெய்வத்தியானத்தால் அத்தேவனது கருணையை அல்லது அவனது உருவத்தை அல்லது அவனதுலகத்தைப் பெறுவான். இவ்வளவெளிதாகவடையக்கூடிய விதற்கு வெகுவான கஷ்டங்களேன் என்பதுனது வினா. இதனில் நானுரைத்தனவற்றி லோரணுத்துணையும் பொருந்தவேயில்லை. நான் மரணஸமயத்தில் கடவுளை நினைத்தவன் கடவுளருளைப் பெறுவானென்றதனை இங்கு முறுதியாக வுரைப்பேன்.

உன்னா லுரைக்கப்பெற்ற துலுக்கன் முதலியோர் ஹல்லாவென்றுரைத்ததும், ஹரியென்றதும், ஹரவென்றதும் ஆப்பியாய வசனமேயாம். சிறு குழந்தைகள்கூட சாமிஸாக்ஷியாக வென்றும், நாராயணன் ஸாக்ஷியாகவென்றும், அண்ணாமலையாராணை என்றும், எங்கும் நிறைந்தவனே என்றும், ஆண்டவனே என்றும் கூறு மொழிகளை அனைவருங் கேட்டேயிருப்பார்கள். இக்குழந்தைகட்கு மேற்குறித்த சொற்களின் ஸாமான்யார்த்தமாவது தெரியுமா? தெரியாதே. குழந்தைகளைப்பற்றி வேண்டாம். வயதுமுதிர்ந்தவர்களைக் குறித்துப்பார்ப்போம். அவர்கட்காவது தெய்வமென்பதிப்படிப்பட்டது, அத்தெய்வத்தைத் தொழுவதனாலுண்டாகும் பிரயோசனமின்னது, தொழவேண்டிய இயல்வு இவ்விதமென்று எவர்க்கேனும் தெரியுமா? தெரியாது. அவர்கள் வளர்க்கும் கிளிகள் சம்போசங்கரா என்று கூறுவதன் பொருள்களை அவைகளெவ்வளவடைந்திருக்குமோ அவ்வளவுதானவர்கட்கும் தெரியும்; வேறு விதத்திற் றெரியாது.

(மூடஜனங்கள் பலவிதமான காரியங்களை ஆலோசனையின்றிச் செய்வார்கள். மிருகதுல்லியமாக வாழ்நாட்களைப் போக்கியவர்களான தங்களினத்தார் மரணநிலையை யடையுங்காலத்து. அவர்க

ளாய்வாதிய வேவாய்ந்தகளையும் அவர்க்கவைகளின் பொருளொன்றேனும் தெரியாதென்பதையும் கருதாது திருவாசகம் படித்தலும், திவ்யபிரபந்தமென்னும் நாலாயிரபிரபந்த காலக்ஷேபம் செய்தலும், இறந்தழிந்த இழிபிணத்திற்கு முன்னும் பின்னும் அவைகளை யோதிப்போதலும், இன்னார் வைகுந்தபதவி யடைந்தாரென்று வாளாவெழுதுதலும், சிவலோகபதவி யடைந்தாரென்று சும்மா வெழுதுதலும், கடைசிநாளில் இரட்டைக்கருமங்களை யியற்றி இரண்டுலகங்களி லொரான்மாவைப் புகுத்துதலும், மஹாபாவிகட்கு மோக்ஷதீபமென்னுஞ் சடங்கு நடத்துதலும், அவர்களைச் சுட்ட விடங்களிலும் புதைத்தவிடங்களிலும் கோவிலைக்கட்டி விம்பப்பிரதிஷ்டைசெய்து விசேஷ பூசையாதி நடத்துதலும் எவ்வண்ணம் அப்பிரயோசன காரியங்களாக எவருங் கருதுகின்றாரில்லையோ அதுபோலவே இவையுமென்று என்னன்பர்க ளூகித்தறிவார்களென்று அவர்க்கிதனிடையி லிவைகளை நினைப்பூட்டினேன்.)

வடநாட்டு ஞானியார் ஒருவர் தாம் பலதேசங்களிலுந் திரிந்து சுற்றி வந்ததாகவும், அந்தந்த தேசங்களிலுள்ள தேவபக்தர்களைப் பற்றி யுண்மையில் விசாரித்ததாகவும், விசாரித்தவர்க்கு ஒரு லக்ஷ ஜனங்களில் இரண்டுபேர் கூட உண்மையான பக்தர்களாகக் காணப்படவில்லையென்றும், இவை வீண்கட்டுப்பாடென்றும் கூறியிருக்கின்றார். ஆலோசிக்குமிடத்தில் இஃதுண்மையானதாகவே இருக்கும். வெறுங்கட்டுப்பாடாக ஜனங்கள்செய்யும் போலிச்சடங்குகளையும், வெறும் வழிபாடுகளையும் உண்மையான தேவபக்தர்கள் அங்கீகரிப்பார்களா? ஒருநாளுமங்கீகரியார். துஞ்சும்பொழுது சிவனென்றுரைத்துயிர் விட்டவனுக்குச் சிவனுடைய ரூபம், குணம், இடம், செய்கை, அதிகாரம் அவ்வனைத்தாலுண்டாகும் பிரயோசனம், நினைக்கவேண்டிய மார்க்கம் முதலிய எல்லாமிருந்து சிவனென்றுரைத்து அதைத் தியானித்து உயிர்விட்டிருப்பானானால் அவனந்தச் சிவனையே அடைவான். அதற்கு யாதொருதடையே கிடையாது.

பாவத்தொழிலையே செய்துகொண்டு விட்டாருடைய அல்லது சிநேகிதருடைய பழக்கத்தால் முன்னே விளையாட்டாக சிவா, ராமா, கிருஷ்ணாவென்று சொல்லப் பழகினவன் அவைகளை வாளாவுரைக்கின்றானேயன்றி அவைகளின் பிரயோசனத்தை யடையவேண்டுமென்னு மபிப்பிராயத்தோ டுரைக்கின்றானில்லை. இஃதன்றியும், அருமையிலுமருமையான விந்தத்தியானம் ஸாமான்யனொருவன் மனதிற் பதியுமா? பதியாது. மனதிற் பதியாதபோது அவனதனை யுரைத்தாற்றானென்ன பிரயோசனம்? அவன் வாய் மரணஸமயத்திற் சிவாவென்றாலும் அவன் மனது தத்ஸமயத்தில் ஆட்டைக் கொலைபுரியலாமா, அல்லது மாட்டைக்கொலைபுரியலாமா, கட்குடிக்கலாமா, பரதாரகமனஞ் செய்யலாமா, புலவருந்தலாமா என்று தடுமாறுமேயொழிய தெய்

வத்தியானத்திற் செல்லாது. ஆதலைவன் தெய்வத்தை நினைத்திறந்தவனாக வாகான். தெய்வத்தினை நினைத்திறவாதபோழ்து தெய்வமெய்ப்பதமாக ஜன்மம் அவனுக் கெங்ஙனம் வரும்? வராது. இவ்வண்ணம் ஹரியாதி வசனங்களை யுணர்த்திறந்தார் தன்மையும் என்றறிந்துகொள். பாவனாதிகளினுண்மைகள் மனதிற் பிடிபடவேண்டுமானாற் பலகாலம் பழகவேண்டும். அவ்வண்ணம் பாவனாதிகளின் பதிவின் முதிர்ந்தாரான பாகாதிகளை சொற்ப வைராசயமான மாருதிகளின் வசனங்களால் அதிதாகதிபடைவார்களானால் பற்றைப்போக்குமிக்க வினை என்னுவதிற் பயனில்லை. ஆதலால் நீ கேட்ட கேள்விகள் வெறும்பயனற்ற கேள்விகளாகமாட்டாவே. ஆனால் பாவியாகவுள்ளவனும் தெய்வதியானத்துடன் உயிர்விடுவானானால் அவன் தெய்வத்தின் திருவருளைப்பெறுவான். இது எதுபோலுமென்றால், நித்தியதரித்திரன் குபேரனைப்போல நித்தியம் ஒருகோடிப்பசுக்களை வேதமுணர்ந்த பண்டிதர்கட்குத் தானம் கொடுப்பானானால் அவன் குபேரபதவியையடைவான் என்பதுபோலவாம். தனக்குண்ணவே சோறற்றவன் ஆயிரம்பேருக் கெங்ஙனமன்னதானஞ்செய்வான்? அவனலக்காரிய முடியாமையைப்போல பாவியான இவனும் தேவதியானத்துட னுயிர்விடுதலான இக்காரியம் முடியாது.

இவ்விதமான வீண் வினைக்களை உன்போல்வார் வினவக்கூடாமையேயாம். ஒரு கற்றவன் வினவும் வினா அவனுக்கும் பிறர்க்கும் பயனைக் கொடுக்கத்தக்கதாக விருக்கவேண்டும். ஆதலால் நானுரைத்த உண்மைகளை நீ மனனத்திற்குக் கொண்டுவருவாயானல் மரணஸமயத்தி னுனக்கிஷ்டமான கதியை நீ அடையலாம். இத்தகைய அரியவிஷயங்களையுணர்ந்துள்ளவன்தான் வித்துவான், கவி, ஞானி, பரமாத்மா என்று பெரியோருரையாநிற்பர். மனிதனாகப்பிறந்தவனை இந்த அரிய ரகஸ்யங்களை அறிந்துகொள்ளுதற்கு யோக்கியன். இவ்வித இயல்புகளை யுணர்ந்துள்ளவனே மனிதன். இவனே ஸ்வாமியென்றழைக்கத்தக்க யோக்கியனாக வுள்ளவன் என்று [illegible] சிவோஹம்பாவனையாச் சிறிதுநேரமிருந்து உனக்குக் கட்டாயமாக வுரைக்கவேண்டியவற்றை யுரைத்துவிட்டேன். இனியுனக்கென்னால் உரைக்கப்பெறவேண்டுபவை இன்னவையென்று எனக்குத் தோன்றவில்லை என்று கூறி முடித்தனர்.

மரணத்திற்கு முன்னர் பாவச்செயல்களைச் செய்பவன்
மரணஸமயத்தில் நல்ல நினைவால்
நல்லகதி அடைவானாவென்ற வினவிற்கு விடையாக
பாவிக்கு நல்லநினைவு மரணஸமயத்தில் வரவேமாட்டாது; வராமையால்
நல்லகதியை யடையான் என்றும், பொய்ச்சடங்கியற்றி
இதினை நாடினோர் கூற்றே யிக்கூற்றென்று முரைத்த
ஐந்தாவதத்தியாயம் முற்றிற்று.

ஆறுவதத்தியாயம்.

ஞானகலாவிலாசன் முடிசூடி யரசாண்டதுரைத்தது.

இவ்வசனத்தையுங் கேட்ட ஞானகலாவிலாசன் தனது குரு பூதனை வணங்கி என்னையாட்கொண்ட ஞானாம்புதியே! அடியேற்கு உத்தரவளித்தால் இம்மலையின் குகையிலொன்றிற் புகுந்து இரவும் பகலுந் தோன்றாதவண்ணம் பிரமானந்த இன்பத்தை அநுபவிப்பேன் என்றனன். உடனே குருவானவர் நகைத்துக்கொண்டு உன்னிடத்திலெனக்குள்ள பிரியத்தாலிந்த வரியவிடயங்களைக் காலமல்லாதகாலத்திலுனக்குரைத்தேனேயன்றி வேறொன்றினாலன்றாம். நீ இப்பொழுது செய்யவேண்டிய வேலை இதுவல்ல. கட்டமுதினைத் தோளிலிட்டுச் செல்பவன் எங்கே பசியெடுக்கின்றதோ அங்கே அதனை அருந்திப் பசியில்லாதவனாகவாகலாம். அதுபோல உனக்கெந்தக்காலத்திலிந்தச் சரீராதிகளில் வெறுப்புண்டாகின்றதோ அந்தக்காலத்திலிந்த ஞான அநுஷ்டானத்திலிருக்கக்கடவை. இப்பொழுது நீ எப்பொழுது எல்லாக் கலைகளுமுணர்ந்தவனாக வாவாய் எந்தக் காலத்திற் பகைவர்களைச் செயிப்பாய் என்று எதிர்பார்க்கும் தாய் தந்தையர்களின் மனக்குறைகளை நிறைவேற்ற வேண்டியவனாகவிருக்கின்றாய். ஆதலால், அதன் பொருட்டாக நினக்கு வேண்டியவைகளைக் கேள் என்றனர். அதைக்கேட்ட ஞானகலாவிலாசன் சரி அவ்வண்ணமே செய்கின்றேன் என்றுரைத்துத் தனதாசாரிய சிரேஷ்டருடைய சரணயுகங்களை அந்நிலவிற் பலதரம் வணங்கினான். தன்னை வணங்கின சிறுமாணவனை ஞானகலாவிலாசனைக் கிழக்குருவான கௌடபாதர் எழுந்தெடுத்து மார்புறவணைத்து நீயெப்பொழுதெப்பொழுதெதனை யெதனைக் கருதுகின்றனையோ அப்பொழுதப்பொழுதவைகளை எல்லாம்வல்ல இறைவனளிப்பனாக. என்று இருகரங்களையும் மேலே தூக்கியுரைத்து அவனுடன் ஆசிரமத்தை யடைந்து அன்றிரவிற் றனது தரிசனார்த்தம் வந்து நிற்கும் விஜயவிக்ரமவர்மனையும் [illegible]கூஷியையும் அழைப்பித்து நீங்கள் நாளையதினம் உதையத்திலிவனுடனும் மற்றைய இளைஞருடனும் இதுகாறுமிருந்த மகதாரண்யத்தையடைந்து பதினைந்து தினம் இருங்கள் இதற்குள் உங்கள் ராஜ்யத்தை உங்கள் பகைவனளிப்பானென் றுரைத்தனர்.

அம்மொழியைக் கேட்ட செம்மல் மஹா சந்தோஷத்துடன் அன்றிரவிலங்கிருந்து மகாயோகிபாரது கட்டளைப்படி மறுதினம் மகனாகிய ஞானகலாவிலாசவர்மன் முதலிய அனைவருடனும் மகதாரண்யத்திற் சென்றிருந்தனன். ஞானகலாவிலாசினி ஆணாகி மாறிய நாளிற் கௌடபாதாசிரமத்திலிருந்த சில பெரியோர்கள் வளம்பொருந்திய விஜயவிக்ரமபுரத்திற்குச் சென்றார்கள், சென்

றவர்கள் அவ்வூரினருகிலுள்ள ஆற்றங்கரையில் ஒரு மரநிழலிலிறங்கியிருந்தார்கள். இவர்கள் சரீரதேஜஸ் முதலியவைகளை யுடையவர்களாதலாற் பல ஜனங்கள் அவ்விடத்தினை விட்டகலாமல் நெருங்கினார்கள். நெருங்கினவர்களிற் சிலர் அவர்களைப் பார்த்து லோகங்களிலுள்ள அதிசயங்களைக் கேட்டார்கள். கேட்டவர்க்கதிசயங்களை யுரைப்பவர்கள் ஞானகலாவிலாசனுடைய பிறப்பு முதலியவைகளை யெடுத்துரைத்தார்கள். இம்மொழிகள் அந்நகரவாஸிகளான சனங்கட்குத் தங்களையாண்ட பழைய அரசனுடைய சரிதசம்பந்தமாகவிருந்தன. அதனால் அவைகளை யெங்கும் பரவவிட்டனர். பலவிடங்களிலும் பரவவே புதியவரசனை மதனனுடைய காதிலும் சென்றுபட்டன. உடனே அவன் முன்குறித்தவர்களிருக்கும் இடத்திற்குவந்து அவர்களை வணங்கி உண்மையான விஷயங்களையறிந்து திரும்பத் தன் மாளிகையையடைந்து இந்தவிஷயம் பொய்யோ அல்லது மெய்யோவென்றறிந்து வரும்படி ஒருவனை யனுப்பலாமென்றாலோசித்தான். எவனை யனுப்பினாலும் நமக்குண்மை விளங்காது நாமே நேரிற்சென்று பார்த்து வரவேண்டுமென்று தீர்மானஞ்செய்துகொண்டு பின்னொருமுறையும் ஆற்றங்கரையை யடைந்து கௌடபாதராசிரமத்திற்கு வழிமுதலியவைகளைக் கேட்டறிந்துகொண்டு காட்டிற்கு வேட்டைக்குப் போவதாக நகரிலுள்ள அமைச்சர் முதலியோருடனுரைத்தவனாய் வேட்டையாடுங் கோலத்துடன் வேட்டைக்காரர் முதலியவர்களுடன் குறித்த காட்டையடைந்து ஒன்றிரண்டு தினங்களிற் பொன்மலையின் குழ்வரையை யடைந்து வேட்டையாடித் தனது வருகையை அங்குள்ள முனிவர்க்குரைத்துக் கௌடபாதராசிரமத்தை யடைந்து அவரானுபசரிக்கப்பெற்று அன்றெல்லாமவருடனே ஏகாந்தமாகவிருந்து அநேக விஷயங்களைப்பேசி முடித்துக்கொண்டு அநேக சிங்கபலத்தையும் அநேக நூறாண்டு யௌவனமான தேகத்தோடிருக்குந் தன்மையையும் அடைந்துள்ள ஞானகலாவிலாசனைத் தானே நேரிற் பார்த்து அவர்கள் கூறியவனைத்தும் உண்மையேயென்று தீர்மானஞ்செய்துகொண்டு முனிவரிடம் விடைபெற்றுத் திரும்பித் தன்னூரினை யடைந்தவன் தன் மனதிற்குள் இனி நாம் இந்த விஜயவிக்ரமபுரத்திற்கு அரசனாக விருப்போமானால் நம்மை நாம் அங்குச்சென்று கண்டுவந்த வீராதிவீரன் சுவர்க்கத்திற்கனுப்பிவிடுவான். அவன் எல்லாவித வல்லமைகளையு முடையவனாகவிருக்கின்றான். இந்த விஷயத்தைக் குறித்து மந்திரி முதலியோருடனாலோசிப்போமானால் அவர்கள் சமயத்திற்குத் தக்கவாறு கூறுவார்கள். அவனவன்றான் அவனவனைக் காத்துக்கொள்ளவேண்டுமேயன்றிப் பிறரை விரும்புவது அறிவற்றவர்களின் சுபாவம். உலகத்தில் மனிதசாதியினருக்கொருவருமுறவே கிடையாது. பெற்றதாயானாலும் பெற்ற தந்தையானாலும் தன் மகனால் தங்கட்கிலாபமில்லாதகாலத் தவனை வெறுக்கின்றார்கள். இதைத்தான் நாமே ஆலோசிக்கவேண்டும், நமக்குப் பகைவனான விஜயவிக்

ரமனவ்வாசிரமத்திலொரு முனிவைப்போல சடாதாரியாக விருக்
கக் கண்டோம். இனி அவன் மகனால் நம்மையொரு கேவலமான
வனாக அவன் காண்பான் "முன்னவனே முன்னின்றால் முடியா
தபொருளுளதோ" என்பதுண்மையன்றிப் பொய்யல்ல அவனுக்கு
இப்பொழுது எல்லாம்வல்ல இறைவன் கருணை செய்திருக்கின்
றான். ஆதலின் அவனே ஜயமடைவான். ஜயமானது பகைவனுக்
கே உண்டாகும் என்று உறுதியாக உணர்ந்த அரசன் தனது சை
னியாதிகளை அழியச்செய்து தானும் அழிதல் மூடத்தனமேயாம்.
"இப்பிறவிதப்பினெப்பிறவி வாய்க்குமோ" இந்த அரிய மனித
சரீரத்தை சொற்ப காரியத்திற்காக இழத்தல் நியாயமுணர்ந்தார்
க்கழகன்றாம். ஆதலிற் பகைவனை நேசித்து அவன் நாட்டை அவ
னுக்களித்து, அவன் நட்பினைப் பெற்று வாழ்தல் இவ்விடத்தி
ற்கேற்றதேயாமென்று தன் மனதினுட் டீர்மானஞ்செய்தவனா
ய் விஜயவிக்ரமபுரத்திலுள்ள பணவறைகளிலிருந்த பணங்களனை
த்தையும் மதனபுரத்திலுள்ள பணவறையிலாக்குவித்து நான் இது
காறும் இந்த நகரத்திலிருந்து இந்த ராஜயத்தையும் எனது ராஜ
யத்துடனாண்டேன். இப்பொழுது தங்கள் வீரப்ரதாபங்களைக் கே
ட்டயான் தங்கள் நாட்டைத் தங்களிடமே அளித்து முன்னாளிற்
போலத் தங்கட்குப் பகுதி கட்டுபவர்களிலொருவனாக இருந்து வாழ
விரும்புகின்றேன். ஆதலால் ராஜாதிராஜரான தாங்கள் தங்கள் ராஜ
யத்தை அங்கீகரிக்குமாறு விநயத்துடன் கேட்டுக்கொள்கின்றேனெ
ன்று பத்திரமொன்றிற் பத்திரமாகவெழுதித் தன்னமைச்சனான
மகாதேவன் பிள்ளையிடங்கொடுத்து இதனை நீ மகதாரண்யத்தில் வசி
க்கும் ராஜரிஷிக்குக் காட்டிப் பதில் பெற்றுவாவென்றனுப்பினான்.

அவன் இதென்ன காரியமாகவிருக்கும்? விஷயத்தை நம்மிட
முரைக்காமல் இதைக்கொண்டு கொடுத்துப் பதில்பெற்றுவா என்
றிந்த அரசனளித்தான். ஒருவேளை இந்தக்கடிதங் கொண்டுவருப
வனைக் கொன்றுவிடக்கடவை என்று எழுதிக்கொடுத்திருந்தாலெ
ன்னசெய்வது? பிரித்துப்பார்த்துச் சங்கதி தெரிந்துகொண்டு அப்
புறம் உசிதம்போல செய்யலாமென்று தீர்மானித்து ஒருவருக்குந்
தெரியாமற் கடிதத்தை உடைத்துப்பார்த்துச் சங்கதிகளையெல்
லாந் தெரிந்துகொண்டு சந்தோஷமடைந்தவனாய் அப்படியே
மூடி முத்திரையிட்டு, இவ்வரசனிலும் அவ்வரசன் வெகு நல்ல
வன். ஆதலாலவனால் இந்நாடு செழிக்கும் என்று தீர்மானி
த்துக்கொண்டு மகதாரண்யத்தையடைந்து அவ்விடத்திலும் ராஜம
ரியாதையிற் குறைவின்றி இருக்கும் விஜயவிக்ரமனைக்கண்டு வண
ங்கிக் கடிதமளித்தனன்.

இம்மகாதேவன் பிள்ளை கடிதமளித்ததினம் மகரிஷியுரைத்த
தினமாதலால் இது மதனனனுப்பிய கடிதமேயென்று தீர்மானி
த்து அதனிலுள்ள விஷயங்களை யுணர்ந்துகொண்டு அதற்குப் பதி
லாய் நீர் யுத்தத்திலன்றி எமது ராஜ்ஜியத்தை எமக்களித்து எம்

முடைய நீதிக்கடங்கி நடப்பது ஸத்தியமானால் எமது ராஜ்ஜியத்திலுள்ள குடிகட்கெல்லாம் உங்கள் பழைய அரசனிடம் நானிந்த நாட்டை மனப்பூர்வமாக ஒப்பித்துவிடுகிறேன் என்று விளம்பரஞ் செய்துவையும். பின்னர் நாம் குறிப்பிட்ட தினத்தில் வருகின்றோம் என்று எழுதி அங்கு நின்றும் வந்த பிள்ளையவர்கள் வசமே யளித்தனுப்பினர். கடித மெழுதும்பொழுது மறைவி ...றித் தன்னெதிரிலேயே எழுதினமையால் வழியிலிந்த கடித ...க்காமற் பிள்ளைகொண்டுவந்து அரசனிட மளித்தனர். ...த் தானே படித்துப் பார்த்து அதனில் யுத்தத்தில் என்று ...ழுதியிருத்தலைப்பற்றி அவர்கள் காட்டிலெவ்வண்ணமாக இருக்கின்றார்கள் என்றான். மந்திரி, அண்ணலே! நான் செல்லும்பொழுது அவ்வனத்தின் எவ்விடங்களிலும் பீரங்கிகளும் மருந்துகளும் கொண்டுவந்து அநேகர் நிரப்புகின்றனர். அநேகம் தச்சர்கள் வில் முதலியவைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். சில அரசர்களும் அங்குவந்து போய்க்கொண்டிருந்தார்கள். அங்கொருவாலிபனிருக்கின்றான். அவன் அழகிற் சிறந்தவனாயினும் அவனது தோற்றத்திற்கு இந்த மூன்று லோகமும் அஞ்சுமென்று நினைக்கின்றேனென்றான். உடனே அரசன் அவன்தான் ஞானகலாவிலாசனென்பவன். அவன்பொருட்டாகத்தா னின்று நானிந்த வளம்பொருந்திய ராஜயத்தை விட்டுவிட வேண்டியவனாகின்றேன். நீ இந்தக் கடிதத்தி லெழுதியுள்ளவண்ணம் செய்யக்கடவை என்றுரைத்து அன்றிரவிலேயே தனது யானைசேனையாதிகளுடன் தனது ராஜதானியாகப் பழைய மதனபுரத்தையே செய்துகொண்டு தாங்கள் உத்தரவிட்டவண்ணம் நாட்டுச் சனங்களுக் கறிவித்திருக்கின்றேன் என்று விஜயவிக்ரமனுக்குத் தெரியப்படுத்தினான். மதனன் வெளிப்படுத்திய விளம்பரத்தைப் பார்த்த அந்நாட்டுச் சனங்கள் அவனை மிகுந்த புத்திசாலியென்று கொண்டாடினார்கள். இந்த சங்கதியையுணர்ந்த விஜயவிக்ரமன் தனது பரிவாரங்களுடனும், மனைவியான பங்கஜாக்ஷியுடனும், மந்திரியான பாநுவர்மன் முதலானவர்களுடனும்,பரராஜபயங்கரனான ஞானகலாவிலாச...னும் மகதாரண்யத்தினின்றும் தன்னகரைக் குறித்துப் பிரயாணமானான். இவர்கள் வருவதையுணர்ந்த நாட்டுக்குடிகள் நகரங்களை எவ்விடங்களிலும் அலங்காரஞ்செய்து எட்டுவருஷகாலம் தங்களை விட்டுப் பிரிந்திருந்த தங்க ளரசனைக்கண்டு களித்தார்கள். மதனராஜனும் யானை சேனை பரிவாரங்களுடன் எதிர்கொண்டுவந்து மன்னவனை வணங்கி யுபசாரஞ்செய்தனன். அரசனும் தனக்குத் தத்கால நண்பனாகவுள்ள மதனனை அணைத்து மகிழ்ந்து நண்பு காட்டினான். இந்தப் பரமாச்சரியமான செய்கையைக் கண்ட ஊர்க்குடிகளெல்லாம் மதனனை மகோத்தமன், யுக்திசாலி, புத்திசாலி, எத்துக்காரன் என்று கொண்டாடினார்கள். தன் வீட்டிற்கு வந்த வுயர்ந்த புதுவிருந்தினர்களை யுபசரிப்பவனைப்போல மதனன் அவர்களை யுபசரித்து அவர்களுக்கென்றுதான்

புதிதாகப் புதுப்பித்த மாளிகையி லவர்களை யிருக்கச்செய்து பின்னர் விஜயவிக்ரமனை வணங்கி நான் எனது ராஜ்ஜியத்திற்குப் போகின்றேனென்றான். இம்மொழியைக்கேட்ட விஜயவிக்ரமன் அரசரே தாங்கள் போகப்படாது. நமதருமைச் சிறுவனுக்குப் பட்டாபிஷேகமாகவேணும். நீவிரே இவனுக்கு ராஜ்பபட்டாபிஷேகஞ்செய்து மகுடஞ்சூட்டிச்செல்லவேண்டும். எனக்கினி ராஜ்யாதிகாரிய... ப்பார்க்கவேணுமென்று எண்ணங்கிடையாது. இவனை ரா... தாங்களாக்கினால் நானுமென்மனைவியும் துறவுபூண்டு... டைந்து மறுமைக்கு நல்வழிதேடப் போகின்றோமென்... யைக்கேட்டு மதனன் இந்த ஞானகலாவிலாசன் மஹாவீரனாதலால் இவனுடைய பகை நமக்குதவாதென்று தம்மனதிற்கருதி என் மகளான வித்தேசுவரி என்பவளை இவ்வரசகுமாரனுக்கு மனைவியாக்கிப் பின்னரிந்த நாட்டிற்கரசனாக்கினால் நலமென்று கருதுகின்றேனென்றுரைத்தான். அம்மொழியைக்கேட்டு மஹா ஸந்தோஷமடைந்த விஜயவிக்ரமாதிக ளவ்வண்ணமே செய்யுமாறு ஆக்கியாபித்தனர். மதனன் தன் மகளான வித்தேசுவரியை ஞானகலாவிலாசனுக்கு மனைவியாக மண நடத்திவைத்தான். மணமுடித்துக் கிரகஸ்தனாயினபின்பு அவனை உயர்வுபொருந்திய சபாமண்டபத்தில் ஒளிபொருந்திய சிங்காதனத்தி லழகுபொருந்திய குடைநிழலிலமரச்செய்து பட்டாபிஷேக நடத்தி மகுடஞ்சூட்டி மகாராஜனாக விளக்கினார்கள். உடனே நகரவாஸிகளான ஜனங்களும் விஜயவிக்ரமாதிகளும் மஹாஸந்தோஷமடைந்தார்கள். அந்நேரம் மதனன் புதியவரசனும் மருகனுமான ஞானகலாவிலாசனிடத்து விடைபெற்றுக்கொண்டு தனது நகரத்தையடைந்து முன்னுரைத்த உடன்படிக்கைப்படி வாழ்ந்தான்.

விஜயவிக்ரமன் தன் மனைவியான பங்கஜாக்ஷியை அவள் சம்மதத்தினாலுடனழைத்துக்கொண்டு துறவறத்தினாய் வனத்தையடைந்து கௌடபாதசிஷ்யனாய் அநேககாலமிருந்து அவரளித்த பிரமோபதேச வன்மையால் ஜனன மரணங்களைக் கடந்து மனைவியுடன் விளங்கினான். ஞானகலாவிலாசன் ஞானகலாவிலாசனாதலால், தன்னுயிர்போல மன்னுயிரைக் காத்து இவனே இவ்வுலகினை யடக்கியாளத்தக்க மஹானென்று யாவருங் கொண்டாடுமாறு வாழ்ந்தனன்.

ஞானகலாவிலாசன் முடிசூடி யரசாண்டதுரைத்த
ஆறுவதத்தியாயம்முற்றிற்று.

சிவார்ப்பணமஸ்து.

ஞானகலாவிலாசினி
முற்றிற்று.

கச்செய்து பின்
கிற்குப் போகி
ரமன் அரசனே
டாயினெ
கஞ் செய்து
காரிய
ர ணை
ருக்கனமேயாம்.
டன்றிய மணித
ரா ஞ்கலா

மாக
புதிபவர
பெற்றுக்கொ
ன்படிக்கைப்படி வா

விஜயவிக்கிரமன் த
மதத்தினை னழைத்துக்கொ
யடைந்து கௌடபாதசிஷ்யனுய் அ
பிரமோபதேச வன்மையால் ஜனன மரணு
யுடன் விளங்கினன். ஞானகலாவிலாசன் ஞானகல
லால், தன்னுயிர்போல மன்னுயிரைக் காத்து இவனே இவ்வுலக
னை யடக்கியாளத்தக்க மஹானென்று யாவருங் கொண்டாடியா று
வாழ்ந்தனன்.

ஞானகலாவிலாசன் முடிசூடி யரசாண்டதுரைத்த
ஆறாவதத்தியாயம் முற்றிற்று.

சிவார்ப்பணமஸ்து.

ஞானகலாவிலாசினி
முற்றிற்று.